வ

கடவுள் துணை.

சைநமுநிவர்கள் - திருவாய்மலர்ந்தருளிய

நீதி நூலாகிய

நாலடியாரிமூலமும்

உரையும்.

இஃது

களத்தூர் - தமிழ்ப்புலவர்

வேதகிரிமுதலியாரால்

பதவுரையும்-கருத்துரையுஞ்செய்து, பலவிலக்கண

மேற்கோளுங்காட்டி அச்சிற்பதிப்பித்த பிரதிக்கிணங்க

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிட்டப்பட்டு.

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூட்டத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சரஸ்வதி மஹால்
தஞ்சாவூர்

தாது வரு:

1876

உ

கடவுள் துணை.

சாற்றுகவிகள்.

காஞ்சிபுரம்-மகாவித்துவான்

சபாபதிமுதலியாரவர்களாலியற்றிய

நேரிசைவெண்பா.

நாலடிநா னூற்றுக்கு நல்லபதவுரையு
மேலுங்கருத்துரையு மேயியற்ற—நூலுணரும்
வேதகிரிநாவலர்க்கு மேதினியிற்கைம்மாறு
யாதுமிலவிண்ணதிபர், மில்.

பழையநல்லூர் மங்கைப்பாகைப்புலவர் குமாரர்

சரவணப்பெருமாள்புலவர்

பாடியது.

அரவணிவிளக்கெனவேவொளிர்முகவை
மாநகருக்கணியாயோங்கும்
பரவுபுகழ்குவளைமலரணிபுயவேண்
முத்துறுருஷிணபாக்கியனீயார்க்கும்
காவகற்றுநாலடியார்க்குரைவகுத்தே
யிலக்கணமேற்கோள்காட்டென்ன
இரவகற்றும்வேதகிரிசெய்யமுத்து
ரோணச்சிலேற்றினனே.

சதுர்வேத சித்தாந்த சபாபிரசங்கியாகிய

காஞ்சிபுரம்

சண்முகக்கவிராயராலியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேலழியார்தமக்கடிமைபெற்களத்தூர்வேதகிரிவித்வவேற்தன்
நாலடிக்குப்பதவுரையும்கருத்துரையுஞ்செய்தானன் றவலோர்மு
வாலடித்துவருங்குடியன்ட்டாவதானியென்னுமட்டிதன்வா [ன்
மேலடிந்தானிந்நூலையச்சடித்தான்பகையையென்றுபிறவற்றுரீஇ

இந்நூற்குரைசெய்தபுலவர்குமாரர்
சுந்தரமுதலியா ரவர்க ளியற்றிய
அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

கையுதறமெய்யுதறக் கனத்தவிருவிழிபிதுங்கக் கால்களெப்பக் கச், செய்யமணிநாக்குழற நெஞ்சுலராசாசிவமுத் திடுக்கிட்டேங் கப், பையெடுக்குமவ்வாணிபனைப் புலவர்முன்னேவாதுவென்று ப ங்கஞ்செய்தோன், றையதமிழ்வேதகிரி நாலடியார்க்குரைவகுத்து சீருந்துலக்கிறுனே.

திரிசிரபுரம்-தமிழ்த்தலைமைப்புலவர்
வி - கோவிந்தபிள்ளையவர்கள் - குமாரர்.
நாராயணசாமி பிள்ளையா லியற்றிய
நிலமண்டலவாசிரியப்பா.

கடல்புடையுடைதெள் புடவியினிடையின், மடலவிழ்மனை மாட் டெட்டசதுர்முகவன், றன்கரம்வருந்தப் பன்முறைசெயாதும், மன்பதைக்கின்பச் சின்மயவறிவை, யிடுக்கண்ணெறியாங் கடுக்க டல்வீழ்த்து, நடுக்கப்பட்டாதுவிடுக்கக்கலமாய், மடிவாநெறிநா லடியாவெனும்பேர்ப், படிவாரகத்திற் குடிவாயிருப்ப, நாற்பாலென்னக் கற்பார்பருக, முப்பாலும்மதிற் பொற்பாயமைத்தே, அறிகாரத்நாற் பதிஞனிறுவி, மதியார்க்கன்றி மதியாருக்கு, மாதவமெய்ஞ்ஞா ஞநயவறிவாற், பாதகவிருள்கடிந் தாதியிற்சைந, தொன்னூற்திறத்தார் பொன்னிற்பொதித்தார், பன்னும்பலவாண் டென்னத்தொலைத்தவால், பலவ்முவாகச் சிலமுழுவாக, நிலவியவத்லக் கலிதவம்தனுல், சற்குணச்சுவாமி விற்பனநாதன், றற்குலட்விள ங்கு முற்பனத்தனையன், வாற்றச்சிறந்தாய் நீற்றைப்புரத்தாய், கூற்றைச்சிதைத்தாய் பேற்றைப்பதித்தாய், என்றுத்துதிசெய் தென்றும்மகத்தி, லொன்றும்வினையைக் கொன்றும்விளக்கி, மீனக்கி ரிணையின் ருனத்திகத்து, ஞானக்கிரியைபிற் ருனேயுயர்ந்து, மெங்கும்புகழ்ந்த பொற்றியவறிஞன், றன்குத்தமிழ்முச் சங்கத்தலைவன், தவளமேனிப் பவளச்செவ்வாய்க், குவளைக்கண்கலை யவளுறுவிலாசன், வளத்தருகழனிக் களத்தைத்தலத்தன், இளத்திகழ்மடவா ருளத்தகிர்நலத்தன, பேதமிலாநூ லோதியவலவன், வேதகிரிப்பெயர் மேதகுபுலவன், முன்னுலகத்தியம் பின்ருல்காப்பிய, நன்னூற் காரிகைதொன்னூற்பன்னூல், கருத்துறமெற்கோள்பொருத்திவழூ உக்களைத், தித்திருப்பதவுரை கருத்துரைவிரிக்கப், பன்னுளிருக்கத் திருவேங்கடவன், றன்னுவிபற்றமிழ்த் தரும்பெருவிளக்க, வச்சி னிலெவரு முச்சிதமாக, மெச்சிடப்பதிப்பித் நிச்சைமேவினனே.

சாற்றுக்கவிகள் - முற்றிற்று.

சிவமயம்.

நாலடியார்மூலமும் - உரையும்.

கடவுள் வாழ்த்து.

நேரிசைவெண்பா.

வானிடைவில்லின் வரவறியாவாய்மையால்
கானிலத்தோவாக் கடவுளை—யாதிலஞ்
சென்னியுறவணங்கிச் சேர்புலம்முள்ளத்து
முன்னியவையமுடிக வென்றே.

* இதன்பதப்பொருள்:

வான்-மேகத்தில், இடு-இடப்பட்ட, வில்லின்-இந்திரவில்லின
து (காட்சிபோன்ற) வரவு-(பிறப்பு) வரவை, அறியா-அறிந்து, வாய்
மையால்-உண்மையிற்றல், கால்-திருவடிகள், நிலம்-பூவுலகில், தோ
வா-படியாத, (கடவுளைமுதற்) கடவுள்-பாம்-நாய்-நிலம்-பூமியில்,
சென்னி-சிரசானது, உற-பொருந்த, வணங்கி-பணிந்து, எம்-எம்
முடைய, உள்ளத்து-இருதயத்தில், முன்னியவை-நிகழ்ந்தனவாகிய,
(அறம்பொருளின்பமென்னுமூப்பால்களும்) முடிகவென்று-முடி
கவேண்டுமென்றுநினைத்து, சேர்தும்-அடைவோம்—எ-று. (முன்
னியவை என்று உள்ளத்து நிகழ்ந்தனவையாவும்மைபொருள்கொள்
ளினும் பொருந்தும் மேகத்தில் வில்லிடுகிறதும் கொடுக்கிறதுந்
தெரியாமைபோலப் பிறப்புண்டாதலும் இறப்புண்டாதலுந் தெரி
யாது, ஆதலால் வில்லைப்பிறப்புக் குவமைகூறினார்) * (இதன்தாற்
பரியம்) வானவில்லினது தோற்றமுமழிவுநிகர்ந்த பிறப்பையுமிற
ப்பையுமறிந்து எம்மனதில் நினைந்தனவை முடிகவேண்டுமென்று நி
னைத்துக் கடவுளைவணங்குவோமென்பதாம்; —யாம்-எழுவாய், சே
ர்தும்-பயனிலை, கடவுளை-செயப்படுபொருள், நாலடியார்-இதில்-
ஆர்விகுதி-உயர்வுப்பொருட்கண்வந்தது, குறள்வெண்பா-விரண்
டடி, சிந்தியல்வெண்பா-மூன்றடி, பஃறொடைவெண்பா-பலவடி,
இவைபோலாகாமை இந்நூல் வெண்பாநாலுமாம், நாலடியாகவந்
தமைபால் நாலடியென்று காரணப்பெயர்பெற்றது.)

* அகத்தியம் "தொகுத்தகவிரைச் சொற்சொல்லாகப் பகு
த்துப்பொருள்சொல்ல பதவுரையாமே" * (சதிப்பொருள் சுருக்
கிக்காட்டலுற்பரியம்.)

இ-ள். வாழ்நாள்-ஆயுட்கள், சென்றன-சென்றன, போயின-போயின, செறுத்து-கோபித்து, உடன்-உடனே, கூற்று-இயமன், வந்தது-வந்தது, வந்தான்-வந்தான், (ஆதலால்) நின்றன-நின்றன, நின்றன-நின்றன, (வெல்லும்பொருள்கள்) நில்லாவென-நிற்கா வென, உணர்ந்து-அறிந்து, ஒன்றின-வொன்றின, பொருந்திய-பொருந்தியதருமங்களை, செயின்-நீசெய்வையாகில், வல்லே-சீக்கி ரத்தில், செய்க-செய்யக்கடவாய்—எ-று. ✻ (உயர்திணைமூறுபோல ஃறிணைவருதலும், ஃறிணைமூறுபோல உயர்திணைவருதலும், மருதல்வி தியென வறைந்தனரான்றோர், இவ்விதியால் கூற்றன்று ஃறிணைமூறு உயர்திணைக்குவந்தது சென்றனசென்றன வந்தனவந்தன இவை விரவின்கணிரட்டிந்தன) ✻ (இ-ம்.) ஆயுட்கள்போயின இயமன்வந்தான் வந்தான் நின்றனவான செல்வங்கள் நில்லாவெனவறிந்து பொருந்திய தருமங்களை நீசெய்தால் சீக்கிரஞ்செய்யக்கடவாய் என்பதாம். நீ-தோன்றிவழுவாய், செய்க-பயனிலை. (எ)

என்ஞான்றுமொன்றுதங்கையுறப்பெற்றக்காற்
பின்ஞவதென்று பிடித்திரா-முன்னே
கொடுத்தாருயப்போவர் கோடிமீக்கூற்றந்
தொடுத்தாறுசெல்லுஞ் சுரம்.

இ-ள். என்ஞான்றும்-யாதானிலும், ஒன்று-ஒருபொருள், தம்-தமது, கையில்-கையில், உற-பொருந்த, பெற்றக்கால்-பெற்றால், பின்ஞவதென்று-பின்கொடுப்போமென்று, பிடித்திரா-பிடித்திராமல், முன்னே-முற்காலத்தில், கொடுத்தார்-கொடுத்தவர்கள், கோடு-தன் செய்கையிற்கோட்டம், இல்-இல்லாத, நீ-பொல்லாத, கூற்றம்-இயமன், தொடுத்து-பாசத்தாற்கட்டி, செல்லும்-போகும், சுரம்-பாலை வனத்தினை, ஆறு-வழியை(நீங்கி)உயப்போவர்-பிழைத்துப்போவார்கள்—எ-று. ✻ (இ-ம்.) யாதானிலு மொருபொருள் தன்கையிற்பெற்றால் பின்கொடுப்போமென்று வைத்திராது முன்கொடுத்தவர்கள் இயமன்கொண்டுபோம் வழியைநீங்கிப் பிழைத்துப்போவார்கள் என்பதாம். கொடுத்தார்-எழுவாய், உயப்போவர்-பயனிலை, ஆறு-செ, ஈறில்-ஐயுருபுதொக்கியது,(காலையின்மலர்ந்தமலர்மாலையினுலர்ந்த ழியுமாலைபோற்செல்வமழிதல்பற்றிமுன்னேகொடுத்தாரென்றார்()

இழைத்தநாளெல்லையிகவாபிழைத்தொழிக்
கூற்றங்குதித்துய்த்தா நீங்கில்லை-யாற்றப்
பெரும்பொருள்வைத்தீர் வழங்குமினுளைத்
தழீஇத்தழீஇத்தண்ணம் படும்.

இ-ள். இழைத்த-நமக்களவுசெய்த, நாள்-நாட்கள், எல்லை-தம்மளவை, இகவா-கடவா, கூற்றம்-இயமனை, பிழைத்து-தப்பி, ஒழீஇ-நீங்கி, குதித்து-அவன்குறிப்பைக்கட்டத்து, உய்த்தார்-பிழைத்தவர்கள்,

நாம்ரு-இவ்வுலகத்தை, நில்லில-இல்லை, நாளை-நாளையே, தழீஇத்தழீஇ-தழுவித்தழுவி, மணம்-பிணைப்பதை, படுத்-சாற்றப்படுமாகையால், ஆற்ற-மிகவும், பெரும்-பெரிய, பொருள்-பொருளை, வைத்நீர்-தேடிவைத்தவர்களே, வழங்குமின்-அப்பொருளைக்கொடுங்கள்—எ-று. ※ (இ-ம்.) தாம்களவுசெய்தநாள்கள் நம்மெய்ம்மலையக்கடவா இயமமென்னுங்கடத்தை மிறைத்தவர்க ளிவ்வுலகத்தி லில்லை நாளையே மிணைப்பதைசாற்றப்படும் பொருளைத்தேடிவைத் தவர்களே நீங்கள் கொடுங்கள் என்பதாம். நீங்கள்-எழுவாய், வழங் குமின்-பயனிலை, பொருள்-செ, இதில் ஐவுருபு தொக்கநின்றது.(ய)

தோற்றஞ்சாஞ்ஞாயிறு நாழிப்பாலைகளும்
கூற்றமளந்துறைந் நாளுண்ணுமாற்ற
லுறஞ்செய்வருளுடைய ராருமிலரியாரும்
பிறந்தும்பிறவாதாரில்.

இ-ள். தோற்றம்-உதயம், சால்-மிகுந்த, ஞாயிறு-சூரியனை, நாழியா-அளக்குநாழியாக, பாலைகளும்-பினைத்தோறும், கூற்றம்-இயமன், களந்து-களவிட்டு, நாள்-ஆயுளை, உண்ணுமாற்றை-உண்பானைகையால், யாரும்-யாவரும், பிறந்தும்-மகிழ்ச்சிற ப்பாய்ப்பிறந்தும், (பிணங்காமல்) பிறவாதாரில்-பிறவாதபொருட்டு திருப்பவனைப்போல, ஆற்ற-மிகவும், அறம்-தருமத்தை, செய் து-பண்ணி, அருளுடையராகுமின்-கிருபையுடையராகுங்கள்— எ-று.-(யாரும்-யாவரும், பிறந்தும்-மனிதப்பிறப்பிற்பிறந்து மறஞ் செய்யாராகில், பிறவாதாரில்-பிறவாதவர்களில் வைத்தென்னைப்பி வர் எனினுமமையும்) ※ (இ-ம்.) இயமன் சூரியனைப் படியாகக்கொ ண்டு உங்கள் நாளையளந்துண்ணுகிறன் ஆகையால் தருமத்தைச் செய்து கிருபையுடையராகுங்கள் என்பதாம். நீங்கள்-தோன்று வெழுவாய், அருளுடையராகுமின்-பயனிலை, ஆண்பாலும்பெண் பாலுமென்றிதற்குவாகுமென்றார். (எ)

செல்வர்யாமென்றுதாந் செல்வழியென்ணுத
புல்லறிவாளர் பெருஞ்செல்வ-மெல்லிற்
கருங்கொண்மூவாய்பிறந்த மின்னுப்போற்றோன்றி
மருங்கறக்கெட்டு விடும்.

இ-ள். செல்வர்-செல்வமுள்ளோர், யாமென்று-நாமென்று, தாம்-தாங்கள், செல்வழி-போமிடத்தை, எண்ணுத-நினையாத, புல்-அற்ப, அறிவாளர்-அறிவுடையவாதர், பெரும்-பெரிய, செல்வம்-ஐசுவரியம், எல்லில்-ஓராக்காலத்தில், கரும்-கரிய, கொண்மூ-மேக மானது, வாய்பிறந்தும்-வாய்விடப்பட்டு, மின்னுப்போல்-மின்ன லைப்போல, தோன்றி-உண்டாகி, மருங்கு-வழி, அற-முற்றச்,

கெட்டுவிடும்-கெட்டுப்போம்—எ-று. * (இ-ம்.) செல்வமானது நி
ன்னலைப்போலத் தோன்றியழியும் என்பதாம். செல்வம்-எழுவாய்,
கெட்டுவிம்-பயனிலை. (அ)

உண்ணுனெளிநிறு ணெங்குபுகழ்செய்யான்
துள்ளருங்கேளிர் துயர்களையான்-கொண்மை.
வழங்கான்பொருள்காத் திருப்பனெல் அஆ
வியழந்தாவனென்றெண்ணப் படும்.

இ-ள். உண்ணுன்-உண்ணுதவனுக, ஒளி-பிரகாசத்தை, நிறுன்-
நிறுத்தாதவனுக, ஓங்கு-மிகுந்த, புகழ்-கீர்த்தியை, செய்யான்-தே
டாதவனுக, துன்-பெறுதற்கு, அரும்-அரிய, கேளிர் - சுற்றத்தாரு
டைய, துயர்-துன்பத்தை, களையான் - நீக்காதவனுக, வழங்கான்-
கொடாதவனுக, கொண்மை-பயனில்லாமல், பொருள்-திரவியத்தை,
காத்து-காத்துக்கொண்டு, இருப்பானேல்- இருப்பானுனால், அஆ-
ஐயோ, இழந்தாவனென்று-இவன் பொருளையிழந்தானென்று, எண்
ணப்படும்-யாவராலும் எண்ணப்படுவான்—எ-று. * (இ-ம்.) பொ
ருளைத்தேடிச் செலவிடாதுவைத்துக் காத்திருந்தவன் பொருளை
யிழந்தானென்று யாவராலும்நிணக்கப்படுவான் என்பதாம். இவன்
தோன்று எழுவாய், எண்ணப்படும்-பயனிலை, பொருள்-செ, இதில்-
ஐயுருபுதொக்கது, அஆவென்றது-அருளின்கட்குறிப்பு (நெருங்கி
ய வுறவினனொன்று தோன்றற்குத் துள்ளருங்கேளிரென்றார்.) (க)

உடாஅதுமுண்ணுதுந் தம்முடம்புசெற்றுங்
கெடாஅதநல்லறமுஞ் செய்யார்-கொடாஅது
வைத்திட்டிழப்பர் வான்றோய்மலைநாட
வுய்த்திட்டுத்தேனைக் கரி.

இ-ள். உடாஅதும்-உடுக்காமலும், உண்ணுது-உண்ணுமலும்,
தம்-தங்களுடைய, உடம்பு - உடலை, செற்றும்-வருத்தியும், கெடா
அத-கெடுதலில்லாத, நல்-நன்மையாகிய, அறமும்-தருமங்களையும்,
செய்யார் - செய்யாதவர்களாய், கொடாஅது - யாதுங்கொடாது,
வைத்திட்டிழந்தார் - பொருளைத்தேடிவைத்தவர்கள், இழப்பர்-இழப்
பார்கள், வான்-ஆகாயத்தை, தோய் - அளாவும், மலை-மலைகளையும்,
நாட-நாட்டையுமுடைய, (பூண்டியமை) தேன்-மலர்த்தேனை, உய்
த்து-ஆராய்ந்து, ஈட்டும்-சம்பாதிக்கும், ஈ-ஈயல்லவோ, கரி-சாட்சி—
எ-று. * (இ-ம்.) பொருளைத்தேடிக் கொடாது வைத்தவர்கள் தே
னையப்போல இழந்துவிடுவார்கள் என்பதாம். ஈட்டினர்-எழுவாய்,
இழப்பர்-பயனிலை, பொருளை-செயப்படுபொருள். (ங)

செல்வநிலையாமை-முற்றிற்று.

—— * ——

இ-ள். சொல்-சொற்கள், களர்ந்து- குழறி, கோள்- நடுவை, ஊன்றி-ஊன்றிக்கொண்டு, சோர்ந்த-தள்ளாடிய, நடையினராய்ந் நடையையுடையவராய், பல்- பற்கள், கழன்று- உதிர்ந்து, பலவிடம்- (உட்னாதிய) பல்லிடம், பழிகாறும்- பழிக்கப்படுமளவும், இல்- இல்வாழ்க்கையில், நெறிநின்று- நெருங்கி, (காமம்) ஆசைநெறி- வழியே, படரும்- நடக்கும், கண்ணிறைர்க்கு- அறிவுடையார்க்கு, எமக்- நமக்குக்கோட்டையாகிய, நெறி- நல்வழியில், படரும்- நடக்கும், ஆறு- வழி, இல்லை- இல்லை—என்று. * (இ-ம்.) இவ்வாழ்க்கையிலே நடப்பவர்கள் உயிர்க்கு- நல்வாழ்க்கைவழியில்லை-என்பதாம். ஆறு- எழுவாய், இல்லை-பயனிலை, எகாரம்- அசை. (ஈ)

காழாத்தளராத் தலைநடுக்காத்தன்றன்
வீழாவிறக்கு மிவண்மாட்டும்—காழிலா
மம்மரீகொண்மார்க்கண்ணங்காகுந்தன்கைக்கோ
லம்மனைக்கோலாகிய வூன்று.

இ-ள். அம்மனைக்கோல் - (தன்) தாய்கைக்கோலானது, தன் கைக்கோல்- தன்கையிற்கோல், ஆகியவூன்று- ஆனகாலத்தில், காழா-காழ்த்து, களரா-வளர்ந்து, தலை - தலையை, நடுக்கா- நடுக்கி, கண்டு- அத்தடியை, ஊன்று- ஊன்றி, வீழா - வீழ்ந்து, நிறக்கும்- மரணமாகும், இவண்மாட்டும்- இவனிடத்தும், காழ்- உறுதி, இலாதில்வாத, மம்மர்- மயக்கம், கொள் - கொண்ட, மாந்தர்க்கு - மனிதர்க்கு, அணங்கு- துன்பம், ஆகும்- உண்டாகும்—என-று. * (இ-ம்) தன்தாய்கைக்கோலானது தன்கைக்கோலான காலத்துவருத்தமுற இறக்குமிவனிடத்து மயக்கல்கொண்டவர்களுக்குந் துன்பமுண்டாகுமென்பதாம். (அம்மனைக்கோல்)-இவ்விடத்து உயர்திணைக்கண்டுறைத்தமிருந்தது (செய்யுள்விகாரம்) அணங்கு- எழுவாய், ஆகும்-பயனிலை, இவண்மாட்டும் என்பதை- இவ்விடத்தென்பொருள் கூறுவாருமுளர். (உ)

எனக்குத்தாயரீகியாளென்னையீன்றிட்டுத்
தனக்குத்தாய்நாடியே சென்று—டனக்குத்தா
யாகியவளுமது வாறற்றுய்த்தாய்க்கொண்
டேகுமளித்திவ் வுலகு.

இ-ள். எனக்கு-எனக்கு, தாயாகியாள்-தாயானவள், என்னை- என்னை, ஈன்று, இவ்விடத்து, இட்டு- பெற்றவைத்து, தனக்கு- தனக்கொரு, தாய்- தாயை, நாடி- தேடி, சென்றுள் - இறந்தாள், தனக்கு- அவடனுக்கு, தாயாகியவளும்- தாயானவளும், அதுவாறல்- அத்தன்மையளாளால், தாய்த்தாய்க்கொண்டு- தாயைத்தாயத்தேடிக்கொண்டு, எகும்-போகும், இவ்வுலகு- இவ்வுலகமானது, அளித்து-என்னுமையுடையது—என-று *(இ-ம்.) இவ்வுலகமானது தாயைத்

காலைத்தோட்டுக்கொள்ளுதற்பொருட்டு எழுமையுடைத்து என்பதாயிற்று. காப்பாய்க்கொண்டு உவ்விடத்துவரின்றிமேல் மெய்யிற ஏற்றக்கலை மிக்கன (செய்யுள்விகாரம்); உலகு-எழுவாய், ஆளித்து-பயனிலை, ய, ஆறை, அளித்துவிடற்றலைத்தென்றுமாம். (ரு)

வெறியார்வெஞ்சினத்து வேன்மகன்பாணி
முறிகொள்தளிர்மெல்லடி முள்ளெயிற்—கயல்க
ணறிகுளகுண்டன்ன மென்மொழிப்பின்
னறிவுடையாளர் கலிழ்.

இ-ள். வெறி-வெறியாடலில், அயர்-நிகழ்கின்ற, வெம்-வெய்ய, வெஞ்சினத்து-பகைத்தலையுடைய, வேன்மகன்-தூசாரி, பாணி-கையில், முறி-தளிர், ஒர்-நிகர்த்த, நறுமை-மணக்குந், தன்மை- மாபில, முள்ளெயி- தன் முள்ளை, கயல்க-அளைந்துவிதாங்க, மறி-ஆடு, குளகு-உணவாக, உண்டன்ன-உண்டற்றோற்ற, மென்மொழி-மெல்லியபேச்சு, பின்-இல்லொடபொருந்திய, அறிவுடையாளர்-மனையறிவினையுடைய மகளிர், கலிழ்-இல்லை—எ-று. ※ (இ-ம்.) தூயதொண்டைமணிபோன்ற அறிவுடையாளர்களிடத்தில்லில் என்பதாம். மணிபோன்ற-எழுவாய், இல்-பயனிலை, மறியின் மெல்லிய கணைப்போன்ற நிகரணைமபற்றி மென்மொழியென்றார். (க)

பனிபடுசோலைப்பயன்மரமெல்லாங்
கனிபுரிந்துவீழ்த்தகற் றிளமை—நனிபெறுஞ்
சேற்கண்ணவிளன்றிவரோ வெஞ்சினவின்மதற்றிவளுங்
கொற்கைப்பிணையாகுங் குனித்து.

இ-ள். இளமை-இளமைப்பருவமான தது, பனி-குளிர்ச்சி, படி-பொருந்திய, சோலை- சோலையில், பயன்- பலனைத்தருகின்ற, மரமெல்லாம்-எல்லாமரங்களிலும், கனி-பழங்கள், புரிந்து- உதிர்த்து, வீழ்த்தகற்று-வீழுதற்காகிய பெருமையாதலால், நனி-மிக, பெரிதும்- பெரிய, சேல்-சேலைநிகர்த்த, கண்ணவென்று- கண்களையுடையவளென்று, இவரோ-இப்பெண்ணை, வெஞ்சினவின்-இச்சியோதிருக்கள், மற்றவருடன்-இன்றிப்பெண்ணையும், குனித்து- கூனியாகி, கோல்- கோலையே, கண்ணளாகும் -கண்ணாகவுடையவளாவாள்—எ-று. ※ தொல்காப்பியம்- (விளையின்றொருகாலத்திலுமென்) (இ-ம்.) இளமைப்பருவமானது மரங்களிற் பழங்களுதிர்த்தாற்போலும் ஆதலால்- சேலைநிகர்த்தகண்களையுடையவளென்றிவரோ இச்சியோதிருக்க-இவளுங் கூனியாகிக் கோலையேகண்ணாகக்கொண்டு நிரிவாள் என்பதாம். நிமிர்-சொன்ற எழுவாய்-வெஞ்சினவின்-பதிலோ-பயனிலை. (உ)

பருவமெனுஞ்சுள பல்லின்பாலேனை
யிருசிலகழுங்குமோ வென்று—மிரைபா

துன்னுறுட்டங்கொள்ளப் படுதலால்யாக்கைக்கோ
ளென்னுறு றறிவுடையார்.

இ-ள்: பருவம்-வயது, எனைத்து-எவ்வளவு, உள-உண்டாயிருக்கின்ற, பல்லின்-பற்களினுடைய, பால்-(வகைமைப்) பகுதி, எனை- எவ்வளவும், இருதிணையு-வண்மையான பதார்த்தங்களையும், மென்மையான-பதார்த்தங்களையும், உண்டூரோவென்று- புசித்திரோவெனக் கேட்டு, வரிசையால்-முறைமையால், உள்-உங்களுள்ளம், நாட்டம்-ஆராய்ந்து, கொள்ளப்படுதல்-பிறரால்செய்யப்படுதல், யாக்கை-உடலினது, கொள்கையை, அறிவுடையார்-விவேகமுடையார், என்னுறார்-பொருளாகினையார்—எ-று. * (இ-ம்.) வயதெவ்வளவுபற்களின் பலனெவ்வளவு வலியபதார்த்தங்களையும் மெலியபதார்த்தங்களையும் உண்டூரோவென்று நாமமாவங்களுள்ளம் பிறாலாராய்ந்து கொள்ளப்படுதலாலுடலின்கொள்கையைவிவேகிகள் பொருளாகவென்னுறார்கள்-என்பதாம் அறிவுடையார்-எழுவாய், என்னுறார்-பயனிலை, கொள்-செ. (அ)

மற்றறிவாநல்வினையா நினையமென்னுது
கைத்தண்டாம்போழ்தே கரவாது—நறஞ்செய்மின்
மூற்றிருந்த வனிவொழியத்தீவளியா
னற்காயுதிர்தலு முண்டு.

இ-ள். முற்றி- முதிர்ந்து, இருந்த- இருந்த, கனி-பழங்கள், ஒழிய- நீங்க, தீவளியால் - தீக்காற்றால், நல் - நல்ல, காய்- காய்கள், உதிர்தலும்-விழுதலும், உண்டு-உண்டாதலால், நல்வினை - தருமத்தை, மற்று- இனிமேல், அறிவாம்- அறிந்துசெய்வோம், யாம் - நாம், இனையும் - இனைமையுடைய குடையோம், என்னுது - என்றுநினையாது, கைத்தடி-திரவியம், உண்டாம்-உண்டாயிருக்கும், பொழ்தே-காலத்திலே, கரவாது- ஒளிக்காமல், அறம்- தருமத்தை, செய்மின், செய்யுங்கள்—எ-று. * (இ-ம்.) தீக்காற்றால் பழங்களன்றிக், காய்களுதிர்தலுமுண்டு ஆகையால்-தருமத்தைப்பின்செய்வோமென்று நினையாது பொருளுள்ளபொழுதே செய்யுங்கள் என்பதாம். நீங்கள்-தோன்றா எழுவாய்-செய்மின்-பயனிலை, அறம்-செ. (கூ)

ஆட்பார்த்தழலு மருளில்கூற்றுண்மையார்த்
றோட்கோப்புக்காலத்தாற்கொண்*டிம்மின்-பீட்பிதுக்கிப்
பிள்ளையைத்தாயலறக் கோடலான்மற்றதன்
கள்ளங்கடைப்பிடித்தனன்று.

இ-ள். ஆள்- ஆளை, பார்த்து- பார்த்து, உழலும்- திரியும், அருள்- தயை, இல்-இல்லாத, கூற்று- இயமன், உண்மையால்-இருக்கின்றதலால், தோட்கோட்பு-கட்டழுதலாகிய, (தருமத்தை) காலத்தால்-இளமைப்பருவத்தில், கொண்டு-தேடிக்கொண்டு, உய்மின்-பிழையுங்கள், பீள்-கருப்பத்தை, பிதுக்கி-பிதுங்கச்செய்து, தாய்

தாயானவள், அலற-அழ, பிள்ளையை - பிளையை, கோடலால்-கொள் ளுதலால், மற்றதன்-அவளிடமானது, கள்ளம்-வஞ்சத்தை, கடைப் பிடித்தல்-உறுதியாவறிந்துகொள்ளுதல், நன்று-நல்லது—எ-று. ✻ (அகத்திலம்) [பின்னும்பலர்பால் விகுதிமுடியே.] (இ-ம்.) இ லமனிருக்கிறபடியால் தருமத்தை இல்லாமைப் பருவத்திற் செய்து முடியுங்கள் தாயழப் பிள்ளையைக் கொண்டுபோதலா லவள் வஞ் சத்தை யுறுதியா லறிந்துகொள்ளுத லுபாயமும் என்பதாம். கடைப் பிடித்தல்-எழுவாய், நன்று-பயனிலை. (ய்)

இல்லாமைநிலையாமை-முற்றிற்று.



கூ-ம்-அதிகாரம்.

யாக்கைநிலையாமை.

ஆக்கைதான-சரீரமானது நிலைநில்லாமையாம்.

மலைமிசைத்தோன்று மதியம்போல்யானை
கலிமிசைக்கொண்ட குடையார்-நிலமிசைத்
தஞ்சிலரொன்றெடுத்துத் தாற்றப்பட்டாரல்லா
லெஞ்சிலரிவ்வுலகத் தில்.

இ-ள். மலை-மலையின், மிசை-மேல், தோன்றும்-உதிக்கும், ம தியம்போல்-சந்திரனைப்போல, யானை-யானையின், கலிமிசை-தலை மேல், கொண்ட-கவிழக்கொண்ட, குடையார்-குடையையுடையமன் னர்களும், நில மிசை-பூமிமேல், தஞ்சிலரொன்று-பிறரிற்சிலரொன் று, எடுத்து-பிறராலெடுக்க, தாற்றப்பட்டார்-தாங்கச்சொல்லப்பட் டார்கள், அல்லால்-அல்லாமல், எஞ்சிலர்-உயிரோடிருந்தார், இவ் வுலகத்து-இந்தவுலகத்தில், இல்-ஒருவருமில்லை—எ-று. ✻ (இ-ம்.) யானைமேலேறிபவராசர்களும் இறந்தார்களென்று சொல்லப்பட்டா ர்களேயல்லாம லிவ்வுலகத் தூபிரோடிவாழ்ந்தவர்க ளொருவருமில் லை என்பதாம். எஞ்சில்-எழுவாய், இல்-பயனிலை. (அ)

வாழ்நாட்கலகாய் வயங்கொளிமண்டிலம்
வீழ்நாள்படாஅ தெழுதலால்-வாழ்நா
ளுலவாமுறைப்பா வாற்றுமின்யாரு
நிலவார்நிலமிசை மேல்.

இ-ள். வாழ்நாட்கு-வாழும்நாள்களுக்கு, அலகாய்-அளவுமாக் காலாக, வயங்கு-பிரகாசிக்கும், ஒளி-கிரணங்களையுடைய, மண்டிலம்-சூரியமண்டலம், வீழ்நாள்-வீழுங்காலம், படாஅது-உண்டாகாமல், எழுதலால்-உதயமாதலால், வாழ்நாள்-வாழுநாள்களை, உலவாமுன்-கெடாமுன், ஒப்புரவு-தருமத்தை, ஆற்றுமின்-செய்யுங்கள், யாரு

ம்-யாவரும், நிலமிசைமேல்-நிலத்தின்மேல், நிலவார்-நிலைக்காமாட்டார்—எ-று. * (இ-ம்.) யாரு முலகத்தில் நிலைநிற்கமாட்டார்கள். உங்களாயுளுள்செடுமுன்னே தருமத்தைச்செய்யுங்கள் என்பதாம். * நீங்கள்-மூன்று எழுவாய், ஆற்றல்-பயனிலை, ஒப்புரவு-செ ()

மன்றங்கறங்க மணப்பறையாயின
வன்றவற்சாங்கே பிணப்பறையாய்-பின்றை
யொலித்தலுமுண்டா மென்றுய்த்துபோமாறே
வலிக்குமாமாண்டார் மனம்.

இ-ள். மன்றம்-சபையில், கறங்க-சத்திக்க, மணப்பறையாயினை-மணக்கோலத்திற்கானபறைகள், அன்று-அந்நாளைக்கே, அவற்குஅம்மாப்பிள்ளைக்கு, ஆங்கே-அவ்விடத்தே, பிணப்பறையாய்-பிணக்கோலத்திற்குக் கொட்டுப்பறையாய், பின்றை-பின்பு, ஒலித்தலும்-சத்திக்கலும், உண்டாமென்ற-உண்டாகுமென்று நினைத்து, உய்த்துபோம்-பிழைத்துப்போகிற, ஆறு-வழியை, வலிக்கும்-துணிந்துநிற்கும், மாண்டார்-பெரியோர்கள், மனம்-இதயம்—எ-று. * (இ-ம்.) மணத்திற்குக் கொட்டும்பறைகளே பிணத்திற்குக் கொட்டும்பறைகளாமென்று நினைத்துப் பெரியோர்கள் மனம்பிழைக்கும் வழியைத் துணிந்துநிற்கும் என்பதாம். மனம்-எழுவாய், வலிக்கும்-பயனிலை, ஆறு-செய்யுள். (கூ)

சென்றே * யெறிப வொருகால்சிறுவன்னா
நின்றேயெறிப பறையினை-நன்றேகாண்
முக்காலுக்கொட்டிழுன்ன மூடித்திக்கொண்டெழுவர்
செத்தாளைச்சாவர் சுமந்து.

இ-ள். சென்று-போய், பறையினை-பிணப்பறையை, ஒருகால்-ஒருமுறை, எறிப-அடிப்பார்கள், சிறுவனா-சற்றுநேரம், நின்று-நின்று, (அப்பறையினை) எறிப-இரண்டாமுறையடிப்பார்கள், முக்காலு-மூன்றுமுறை, கொட்டின்-அடித்தமாத்திரத்தில், உள்-பாடையிடத்து, மூடி-(பிணத்தைச்சீலையால்) மூடி, நீ-நெருப்பை, கொண்டு-சட்டியிற்கொண்டு, செத்தாளை-இறந்தவனை, சாவார்-இனியிறப்பவர்கள், சுமந்து-தோள்களிற்சுமந்து, எழுவர்-மயானத்திற் கெழுவர், நன்றேகாண்-நன்றுகப்பார்—எ-று. * (தொல்சாப்பியம்-அர்-ஊர்ப்-எனவருமூன்றும் நல்லோர்மருங்கிற்பட்டார்க்கைச்சொல்லே) (இ-ம்.) மூன்றுமுறைபறையறைந்தமாத்திரத்தில்பிணத்தைப்பாடையில்வைத்துச்சீலையால்மூடித் நீயுட்சுடலைக்குச்சொண்டுபோவார்கள்என்பதாம். சாவார்-எழுவாய், எழுவர்-பயனிலை, செற்றுறை-செ, நீ-தோன்று எழுவாய், காண்-பயனிலை, எ-ரிவண்டும்-அசைகள். ()

கணங்கொண்டுசுற்றத்தார் கல்லென்றலறப்
பிணங்கொண்டோட்டுப்பப் பார்க்கண்டு-மணங்கொள்ளுண்

ண்டுண்டென்னு முணர்விறற்சாற்றமே
தொண்டொண்டெனும் பறை.

இ-ள்: கணம்கொண்டு-கூட்டங்கூடிக்கொண்டு, சுற்றத்தார்-இனத்தார், கல்லென்று-கலீலென்னுஞ் சத்தமுண்டாக, அலற-புலம்ப, பிணம்-சவத்தை, கொண்டு-எடுத்துக்கொண்டு, காடு-சுடுகாட்டில், உய்ப்பார்-செலுத்துபவரை, கண்டும்-பார்த்திருந்தும், மணங்கொண்டு-விவாகஞ்செய்துக்கொண்டு, கண்டு-இவ்விடத்தில், உண்டுண்டென்னும்-இல்வாழ்க்கை உண்டுஉண்டுஎன்று என்னும், உணர்விறன்-அறிவினளுக்கு, தொண்டொண்டொடென்னும், தொண்டெதொண்டெதொடுஎன்னும் (ஓசையுள்ள) பறை-சாப்பறை, சாற்றும்-(சரீரநில்லாமையை) அறிவிக்கும்—எ-று. * (இ-ம்.) இனத்தாரழப்பிணத்தைக்கொண்டு போவாரைக்கண்டிருந்தும் இல்வாழ்க்கையை விரும்பினவனுக்குச் சரீரநில்லாமையைச் சாப்பறையறிவிக்கும் என்பதாம்—பறை-எ, அறிவிக்கும்-ப. (கூ)

நார்த்தொடுத்நிர்க்கிலே னன்றுய்த்தடச்சிலென்
போர்த்துழிப்பெய்யிலென் பல்லோர்-பழிக்கிலென்
றேற்பைபுணின்று தொழிலறச்செய்தூட்டுங்
கூற்றன்புறப்பட்டக்கால்.

இ-ள்: தோற்பை-உடலாகியபை, உள்-உள்ளே, நின்று-இருந்து, தொழில்-எத்தொழில்களையும், அற-முற்றுக, செய்து-பண்ணி, ஊட்டும்-உண்பிக்கும், கூற்றன்-ஆத்துமாவான து, புறப்பட்டக்கால்-வெளிப்பட்டால், நார்-நாரிலால், தொடுத்து-(அவயவங்களைக்) கட்டி, நார்க்கிலென்-இழுத்தாலென்ன, நன்று-நன்றுக, ஆய்த்து-சுத்தஞ் செய்து, அடக்கிலென்-புதைத்தாலென்ன, பார்-பூமியின், குழிவெட்டிப்பள்ளத்தில், பெய்யிலென்-போட்டாலென்ன, பல்லோர்-பலரும், பழிக்கிலென்-பழித்தாலென்ன—எ-று. பார்த்துழியென்றதை கண்டுழியென்பாருமுளர் * (இ-ம்.) உயிர்போனபின்பு உடலை எவ்விதஞ்செய்யினும் பயனென்ன-என்பதாம்—பிறர்-தோன்று எழுவாய், இழுத்தல்முதலிய-ப், உடல்-செ, * (தொல்-சொ-பிளவினியல்-கூ-சூ) பின்முன் கால்களுட வழியிடத்தென்னு மன்னமாபிற் காலங்கண்ணிய, லென்னகிளவியுமவற்றியல்பினவே, இவ்விதியால் புறப்பட்டக்கால் விளைவெச்சம். (ங)

படிமழைமொக்குளிற் பல்காலுந்தோன்றிக்
கெடுமிதோர்வாக்கையென் றெண்ணித்-தடுமாற்றந்
தீர்ப்போம்யாமென்றுணருந் தெள்ளறிவாளரை
நேர்ப்பார்யார்நீணிலத்தின் மேல்.

நி-ள். பல-பெயரினை, மழை-மழையினை, மொக்குளிம்-குமிழியைப்போல, பசைதரும்-பசைதருமு், தோன்றி-உண்டாகி, மெய்-அழியும், நிலை-இடமாக, ஓர்-ஒரு, யாக்கைவிலங்கு-உடலென்னு, எஞ்ஞான்று-நினைத்தால், நிலையாமை-நிலைபெறாமை, நீர்ப்போம்-நீர்த்தன்மையாம், யாமென்ற-நாமென்னு, உணரும்-அறியும், நன்-வினைத்தொகையால், மறிவானாய-விவேகமில்லாத, தன்-தனக்கு, நிலத்திற்மேல்-பூமியிலுள்ள, தெரிப்பார்-தேடுவார், யார்-எவர்—எ-று. ※ (நி-ம்.) பிறியப்போமென்றது பிறிதாய்ப்போமென்றபடி பழியுருடையனென்றதனாற் பிறவித்துன்பத்தை நீக்கும் விவேகமில்லாதவர் யார் என்பதாம்—தெரிப்பார்-எ-று. (எ)

யாக்கையையப்புடைத்தாய் பெற்றவர்தாம்பெற்ற
யாக்கையாலாய பயன்கொளாக்-யாக்கை
மலையாமைத்தேபோதி றோற்றிமற்றீதே
நிலையாதறிக்கற்க விங்கு.

நி-ள். யாக்கையை-உடலை, யாப்புடைத்தா-பருமையுடைத்தாக, பெற்றவர்-தாயுடையவர்கள், தாம்-தாமாகி, பெற்ற-தாயுடைத்தாய யாக்கையால்-அவ்வுடலால், ஆய - தானே, பயன்-நற்பயன்களை, கொளாக்-கொள்ளாதவர்கள், யாக்கை-உடலானது, மலையாமை-மலையினது, ஏபோல்-மேகம்போல, தோன்றி-தோற்றமாகி, நிலையாது-நில்லாமல், மீத்தூண்டும்-கெட்டுவிடும்—எ-று. ※ (நி-ம்.) உடலைப்பெற்றவர்கள் தம்முடலாலியலுமறங்களைக் கொள்ளாதவர்கள் உடலானது மேற்சொன்ன மேகம்போற் றோற்றியழியும் என்பதாம்—பெற்றவர்-எ, கொள்க-ப, பயன்-ஏ,

புன்றலைமேனீர்போ னிலையாமையென்றலைவி
யின்னினியேசெய்க வறமென்னை—யின்னினியே
நின்றுளிருந்தாய் கிடந்தாய் ※ நன்னகரந்
தென்றுணைப்பதெ வாய்.

நி-ள். இன்னினியே-இப்பொழுதே, நின்று-நின்றிருந்து, இருந்தாய்-நின்றிருந்தாய், கிடந்தாய்-பரந்திருந்தாய், நன்-நல்ல, றலைடைய, கள்-இனத்தார், அகல - புலர்ப, தென்றுணை-நாளை, எனப்படுவதாம்-என்றுசொல்லப்படுவதாம், புன் - புல்லிய, றலைமேல்-தலையிடத்து, நீர்போல்-பனிநீரைப்போல, நிலையாமை யென்று-சிலதினிலாதென்று, என்னை-நினைத்து, இன்னினியே - இப்பொழுதே, அறமின்னை - தருமத்தை, செய்க - செய்யக்கடவீர்—எ-று. ※ (தொகாப்பியம்) [நாலெழுத்தினவி யொருமைமுற்றுமிரண்டு] ※ (நி-ம்.) இப்பொழுதிருந்த விறந்தாரென்று சொல்லப்ப

டுதலால் சரீரநில்லாதென்றெண்ணியிப்பொழுதேதருமஞ் செய்யக்கடவீர்கள்என்பதாம். நீங்கள்தோன்றுவெழுவாய்-செய்யக்கடவீர்-பயனிலை, அறவினை-செ. (கு)

கோளதேவேந்து இனைகளாயிற்றோன்றி
வாளாதேபோவாரான் மாந்தர்கள்-வாளதே
சேக்கைமரமொழியச் சேணீங்குட்புட்போல
வாக்கைதமர்க்கொழிய நீத்து.

இ-ள். மாந்தர்கள்-மனிதர்கள், கோளாது-கோளாமல், வந்து-வந்து, இனைகளாய்-உறவினர்களாய், இல்-மனைவாழ்க்கையில், தோன்றி-பிறந்து, வாளாது-சொல்லாது, மான்-மாத்தில், சேக்கை-கூட்டை, ஒழிய-விட்டு, சேண்-தூரத்தில், நீங்கு-நீங்கும், புட்போல-பறவைபோல, வாக்கை-உடலை, தமர்க்கு-உறவினர்களுக்கு, ஒழியநீத்து-ஒழித்துவிட்டு, வாளாது-சொல்லாது, போவார்-இறந்துபோவார்கள்—எ-று. * (இ-ம்) மனிதர்கள் மனைவாழ்க்கையிற்பிறந்து தங்களுடைய உறவின்முறையார்களுக் கொழித்துவிட்டிறந்து போவார்கள்-என்பதாம். மாந்தர்கள்-ஏ, போவார்கள்-பயனிலை, ஏகாரமூன்றும்-ஆலொன்றும் அசைகள். (ம)

வாக்கைநிலையாமை-முற்றிற்று.

கூ-ம்-அதிகாரம்.

அறன்வலியுறுத்தல்*

அஃதாவது- தருமத்தின்பலனைவறிவித்தலாம்.

இன்னிசைவெண்பா.

அகத்தாவோவாழ்வாரென் றண்ணாந்துநோக்கிப்
புகத்தாம்பெறுவர் புறங்கடை-பற்றி
மிகத்* தாம்வருந்தி யிருப்பாரேமேலைத்
தவத்தாற்றவஞ்செய்யா தார்.

இ-ள். மேலை-முற்பிறப்பில், தவத்தால்-தவச்சாதனமாக, தவம்-தற்றவம், செய்யாதார்-செய்யாதவர்கள், அகத்தாவோ-இல்வாழ்க்கையாவோ, வாழ்வாரென்று-வாழ்பவர்களென்று, அண்ணாந்து-தலைநிமிர்ந்து, நோக்கி-பார்த்து, புகத்தாம்-தாமுள்ளேநுழைய, பெறுவர்-பெறுதவர்களாய், புறங்கடை-தலைவாயிலை, பற்றி-பிடித்துநின்று, மிக-மிகவும், தாம்-தாங்கள், வருந்தி-வருத்தப்பட்டு, இருப்பார்-இருப்பார்கள்—எ-று. * (இ-ம்.) முற்பிறப்பிற்றவஞ்செய்தார் இப்பிறப்பில் இல்வாழ்க்கையாவோ வாழ்பவர்களென்று தலைவாயிலைப்பற்றி உள்ளேநுழையாதவர்களாய் வருத்தப்பட்டிருப்பார்கள் என்பதாம். தவஞ்செய்யார்-எழுவாய், இருப்பர்-பயனிலை. அண்ணாந்தலை ஞ்ஞாந் தொழிற்பெயர் வினையாங்கால், அண்ணாருகிறதென்றும், சி

ண்ணுர்த்து) இதிலொற்றுக்கெட்டது. (தொல்காப்பியம்-பெயரியல் ஈயல்-சூத்திரம்) தாமெண்ணிலவி பன்மைக்குரித்தே. (இ)

ஆவாநாமாக்க நசைஇயறமறந்து
போவாநாமென்னுப் புலைநெஞ்சே-யோவாது
நின்றனுற்றிவாழ்தி யெனினுநின்வாழ்நாட்கள்
சென்றனசெய்வ துரை,

இ-ள், ஆவாம்-வாழக்கடவோம், நாம்-யாமென்று, ஆக்கம்-செல்வத்தை, நசைஇ-இச்சித்து, அறம்-தருமத்தை, மறந்து-மறந்துவிட்டு, போவாம்-இறந்துபோவாம், நாமென்னு-நாமென்றெண்ணுத, புலை-இழிவான, நெஞ்சே-மனமே, ஓவாது-இடைவிடாது, நின்று-நிலைபெற்று, உனுற்றி-முயற்சிசெய்து, வாழ்தியெனினும்-வாழ்வாயானாலும், நின்-உன்னுடைய, வாழ்நாட்கள்-ஆயுள்கள், சென்றன-போயின, செய்வது-இனிநீசெய்வதென்ன, உரை-சொல்—எ-று; * (இ-ம்) மனமேபல முயற்சிசெய்து வாழ்வாயானாலும் உன்னுடைய ஆயுட்கள்போயின, இனி நீசெய்வ தென்னசொல், என்பதாம், நீ-எழுவாய், செய்வதுரை-பயனிலை, (உ)

விளைப்பயன்வந்தக்கால் வெய்யவுயிரா
மனத்தினழியுமாம் பேதை-நினைத்தனைத்
தொல்லையிவ்வுண்ணீர் வாழ்தலிடமாற்றத்
தொல்லையிகந்தொருவு வார்,

இ-ள், பேதை-அறிவில்லாதவன், விளைப்பயன்-நாவிளைப்பயன், வந்தக்கால்-வந்தால், வெய்ய-கொடிதாக, உயிரா-பெருமூச்செறிந்து, மனத்தின்-மனத்திலுள்நினைத்து, அழியும்-அழிவான், அதனை-அந்நாவிளைப்பலனை, நினைந்து-ஆராய்ந்து, தொல்லையதென்று-முற்பிறப்பிற்செய்ததென்று, உணர்வாரே-அறிவுடையாரே, தமமாற்றத்து-பிறவித்துன்பத்தின், எல்லை-பிரமாணத்தை, இகந்தொருவுவார்-கடந்துபோவார்—எ-று, * (இ-ம்) அறிவில்லாதவன் நாவிளைவதால் மனத்தினினைத்தழிவான் அந்நாவிளை முன்விளை யென்றறிந்தவர்களே பிறவித்துன்பத்தளையைக் கடப்பாரீகள் என்பதாம், பேதை-எழுவாய், அழியும்-பயனிலை, உணர்வார்-எழுவாய், ஒருவுவார்-பயனிலை, (யாப்பருங்கலமேற்கோள், தொன்னூல் விளக்கத்திலுங்காண்க) வெண்பாமுதலா நால்வகைப் பாவுமெஞ்சாநாற்பால் வருணங்குறிய-இவ்விதியால் வெண்பாபிராமணசாதியாம், (ஊ)

அரும்பெறற்பண்பாக்கையைப் பெற்றபயத்தாற்
பெரும்பயனுமாற்றவே கொள்க-கருங்கூர்த்த
சாறுபோற்சாலவும் பின்னுதவுமற்றதன்
சோறுபோற்போரு முடம்பு,

இ-ள், பெறல்-பெறுதற்கு, அரும்-அரிய, யாக்கையை-உடலை, பெற்ற-அடைந்த-பாவத்தால், பலரும், பெரும்-பெரிய, பயனும், தருமப்பலனையும், ஆற்றவே-மிகவே, கொள்க-கொள்ளக்கடவீர்கள், கரும்பு-கரும்பிலிருந்து, ஊர்ந்த-(ஆலையால்) பாவிய, சாறுபோல்-சாற்றைப்போல, சாலவும்-மிகவுந், பினைதவி-(அத்தருமப்பலன்) பிற்காலத்துதவியாம், அதன்-அக்கரும்பின், கோதுபோல்-சக்கைபோல, உடம்பு-உடல், போகும்-அழிந்துபோகும்—எ-று, ※ (இ-ம்) பெறுதற்கரிய உடலடைந்தபோலுலகில் தருமப்பலனைக்கொள்ளக்கடவீர்கள் அப்பலன் கருப்பஞ்சாற்றைப்போலாம் உடலதன் சக்கைபோலாம் என்பதாம், நீங்கள்-தோன்றுழுவாய், கொள்க-பயனிலை, பயன்-செயற்று-அசை, ஏகவகைப்பிறப்பினும் மக்கட்பிறப்பிறப்பு யேலாகையால் அரும்பெறல் யாக்கையென்றார், (௮)

கரும்பாட்டிக்கட்டி சிறுகாலைக்கொண்டார்
அரும்பெழுதிகவேங்காற் றுயராண்டுழுவார்
வருந்தியுட்டீயின் பயன்கொண்டார்கூற்றம்
வருங்காற்பரிவ திலர்,

இ-ள், கரும்பு-கரும்பை, ஆட்டி-ஆலையிலாட்டி, கட்டி-வெல்லக்கட்டியை, சிறுகாலை-முற்காலத்தில், கொண்டார்-கொண்டவர்கள், கரும்பு-அக்கரும்பின் சாறு, எழுந்து-தீயாலெழுந்து, வேங்கால்-வேவுங்காலத்தில், ஆண்டு-அவ்விடத்து, துயர்-துன்பத்தால், உழுவார்-வருந்தாதபோல, உட்டும்பின்-உட்டும்பாலாகிய- பயன்- தருமப்பலனை, வருந்தி-பிரயாசைப்பட்டு, கொண்டார்-கைக்கொண்டவர்கள், கூற்றம்-இயமன், வருங்கால்-வரும்பொழுது, பரிவது-வருந்துவது, இலர்-இல்லாதவர்களாவார்கள்—எ-று, ※ (இ-ம்) வெல்லக்கட்டியைக் கொண்டவர்கள் கரும்பின்சக்கை வேங்காலத்து விசனப்பட்டார்கள், அதுபோல, உடம்பாலாகிய தருமப்பலனைக்கொண்டவர்கள் இயமன்-வருங்போது விசனப்படார்கள் என்பதாம், பயன்கொண்டார்-பரிவதிலர்-பயனிலை. (௯)

இன்னிசைவெண்பா,

இன்று ※கொலன்றுகொ லென்றுகொலென்னாது
பின்னறியேநின்றது கூற்றமென்-றெண்ணி
யொருவுமின்றீயவை யொல்லுமவைகயான்
மருவுமின்மாண்டாரறம்,

இ-ள், இன்றுகொல்-இன்னறக்கோ, அன்றுகொல்-நாளைக்கோ, என்றுகொல்-என்னறக்கோ, என்னாது-வருமென்றெண்ணாது, பின்னறியே-பின்னையே, நின்றது-நிற்கின்றது, கூற்றமென்று-இயமனென்று, எண்ணி-நினைத்து-தீயவை-பாவங்களை, ஒருவுமின்-நீக்குங்

கல்,மாண்டா-பெரியோராற்சொல்லிய, அறம்-தருமங்களை, ஒல்லும் வகையால்- கூடியமளவாக, மருவுமின் - பொருந்தும்படி, செய்- செய்யுங்கள்—எ-று, * (இ-ம்) இயமன்பின்னேநிற்கிறனென்றெ ண்ணி அதருமத்தைநீக்கித் தருமத்தைச்செய்யுங்கள் என்பதாம், * நீங்கள்-தோன்றுமுழுவாய், எருவுமின்-பயனிலதியவை-செ, நீங்க ள்,முழுவாய்,மருவுமின்ப- பயனில, அறம்-செ, (தொல்காப்பியம்) டகொல்லோலையமசை நிலைக்கூற்றே,, அன்றகொலென்றது வா ழ்நாளளவுமுடிவெனினுமமையும் இதுதான்கடியாகத் தனிச்சொலி ன்றிம்பலவிதற்பத்தான்வந்த இன்னிசைவெண்பாதாழிசையிற்காண் மக்களாலாய பெரும்பயனுமாயுங்கா லெத்துணையுமாற்றப் பலவானுக்-றுக்க வுடம்பிற்கேயொம்புரவு செயதொழுகாதும்பரிக் கிடந்தண்ணப் பண்ணப்படும்,

இ-ள், மக்களால்-மனிதர்களால், ஆய-உண்டாகிய, பெரும்-பெ ரிய, பயனும்-விளைவும், ஆயுந்தால்-ஆராயுமிடத்து, எத்துணையும்- எ வ்வளவும், ஆற்ற-மிக, பலவானால்- பலவாயிருந்தால், தொக்க-பொ ருந்திய, உடம்பிற்கே-உடலுக்கே, ஒப்புரவு-தருமத்தை, செய்து- பண்ணி,ஒழுகாது-நடவாமல்,உம்பர்- சுவர்க்கத்தில், கிடத்தல்- இரு ந்து,உண்ண-அநுபவிக்க,பண்ண-தருமங்கள்செய்ய,படும்-தகும் —எ-று, * (இ-ம்) நீங்களுடலுக்குத் தருமத்தைச்செய்யாது - சு வர்க்கத்திலிருந்தநுபவிக்கத்தருமத்தைச்செய்யுங்கள் என்பதாம், நீங்கள்-தோன்றுமுழுவாய்,பண்ணப்படும்-பயனில,அறங்களைசெ(உறக்குந்துணையாதோ ராலம்வித்தின்டி யிறப்பநிழற்பயந்தாஅங்-கறப்பயனும் தான்றிசிறிதாயினுந் தக்காரிகைப்பட்டக்கால் லான்சிறிதாப்போர்த்து விடும்,

இ-ள், உறக்கும்-கள்ளியெடுக்கும், துணையது-அளவினையுடை யது, ஓர்-ஒரு, ஆலம்வித்து-ஆலம்விதையான து, ஈண்டி- நெருங்கி வளர்த்து, இறப்ப-மிகவும், நிழல்-நிழலை, பயந்தாஅங்கு- கொடுத்தா ற்போல, அறம்-தருமத்தின், பயனும்-பலனும், தான்- தான், சிறிதா யினும்- சிறிதாயிருந்தாலும், தக்கார்- பெரியோர்கள், கைப்பட்ட க்கால்-கையிற்பட்டால், வான்-ஆகாயம், சிறிதா-சிறியதாக, போர்த் துவிடும்-மூடிவிடும்—எ-று, * (இ-ம்) ஒரு ஆலம்விதைவளர்த்து மி கவும் நிழலைக்கொடுத்தாற்போலத் தரும்பலன் சிறிதாலும் பெ ரியோர்கையிற் கொடுக்கப்பட்டால் அப்பலன் வானிலும் பெரிதா யிருக்குமென்பதாம், அறப்பயன்-எ, போர்த்துவிடும்-பயனில, உ றக்கும் என்றது, உறங்குமெனக்கூறினும்பொருந்தும்(அரும்பதக் கொத்து) (உறக்கம்கற்றல்வினாலாற்சொல்லுதல்) (அ)

வைகலும்வைகல் வரக்கண்டுபேம்றுணாரார்
வைகலும்வைகலை வைகுமென்-றின்புறுவர்
வைகலும்வைகற்றம் வாழ்நாண்மேல்வைகுதல்
வைகலைவைத்துணரா தார்.

இ-ள். வைகலும்-நாள்தோறும், வைகல்-நாள்கழிதலை, தம்-தம்முடைய, வாழ்நாண்மேல்-ஆயுள்களின்மேல், வைகுதல்வைத்து-செலவுநாளாகவைத்து, வைகலை-அந்தநாட்களை, உணராதார்-அறியாதார், வைகலும்-நாள்தோறும், வைகல்வர-தம்வாழ்நாள்கழிவர, கண்டும்-பார்த்தும், அஃது-அதனை, உணர்ார்-அறியார், வைகலும்-நாள்தோறும், வைகலை-நாள்களை, வைகுமென்று-கழியுமென்று, இன்புறுவர்-இன்பத்தையடைவர்—எ-று. * (இ-ம்.) நாள்தோறும் நாள்செல்லுதலைத் தம்வாழ்நாண்மேற் செல்லுதலாகவைதந்த நாட்களையறியார் நாள்தோறுந் தம்வாழ்நாள் செலவுவாக்கண்டு மனையறியாமல் நாள்தோறும் நாள்செல்லுதலுக் கின்பத்தையடைவரென்பதாம் * உணராதார்-எ, இன்புறுவர்-ப, *(யாப்பருங்கலமேற் கோள்)(அணியியலிலுக்காண்க)இஃதகவல்வெண்பாவகவல்வெண்பாவடிநிலைபெற்றுச், சீர்நிலைபெறாவுந்தொடைநிலைதெரியாது, நடக்கையினுடிநெய்வார்த்தன்ன நயமுடைத்தாகியபொருளொடுபுணர்ந்தவெழுத்தழியாதே, என்றதுயாப்பருங்கலமேற்கோளறிக.()

நேரிசைவெண்பா.

மானவருங்கல மீக்கியிவ்வென்னு
மீனவிழிவிறல் வாழ்வேமன்-மீனத்தார்
ஓட்டியகண்ணு முறநிற்சேர்ந்திவ்வுடம்பு
நீட்டித்தநிற்கு மெனின்.

இ-ள். ஈனத்தால் ஓட்டியகண்ணும் - இரந்தோட்டியவிடத்தும், உறநி-வறுமை, சேர்ந்து-பொருந்தி, இவ்வுடம்பு-இவ்வுடல், நீட்டித்து-நெடுநாள், நிற்குமெனின்-நிற்குமாறால், மானம்-அபிமானமாகிய, அரும்-அரிய, கலம்-ஆபரணத்தை, நீக்கி-தள்ளி, இவ்வென்னும்-யாசகமென்னும், ஈனம்-கனவீனமான, இழிவிறல்-அவமதிப்பால், வாழ்வேன்-உயிர்வாழ்வேன்—எ-று. * (இ-ம்.) இரந்தோட்டியவிடத்திவ்வுடம்பு நிலைநிற்குமாறாலபிமானமென்கிற வாபரணத்தைத்தள்ளிக் கனவீனமாகிய வவமதிப்பினா லுயிர்வாழ்வேன் என்பதாம் * யான்-எ, வாழ்வேன்-ப, மன்-ஒழியிசை. (ஏ)

அறன்வலியுறுத்தல் - முற்றிற்று.

தாயற்றன்மை.

ஆசிரியர், பத்தினியல்லாத தன்மைமையைச் சொல்லுதலார்.

மாக்கேழுடைநல்லா வென்றாரஞ்சான்றவர்
நோக்கார்கொலெய்யதோர் புக்கில்லோ-வாக்கைக்கோ
நீச்சிறகன்னதோர் நோயறிற்றீவெண்டுவம்
காக்கைகழுவுதோர் கோல்.

இ-ள். யாக்கைக்கு-உடலிற்கு, ஓர்-ஒரு, நாயினது, சிறகு-சிறகை, அன்னத்து-ஒப்பாகிய தது, ஓர்-ஒரு, தோல்-தோலானது, அறிஞரும்-அறிந்தாலும், காக்கை-காகத்தை, கழுவதுறைக்கு-துறைத்தற்கு, ஓர்-ஒரு, கோல்-தடி, வெண்டுமே-வேண்டுமல்லவா (ஆதலால்) மா-மாமரத்தின், கேள்-தளிர்நிறத்தையும், மடம்-இளமையையுமுடைய, நல்லாளென்று-பெண்ணெனென்று, ஆரம்-(அறிஞர்) பிதற்றும்-அற்பமாகியதாய்விளங்கும், ஓர்-ஒரு, புக்கில்லோ-உடலை, சான்றவர்-பெரியோர்கள், நோக்கார்-பார்க்கமாட்டார்கள்—எ-று. * (இ-ம்.) அறிவுடையோர்கள் இழிவாகிய உடலைப்பாராரீர்கள் என்பதாம் * சான்றவர்-எ, நோக்கார்-ப, புக்கில்லோ-செ, கொல் அசை-நோக்கார்கொல் என்றது இழிவென்று காரணரோ வெளிறு மமையும் (தன்னுல்-அரும்பதக்கொத்து) கொல்லேயையு மசைநிலைக்கூற்றே. (க)

தோற்போர்வைமேலுந் துளைபலவாய்ப்போய்ம்மறைக்கு
மீப்போர்வைமாட்சித் துடம்பாலுண்-மீப்போர்வை
போய்ம்மறையாக்காமம் புகலாதுமற்றதனைப்
பைம்மறிபாப்பார்க்கப் படும்.

இ-ள். தோல்-தோலாகிய, போர்வை-போர்வையானது, மேலும்-(உடன்) மேலும், துளை-நவத்துவாரங்கள், பலவாய்-பலவிடமாய், போய்-மலங்களை, மறைக்கும்-மறைத்துவைத்திருக்கும், மீப்போர்வை-மேற்போர்வையால், மாட்சித்து-பெருமையுடையது, உடம்பாலுல்-உடலானதால், மீப்போர்வை-மேலேபோர்த்தபோர்வை, யால்-பொய்மலங்களை, மறையா-மறைக்கும், காமம்-காமநுகர்ச்சியை, புகலாது-இச்சியாது, அதனை-அவ்வுடலை, பைம்மறியா-உட்புறத்திருப்பியபையைப்போல, பார்க்கப்படும்-நோக்கத்தகும்—எ-று. பைம்மறியாப்பார்க்கப்படும் பாம்பின்கடைவாய்ப்பையுள் மறிப்பட்டவிடம்போலப் பார்க்கப்படுமென்பாருமுளர் * (இ-ம்.) மலங்களைமறைத்துத் தோலால்மூடிவைத்திருக்கு முடலியுட்புறத்திருப்பியபையைப்போலப்பார்க்கவேண்டுமென்பதாம் * நீ-தோன்றவெழுவாய், பார்க்கப்படும்-ப, உடம்பினை-செ, மற்று-அசை. (உ)

* தக்கோலத்தின்று தலைநிறையைப்பூச்சூடி
பொய்க்கோலஞ்செய்ப வொழியுமே-வெக்காலு

முன்டிமிலையு ளுறைக்குமெனப்பெரியோர்
கண்டுகைவிட்ட மயல்.

இ-ள். எக்காலும்-எந்நாளும், உண்டி-உணவால்வரும், விலையுள்-தொழிலால், உறைக்குமென - தூர்க்கந்தம்மிசுமென்று, பெரியோர்-பெரியோர்கள், கண்டு-அறிந்து, கைவிட்ட - கைவிட்டுவிட்ட, மயல் - (உடலான) செத்தைச்சு, தக்கோலத்தின்று-தாம்பூலத்தின்று, தலைநிறைய-சிரசுநிறைய, பூச்சூடி-பூவைத்தரித்து, பொய்க்கோலம்-பொய்யாபரணமுதலை, செய்ய - செய்தால், ஒழியுமோ-உள்ளுள்ளமலநீங்குமோ—எ-று. * (இ-ம்) பெரியோர்களுணவுத்தொழிலால் நாறுமென்று வெறுத்த உடலுக்குத் தாம்பூலத்தின்று பூவைச்சூடுதலுள் உள்ளிருக்கு மலங்கள் போய்விடுமோ என்பதாம். மலம்-தோன்றுமெழுவாய், ஒழியுமே-பயனிலை. (தொன்னூல்விளக்கம்) எல மிளகு வெற்றிலை முன்றுந்தக்கோலமென்றேசாற்றப்படும்.()

தெண்ணீர்க்குவளைப் பொருகயல்வேலென்று
கண்ணில்புன்மாக்கள் கவற்ற-விடுவனே
வுண்ணீர்கலைந்தக்கா லுங்குருஞ்றிட்டன்ன
கண்ணீர்மைகண்டொழுகு வேன்.

இ-ள். உள்-உள்ளிருக்கும், நீர்-சலத்தை, கலைந்தக்கால்-எடுத்தால், நுங்கு - நுங்கை, ருன்றிட்டன்ன - தோல்றிறற்போலும், கண்-கண்களுடைய, நீர்மை-குணத்தை, கண்டு-பார்த்து, ஒழுகுவேன்-நடப்பேன், தெள்-தெளிந்த, நீர்-சலத்திலுள்ள, குவளை-நீலோற்பலத்தையும், கயல்-கெண்டைமீனையும், வேல்-வேலாயுதத்தையும், பொருவென்று-ஒப்பென்று, கண்ணில்-ஞானக்கண்ணில்லாத, புல்-அற்பமான, மாக்கள்-மனிதர்கள், கவற்ற-என்மனதைக் கவலைப்படுத்த, விடுவனே-யான்துறவறத்தைவிடுவனே—எ-று. * (இ-ம்) நுங்குக்கண்களைப்போலப் பெண்கள் கண்களைக்கண்டு நடப்பேன் அறிவினொன்மனதைக் கவலைப்படுத்த யான்துறவறத்தைவிடுவனே என்பதாம். * யான்-எ, விடுவனே-ப, (தொன்னூல்விளக்கம்) தொகுபெயர்வேற்றுமைத் தொடர்பெயரொன்ன, வியற்றிரிபழிவாக்கழிவைந்தாந்தொகையே, ஒவ்விதியால் நீர்கலைந்தக்கால் என்றதில் ஐயுருபுத்தொகையில் இயல்பாயிற்று. (சு)

முல்லைமுகைமுறுவல் முத்தென்னிலவிதற்றுங்
கல்லாப்புன்மாக்கள் கவற்ற-விடுவனே
வெல்லாருங்காணப் புறங்காட்டுதிர்த்துக்க
பல்லென்புகண்டொழுகு வேன்.

இ-ள். எல்லாரும்-யாவரும், காண-அறிய, புறங்காட்டு-கூகாட்டிலே, உதிர்த்து-உதிர்த்து, உக்க-மக்கிக்கிடக்கிற, பல்லென்பு-பல்லாகியவெலும்பை, கண்டு-பார்த்து, ஒழுகுவேன்-நடப்பேன், முறு

வல்-அப்பற்களோ, முல்லைமுகையென்ற-முல்லையரும்பென்றும், முத்தென்றும்-முத்தென்றும், இவை-இவைகளோ, பிதற்றம்-ஒப்பாகச் சொல்லும், கல்லா-கல்வியறிவாத, புல்-அற்பமான, மாக்கள்-மனிதர்கள், கவற்ற-(என்மனதைக்) கவலைப்படுத்த, விடுவனே-யான் துறவுத்தைவிடுவனே—எ-று. * (இ-ம்) சுடுகாட்டிலுதிர்த்துகிடக்கிற பல்லெலும்பைக்கண்டுநடப்பேன் அறிவினர் பெண்கள்வழியிலென்மனதைக்கவலைப்படுத்த யான் துறவுறத்தைவிடுவனே என்பதாம். யான்-எ, விடுவனே-ப, [மற்றென்கிளவி விகுமாற்றலைநிலை, யப்பாலிரண்டென மொழிமரபுளர்புலவர்.] (கூ)

குடருங்கொழுவுங் குருதியுமென்புந்
தொடருநரம்பொடு தோலுமிடையிடையே
வைத்ததகடியும் வழும்புமாமற்றிவற்று
ளெத்திறத்தாளீர்ங்கோதையாள்.

இ-ள். குடரும்-குடலும், கொழுவும்-மூளையும், குருதியும்-உதிரமும், என்பும்-எலும்பும், தொடருஞ்-தொடர்ந்த, நரம்பொடு-நரம்புடன், தோலும்-தோலும், இடை-இடையே, நடு-நடுவாக, வைத்த-வைக்கப்பட்ட, தகடியும்-இறைச்சியும், வழும்பும்-நிணமும், ஆம்-ஆகிய, இவற்றுள்-இவைகளுள், ஈர்ங்கோதையாள்-குளிர்ந்தமாலையையுடையவள், எத்திறத்தாள்-எந்தத்திறத்தையுடையவள்—எ-று. * (இ-ம்) குடல் மூளை யுதிரம் எலும்பு நரம்பு தோல் இறைச்சி நிணம் இவற்றுள் மாலையணிந்தவள் எந்தன்மையுடையவள் என்பதாம். கோதையாள்-எ, எத்திறத்தாள்-ப, மற்று-அசை. (கூ)

ஊறியுவர்த்தக்க வொன்பதுவாய்ப்புலனுங்
கோதிக்குழம்பலைக்குங் கும்பத்தைப்-பேதை
பெருந்தோளிபெய்வளா வென்னுமீப்போர்த்த
கருந்தோலாற்கண்விளக்கப் பட்டு.

இ-ள். பேதை-அறிவில்லாதவன், ஊறி-மலங்கலூறி, உவர்த்தக்க-வெறுக்கத்தக்க, ஒன்பதுவாய்ப்புலனும்-நவதுவாரவிடங்களிலும், கோதி-கொழித்து, குழம்பு-மலக்குழம்பை, அலைக்கும்-ஒதுக்கும், கும்பத்தை-உடலானகூடத்தை, மீப்போர்த்த-மேலேமூடிய, கரும்-பெருமைபொருந்திய, தோலால்-தோலால், கண்-கண்களுக்கு, விளக்கப்பட்டு-விளக்கம்பொருந்தி, பெரும்-பெரிய, தோளி-தோள்களையுடையவளே, பெய்வளாள்-இடப்பட்டவளையல்களையுடையவளே, என்னும்-என்றுசொல்லுவான்—எ-று. * (இ-ம்) அறிவினன் நவதுவாரங்களிலு மலத்தையொதுக்கும் உடலையுடையவளைப் புகழ்ந்துசொல்லுவான் என்பதாம். பேதை-எ, என்னும்-ப, கும்பத்தை-செ, (தொல்காப்பியம் இடைச்சொல்லியல்-யஉ-சூ) (பல்லோர் படர்க்கை முன்னிலைதன்மை-மவ்வயின்மூன்று நிகழுங்காலத்துச்;

செய்யுமென்னுங் கிளவியொடுகிள்ளா, இவ்விதியால் உண்ணும் உண்ணுவாயென்றுயிற்று.) (எ)

பண்டமறியார் படுசாந்துங்கோதையுங்
கொண்டுபாராட்டுவார் கண்டிலர்கொல்-மண்டிப்
பெடைச்சேவல்வன்கழுகு பேர்த்திட்டுக்குத்து
முடைச்சாகாடச்சிற் றுழி.

இ-ள். முடை-நாறுகின்ற, சாகாடு-உடலான்பண்டி, அச்சு-(உயிரான) வச்சு, இற்றுழி- முறிந்தவிடத்து, மண்டி - நெருங்கி, பெடை-பெட்டையும், சேவல்-சேவலுமான, வன்கழுகு-வலியகழுகுகள், பேர்த்திட்டு-அடிகள்பேர்த்திட்டு, குத்தும்:குத்தாநிற்கும், (ஆகையால்) பண்டம்-(உடலாகிய)பொருள்ளதுதன்மையை, நிறியார்-அறியாதவர்களாய், படு-பொருந்திய, சாந்து-சந்தனத்தையும், கோதை-மாலையையும், கொண்டு-கைக்கொண்டு, பாராட்டுவார்- (உடலைப்) பாராட்டுவார், கண்டிலர்கொல் - அக்கழுகுகள் குத்துதலைக்காணார்களோ—எ-று. (இ-ம்) உயிர்போனவிடத் துடலைக் கழுகுகள் குத்துதலை உடலைப்பாராட்டுவார் காணார்களோ என்பதாம். பாராட்டுவார்-எ, கண்டிலர்கொல்-ப. (அ)

கழிந்தாரிடதலைக் கண்டார்நெஞ்சுட்கக்
குழிந்தாழ்ந்தகண்ணவாய்த் தோன்றி-யொழிந்தாளைப்
போற்றிநறிநின்மி னிற்றிதன்பண்பென்று
சாற்றுங்கொல்சாலச் சிரித்து.

இ-ள். கழிந்தார்-இறந்தவர்கள், இடு-இடப்பட்ட, தலை - தலைகளானவை, கண்டார்-பார்த்தவர்கள், நெஞ்சு-இதயங்கள், உட்க-பயப்பட, குழிந்தாழ்ந்த-குழிந்தாழ்ந்திருக்கின்ற, கண்ணவாய்-கண்களையுடையவாக, தோன்றி-தோன்றப்பட்டு, ஒழிந்தாளை-சாவாதிருந்தவளை, போற்றி-பாதுகாத்து, நெறி- நன்மார்க்கத்தில், நின்மின்-நில்லுங்கள், இதன்பண்பு-இவ்வுடலினதுதன்மை, இற்றென்று-இத்தன்மையதென்று, சால - மிகவும், சிரித்து - நகைத்து, சாற்றுங்கொல்-சொல்வனபோலும்—எ-று. * (இ-ம்) இறந்தவர்தலைகள் இறவாதவர்களை நல்லவழியிலே நில்லுங்களென்று சிரித்துச்சொல்வனபோலும் என்பதாம். தலைகள்-எ, சாற்றும்-ப. (க)

உயிர்போயார்வெண் டலையுட்கச்சிரித்துச்
செயிர்தீர்க்குஞ்செம்மாப் பவனைச்-செயிர்தீர்ந்தார்
கண்டிற்றிதன்வண்ண மென்பதறற்றமைமேவார்
பண்டத்துள்வைப்ப திலர்.

இ-ள். உயிர்போயார்-இறந்தவர்களுடைய, வெண்டலை-வெண்மையாகியதலைகள், உட்க-பார்த்தவர்களஞ்ச, சிரித்து-நகைத்து, செம்மாப்பவனை-இவ்வாழ்க்கையிலிருமாந்தவனை, செயிர்-குற்றத்தை,

அறிவுடையார், இன்பம் - இல்வாழ்க்கையின்பத்தின், இடைவேறு, பாட்டை, தெரிந்து-அறிந்து, இன்னுமை-துன்பத்தை, நோக்கி-பாராத்து, இல்வாழ்-இல்வாழ்க்கையின், அடைவு-சம்பந்தத்தை, ஒழிந்தார்-நீங்கினர்—எ-று. * (இ-ம்) அறிவிலார் இல்வாழ்க்கையின்பத்தை இச்சிப்பார் அறிவுடையார் அவ்வில்வாழ்க்கையின்பத்தைவிட்டு நீங்குவர் என்பதாம். எழையர்-எ, காமுறுவர்-ப, இன்பம்-செ, ஆன்றமைந்தார்-எ, ஒழிந்தார் - ப, அடைவை-செ: (காக்கைபாடினியார் நச்சினாம்) நனியசைவென்றுவிடுவசைவென்று, விரண்டெனமொழிமரபியல்புணர்ந்தோரோ, இவ்விதியால் இன்பம் இடைவசை. ()

கொன்னேகழிந்தன நிலைமையுமின்னே
பிணியொடுமூப்பும் வருமாற்-றுணிவொன்றி
யென்னெடுசூழா தெழுநெஞ்சேபோதியோ
நன்னெறிசேர நமக்கு.

இ-ள். துணிவு-துணிதலை, ஒன்றி-பொருந்தி, என்னெடு-என்னுடன், சூழாது-ஆலோசியாது, எழும்-எழுகின்ற, ஒநெஞ்சே-ஓமனமே, இளமையும்-இளமைப்பருவமும், கொன்னே-பயனில்லாமல், கழிந்தனது-நீங்கியது, இன்னே-இப்பொழுதே, பிணியொடு-மூப்பினியுடன், மூப்பும்-தள்ளாமையும், வருமால்-வருமாகையால், நமக்கு-நமக்கு, நன்னெறி-பிறப்புநல்வழி, சேர-பொருந்த, போதி-வருதி—எ-று. * (இ-ம்) எனக்குடன்படா தெழுந்துசெல்கின்ற மனமே இளமைநீங்கி முதுமைவருமாகையால் நமக்குப் பிறப்பறும்வழியில் பொருந்துவர் என்பதாம். நெஞ்சம் - எ, போதி - ப, போதல்-வருதல், இதனைப் போதிவருதியென்றுயிற்று போதியோ என்றதற்குப் போகிறுயாவென்பாருமுளர். (ரு)

மாண்டகுணத்தோடு மக்கட்பெறில்லெனினும்
பூண்டான்கழித்தற் கருமையாற்-பூண்ட
மிடியென்னுங்காரணத்தின் மேன்முறைக்கண்ணே
கடியென்றுர்கற்றறிந் தார்.

இ-ள். மாண்ட-பெருமைபொருந்திய, குணத்தோடு-நற்குணத்தொடு, மக்கட்பேறு-மக்களைப்பெறுதல், இல்லெனினும்-(மனைவிக்கு) இல்லையாயினும், பூண்டான்-விவாகஞ்செய்தவன், கழித்தற்கு-அவளைவிடுதற்கு, அருமையால்-அரிதாதலால், பூண்ட-தான்கொண்ட, மிடியென்னும்-வறுமையென்னும், காரணத்தின் - ஏதுவினால், கற்றறிந்தார்-பெரியோர்கள், மேன்முறைக்கண்ணே-மேலாயதுற வறவொழுக்கத்தைவிரும்பி, கடியென்றுர் - (மணஞ்செய் முன்னமே இல்வாழ்க்கையை) விட்டுவிடென்றார்கள்—எ-று. * (இ-ம்) நற்குணமக்கட்பேறு மனைவிக்கில்லாதிருந்தும் கொண்டவனீக்குதற் கரிதாதலால் தரித்திரமென்னுங் காரணத்தினாலேனுந் துறவறத்தை

விரும்பி இல்லறத்தை நீக்கென்றார்கள் என்பதாம். கற்றறிந்தார்-எ, கடியென்றார்-பயனிலை. (கூ)

ஊக்கித்தாங்கொண்ட விரதங்களுள்ளுடையத்
தாக்கருந்துன்பம் கடாந்தலை-வந்தக்கா
லீக்கிநிறூஉமுரவோரோ நல்லொழுக்கக்
காக்குந்திருவத் தவர்.

இ-ள். ஊக்கி-உறுதிகொண்டு, தாம் - தாங்கள், கொண்ட-நல்லொழுக்கமாகக்கொண்ட, விரதங்கள்-நவங்கள், உள்ளுடைய-இருதயங்களுக்க, தாக்கு-தாங்குதற்கு, அரும்-அரிய, துன்பங்கள்-துயரங்கள், தலை - (தம்) மிடத்தில், வந்ததாதல்-வந்தால், நீக்கி-தள்ளி, நிறூஉம்-தங்களோத்தவத்திலேறிறத்தும், உரவோரோ-அறிவுடையோரோ, நல்லொழுக்கம்-நற்றவவொழுக்கத்தை, காக்கும்-காப்பாற்றும், திருவத்தவர்-பிறப்பினையுடையார்—எ-று. * (இ-ம்) அறிவுடையோர்தம்துன்பம்வரினும் மத்துன்பத்தைச்சகித்தும் தவத்தைக்காப்பார், என்பதாம். உரவோர்-எ, திருவத்தவர்-ப, தாம்-அசை, தாக்கு-விகாரம். (இலக்கணக்கொத்து ஒழிபியல்-சு-ம்-கூ) [இயற்கையளபெடை செயற்கையளபெடை, வெழுத்தளபெறளபெடை யிசைநூலளபெடை, வொற்றளபெறளபெடை வொரோவழிக்கூடிலத்தனைமொழிபவளபெடையவை தாந்தூற்றெழுத்தளபெடை நெட்டெழுத்தளபெடை வொற்றெழுத்தள்பெடை யெனவொருமூன்றுய் மொழிமுதலிடைகடை மூன்றிலும்வருமே, இவ்விதிபால்-நீ-கூ.உ-ம்-தூற்றெழுத்தளபெடை. (எ)

தம்மையிகழ்ந்தமை தாம்பொறுப்பதன்றிமற்
றெம்மையிகழ்ந்த வினைப்பயத்தா-லும்மை
யெரிவாய்நிரயத்து வீழ்வர்கொலென்று
பரிவதூஉஞ்சான்றோர் கடன்.

இ-ள். தம்மை-தங்களை, இகழ்ந்தமை-இகழ்ந்துபேசினவற்றை, தாம்பொறுப்பதன்றி-தாங்கள்பொறுப்பதல்லாமல், எம்மை - எங்களை, இகழ்ந்த-இகழ்ந்துபேசிய, வினைப்பயத்தால்-நிவினைபலனால், உம்மை-மற்றுபிறப்பில், எரிவாய்-நியிடமாகிய, நிரயத்து-நரகத்தில், வீழ்வரொன்று-வீழ்வார்களென்று, பரிவதூஉம்-இரக்கங்கொள்வதும், சான்றோர்-பெரியோர்கள், கடன்-கடமை—எ-று. * (இ-ம்) பெரியோர்கள் பிறர்வைதலைப்பொறுப்பதன்றியுட்வைதவர்கள் நரகத்தில் வீழ்வார்களென் றிரங்குவார்கள் என்பதாம். சான்றோர்-எ, கடன்-ப, மற்றகொல்-அசைகள். (அ)

மெய்வாய்கண்மூக்குச் செவியெனப்பேர்பெற்ற
வைவாயவேட்கையை வாய்வினைக்-கைவாய்

கலங்காமற்காத்துயிர்க்கு மாற்றலுடையான்
விலங்காது ❊ வீடு பெறும்.

இ-ள். மெய்-உடலும், வாய்-வாயும், கண் - நேத்திரமும், மூக்கு-நாசியும், செவி-காதும், எனை-என்றுசொல்லிய, பேர்பெற்ற-பெயர்கொண்ட, ஐவாய-ஐந்திடமாகிய, வேட்கை - ஆசையையும், அவாவினை-உளத்தால்வருமாசையும், வகைவாய்-ஒழுக்கவழியில், கலங்காமல்-கலக்கமடையாமல், காத்து-காப்பாற்றி, உய்க்கும்-தன்னை நடத்தும், ஆற்றலுடையான்-வல்லமையுடையான், விலங்காது-தவறாது, வீடு-மோட்சவீட்டை, பெறும் - அடைவான்—எ-று. ❊ (இ-ம்) ஐந்பொறிகளையும் ஐம்புலன்களிற்செல்லாமற்காக்கும் வல்லமையுடையவன் மோட்சமடைவான் என்பதாம். ஆற்றலுடையான் - எ, பெறும்-ப, வீடு-செ. (இலக்கணத்திரட்டு) (ஈடொன்றுமே விளம்பப்படாப்பொருள்.) (கூ)

துன்பமேமீதூரக் கண்டுத்துறவுள்ளா
ரின்பமேகாமுறுவ ரெழையா-ரின்ப
மிசைதோறுமற்றத னின்னுமைநோக்கிப்
பசைதல்பரியாதா ❊ மேல்.

இ-ள். எழையார்-அறிவிலார், துன்பமே - துன்பத்தையே, மீதூர-மேன்மேலுமுள்ள, கண்டும்-பார்த்தும், துறவு-துறவறத்தை, உள்ளார்-நினையார், இன்பமே-இன்பத்தையே, காமுறுவர் - இச்சிப்பார், மேல்-மேலாயிலவர், இன்பம்-இன்பம், இசைதோறும்-இசைத்துவருந்தோறும், அதன்-அவ்வின்பத்தால்வரும், இன்னுமை - துன்பத்தை, நோக்கி-பார்த்து, பசைதல்-அவ்வின்பத்திற்பொருந்துதலை, பரியாது-இச்சியார்—எ-று. ❊ (இ-ம்) அறிவில்லார் இன்பத்தையிச்சிப்பார் அறிவுள்ளார் அவ்வின்பத்தை இச்சியார் என்பதாம். எழையார்-எ, காமுறுவர்-ப, இன்பம்-செ, மேல் - எ, பரியாது-ப, அசைதல்-செ. சங்கத்தார் (அரியவிதிச்சுருந்தாம்) (விருதிருன்றியும்விளங்குமூவரிலை) இவ்வதிகாரவால் மேல்என்றது விருதிருன்றியது.()

துறவு-முற்றிற்று.

எ-ம்-அதிகாரம்.

சிறைமினமை.

❊

அஃதாவது கோபமில்லாதிருந்தன்மையைச் சொல்லுதலாம்.

மதித்திறப்பாரு மிறக்கமதியாதா
மிதித்திறப்பாரு மிருக்க-மிதித்தேறி
யியுந்தலைமே லிருத்தலாலஃதறிவார்
காயுங்கதமின்மை நன்று.

இ-ள். மதித்து-கனஞ்செய்து, இறப்பாரும்-நடப்பவரும், இறக்க-நடக்கட்டும், மறியா-மறியாமல், மிதித்து-கனமினஞ்செய்து, இறப்பாரும்-நடப்பவரும், இறக்க-நடக்கட்டும், மிதித்தேறி-காலால்மிதித்தேறி, ஈயும்-ஈயானதும், தலைமேல்-சிரசின்மேல், இருத்தலால்-இருக்கையால், அஃது-அவ்வீயினியல்பை, அறிவார்-அறிபவர்கள், காயும்-கோபிக்கும், கதமின்மை-கோபமில்லாதிருக்கை, நன்மை-நல்லது—எ-று. * (இ-ம்) மதித்துநடப்பவரும் நடக்கட்டும் மறியாது நடப்பவரும் நடக்கட்டும் அடிமேலேறிய ஈ முடிமேலேறியிருத்தலாலத்தன்மையறிபவர் பிறர்மேற் கோபமில்லாதிருக்கை நன்று என்பதாம். கதமின்மை-எ, நன்று-ப. (௪)

தண்டாச்சிறப்பிற்றம் மின் * னுயிரைத்தாங்காது
கண்டிழிவெல்லாந் துறப்பவோ-மண்டி
யடிபெயராதாற்ற விளிவந்தபோழ்தின்
முடிகிற்குமுள்ளத் தவர்.

இ-ள். மண்டி-நெருங்கி, அடி-பாதங்களை, பெயராது-பெயர்த்துவையாமல், ஆற்ற-மிகவும், இளி-இழிவு, வந்தபோழ்தில்-வந்தகாலத்தில், முடிகிற்கும்-(எண்ணியவற்றை) முடிக்கும், உள்ளத்தவர்-மனவலியுள்ளோர், தண்டா-தடாத, சிறப்பின்-சிறப்புடைய, தம்-தம்து, இன்னுயிர்-இனியவுயிரை, தாங்காது-காக்காமல், கண்டிழிவெல்லாம்-கோபங்கண்டவிடமெல்லாம், துறப்பவோ-உயிரை விடுவார்களோ—எ-று. * (இ-ம்) மிகவுமிழிவுவந்தகாலத்தில் நினைத்தவற்றை முடிக்குமனவலியுடையோர் கோபங்கண்டவிடத்தி லுயிரைவிடார்கள் என்பதாம். உள்ளத்தவர்-எ, துறப்பவோ-ப, (தருக்க சங்கிரகம்) [உயிர்தானுடலிறுதியும் வெவ்வேறாகும்.] (உ)

காவாதொருவன்றன் வாய்சிறந்துசொல்லுஞ்சொ
லோவாதேதன்னைச் சுடுதலா-லோவாதே
யாய்ந்தமைந்தகேள்வி யறிவுடையாரொஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்தசொல்லாற் கறுத்து.

இ-ள். காவாது-(நாவைக்) காக்காமல், ஒருவன்-ஒருவன், வாய்சிறந்து-வாயைச்சிறந்து, சொல்லுஞ்சொல்-சொல்லுங்கடுஞ்சொற்கள், ஓவாது-ஒழியாமல், தன்னை-வைதவனையே, சுடுதலால்-சுடலால், ஓவாது-ஒழியாமல், ஆய்ந்து-பலநூலாராய்ந்து, அமைந்த-நிரம்பிய, கேள்வி-கல்வி, அறிவுடையார்-விவேகமுடையார், எஞ்ஞான்றும்-எக்காலத்திலும், காய்ந்து-கோபித்து, அமைந்த-கொடுமைநிறைந்தசொற்களை, கறுத்து-சீறி, சொல்லார்-சொல்லார்கள்-எ-று. * (இ-ம்) ஒருவன்நாவைக்காவாது பிறனைவைதசொல்லானவை தன்னைச்சுடுதலால் கல்விபறிவுடையா ரெக்காலத்திலுங் கோபித்துக்

கொடுஞ்சொற்களைச் சொல்லார் என்பதாம். அறிவுடையார்-எ, சொல்லார்-ப, அமைந்த-செ, எகாரமிரண்டும்-அசைகள். (ஈ)

நேர்த்துநிகரல்லார் நீரல்லசொல்லியக்கால்
வேர்த்துவெகுளார் விழுமியோ-ரோர்த்ததனை
யுள்ளத்தானுள்ளி யுணைத்துராயூர்கேட்பத்
துள்ளித்துண்முட்டுமாங் கீழ்.

இ-ள். விழுமியோர் - பெரியோரானவர், நிகரல்லார்- ஒப்பில்லார், நேர்த்து-எதிர்த்து, நீரல்ல-குணமில்லாச்சொற்களை, சொல்லியக்கால்-சொன்னால், வேர்த்து - மனம்புழுங்கி, வெகுளார் -கோபியார், கீழ்-கீழ்மகன், ஓர்த்து-ஆராய்ந்து, அதனை- வைததனை, உள்ளத்தால்-மனத்தால், உள்ளி-நினைந்து, உராய்-சென்று, ஊர்- ஊரார், கேட்ப-கேட்க, உணைத்து - சொல்லி, துள்ளி- துடித்து, துண்-துணில், முட்டும் - முட்டிக்கொள்வான்—எ-று. * (இ-ம்) பெரியோர் தமக்கொப்பில்லார் கொடுஞ்சொற்களைச் சொன்னற் கோபியார் கீழானவன் பிறன்வைததனை நினைத்து ஊரார்க்குச்சொல்லித் துணில் முட்டிக்கொள்வான் என்பதாம். விழுமியோர்-எ, வெகுளார்-ப, கீழ்-எ, முட்டும்-ப, நேர்த்து-ஓர்த்து-விகாரம். (நன்னூல்வினையியல்-உசு-சூத்திரம்) [பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற்- சொல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே, இவ்விதியால் முட்டும்என்றது-முட்டுவானென்றுயிற்று.] (உ)

இளையானடக்க மடக்கங்கிளைபொரு
ளில்லான்கொடையே கொடைப்பய-னெல்லா
மொறுக்குமதுகை யுரனுடையாளன்
பொறுக்கும்பொறையே பொறை.

இ-ள். இளையான் - இளமையுடையவன், அடக்கம்-ஐம்பொறிகளையடக்குதல், அடக்கம்-அடக்கமாவது, கிளை - வளரும், பொருள்-திரவியம், இல்லான்-இல்லாதவன், கொடையே-கொடுத்தலே, பயன்-பிரயோசனமுள்ள, கொடை-கொடையாவது, எல்லாம்- யாவும், ஒறுக்கும்-சகிக்கும், மதுகை-வெற்றியும், உரன் - பலத்தையும், உடையாளன்-உடையசுத்தவீரன், பொறுக்கும்-பொறுக்கின்ற, பொறையே-பொறுமையே, பொறை - பொறுமையாவது—எ-று. * (இ-ம்) இளையவன் ஐம்பொறியடக்குதலேயடக்கமாகும், இல்லாதவன்கொடுக்கிறதே கொடையாகும், சுத்தவீரன்பொறுக்கிறதே பொறுமையாகும் என்பதாம். அடக்கம்-எ, அடக்கம்-ப, கொடை-எ, கொடை-ப, பொறை-எ, பொறை-ப. (ஙி)

கல்லெறிந்தன்ன கயவர்வாயின்னுச்சொ
லெல்லாருங்காணப் பொறுத்துய்ப்ப-ரொல்லை

யிடுநீற்றுப்பையவிந்த நாகம்போற்றத்தங்
குடிமையான்வாதிக்கப் பட்டு.

இ-ள். இடி-மந்திரித்திடும், நீற்றுல்-திருநீற்றுல், ஓல்லை-சிக்கிரம், பை-படம், அவிந்த-அடங்கிய, நாகம்போல்-நாகத்தைப்போல், தத்தம்-தங்கள்தங்களுடைய, குடிமையால்-குடிப்பிறப்பால், வாதிக்கப்பட்டு-ஒறுக்கப்பட்டு, கல்-கல்லி, எறிந்தனன்-எறிந்தாற்போலும், கயவர்-கீழானவர்கள், வாய்-வாயில்வரும், இன்னுச்சொல்-கொடுஞ்சொற்களை, எல்லாரும்-யாவரும், காண-அறிய, பொறுத்துய்ப்பர்-சகித்துநடப்போரிபெரியோர்—எ-று. * (இ-ம்) மந்திரித்திருநீற்றுலடங்கிய நாகம்போலப் பெரியோர் தங்கள்குலவொழுக்கத்திற் கஞ்சிக் கீழ்மக்கள்சொல்லிய கொடுஞ்சொற்களைப்பொறுத்து நடப்பார் என்பதாம். பெரியோர்-தோன்றுஎழுவாய், உவ்ப்பவர்-ப, இன்னுச்சொல்-செ. (சு)

* மாற்றாராய்நின்றுதம் மாறேற்பார்க்கேலாமை
யாற்றுமையன்னு ரறிவுடையா-ராற்றுமை
தேர்த்தின்னுமற்றவர் செய்தக்காற்றுமனைப்
பேர்த்தின்னுசெய்யாமை நன்று.

இ-ள். மாற்றாரம்-பகைவராய், நின்று-நின்று, தம்-தம்மோடு, மாறேற்பார்க்கு-மாறுபடுமவர்க்கு, ஏலாமை - பொருந்தாமையே, ஆற்றுமை-வல்லமையில்லாமை, என்னுர் - என்றுசொல்லார், அறிவுடையார்-அறிவுளார், ஆற்றுமை-பொறுத்தற்கரியவை, தேர்த்து- எதிர்த்து, இன்னு-துன்பங்களை, அவர் -அப்பகைவர், செய்தக்கால்-செய்தால், தாம்-தாங்கள், அவனை-அப்பகைவனை, பேர்த்து - மீண்டு, இன்னு - தீங்குகளை, செய்யாமை - செய்யாதிருத்தல், நன்று-நல்லது—எ-று. * (இ-ம்) தம்முடன்எதிர்ப்பவர் மேலெதிராதிருத்தலே வல்லமையில்லாமைமென்றறிவுடையோர்சொல்லார்-பகைவர் துன்பஞ்செய்தால் அவர்களுக்குத் துன்பஞ்செய்யாதிருத்தலே நல்லது என்பதாம். அறிவுடையார்-எ, என்னுர்-ப, ம்ற்று-அசை. (அவிநயம்) [நெடின்மிகவருத னெடிதற்செய்யுளென்ப.] (எ)

நெடுங்காலமோடினு நீசர்வெகுளி
கெடுங்காலமின்றி பாக்கும்-மடுங்காலை
நீர்கொண்டவெப்பம் போற்றீனுதணியுமே
சீர்கொண்டசான்றோர் சினம்.

இ-ள். நீசர்-கீழ்மக்களுடைய, வெகுளி - கோபமானது, நெடுங்காலம்-அநேககாலம், ஓடினும்-சென்றாலும், கெடுங்காலம்- கெட்டுப்போங்காலம், இன்றி-இல்லாமல், பாக்கும்-வளர்த்துநிற்கும், சீர்-சிறப்பை, கொண்டகொண்டிருக்கிற, சான்றோர் - பெரியோர், சினம்-கோபமானது, அடும்-காய்ச்சும், காலை - காலத்தில், நீர்-நீரா

னது. கொண்ட-கொண்டிருக்கிற, வெப்பம்போல்-ஊடினம்போல், தானே-தனக்குத்தானே, தணியும்-ஆறும்—எ-று. * (இ-ம்) கீழ்மக்கள்கோபம் நெடுநாட்சென்றாலும் பெரியோர்கோபம் நீர்கொண்ட வெப்பம்போலத் தனக்குத்தானே தணியும் என்பதாம். நீர்சார்வெகுளி-ய, பாக்கும்-ப, சான்றோர்சினம்-எ, கணியும்-ப, ஒ-அசை. (அ)

உபகாரஞ்செய்ததனை யோராதேதங்க
ணபகாரமாற்றச் செயினு-முபகாரந்
தான்செய்வதல்லாற் றவற்றினுற்றீக்கூக்கல்
வான்றோய்குடிப்பிறந்தார்க் கில்.

இ-ள். உபகாரம்-உதவி, செய்ததனை-செய்ததை, ஓராது-அறியாது, தங்கண்-தம்மிடத்து, அபகாரம்-ஒருவபகாரத்தை, ஆற்ற-மிகவும், செயினும்-செய்தாலும், உபகாரம்-உதவியை, தாம்-தாங்கள், செய்வதல்லால்-செய்வதல்லது, தவற்றினால்-(அவர்செய்த) குற்றத்தால், தீங்கு-பொல்லாங்கை, ஊக்கல்-செய்தல், வான்-பெருமை, தோய்-நிறைந்த, குடிப்பிறந்தார்க்கு-நற்குடியிற்பிறந்தார்க்கு, இல்-இல்லை—எ-று. * (இ-ம்) ஒருவர் உபகாரத்தையறியாது அபகாரத்தைச்செய்தாலும் நற்குடியிற்பிறந்தாருபகாரஞ்செய்வதேயல்லது அபகாரஞ்செய்யார் என்பதாம். ஊக்கல்-எ, இல்-ப, தீங்கு-செய், வான்றோய்குடி-உயர்ந்தகுடியெனினுமாம். (ஆ)

* கூர்த்துநாய்கௌவிக் கொளக்கண்டுதம்வாயாற்
போர்த்துநாய்கௌவினு மில்லை-நீர்த்தன்றிக்
கீழ்மக்கள்கீழாய சொல்லிலக்காற்சொல்பவோ
மேன்மக்கடம்வாயான் மீட்டு.

இ-ள். நாய்-நாயானது, கூர்த்து-கோபமிகுந்து, கௌவிக்கொள-கடித்துக்கொள்ள, கண்டும்-பார்த்தும், போர்த்து-மீண்டு, தம்-நம்முடைய, வாயால்-வாயினால், நாய்-கடித்தநாயை, கௌவினர்-கடித்தவர், ஈங்கு-இவ்வுலகில், இல்லை-இல்லை, நீர்த்தன்றி-குணமில்லாமல், கீழ்மக்கள்-கீழானவர்கள், கீழாய-இழிவானசொற்களை, சொல்லியக்கால்-சொன்னால், மேன்மக்கள்-மேலானவர்கள், தம்வாயால்-தங்கள்வாயால், மீட்டு-மறுத்து, சொல்பவோ-சொல்வார்களோ—எ-று. * (இ-ம்) நாய்கடிக்கக்கண்டுத் தங்கள் வாயாற்கடித்த நாயைக்கடித்தவர்களிவ்வுலகிலில்லை கீழானவர்கள் இழிவானசொற்களைச் சொன்னால் மேலானவர்களொன்றுஞ்சொல்லார்கள் என்பதாம். மேன்மக்கள்-எ, சொல்பவோ-ப, கீழானவற்றை-செ, (அவிநயம்) [ஏற்றுப்பயில லொற்றியற்செய்யுள்.] (இ)

சினமின்மை-முற்றிற்று.

பொறையுடைமை.

அஃதாவது-பொறுமையையுடைத்தாயிருக்குந் தன்மையாம்.

கோதையருவிக் குளிர்வரைநன்னாட
பேதையோடியாது முரையற்க-பேதை
யுரைப்பிற்சிறைதற்றலாக்கு மொல்லும்வகையான்
வழுக்கிக்கழிதலே நன்று.

இ-ள். கோதை-மாலைபோல்விழும், அருவி-ஆற்றைப்பொருதிய, குளிர்-குளிர்ந்த, வரை-மலைகளையும், நாட-நாட்டையுமுடையபாண்டியனே, பேதையோடு-அறிவிலாளுடன், யாதும்-ஒன்றையும், உரையற்க-சொல்லாதிருப்பாயாக, பேதை-அவ்வறிவிலாளை, உரைப்பில்-ஒன்றைச்சொன்னால், சிறைதற்று-கெடும்படி, உரைக்கும்-சொல்வான், (ஆகலால்) ஒல்லும்-பொருந்தும், வகையால்-விதத்தால், வழுக்கி-தப்பி, கழிதல்-(அவனைவிட்டு) நீங்குதல், நன்று-நல்லது—எ-று. ※ (இ-ம்) பாண்டியனே அறிவிலானுடன் ஒன்றையுஞ் சொல்லாதிருப்பாயாக சொன்னால் சிறைதவுபடச்சொல்வான் ஆகையால் அவனைவிட்டுநீங்குதல் நல்லதுஎன்பதாம். கழிதல்-எ, நன்று-ப, அறிவிலான்-செ, (தொன் னூல்விளக்கம்) [அதிர்மறையவற்கேலேயல்லே-யன்மைமோவற்கவாகுமொருமை-யாமினன்மீ னைப்பிரிப்பன்மை] இவ்விதியால் அற்கவிகுதி ஏவலொருமைக்கண்வந்தது. (க)

நோல்லார்நீர்ல்ல சொல்லியக்கான்மற்றது
தாரித்திருத்த றகுதிமற்-றேரும்
புகழ்மையாக்கொள்ளாது பொய்குநீ ரூலஞ்
சமழ்மையாக்கொண்டு மிம்.

இ-ள். நோல்லார்-ஒப்பிலாதவரி, நீல்ல-குணமில்லாச்சொற்களை, சொல்லியக்கால்-சொன்னால், தாரித்திருத்தல்-பொறுத்திருத்தல், தகுதி-பொறுமை, மற்று-அதைப்பொறுக்காவிட்டால், புகழ்மையாக-புகழ்ச்சியாக, கொள்ளாது-கொள்ளாமல், பொய்கு-மிழ்கின்ற, நீர்-நீர்சூழ்ந்த, ஞாலம்-பூமி, சமழ்மையா-தாழ்மையாக, கொண்டுவிடும்-கொள்ளும்—எ-று. ※ (இ-ம்) தமக்கொப்பில்லார் தம்மானவைகளைச் சொன்னால் பொறுத்துக் கொள்ளல்-பொறுமை-பொறுவிட்டா லுலகம் புகழ்ச்சியாகக் கொள்ளாது இகழ்ச்சியாகக் கொள்ளும் என்பதாம். ஞாலம்-எ, கொண்டுவிடும்-ப, மற்று ஒரும் அசைகள். (உ)

காதலார்சொல்லுங் கடிதுசொல்லுவதுணாக்கு
மேதிலாரின்சொலிற் றீதாமோ-போதலா

மாதர்வண்டார்க்கு மலிதடம்றன்சேர்ப்ப
வாவதறிவார் பெறின்.

இ-ள். போதெலாம் - மலர்களெல்லாம், மாதர்- அழகிய, வண்டு-வண்டுகள், ஆர்க்கும்-சத்திக்கும், மறை-நிறைந்த, கடல்-கடலையும், தண்-குளிர்ந்த, சேர்ப்ப-கானையுமுடையபான்மையனே, ஆவது-ஆகவேண்டியதன்மையை, அறிவாளர்- அறிந்தவரை, பெறின்-பெற்றால், காதலார்-தம்மில்விருப்புள்ளோர், சொல்லும்-சொல்லிய, கடுஞ்சொல்-கொடுஞ்சொல்லை, யும், எதிலார்-பகைவர், உவந்து-மகிழ்ந்து, சொல்லும்-மகிழ்ந்துசொல்லும், இன்சொலை- இனியசொல்லை, பார்க்கிலும், நிதாமோ - ஸ்திரமாகுமோ—எ-று. * (இ-ம்) பாண்டியனை நிலைநாள்சொல்லும் கடுஞ்சொல்லானது பகைவர் சொல்லுமினியசொல்லைப்பார்க்கிலும் குற்றமாகுமோ என்பதாம். கடுஞ்சொல்-எ, நிதாமோ-ப.

(கூ)

*அறிவதறிந்தடங்கி வஞ்சுவதஞ்சி
யுறுவலலருவப் பச்செய்து-பெறுமதற
கின்புற்றகாழு மியல்புடையாரொற்றாய்ந்து
துன்புற்றவாழ்த லரிது.

இ-ள். அறிவது - அறியத்தக்கதை, அறிந்து-தெரிந்து, அடங்கி-அடங்கி, அஞ்சுவது-அஞ்சத்தகுவதற்கு, அஞ்சி - பயந்து, உறுவது-செய்யத்தகுவதை, உலகு-உலகத்தார், உவப்ப-மகிழ, செய்து-செய்து, பெறுவதற்கு-பெறும்பலனால், இன்பற்று-இன்பமடைந்து, வாழும்-வாழுகின்ற, இயல்புடையார்-குணமுடையார், எஞ்ஞான்றும்-எந்நாளும், துன்புற்று-துன்பமடைந்து, வாழ்தலரிது-வாழ்தலில்லை—எ-று. * (இ-ம்) அறியத்தகுவதையறிந்து அஞ்சத்தகுவதற்கஞ்சிச் செய்யத்தகுவதைச்செய்து-பெறும்பலனால் இன்பம்பொருந்திவாழுங்குணமுடையோர் துன்பம்பொருந்திவாழ்தலில்லை என்பதாம். வாழ்தல்-எ, அரிது-ப, (அவிநயம்) குன்றாமிருத்தல் குறியிடற்செய்யுள். [வாப்பருங்கலத்திலுங்காண்க.]

(எ)

வேற்றுமையின்றிக் கலந்திருஞாநட்டக்காற்
றோற்றுதொழுக்க மொருவன்க-ணுள்டாயி
னற்றந்தணையும் பொறுக்கபொறுத்தியிற்
காற்றுதலீடு.

இ-ள். வேற்றுமை-வேறுபடுத்துணரும், இன்றி-இல்லாது, கலந்து-பொருந்தி, இருவர்-இரண்டுபேர், நட்டக்கால்-கிடைத்தால், தோற்றம்-தெளியாத, ஒழுக்கம்-நடக்கை, ஒருவன்கண்-ஒருவனிடத்து, உண்டாயின்-உண்டானால், குற்றம்-(கோப) மடத்தால், அதனையும், பொறுக்க-பொறுத்தக்கடவன், பொறுத்தியின்-பொறுத்தானாயின், காற்றுதல்-(அவன்) குற்றத்தைத்தான்மன், தாவிடல்-

அவனட்பைவிடுக—எ-று. * (இ-ம்) வித்தியாசமில்லாமல் இருவர்க லந்துபிநேகஞ்செய்யில் ஒருவனிடத்து நண்ணடக்கை இல்லாவிடில் மற்றவன் பொறுக்குமளவும் பொறுக்கக்கடவன் பொறுவிட்டாய் தூற்றுமல் பிநேகத்தைவிடக்கடவன் என்பதாம். ஒருவன்-ப, தூவிடல்-ப, நட்பிணை-செ, எ-அசை. (டு)

இன்ருசெயினு மினியவெழிகென்று
தன்னையோதாருவி னல்லது-துன்னிக்
கலந்தானாக்கைவிடுதல் காணகநாட
விலங்கிற்கும்விள்ள லரிது.

இ-ள். கானகம்-காட்டையும், நாட - நாட்டையுமுடையபாண்டியனே, இன்ரு-துன்பங்களை, செயினும்- ஒருவர்செய்தாலும், இனிய-இனியனவாவெண்ணி, ஏழிகென்று-கோபம்நீங்கென்று, தன்னையேதான்- தன்னைத்தானே, நோவினல்லது - நோவுவதல்லாமல், துன்னி-நெருங்கி, கலந்தானை-பிரேமித்தவனை, கைவிடுதல்-விட்டுவிடுதல், விலங்கிற்கும்-மிருகத்திற்கும், விள்ளல்-வேறுபடல், அரிது - அருமை—எ-று. * (இ-ம்) பாண்டியனே ஒருவர் துன்பஞ்செயினும் இன்பமாகநினைத்துத் தன்னை நொந்துகொள்வதல்லாது நேசித்தானை விட்டுவிடுதலாகாது மிருகத்திற்கும் பிரிதலரிது என்பதாம். கைவிடுதல்-எ, அரிது-ப, கலந்தானை-செ. (க)

பெரியார்பெருநட்புக் கோடறுஞ்செய்த
வரியபொறுப்ப வென்றன்றே-வரிபோ
* வொல்லெனருவி யுயர்வரைநன்னாட
நல்லசெய்வார்க்குந் தமர்.

இ-ள். ஒல்லென்-ஒல்லென்றுஞ்சத்தமுள்ள, அருவி- பாற்சைப்பொருந்திய, உயர்-உயர்ந்த, வரை - மலையையும், நன்னாட-நல்ல நாட்டையுமுடையபாண்டியனே, தாம் - தாங்கள், செய்த-செய்த, அரிய - அரியகுற்றங்களை, பொறுப்ப - பொறுப்பார்கள், என்றன்றே-என்றல்லவோ, பெரியார்- பெரியோர்களுடைய, பெருநட்பு-பெரியசிநேகத்தை, கோடல்-கொள்ளுதல், நல்ல-நன்மைகளை, செய்வார்க்கு - செய்பவர்களுக்கு, தமர்-சுற்றத்தார், அரியரோ - கிடையார்களோ—எ-று. * (இ-ம்) பாண்டியனே தாங்கள்செய்த குற்றங்களைப் பொறுப்பார்களென்றல்லவா பெரியோர்கள் சிநேகஞ்செய்தல் நன்மைகளைச்செய்பவர்களுக் குறவினர்கிடையார்களோ என்பதாம். தமர்-எ, அறியரோ-ப, (தண்டியலங்காரம்) [இடபமனப்படியெவை மலைநாடியாறை.] (எ)

வற்றிமற்றுற்றப் பகிப்பிணும்பண்பிலார்க்
கற்றமரிய வுளாயற்க-வற்ற

மறைக்குந்துணையார்க் குரைப்பவேதம்மைத்
துறக்குந்துணிவிலா தார்.

இ-ள். வற்றி - உடல்மெலிந்து, ஆற்ற-மிகவும், பசிப்பினும்-பசித்தாலும், பண்பிலார்க்கு- நட்புக்குணமில்லாதார்க்கு, அற்றம்-வறுமையை, அறிய-தெரிய, உரையற்க-சொல்லாதிருப்பாயாக, அற்றம்-வறுமையை, மறைக்கும்-நீக்கும், துணையார்க்கு-ஆளவினையுடையார்க்கு, தம்மை-தம்முயிரை, துறக்கும்-விட்டேவிடும், துணிவிலாதார்-துணிவுகொள்ளாதார், உரைப்ப-சொல்வார்கள்—எ-று. ※ (இ-ம்) உடல்மெலிந்து மிகப்பசித்தாலும் நட்புக்குணமில்லாதவர்க்கு வறுமையைச்சொல்லாதே உயிர்விடத்துணியாதவர்கள் வறுமையைநீக்குவார்க்குச் சொல்வார்கள் என்பதாம். துணிவிலாதார்-ஏ, உரைப்ப-ப, எ-அசை. (அ)

இன்பம்பயந்தாங் கிழிவுதலைவரினு
மின்பத்தின்பக்க மிருந்தைச்க-வின்ப
மொழியாமைகண்டாலு மோங்கருவிநாட
பழியாகாவாறே தலை.


இ-ள். ஓங்கு-உயர்ந்த, அருவி - ஆற்றைப்பொருந்திய, நாட-நாட்டையுமுடையபாண்டியனே, இன்பம்பயந்து - முன்னின்பத்தைக்கொடுத்து, ஆங்கு - (பின்) னல்விடத்து, இழிவு - துன்பம், தலைவரினும்-முதன்மையாகவந்தாலும், இன்பம் - இன்பத்தினை, பக்கம்-பக்கும், இருந்தைதக்க-நீங்கிஞற்போலும், இன்பம்-அவ்வின்பமானது, ஒழியாமை - நீங்காது, கண்டாலும் - தம்மிடத்துவந்தாலும், பழியாகா - தமக்குப்பழியாகாத, ஆறே -நெறியே, தலை - தலைமை—எ-று. ※ (இ-ம்) பாண்டியனே முன்னின்பம்வந்து பின்துன்பம் வருமேயானல் அவ்வின்பம் நீங்கிஞற்போலும் துன்பம் நீங்காதிருந்தாலுங் குற்றமற்றவழியிலே வந்தவின்பமே முதன்மை என்பதாம். ஆறு-எ, தலை-ப. (கூ)

தான்கெடினுந்தக்கார்கே டெண்ணற்கதன் ※ னுடம்பி
னான்கெடினுமுண்ணூர்கைத் துண்ணற்க-வான்கவித்த
வையகமெல்லாம் பெறினுமுனையற்க
பொய்யோடிடைமிடைந்த சொல்.

இ-ள். தான்கெடினும்-தான்கெட்டாலும், தக்கார்-தன்னைக்கெடுக்குந்தன்மையரருக்கு, கேடு-பொல்லாங்கை, எண்ணற்க-நினையாதிருப்பாயாக, தன்னுடம்பின்-தன்னுடலின், னான்கெடினும்-மாமிசங்கெட்டாலும், உண்ணூர்-உண்ணப்படாதார், கைத்து-கைப்பொருளை, உண்ணற்க-உண்ணுதிருப்பாயாக, வான்கவித்த-ஆகாயமூடிய, வையகமெல்லாம் - உலகமெல்லாம், பெறினும் - பெற்றாலும், பொய்யோடு- பொய்யுடன், இடைமிடைந்த - நெருங்கிய, சொல்-

சொல்லி, உளையற்க-சொல்லாதிருப்பாயாக—எ-று. * (இ-ம்) தான் கெட்டாலும் பிறர்க்குக்கேடுசெய்யாதே உண்ணுத்தகார் வீட்டிலுண்ணுதே உலகமெல்லாம் பெற்றாலும் பொய்சொல்லாதே என்பதாம். ஒருவன்-எ, எண்ணற்க-ப, கேட்டை-செ, ஒருவன்-எ, உண்ணற்க-ப, கைத்தை-செ, ஒருவன்-எ, உளையற்க-ப, சொல்லை-செ, (தருக்கசங்கிரகம்) [கதிரோன்வளைப்பிற் கட்டனலுடம்பு.] (ஏ)

பொறையுடைமை-முற்றிற்று.



கூ-ம்-அதிகாரம்.

பிறர்மனை நயவாமை.

அஃதாவது பிறருடைய மனைவியை இச்சியாமையாம்.

அச்சம்பெரிதா லதற்கின்பஞ்சிற்றளவா
னிச்சனினையுங்காற் கோக்கெலாவா-னிச்சலுங்
கும்பிக்கேகூர்த்த வினையாற்பிறன்றா
நம்பற்கநாணுடை யார்.

இ-ள். நாணுடையார்-நாணமுள்ளோரே, அச்சம்-பயம், பெரிது-பெரியது, அதற்கு-அப்பயத்திற்கு, இன்பம்-இன்பமானது, சிற்றளவு-சிறியவளவினையுடையது, நிச்சம்-தினமும், நினையுங்கால்-எண்ணுமிடத்து, கோ-அரசனல்லவரும், கொலையாம்-ஆக்கினையாம், நிச்சலும்-தினமும், கும்பிக்கே-நரகத்திற்கே, கூர்த்த-மிகுந்த, வினையால்-தீவினைவருமாதலால், பிறன்-அயலானுடைய, தாரம்-மனையாளை, நம்பற்க-நம்பாதிருப்பீர்களாக—எ-று. *(இ-ம்) நாணமுடையவர்க்களேபயம்பெரிது அப்பயத்தால்வரும்இன்பம்சிறியது இராஜதண்டனைவரும்நரகத்துக்கேதுவாம் பாவம்வருமாகையால்பிறர்மனையாளை இச்சியாதிருங்கள்என்பதாம். ஆல்-மூன்றும்-அசைகள், நாணுடையார்-எ, அண்மைவிளி-நம்பற்க-ப, பிறன்றாரம்-செ (தொல்காப்பியம் விளிமரபு-ய-சூத்திரம்) [அண்மைச்சொல்லேயியற்கையாகும்] (க)

* அறம்புகழ்கேண்மை பெருமையிந்நான்கும்
பிறன்றாரநச்சுவார்ச் சேரா-பிறன்றார
நச்சுவார்ச்சேரும் பகைபழிப்போதுமென்
றச்சத்தோடிந்நாற் பொருள்.

இ-ள். பிறன்-அயலானுடைய, தாரம்-மனைவியை, நச்சுவார்-இச்சிப்பவர்களை, அறம்-தருமமும், புகழ்-கீர்த்தியும், கேண்மை-சிநேகமும், பெருமை-மேன்மையும், இந்நான்கும்-இந்தநாற்பொருளும், சேரா-அடையாவாம், பிறன்-பிறனுடைய, தாரம்-மனைவியை, நச்சுவார்-இச்சிப்பவர்களை, பகை-விரோதமும், பழி-இகழ்ச்சியும்,

பாவம்-அதருமமும், என்று-என்றுசொல்லிய, அச்சத்தோடு-பயத்தோடு, இந்நாற்பொருள் - இந்நாற்பொருள்களும், சேரும்-அடையும்—எ-று. * (இ-ம்) பிறன்மனைவியை இச்சிப்பவனை புண்ணியம் கீர்த்தி-சினேகம்-மேன்மை-இந்நான்குஞ்சேராவாம் பிறன்மனைவியை இச்சிப்பவனை பகை-பழி-பாவம்-பயம் - இந்நான்குஞ்சேரும் என்பதாம். நான்கும்-எ, சேரா-ப, நாற்பொருள்-எ, சேரும்-ப, (கண்டியலங்காரம்) (விரவத்தொடுப்பது சமநிலையாகும்) இது மூவினங்கலந்த சமநிலையணி. (உ)

புக்கவிடத்தச்சம் போதரும்போதச்சந்
துய்க்குமிடத்தச்சந் தோன்றுமற்-காப்பச்ச
மெக்காலுமச்சந் தருமாலெவண்கொலோ
வுட்கான்பிறனில் புகல்.

இ-ள். புக்கவிடத்து-பிறன்மனையாளிடத்திற் போகும்போது, அச்சம்-பயம், போதரும்போது-வரும்போது, அச்சம்-பயம், துய்க்குமிடத்து-அநுபவிக்கும்போது, அச்சம்-பயம், தோன்றுமல்-புணர்ச்சிதோன்றுமல், காப்பு-காத்தல், அச்சம்-பயம், எக்காலும்-எந்நாளும், அச்சம்-பயத்தை, தருமால்-(கொடுக்கும்) ஆகையால், உட்கான்-அஞ்சாதவனுய், பிறனில்-பிறன்மனையாளிடத்து, புகல்-பிரவேசித்தல், எவன்கொல்-என்னபலன்குறித்தோ—எ-று. * (இ-ம்) பிறன்மனையாளிடத்துப்போகும்போதுபயம், வரும்போதுபயம், அநுபவிக்கும்போதுபயம், புணர்ச்சிதோன்றுதுகாத்தலும்பயம், எந்நாளும் பயமாகையால் அஞ்சாது பிறன்மனையாளிடத்துப் பிரவேசித்தலென்னபயன் என்பதாம். புகல் - எழுவாய், எவன்கொல்-பயனிலை, பிறனில்-செய்யுள். (ஊ)

காணிற்குடிப்பழியாங் கையறிற்கால்குறையு
மாணின்மைசெய்யுங்கா லச்சமா-நீணிரயத்
துன்பம்பயக்குமாற் றுச்சாரிநீகண்ட
வின்பமெனக்கெனைத்தாற் கூறு.

இ-ள். துச்சாரி-காமுகனே, காணில் - (பிறன்மனையாளைக்கூடுகையிற்) கண்டால், குடி-தன்குடிக்கு, பழியாம்-இகழ்ச்சியாம், கையுறில்-அகப்படில், கால்குறையும்-கால்வெட்டப்படும், மாண்-பெருமை, இன்மை-இல்லாமை, செய்யுங்கால்-செல்லுமிடத்து, அச்சமாம்-பயமாகும், நீள்-நீண்ட, நிரயத்து - நரகத்தில், துன்பம்-துயரத்தை, பயக்குமால்-கொடுக்குமாகையால், நீசண்ட-நீயறிந்த, இன்பம்-இன்பமானது, எனைத்து-எத்தன்மையுடையது, எனக்கு-என்றனுக்கு, கூறு-சொல்லு—எ-று. * (இ-ம்) காமுகனேபிறன்மனைவியைக்கூடுகையிற்கண்டாலவன்குடிக்குப்பழிப்பாம் அகப்படில் கால்குறைத்தேபோம் அநுபவிக்கும்போது பயமாகும் நரகத்தில் துயரத்

தைக்கொடுக்கும் நீகண்டயின்பம் எத்தன்மையுடையது எனக்குச் சொல் என்பதாம். நீ-எ, கூறு-ப, இன்பம்-செ, ஆல்-அசை. (௮).

செம்மையொன்றின்றிச் சிறியாரினத்தாய்க்
கொம்மைவரிமுலையா டோண்மரீஇ-யும்மை
வலியாற்பிறர்மனைமேற் சென்றுரோயிம்மை
யலியாகியாடியுண் பார்.

இ-ள். செம்மை-செவ்வையானமனம், ஒன்றின்றி-ஒன்றில்லாது, சிறியவர்-சிறியார்கள், இனத்தாய்-இன்பமுடையவராய், கொம்மை-திரட்சியும், வரி-தேமலையும்பொருந்திய, முலையார்-முலையையுடையபெண்ணின், தோள்-தோள்களை, மரீஇ-பொருந்தி, உம்மை-முற்பிறப்பில், வலியால்-தம்முவல்லமையால், பிறர்-அந்நியருடைய, மனைமேல்-மனையவளிடத்தில், சென்றார்-போனவர்கள், இம்மை-இப்பிறப்பில், அலியாகி-பேடிகளாகி, ஆடி-கூத்தாடி, உண்பார்-உண்பார்கள்—எ-று. * (இ-ம்) நன்மனமில்லாதுசிறியவர்கள் இயல்பினையுடையவர்களாய் முற்பிறப்பில் தமமுவல்லமையால்பிறர் மனைவியைச்சேர்ந்தவர்கள் இப்பிறப்பில் பேடிகளாய்க் கூத்தாடி உண்பார்கள் என்பதாம். சென்றார்-எ, உண்பார்-ப, எ-அசை. (௬)

பல்லாரறியப் பறையறைத்துநாட்கேட்டுக்
கல்யாணஞ்செய்து கடிபுக்க-மெல்லியற்
காதன்மனையாளு மில்லாளாவென்னெருவ
னேதின்மனையாளை நோக்கு.

இ-ள். நாள்-சுபதினத்தை, கேட்டு-கேட்டு, பல்லார்-பலரும், அறிய-அறியும்படி, பறையறைத்து-மணப்பறையடித்து, கல்யாணஞ்செய்து-விவாகம்பண்ணி, கடி-காலில், புக்க-புகுந்த, மெல்-மெல்லிய, இயல்-இயல்பினையுடைய, காதல்-இச்சிக்கப்பட்ட, மனையாளும்-மனையியும், இல்லாளா-மனைவியாக, ஒருவன்-ஒருவன், எதில்-அயலாருடைய, மனையாளை-மனைவியை, நோக்கு-பார்க்கும்பார்வை, என்-யாது—எ-று. * (இ-ம்) ஒருவன் பிறன்மனையாளைத் தன்மனையாகப் பார்க்கும்பார்வை என்ன. என்பதாம். நோக்கு-எ, என்-ப, எதின் மனையாளை-செ. (௭)

அம்பலவலெடுப்ப வஞ்சித்தமர்பரீஇ
வம்பலன்பெண்மரீஇ மைந்துற்று-நம்பு
நிலைமையினெஞ்சத்தான் றுப்புரவுபாய்பின்
றலைநக்கியன்ன துடைத்து.

இ-ள். அயல்-அயலார், அம்பலெடுப்ப-புறங்கூற, அஞ்சி-பயந்து, தமர்-உறவினர், பரீஇ-வருந்த, வம்பலன்-அயலானுடைய, பெண்-மனையாள், மரீஇ-தழுவி, மைந்து-மயக்கத்தை, உற்று-பொருந்தி, நம்பும்-நம்பியிருக்கிற, நிலைமையில்-நிலையில்லாத, நெஞ்ச

ந்தான்-மனமுடையவன், துப்புரவு - அநுபவம், பாம்பின்-பாம்பினது, தலை-தலையை, நக்கியன்னது- நக்கயின்பமடைந்தாற்போலும், உடைத்து- உடையது—எ-று. * (இ-ம்) பிறன்மனைவியைத் தழுவிமயக்கமடைந்து, நம்புமனமுடையவன்-அநுபவம் -பாம்பின்தலையை நக்கினுற்போலும் உள்ளது என்பதாம். துப்புரவு-எழுவாய், உடைத்து - பயனிலை. (எ)

பரவலெளிப்படா பல்லோர்கட்டங்கா
வுரலோற்குட்காம நோயோ-டொழிதே
விரவாருணாணப் படலஞ்சியாது
முறையாதுள்ளாறி விடும்.

இ-ள். உறலோர்கள்-விவேகிகள், காமம்-காமமானது, பரவாபரவாது, வெளிப்படா-வெளியாகாது, பல்லோர்கண்-பலரிடத்திலும், தங்கா-தங்காது, நோய்-அக்காமத்தால்வருநோயானது, ஒழொகொழிது-மிகவுங்கொழிது, விரவாருள் - கலவாதவரிடத்து, நாணுப்படல்-வெட்கமடைந்து, அஞ்சி-பயந்து, யாதும்-யாதொன்றும், உடையாது - சொல்லாது, உள்ளாறிவிடும் - உள்ளுக்குள்ளேதணியும்—எ-று. * (இ-ம்) அறிவுடையோர்கள்காமமானதுப்பரவாமலும், வெளிப்படாமலும்-பலரிடத்துத்தங்காமலும்-கலவாரிடத்து-அஞ்சிச்சொல்லாது உள்ளுக்குள்ளே தணியும் என்பதாம். நோம்- எ; அறிவிடும்ப-எ, அசை - விரவாருள்என்றது பகைவரிடத்தென்பாரு முளர், (காக்கைபாடினியார்சூத்திரம்) "குறிநெடிலளபெடைக்குறிப்பாருமே" இவ்விதியால் ஒழொகொழிதுநெடிலளபெடை. (அ)

அம்புமழலு மவிர்கதிர்ஞாயிறும்
வெம்பிச்சுடினும் புறஞ்சுடும்-வெம்பித்
தவற்றிமனதைச் சுடுதலாற்காம
மவற்றினுமஞ்சப் படும்.

இ-ள். அம்பும்-அந்திரமும், அழலும்- அக்கினியும், அவிர்-பிரகாசிக்கும், கதிர்-கிரணங்களையுடைய, ஞாயிறு-சூரியனும், வெம்பி-சினன்று, சுடினும்-சுட்டாலும், புறஞ்சுடும்-மேலேசுடும், வெம்பி-சினன்று, மனத்தை-இதயத்தை, தவற்றி - தவிலப்படுத்தி, சுடுதலால்-சுடுகின்றபடியால், காமம்-காமமானது, அவற்றினும்-அம்பு, நெருப்பு-சூரியனைப்பார்க்கிலும், அஞ்சப்படும் - கொடிதென்றுஅஞ்சப்படும்—எ-று. * (இ-ம்) காமமானது அம்பிலும் அக்கினியிலும் சூரியனிலும்கொடிது என்பதாம். காமம்-எ, அஞ்சப்படும்-பு. (க)

ஊருளெழுந்த வுருகெழுசெந்தீக்கு
நீருட்குளித்து முயலாகு-நீருட்
குளிப்பினுங்காமஞ் சுடுமேகுன்றேறி
யொளிப்பினுங்காமஞ் சுடும்.

இ-ள். ஊருள்-ஊரில், எழுந்த-எழும்பிய, உரு-வெப்பம், செழு-பிரகாசமிகுந்த, செந்தீக்கு-செந்நெருப்புக்கு, நீருள்-தண்ணீரில், குளிக்கும்-மூழ்கியும், உயலாகும்-பிழைக்கலாம், காமம்-காமமானது, நீருள்-தண்ணீரில், குளிப்பினும்-குளித்தாலும், சுடும்-சுட்டுவிடும், காமம்-காமமானது, குன்றேறி - மலைமேலேறி, ஒளிப்பினும்-ஒளித்தாலும், சுடும்-சுட்டுவிடும்—எ-று. * (இ-ம்) காமத்திற்குக் குத்தப்பலாம் காமத்திற்குத்தப்பலாகாது என்பதாம். காமம் என்பது-புணர், காமம்-எ, சுடும்-ட, எ-அசை. (ல)

பிறர்மனை நயவாமை-முற்றிற்று.

ல-ம்-அதிகாரம்.

ஏ ஐ கூ.

அஃதாவது-கொடுக்குந்திறங்கூறுதலாம்.

இல்லாவிடத்து மிலைத்தவளவிலு
ள்ளவிடம்போற் பெரிதுவந்து-மெல்லக்
கொடையொடுபட்ட குணனுடையமாந்தர்க்
கடையாவாமுண்டைக் கதவு.

இ-ள். இல்லாத-தமக்கில்லாத, இடத்தும் -காலத்தும், இலைபத்து-பொருந்திய, அளவினுல்-அளவால், உள்ளவிடம்போல்-இருக்கிறகாலம்போல், பெரிது-மிகவும், உவந்து-மகிழ்ந்து, மெல்ல-நேராக, கொடையொடு-கொடுத்தலுக்குடன், பட்ட-பொருந்திய, குணன்-நற்குணங்கள், உடை-உடைத்தாகிய, மாந்தர்க்கும்-மனிதற்கும், உண்டை-சுவர்க்கவாசலின், கதவு-கதவுகள், அடையாவாம்-அடைக்காவாம்—எ-று. * (இ-ம்) கொடுத்தவர்கட்குச்சுவர்க்கவாசற்கதவுகள் அடைக்காவாம் என்பதாம். கதவு-எ, அடையாவாம்-ப. (க)

முன்னோசாநாண் முனிதக்கமூப்புள
பின்னரும்பீடழிக்கு நோயுள-கொன்னே
பரவன்மின்பற்றன்மின் பாத்துண்மின்யாதுங்
கரவன்மின்கைத்துண்டாம் போழ்து.

இ-ள். சாநாள்-சாகின்றநாள், முன்னர்-முன்னது, முனிதக்க-வெறுக்கத்தக்க, மூப்புள-விருத்தாப்பியமுண்டு, பின்னரும்-பின்னரும், பீடு-பெருமையை, அழிக்கும்-கெடுக்கும், நோயுள-வியாதியுண்டு, கொன்னே-பயனில்லாமல், பரவன்மின்-பரவாதிருங்கள், கைத்துண்டாம்போழ்து-கிரியமுண்டானகாலத்து, பற்றன்மின்-பற்றுதிருங்கள், பாத்து-பகுத்து, உண்மின்-உண்ணுங்கள், யாதும்-யா

தொன்றையும், காவன்மின்-ஒளியாதுகொடுங்கள்—எ-று. * (இ-ம்) பொருளுண்டாங்காலத்து ஒளியாதுகொடுத்துண்ணுங்கள்என்பதாம். நீவிர்-தோன்றுஎழுவாய்,பரவன்மின்முதலிய-ப, எ-அனை. (உ)

நடுக்குற்றுத்தற்சேர்ந்தார் துன்பந்துடையார்
கொடுத்துந்தான்றுப்பிலை மீண்டுங்கா-லீண்டு
மிடுக்குற்றுப்பற்றிலை நில்லாதுசெல்வம்
விடுக்கும்விரையுலந்தக்கால்.

இ-ள். நடுக்கு-வறுமையால்நடுக்கும், உற்று-பொருந்தி,தன்-தன்னை, சேர்ந்தார்-சேர்ந்தவரது, துன்பம்-துன்பத்தை, துடையார்-நீக்குவின்றிலார், கொடுத்து-பிறருக்குக்கொடுத்து, தான்-தான், துய்ப்பிலை-உண்டாலும், ஈண்டுங்கால்-வளருங்காலமாயின், ஈண்டும்-வளரும், இடுக்கு-வலிமை,உற்று-பொருந்தி, பற்றிலை-பற்றிலாயிலும்,வினை-தான்முன்புசெய்தநல்வினை, உலந்தக்கால்-நீங்கினால், செல்வம்-செல்வமானது, நில்லாது-நிலையாமல், விடுக்கும்-விட்டுப்போம்—எ-று. * (இ-ம்) கொடாதவர்கள் பிறர்க்குக்கொடுத்துத் தாங்களுண்டாலும் பொருள்வளருங்காலத்தில்வளரும்நல்வினை நீங்கிச் செல்வங்கெடும் என்பதாம். செல்வம் - எ, விடுக்கும்-ப, (நன்னூல் பொதுவியல்) எற்புழிவெடுத்துடன் கூட்டுறுமடியவும், வாப்பீறி டைமுதலாகிலுமொருளிசை, மாட்சியுமாறு வழுயவுமழுமறி, இவ்விதியால் இம்மூன்று அழுமறிமாற்றுப்பொருள்கோள். (ஊ)

இம்மியரிசித் துணையாளும்வைகலு
நும்மிலையவ கொடுத்துண்மி-னும்மைக்
கொடா அதவரென்பர் குண்டுநீர்வையத்
தடாஅவடுப்பி னவர்.

இ-ள். இம்மியரிசி-மத்தங்காய்ப்புல்லரிசி, துணையாளும்-அளவாயிருப்ப, வைகலும்-நாடோறும், நும்-உம்முடைய, இல்-மனையிடத்து, இலையவ-பொருந்தியவைகளை, கொடுத்து-பிறருக்குக்கொடுத்து,உண்மின்-உண்ணுங்கள்,குண்டு-ஆழ்ந்த,நீர்-கடல்சூழ்ந்த,வையத்து-பூமியில்,அடாஅ-சமையாத, அடுப்பினவர்-அடுப்பினையுடையவராயிருந்துதெரியுமவனை, உம்மை-முற்பிறப்பில்,கொடாஅதவர்-வழங்காதவர்,என்பர்-என்றுசொல்லுவர் அறிவுடையார்—எ-று. *(இ-ம்) நாடோறும் அளவுபடவாவதுகொடுத்துண்ணுங்கள்யாசகனைமுற்பிறப்பில் கொடாதவர்களென்று சொல்லுவார்கள் என்பதாம். நீவிர்-எழுவாய், உண்மின்-பயனிலை. (எ)

மறுமையுமிம்மையு நோக்கியொருவர்
குறுமாறிலையவ கொடுத்தல்-வறுமையா
லீதலிசையா தெனினுமீரவானெம்
பீதலிரட்டியுமும்.

இ-ள். மறுமையும்-மறுபிறப்பையும், இம்மையும்-இப்பிறப்பையும், நோக்கி-ஆராய்ந்து, ஒருவற்கு-ஒருவனுக்கு, நிலைய-பொருந்தியவைகளை, கொடுத்தல்-வழங்கல், உறுமாறு-பொருந்தும்வழி, வறுமையால்-தரித்திரத்தினால், ஈதல்-கொடுத்தல், இசையாதெனினும்-கூடாதாயினும், இரவாமை-யாசியாதிருத்தல், ஈதல்-கொடுத்தலினும், இரட்டி-இருமடங்காக, உறும்-அடையும்—எ-று. * (இ-ம்) கொடுத்தல் கூடாதிருந்தாலும் தான்போயிரவாதிருத்தல் கொடுத்தலினும் இரண்டுபங்கதிகம் என்பதாம். இரவாமை - எழுவாய், இரட்டியுறும்-பயனிலை. (ரு)

நடுவூருள்வேலிகைச் சுற்றுக்கோட்புக்க
படுபலையன்னர் பலர்நச்ச-வாழ்வார்
குடிகொழுத்தக்கண்ணும் கொடுத்துண்ணுமாக்க
ளிடுகாட்டுளேற்றுப்பலை.

இ-ள். நடுவூருள்-ஊர்நடுவில், வேலிகை-நிண்ணை, சுற்றுக்கோட்புக்க-சூழ்ந்திருக்க, படுபொருந்திய - பலையன்னர், காய்த்தபலைமரத்துக்கொப்பானவர், பலர்நச்ச- பலபேர்விரும்ப, வாழ்வார்-வாழ்வார்கள், குடி-தங்குடி, கொழுத்தக்கண்ணும் - வள்மிகுந்தாலும், கொடுத்து-வழங்கி, உண்ணுந-உண்ணுந, மாக்கள் - மனிதர்கள், இடுகாட்டுள்-சுடுகாட்டிலிருக்கும், ஏற்றுப்பலை-ஆண்பலையைபொப்பர்—எ-று. * (இ-ம்) பலருமிச்சிக்க வாழ்பவர்கள் நடுவூரிற்காய்த்தவினைமரத்திற்கொப்பாவர் கொடுத்துண்ணுதவர்கள் சுடுகாட்டிலிருக்கும் ஆண்பலைக்கொப்பாவார்என்பதாம். படுபலையன்னர்-எ, வாழ்வார்-ப, மாக்கள்-எ, ஏற்றுப்பலையன்னர்-ப. (க)

பெயற்பான்மழைபெய்யாக் கண்ணுமுலகஞ்
செயற்பாலசெய்யா விடினுங்-கயற்புலால்
புன்னைகழியும்,பொருகடற்றண்சேர்ப்ப
வென்னையுலகுய்யு மாறு.

இ-ள். கயல்-கயல்மீனையும், புலால்-புலால்நாற்றத்தையும், புன்னை-புன்னைப்பூவின்மணமான து, கழியும் - நீக்கும், பொரு - அலைமோதப்பட்ட, தண்-குளிர்ந்த, கடல்-கடலையும்,சேர்ப்ப-கானையையுமுடையபாண்டியனே, பெயல்-பெய்தல்,பால்-பகுப்பாகிய,மழை-மழையான து, பெய்யாக்கண்ணும்-பெய்யாதவிடத்தும், உலகம்-உயர்ந்தோர், செயற்பால - செய்யத்தக்கனவைகளை, செய்யாவிடினும்-செய்யாதவிடத்தும், உலகு-உலகமான து, உய்யுமாறு -பிழைக்கும்வழி, என்னை-என்ன—எ-று. * (இ-ம்) பாண்டியனேமழைபெய்யாமலும் பெரியோர்கள் செய்யத்தக்கனவைகளைச்செய்யாமலும் விட்டால்உலகம்பிழைக்கும்வழியில்லைஎன்பதாம். உய்யுமா று-எ, என்னை-ப()

ஏற்றகைம்மாற்றுமை யென்றுரைத்தாம் * வாையா
லூற்றுதார்க்கீயகா மாண்கட-லூற்றின்
மலிகடற்றண்சேர்ப்ப மாறீவார்க்கீதல்.
பொலிகடனென்னும் பெயர்த்து.

இ-ள். ஆற்றின்-யாற்றிலுல், மலி-நிறைந்த, தண்-குளிர்ச்சிபொருந்திய, கடல்-கடலையும், சேர்ப்ப-கழையையுடையபாண்டியனே, ஏற்ற-யாசிக்கின்ற, கை-கைக்கு, மாற்றுமை-இல்லையென்றது, என்றுரைத்தாம்-யாதாகிலும், தாம்-தமக்குள்ள, வளவான்-அளவால், ஆற்றுதாரீக்கு-தரித்திருக்கும், ஈவதாம்-கொடுப்பதாம், ஆண்கடன்-ஆண்டகைமையாவது, மாறீவார்க்கு-கைம்மாறுசெய்வார்க்கு, ஈதல்-கொடுத்தல், பொலி-பிரகாசம்பொருந்திய, கடனென்னும்பெயர்த்து-கடனென்றுசொல்லும்பெயரினையுடைத்து—எ-று. * (இ-ம்)பாண்டியனேவறியவர்க்குக்கொடுத்தலேகொடையாகும்செல்வர்க்குக்கொடுத்தலேகடனாகும்என்பதாம். ஆண்கடன்-எ, ஈவது-ப, கடன்-எ, பெயர்த்து-ப, (அகத்.) வளமிதமளவுமட்டுமாத்திரைப்பெயர்.(அ)

இறப்பச்சிறிதென்றுதில்லென்றுதென்று
மறப்பயன்யார்மாட்டுஞ் செய்க-முறைப்புதவி
னையம்புகூஉந்த வகிகழனீரேபோற்
பையநிறைத்து விடும்.

இ-ள். இறப்ப-மிகவும், சிறிதென்றுது-சிறியதென்றுசொல்லாது, இல்லென்றுது-இல்லையென்றுசொல்லாது, என்றும்-எப்பொழுதும், அறப்பயன்-தருமப்பலனை, யார்மாட்டும்-யாவரிடத்தும், செய்க-செய்யக்கடவாய், முறை-முறையாக, புதவின்-வாயில்களோறும், புகூஉம்-புகுத்து, ஐயம்-பிச்சையேற்கும், தவசி-தவசிகையிலிருக்கும், கழனீரேபோல்-பாத்திரம்போல், பைய-மெல்ல, நிறைத்துவிடும்-நிறைத்துவிடும்—எ-று. * (இ-ம்) யாவரிடத்துந் தருமத்தைச்செய்யக்கடவீர் அத்தருமப்பலன்-யாசிப்போர்பாத்திரம்போல-நிறைவுபெறும் என்பதாம். நீவிர் தோன்றுஎழு, செய்க-ப, அறப்பயனை-செ(கூ)

கடிப்பிடுகண்முரசங் காதத்தோர்கேட்ப
ரிடித்துமுழங்கியதோர் யோசனையோர்-கேட்ப
ரடுத்தியமுவுலகுங் கேட்குமேசான்றோர்
கொடுத்தானெனப்படுஞ் சொல்.

இ-ள். கடிப்பு-குறுந்தடியினுல், இடி-அடிக்கட்ட, கண்-இடமகன்றவாயினையுடைய, முரசம்-பேரிகைச்சத்தம், காதத்தோர்-காதவழியிலுள்ளோர், கேட்பர்-கேட்பார்கள், இடித்து-இடியிடித்து, முழங்கியது-சத்திப்பது, ஓர்-ஒரு, யோசனையோர்-யோசனைவழியிலுள்ளோர், கேட்பர்-கேட்பார்கள், சான்றோர்-பெரியோர்களுக்கு,

கொடுத்தாஞனப்படுஞ்சொல் - கொடுத்தாவென்றுசொல்லப்படுஞ் சொல்லானது, அடுக்கிய - ஒன்றன்மேலொன்றுகஅடுக்கிய, மூவுல குஞ் - சுவர்க்கமத்தியபாதாளமென்னுமூவுலகிற்குமி, கேட்குஞ்-கே ட்குமி—எ-று. * (இ-ம்) பெரியோர்களுக்கு கொடுத்தாவென்றுசொ ல்லப்படுஞ் சொல்லானது திரிலோகத்திற்குமிகேட்குமி என்பதாம். சொல்-எ, கேட்குஞ்-ப, எடாரம்-அசை. (ய)

ஈவகை - முற்றிற்று.

ஙக-ம்-அதிகாரம்.

ப ை ழ வி ஙை.

அஃதாவது-முற்பிறப்பிற்செய்தவினையாம்.

பல்லாவுளுய்த்து விழுங்குழக்கன்று
வல்லதாற்தாய்நாடிக் கோடலைத்-தொல்லைப்
பழவினையுமன்ன தகைத்தேதற்செய்த
பிழவினைநாடிக் கொளற்கு.

இ-ள். பல்லாவுள்-பலபசுக்களுள், குழக்கன்று- இளங்கன்றை, உய்த்துவிடினும்-கெலுத்திவிடினும், தாய்-தன்முலை, நாடி-தேடி, கோடலை-கொள்ளுதலில், வல்லதாம்-வல்லமையுடையதாம், தொல் லை-முன்செய்த, பழவினையும் - ஊழ்வினையும், தன்-தன்னை, செய் த - செய்தற்கு, பிழவினை - உரியவினை, நாடி - ஆராய்ந்து, கொளற் கு-பற்றிக்கொள்ளுதற்கு, அன்னதகைத்தே - அத்தன்மையதாம்— எ-று. * (இ-ம்) கன்றுபசுவைத்தேடிக்கொள்ளுதல்போல வினையுஞ் செய்தவினை தேடிக்கொள்ளும் என்பதாம். பழைவினை-எ, அன்ன தகைத்தே-ப. (க)

உருவுமிளமையு மொண்பொருளுமுட்கு
மொருவழிநில்லாமை கண்டு-மொருவழி
யொன்றேறமில்லாதான் வாழ்க்கையுடம்பிட்டு
நின்றுவிழ்ந்தக்க தடைத்து.

இ-ள். உருவும்-அழகும், இளமையும் - இளமைப்பருவமும், ஒள்-ஒளிபொருந்திய, பொருளும்-திரவியமும், ஒருவழி - ஒருபிற ப்பினும், நில்லாமை-நில்லாது, உட்கும்-கெடுதலை, கண்டும் - பார்த் தும், ஒன்றேறயும்-ஒருநல்வினையும், இல்லாதான்-செய்யாதவன், வா ழ்க்கை-வாழ்க்கை, உடம்பு-உடம்பினை, இட்டு-எடுத்து, நின்று-நின் றவளவினலுய், விழ்ந்தக்கது-வீழ்ந்தகுழியை, உடைத்து - உடை யது—எ-று. * (இ-ம்) ஒருபிறப்பிலுந் தருமஞ்செய்யான் வாழ்வு கெடும் என்பதாம். வாழ்க்கை-எழுவாய், உடையது-பயனிலை. (உ)

வளம்பட்டவேண்டாதார் யாரியாரு மில்லை
யளந்தனபோக மவரவ-ராற்றுன்
விளங்காய்திரட்டிரு மில்லைக்களங்கனியைக்
காணெனச்செய்தாரு மில்.

இ-ள். வளம்-செல்வம், பட - உண்டாக, வேண்டாதார்-விரும்பாதார், யார்-யாவர், யாரும் - யாவரும், இல்லை - இல்லை, அவரவர்-அவரவர்செய்த, ஆற்றல் -வினையால், போகம்-அவர்க்குறுபோகம், அளந்தன - கற்பித்துக்கிடந்தன, விளங்காய்-விளங்கனியை, திரட்டினர் - திரட்டினவர், இல்லை-இல்லை, களங்கனியை - களவின்கனியை, காணெனை-கறப்பாக, செய்தாரும் - செய்தவரும், இல் - இல்லை—எ-று. * (இ-ம்) செல்வம்வேண்டாதாரியாவருமில்லை அவரவர்வினையின்படி அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதாம். போகம்-எ, அளந்தன-ப, (தண்டியலங்காரம்) [பொதுவணியியல்] (முத்தகச்செய்புட் டனிதின்றுமுடியும் இஃது முத்தகச்செய்புள் இன்னிசைவெண்பா) (ரு)

உறற்பாலதீக்க லுறுவர்க்குமாகா
பெறற்பாலவினையவு மன்ன-வாமாரி
வறப்பிற்றருவாரு மில்லையதனைச்
சிறப்பிற்றணிப்பாரு மில்.

இ-ள். உறற்பால-உறுப்குதியான தீவினைகளை, நீக்கல்-நீக்குதல், உறுவர்க்கும்-தபோதனர்க்கும், ஆகா-இயலாவாம், பெறற்பால்-பெறும்பகுதியான நல்வினைகள், அனையவும்-எல்லாம், அன்னவாம்-அத்தன்மையாம், (அதுபோல) மாரி-மழை, வறப்பில்-மறத்தகாலத்தில், தருவாரும்-அதனைப்பெய்விப்பாரும், இல்லை- இல்லை, சிறப்பில்-அம்மழைபெய்யுங்காலத்தில், அதனை-அதை, தணிப்பாரும்-பெய்யாமனிறுத்தவல்லாரும், இல் - இல்லை—எ-று. * (இ-ம்) வந்ததுன்பங்களைநீக்குதலும் இருக்கிற வின்பங்களைப் போக்குதலும் பெரியோர்க்குமரிது என்பதாம். நீக்கல்-எ, ஆகா-ப, (ச)

தினைத்துணையாகித் தந்தேசுள்ளடக்கிப்
பனைத்துணையார்வைகலும் பாடழிந்து-வாழ்வர்
நினைப்பக்கிடந்த தெவனுண்டாமேலை
வினைப்பயனல்லாற் பிற.

இ-ள். தினை-தினையினுடைய, துணையாகி - அளவினையுடையவராய், தம்-தமது, தேசு-ஒளியை, உள் - உள்ளே, அடக்கி-அடங்கச்செய்து, பனை-பனையினுடைய, துணையார்- அளவினையுடையார், வைகலும்-நாடோறும், பாடு-பெருமை, அழிந்து - கெட்டு, வாழ்வர்-வாழாநிற்பர், நினைப்ப - விசாரிக்க, கிடந்தது-தக்கது, எவன் -என், உண்டாம்-உளதாம், மேலை - முன்செய்த, வினைப்பயன்-வினை

யின்பயன், அல்லால்- அல்லது, பிற-வேறொன்றுமில்லை—எ-று. * (இ-ம்) விஜனவசத்தால் பஜனபளவு பெருமையையுடையவரும் திஜன பளவுபெருமையிஜன யுடையவரா யடங்கிநிற்பர் என்பதாம். பஜனத் துணைபார்-எ, வாழ்வர்-ப. (இ)

பல்லான்றகேள்விப் பயனுணர்வார்வீயவும்
கல்லாதார்வாழ்வ தறிதிரோற்-கல்லாதார்
சேதனமென்னுமச் சேறகத்தின்மையாற்
கோதென்றகொள்ளாதாங் கூற்று.

இ-ள். பல்-பலநூல்களையும், ஆன்ற-கற்றமைத்த, கேள்வி-கேள்வியால்வரும், பயன்-பயஜன, உணர்வார்-அறிவார், வீயவும்-இறக்கவும், கல்லாதார்-கல்லாதவர், வாழ்வது-உயிர்வாழ்வதும், அறிதிரோன்-காரணமறிவீராகில், கல்லாதார்-கல்லாதவர், சேதனமென்னும்-அறிவென்னும், அச்சேறு-அச்சாரம், அகத்து-மனதில், இன்மையால்-இல்லாமையால், கூற்று-கூற்றுண்பது, கோதென்று-அவரைச் சக்கையென்றெண்ணி, கொள்ளாதாம்-கொள்ளமாட்டாது—எ-று. * (இ-ம்) யமனுனவன் கற்றோனைச்சாரமாகவும், மற்றோனைச்சக்கையாகவுங்கொள்வான் என்பதாம். கூற்று-எழுவாய்-கொள்ளாதாம்-பயனிலை. (க)

இடும்பைகூர்நெஞ்சத்தா ரெல்லாருங்காண
நெடுங்கணைநின்றுழல்வ தெல்லா-மடம்பம்பூ
வண்ணங்கிழிக்கு மலைகடற்றண்சேர்ப்ப
முன்னைவினையாப் விடும்.

இ-ள். அடம்பம்- அடம்பினுடைய, பூ-பூக்களை, அன்னம்-அன்னங்கள், கிழிக்கும்-கிழித்துவிளையாடும், அலை-அலைகள்பொருந்திய, தண்-குளிர்ந்த, கடல்-சமுத்திரத்தையும், சேர்ப்ப-கானையையுடையபாண்டியனே, இடும்பை-துன்பம், கூர்-மிக்க, நெஞ்சத்தார்-நெஞ்சினையுடையார், எல்லாரும்-எல்லாரும், காண-அரிய, நெடும்-நெடிய, கடை-வாயில்கடோறும், நின்று-நின்றுநின்று, உழல்வது-திரிவது, எல்லாம்-யாவும், முன்னை-முன்செய்த, வினையாய்விடும்-தீவினைப்பயனாய்விடும்—எ-று. * (இ-ம்) பாண்டியனே இப்பிறப்பில் யாசிக்குஞ்செய்கை முற்பிறப்பிற்செய்வினையாம் என்பதாம். எல்லாம்-எழுவாய், வினையாய்விடும்-பயனிலை, (தண்டியலங்காரம்) [பொதுவணியியல்] தெளிவெனப் படுவது பொருள் புலப்பாடே இதுதெளிவணி. (எ)

அறியாருமல்ல ரறிவதறிந்தும்
பழியோடுபட்டவை செய்தல்-வளியோடு
நெய்தணறவுயிர்க்கு நீள்கடற்றண்சேர்ப்ப
செய்தவினையான் வரும்.

இ-ள். வளிபோடு-காற்றின்வழிபேயோடி, நெய்தல்-நெய்தற் பூவினது, நறவு-வாசனை, உயிர்க்கும்-கமழாநின்ற, நீள்-நீண்ட, தண்-குளிர்ந்த, கடல்-சமுத்திரத்தையும், சேர்ப்ப-கரையையுமுடைய பாண்டியனே, அறியாரும் - அறியாதாரும், அல்லர்-அல்லர், அறிவது-அறியத்தக்கநூல்களின்பலனை, அறிந்தும்-அறிந்திருந்தும், பழியோடு-பழியுடனே, பட்டனவை-பொருந்தியவை, செய்தல்-சிலர் செய்தல், செய்த-முன்செய்த, வினையால் - தீவினைப்பயனால், வரும்-வரும்—எ-று. * (இ-ம்) பாண்டியனே நூற்கனையறிந்தும் தீவினைகளைச்செய்தல் முன்செய் வினைவசமாம் என்பதாம். செய்தல்-எழுவாய், வரும்-பயனிலை. (அ)

சண்டுநீர்வையத்து ளெல்லாருமெத்துணையும்
வேண்டாமற்றீய விழைபய-னல்லவை
வேண்டினும்வேண்டா விடினுமுறற்பால
நீண்டாவிடுத லரிது.

இ-ள். சண்டுநீர்வையத்துள்-விரிந்தநீர்சூழ்ந்தவுலகத்துள், எல்லாரும்-யாவரும், எத்துணையும்-தமக்கெவ்வளவும், நீய-கொடியவை, விழைதலத்த, பயன்-துன்பங்களை, வேண்டினும்-விரும்பினராயினும், வேண்டாவிடினும்-விரும்பாவிட்டாலும், உறற்பால-வரும்வினைகள், நீண்டா-அவனாத்நீண்டாமல், விடுதல் - நீங்குதல், அரிது-அரிது—எ-று. * (இ-ம்) யாவரும் நல்வினைகளை வேண்டினும் வேண்டாவிடினும் வரும்வினைகள் வராமலிராவாம் என்பதாம். விடுதல்-எ, அரிது-ப, மன்-ஒழியிசை. (கூ)

சிறுகாபெருகா முறைபிறழ்ந்துவாரா
வுறுகாலத்துற்றுகா வாமிடத்தே-யாகுஞ்
சிறுகாலைப்பட்ட பொறியுமதனு
ளிறுகாலத்தென்னை பரிவு.

இ-ள். சிறுகாலை-முற்காலத்து, பட்ட-உண்டாகிய, பொறியும்-நல்வினைகளும், சிறுகா-சிறுகாவாம், பெருகா-பெருகாவாம், முறை-வகிசை, பிறழ்ந்து-மாறி, வாரா-வாராவாம், உறுகாலத்து-துன்புறுங்காலத்து, உற்றுகா-வந்துதவுங்காவாம், ஆமிடத்து - ஆங்காலத்து, ஆகும்-ஆகும், அதனுள் அந்துணை-ஆதலால், இறுகாலத்து - தீவினைப்பயத்தால், (கேடுவருங்காலத்து) பரிவு- வருந்துவது, என்னை-யாது—எ-று. * (இ-ம்) நல்வினைகள் சிறுகலும் பெருகலும் முறைமாறிவருதலுமில்லை வரும்போதுவரும் தீவினைகள்வந்தபோது வருந்துவதென்ன என்பதாம். பரிவு-எ, என்னை-ப, (தண்டியலங்காரம்) [பொதுவணியியல்] சொல்லினும் பொருளினுஞ் விலைப்படவின்பம் இம்மூன்று (இன்பவணி.) (ங)

பழவினை-முற்றிற்று.

மெய்ம்மை.

அஃதாவது-உண்மைகூறுதலாம்.

இசையாவொருபொரு ளில்லென்றல்யார்க்கும்
வசையன்றுவையகத் தியற்கை-நசையழுங்க
நின்றுரைப்பொய்த்தனினாதொடுத்தசெந்நன்றி
கொன்றுரிம்குற்ற முடைத்து.

இ-ள். நினைதொடுதி - வரிசையாகவணிந்த வளையல்களையுடை யவளே, இசையா-இடையாத, ஒருபொருள்-ஒருபொருளை, இல்லை என்றல்-இல்லையென்றுசொல்லல், யார்க்கு-யாவருக்கும், வசையன் று-குற்றமல்ல, வையத்து-பூமியில், இயற்கை-இயல்பாகும், நசை-ஆசை, அழுங்க-கெட, நின்றுரை-நெடுங்கால்நின்று, பொய்த்தல்-பொய்சொல்லல், செய்தநன்றி-பிறர்செய்தவுதவியை, கொன்றுரில்-கொன்றவனைப்பார்க்கிலும், குற்றம்-குற்றம், உடைத்து-உடையதாம்—எ-று. * (இ-ம்) ஒருபண்ணை ஒருவனைப் பலகால் இரியலறவத் தில்லையென்றுசொல்லல் செய்தநன்றி அழித்தலும் குற்றமுடையது என்பதாம். பொய்த்தல்-எ, குற்றமுடைத்து-ப. (க)

தக்காருந்தக்கவ ரல்லாருந்தந்தீர்மை
யெக்காலுங்குன்ற லிலராவ-ரக்காரம்
யாவரேதின்னும் கையாதாம்கைக்குமாந்
தேவரேதின்னும் வேம்பு.

இ-ள். தக்காரும்-பெரியோரும், தக்கவல்லாரும்-சிறியோரும், தம்-தமது, தீர்மை-குணங்களில், எக்காலும்-எந்நாளும், குன்றல்-குறைதல், இலராவர்-இல்லாராவர், அக்காரம்-வெல்லத்தை, யாவர்-எவர், தின்னினும்-தின்றாலும், கையாது-கசக்காது, வேம்பு-வேம்பை, தேவர்-தேவர்கள், தின்னினும்-தின்றாலும், கைக்கும்-கசக்கும்—எ-று. * (இ-ம்) பெரியோருஞ் சிறியோருந் தங்கள் குணங்களில் குறையுபடார்கள் என்பதாம். குன்றல்-எ, இலராவர்-ப, ஆம்-உ-ம்-எ-உ-ம்-அசைகள். (உ)

காலொடுபோழ்ந்திற் கழிகிளைஞர்வாழ்முத்து
மேலாடுமீனிற் பலராவ-ரேலா
விடரொருவருற்றக்கா லீர்ங்குன்றநாட
தொடர்புடையோமென்பர் சிலர்.

இ-ள். ஈர்ங்குன்ற-குளிர்ந்தமாலையையும், நாட-நாட்டையுமுடைய பாண்டியனே, ஒருவர்-ஒருவர், காலாடுபோழ்தில்-(செல்வமுற்றுச்) சஞ்சரிக்குங்காலத்து, கழி-மிகுந்த, கிளைஞர்-உறவினர், வானத்து-ஆகாயத்து, மேலாடு-மேலேசஞ்சரிக்கு, மீனில்-நட்சத்திரங்களைப்பார்க்கிலும், பலராவர்-அநேகராவர், எலா-பொருந்தா

த, இடர்-துன்பங்களை, உற்றக்கால்-அடைந்தால், சிலர்-சிலர்மாத்திரம், தொடர்பு-சம்பந்தம், உடையோம்-உடையோம், என்பார்-என்றுசொல்லுவார்கள்—எ-று. * (இ-ம்) பாண்டியனே ஒருவர் நடந்து நியுங்காலத்துப்பலபேருறவினராவார்கள் துன்பமடைந்தாற் சிலபேருறவினராவார்கள் என்பதாம். இளைஞர்-எ, ஆவர்-ப, சிலர்-எ, என்பார்-ப. (ங)

வடுவிலாவையத்து மன்னியமூன்றி
னடுவணதெய்தா விருதலையு-மெய்து
நடுவணதெய்தாதா னெய்துமுலைப்பெய்
தடுவதுபோலுந் துயர்.

இ-ள். வடுவிலா-குற்றமில்லாத, வையத்து-பூமியில், மன்னிய-நிலைபெற்ற, மூன்றில்-(அறம் பொருள் இன்பமென்னு) மூன்றனுள், நடுவணது-நடுவாகியபொருள், எய்த-பொருந்த, இருதலையும்-தருமமும், காமம்-காமமும், எய்தும்-அடையும், நடுவணது-பொருளை, எய்தாதான்-அடையாதவன், உலை-உலையில், பெய்து-போட்டு, அடுவதுபோலும்-(ஆமையைக்) கொல்லுதல்போலும், துயர்-துன்பத்தை, எய்தும்-அடைவான்—எ-று. * (இ-ம்) பொருளைய டைந்தவன் புண்ணியத்தையும் அடைவான் பொருளையடையாதவன் துன்பத்தை யடைவான் என்பதாம். இருதலை-எ, எய்தும்-ப, பொருளை-செ, எய்தாதான்-எ, எய்தும்-ப, துயரத்தை-செ. (ச)

நல்லாவின்கன்றுயி ரும்விலைபெறூஉங்
கல்லாரோயினுஞ் செல்வர்வாய்ச்-செல்லுஞ்
புல்லீரப்போழ்தி னுழவேபோன்மீதாழ்ந்
தெல்லாவாநல்கூர்ந்தார் சொல்.

இ-ள். நல்-நல்ல, ஆவின்-பசுவின், கன்றுயின்-கன்றுகள், நாரும்-நாளுங்கன்றும், விலைபெறூஉம்-விலைபெறும், கல்லாரோயினும்-கல்லாதவராகினும், செல்வர்வாய்-ஐயுசுவரியபவான்கள் வாக்கிற்பிறக்கும்-சொற்செல்லும்-சொற்கள்செல்லும், நல்கூர்ந்தார் சொல்-வறியவர் வாக்கிற் பிறக்குஞ் சொற்கள், புல்லீரம்-அற்பவீரம் பொருந்திய, பொழுதின்-காலத்தில், உழவேபோல்-உழுபடைச்சால் போல், மீதாழ்-மேலாடி, செல்லாவாம்-செல்லமாட்டாவாம்—எ-று. * (இ-ம்) செல்வவான்கள் சொற்கள்செல்லும், தரித்திரர் சொற்கள் செல்லாவாம் என்பதாம். சொல்-எ, செல்லும்-ப, சொல்-எ, செல்லாவாம்-ப, எ-மீற்றசை. (டு)

இடம்படமெய்ஞ்ஞானங் கற்பினுமென்று
மடங்காதாமென்று மடங்கார்-தடங்கண்ணு
ளுட்பொடுமெய்பா நயிற்காயம்பெய்தழுங்
கப்பறுபேய்ச்சுரையின் காய்.

இ-ள். தடம்-விசாலம்பொருந்திய, கண்ணுய்-கண்களையுடை யவளே, உப்பொடு-உப்புடன், நெய்-நெய்யும், பால்-பாலும், தயி ர்-தயிரும், காயம்-பலகாயங்களும், பெய்து-இட்டு, பெய்ச்சுளையி ன்காய்-பெய்ச்சுரைக்காயை, அடிசிலும்-சமைத்தாலும், கைப்புறு-கசப்புநீங்காது, (அதுபோல) மெய்ஞ்ஞானம்-உண்மைஞானநூற் களை, என்றும்-எந்நாளும், இடம்பட-விரிவாக, கற்பினும்-கற்றலும் ம், அடங்காதார்-அடங்காதவர்கள், என்றும்-எந்நாளும், அடங்கா ர்-அடங்கார்—எ-று. * (இ-ம்) பெண்ணை அடங்காதவர்கள் எக்கா லமுமடங்கார் என்பதாம். அடங்காதார்-எ, அடங்கார்-ப, (அவிநய ச்சுத்திரம்) [குறட்பாவிரண்டனை நால்வகைத்தொடையாய் முதற் பாதனிச்சொலினடிமூவுவிருகை விகற்பினடப்பதுநேரிசைவெண் பா] இவ்விதிபாலிற்கு நேரிசைவெண்பா. (ஈ)

தம்மையிகழ்வாரைத் தாமவரின்முன்னிகழ்க
வெண்ணெயவரோடி பட்டது-புன்னை
விறற்பூங்கமழ்கானல் வீங்குநீர்ச்சேர்ப்ப
வுறற்பாலவார்க்கு முறும்.

இ-ள். புன்னை-புன்னையினது, விறல்-மிக்க, பூ-பூக்களின்மண ம், கமழ்-பரிமளிக்கின்ற, கானல்-சோலையையும், வீங்கு-நிறைந்த, நீர்-நீரினையும், சேர்ப்ப-கடற்கானையையுமுடையபாண்டியனே, உ றற்பால-வருபவை, யார்க்கும்-யாவர்க்கும், உறும்-வருமாதலால், தம்மை-தங்களை, இகழ்வாரை-இகழ்பவர்களை, தாம்-தாங்கள், அவரி ன்முன்னிகழ்க-அவர்களின்முன்பாயிகழக்கடவர்கள், அவரோடி பட்டது-அவர்கள்பின்னுலிகழப்பட்டதன்மை, என்னை-என்ன —எ-று. * (இ-ம்) பாண்டியனே தங்களையிகழ்ந்தவர்கள் முன்பாக த் தாங்களிழக்கடவர்கள் அவர்கள் பின்னிகழ்வதென்ன என்பதாம். தாம்-எ, இகழ்க-ப. (எ)

ஆவேறருவின வாயினுமாபயந்த
பால்வேறருவின வல்லவாம்-பால்போ
லொருமைத்தன்மைத்தாகு மறநெறியாபோல்
உருவுபலகொள லீக்கு.

இ-ள். ஆ-பசுக்கள், வேறு-வேறுபட்ட, உருவினவாயினும்-உ ருவங்களையுடையனவாயினும், ஆ-அப்பசுக்கள், பயந்த-கொடுத்த, பால்-பாலெல்லாம், வேறு-வேறுபட்ட, உருவின-உருவங்களையு டையன, அல்லவாம்-அல்லனவாம், பால்போல்-அப்பால்போல, அறம்-அறத்தினது, நெறி-வழி, ஒருதன்மைத்து-ஒருதன்மையையு டையது, ஆகும்-ஆம், போல-அப்பசுக்கள்போல, ஈங்கு-ஈங்குண் டாகிய சமயங்களும், பல-பல, உருவு-வேடங்களை, கொளல்-கொ

ண்டிருக்கும்—எ-று. * (இ-ம்) பசுக்களெல்லாம் வேறுருவாலும் பாலெல்லா மொருருவே அதுபோல யார்செய்யினுந் தருமமெல்லா மொருவழியாகும் இப்படியே சமயங்கள் என்பதாம். அறநெறி-எ, ஆகும்-ப, சமயங்கள்-எ, கொளல்-ப, வேடங்களை-செ, (அகத்தியச்சூத்திரம்) [முதலுமூன்று நாற்சீராகியு - மிரண்டுமீறு முச்சீராகியுந்-தனிச்சொற்சீர்கொளாது நேரிசைவெண்பா. [இதனுளிறுதி நேரசைவெண்பா](யாப்பருங்கலம்) [யாலழவென்னு மீரண்டொற்றும்-வான்முறைபிறழாதுலகத்தினடையுஞ்சீர்ப்பினஞ்-தாஞ்சிடையெதுகையென் றறைதல்வேண்டும், இவ்வீதியால் இதுலகாவொற்றிடைவந்த, ஆ பெதுகைமற்றும்-யாப்பிலா.] (அ)

யாஅருளகத்தோர் சொல்லில்லாதேருங்கால்
யாஅருபாயத்தின் வாழாதார்-யாஅ
யுடையாகவின்ஞத தெய்தாதார்யாஅர்
கடைபோகச்செல்வ முப்பத்தார்.

இ-ள். தேருங்கால்-ஆராயுமிடத்து, உலகத்தில்-உலகில், சொல்-புகழ், இல்லார்-இல்லாதவர், யாஅர்-யார்தாம், உபாயத்தின் - முற்பிறப்பிற்றவஞ்செய்ததுபாயத்தால், வாழாதார்-இப்பிறப்பில்வாழாதார், யாஅர்-யாவர்தாம், இடையாக-இறக்குமுன், இன்ஞத-துன்பத்தை, எய்தாதார்-அடையாவர், யாஅர்-யாவர்தாம், கடை-போகமுடிவளவும், செல்வம்-செல்வத்தை, உய்த்தார் -செலுத்தினவர், யாஅர்-யார்தாமொருவருமில்லை—எ-று. * (இ-ம்) புகழிலார்யார் வாழாதார்யார்யார் துன்பமடையாதாரியார் முற்றஞ் செல்வம்பெற்றார் என்பதாம். யார்-எ, யரம்-ப. (கூ)

தாஞ்செய்வினையல்லாற் நம்மொடுசெல்வதுமற்
றியாங்கணுந்தேறிற் பிறிதில்லை-யாங்குத்தாம்
போற்றிப்புனைந்த வுடம்புமும்பயனின்றே
கூற்றங்கொண்டோடும் பொழுது.

இ-ள். ஆங்கு - அவ்விடத்து, தாம்-தாங்கள், போற்றி -காத்து, புனைந்த-அழகுசெய்த, உடம்பும் - உடம்பாலும், கூற்றம்-கூற்றுவன், கொண்டு- தமதுயிராக்கொண்டு, ஓடும்பொழுது - போங்காலத்தில், பயன்-பிரயோசனமும், இன்று-இல்லை, தாம் -தாங்கள், செய்-செய்த, வினை-இருவினையும், அல்லால்-அல்லாது, தம்மொடு-தம்முடனே, செல்வது-கூடப்போவது, யாங்ஙணுந்-எக்காலத்தாயினும், தேரில்-ஆராய்ந்தால், பிறிதில்லை- வேறுண்டுமில்லை—எ-று. * (இ-ம்) தாங்கள்செய்த நல்வினை தீவினையே தங்களோடு கூடவரும் என்பதாம். வினை-எ, பிறிதில்லை-ப. (ஙி)

மெய்ம்மை-முற்றிற்று.

தீவினையச்சம்

அஃதாவது-தீவினைக்கு அஞ்சுதலாம்.

துக்கத்துட்டுங்கித் துறவின்கண்சேர்கலா
மக்கட்பிணத்த சுடுகாடு-சொக்க
விலங்கிற்கும்புள்ளிற்கும் காடேபுலன்கெட்ட
புல்லறிவாளர் வயிறு.

இ-ள். துக்கத்துள்-துன்பத்தினிடத்து, ஞங்கி-மயங்கி, துறவின்கள்-துறவறவிடத்து, சேர்கலா-அடையாத, மக்கள்-மக்களின், பிணத்த-பிணங்களையுடையன, சுடுகாடு-சுடுகாடுகள், தொக்க-நெருங்கிய, விலங்கிற்கும்-மிருகங்களிற்கும், புள்ளிற்கும்-பறவைகளுக்கும், காடு-காடுகளாவன, புலன்கெட்ட-அறிவுகெட்ட, புல்லறிவாளர்-அறிவீனருடைய, வயிறு-வயிறுகள்—எ-று. ❊ (இ-ம்) மிருகங்கள் பறவைகளுக்கும் அறிவீனர்களுடைய வயிறுகளே சுடுகாடுகளாம் என்பதாம். வயிறு-எ, காடு-ப. (க)

இரும்பார்க்குங்காலார வேதிலார்க்காளாய்க்
கரும்பார்கழனியுட சேர்வர்-சுரும்பார்க்குங்
காட்டுளாய்வாழுஞ் சிவலுங்குறும்பூழும்
கூட்டுளாய்க்கொண்டு வைப்பார்.

இ-ள். சுரும்பு-வண்டுகள், ஆர்க்கும்-சத்திக்கும், காட்டுளாய்-காட்டிடமாய், வாழும்-வாழ்கின்ற, சிவலும்-கவுதாரியும், குறும்பூழும்-காடையையும், கூட்டுளாய்-கூட்டிடமாய், கொண்டுவைப்பார்-கொண்டடைப்பவர்கள், இரும்பு-இரும்புவிலங்கு, ஆர்க்கும்-சத்திக்கும், காலராய்-கால்களையுடையவராய், எதிலார்க்கு-பகைவருக்கு, ஆளாய்-அடிமையாய், கரும்பார்-இருட்பூமியாகிய, கழனியுள்-வயவிடத்தில், சேர்வர்-அடைவார்கள்—எ-று. ❊ (இ-ம்) இப்பிறப்பில் காடைகவுதாரி முதலானவற்றைக் கூட்டிலடைப்பவர்மறுபிறப்பில் விலங்குபூண்டு நரகத்திலடைவார்கள் என்பதாம். வைப்பார்-எழுவாய், சேர்வர்-பயனிலை. (உ)

அக்கேபோலங்கை யொழியவிரலூன்றித்
துச்சத்தெழுமோ வெழுபவே-யக்கா
லலவினைக்காதலித்துக் கான்முரித்துத்தின்ற
பழவினைவந்தடைந்தக் கால்.

இ-ள். அக்கால்-முற்பிறப்பில், அலவினை-நண்டுகளை, காதலித்த-இச்சித்து, கான்முரித்து-கால்களைமுரித்து, தின்ற-உண்ட, பழவினை-பழையவினை, வந்தடைந்தக்கால்-வந்தால், அக்கேபோல்-சய்

குமணிபோல, அங்கை-அகங்கை, ஒழிய-தவிர, விரல்-விரல்கள், அழுகி-அழுகி, தொழுநோய்-குஷ்டநோயில், தக்கம்-துன்பமடைந்து, எழுப-நிரிபவர்கள்—எ-று. * (இ-ம்) முற்பிறப்பில்நண்டுகளைத் தின்னவர்கள் இப்பிறப்பில் குஷ்டவியாதிகொண்டுநிரிவார்கள் என்பதாம். தொழுநோய் - எ, எழுப-ப, எ-அசை, (நன்னூல்) "அகமுனச்செவிகை-வரினிடையனகெடும்" இவ்விதியால், அகங்கை - அங்கையாயிற்று. (ங)

நெருப்பழச்சேர்ந்தக்கா னெய்போல்வதூஉ
மெரிப்பச்சுட்டெவ்வநோ யாக்கும்-பாபபக்
கொடுவினையராகுவர் கோடாருங்கோடிக்
கடுவினையாகியார்ச் சார்ந்து.

இ-ள். நெருப்பு-நெருப்பினது, அழல்-வெம்மையை, சேர்ந்தக்கால்-சேர்ந்தால், நெய்போல்வதூஉம் - நெய்போலக் குளிர்ச்சியையுடையது, எரிப்ப-எரிக்கும்படி, சுட்டு-கொளுத்தி, வெவ்வம்-துன்பமாகிய, நோய்-நோவை, ஆக்கும்-உண்டாக்கும், (அதுபோல) கோடாரும்-நன்னடைபிறழாதவர்களும், கடுவினையராகியார்-கொடியவர்களை, சார்ந்து-சேர்ந்து, கோடி-நன்னடைபிறழ்ந்து, பாபப-மிகவும், கொடு-கொடிய, வினையராகுவர்- வினையையுடையவராவார்கள்—எ-று. * (இ-ம்) துன்மார்க்கனைச்சேர்ந்த நன்மார்க்கரும் துன்மார்க்கராவார்கள் என்பதாம். கோடார் - எ, ஆகுவர்- ப, (வீரசோழியமெற்கோள்சூத்திரம்) "காசுநாண்மலர்பிறப்பெனநாண்கும் வெண்பாவிற்றின் மேவும்வாய்பாடே" இவ்விதியால் (இதுகாசு என்னும்வாய்பாடு.) (ச)

பெரியவர்கேண்மை-பிறைபோலநாளும்
வரிசைவரிசையா நந்தும்-வரிசைபால்
வானூர்மதியம்போல் வைகலுந்தேயுமே
தானேசிறியார் தொடர்பு.

இ-ள். பெரியவர்-பெரியோர்கள், கேண்மை-சினேகம், பிறைபோல-இளம்பிறைபோல, நாளும்-எந்நாளும், வரிசை-வரிசையாய், கிரம-கிரமமாக, நந்தும்-வளரும், சிறியார்-சிறியோர்கள், தொடர்பு-சிநேகம், வான்-ஆகாயத்திலே, ஊர்-செல்லும், மதியம்போல்-பூரணச்சந்திரன்போல, வைகலும் -தினந்தோறும், வரிசையாய்-கிரமமாய், தானே-தனக்குத்தானே, தேயும்-குறைந்துபோகும்—எ-று. * (இ-ம்) பெரியோர்கள்சிநேகம் பிறைபோலவளரும்சிறியோர்கள் சிநேகம் நிறைசந்திரன்குறைதல்போற்குறையுமென்பதாம். கேண்மை-எ, நந்தும்-ப, தொடர்பு-எ, தேயும்-ப, எகாரம்-அசை. (ஞ)

சான்றோரொன்மதித்துச் சார்ந்தாய்மற்சார்ந்தாய்க்குச்
சான்றுண்மைசார்ந்தார்க ணில்லாயிற்-சார்ந்தேய்கேண்

சாற்றகத்துண்டென்று செப்புற்றிறத்தொருவன்
பாம்பகத்துண்ட துடைத்து.

இ-ள். சான்ரோனை-பெரியோனை, மதித்து-எண்ணி, சார்த்தாய்-சேர்ந்தவனே, சார்ந்தாய்க்கு-சேர்ந்தவனுக்கு, சால்புண்மை-பொருந்தண்மைக்கு, சார்ந்தார்கண்-நீசேரப்பட்டவரிடத்து, இல்லாயின்-இல்லாவிடில், சார்ந்தோய-சேர்ந்தவனே, கேள்-கேட்பாயாக, சாதிக்க-கலையைச்சாந்து, அகத்து-உள்ளிடத்து, உண்டென்று-இருக்கின்றதென்று, செப்பு-செப்பை, திறந்து-திறந்து, ஒருவன்-ஒருவன், அகத்து-உள்ளே, பாம்பு-பாம்பை, கண்டதுடைத்து-கண்டதுபோலும்—எ-று. * (இ-ம்) நன்மார்க்கமுண்டென்று நீசேசப்பட்டவரிடத்துத் தன்மார்க்கமுண்டாயிருந்தால் அதுபோல் ஒருவன் செம்பிதனுள்ளே சாத்துண்டென்று திறந்த பாம்பைக்கண்டதுபோலும் என்பதாம். ஒருவன்-எ, உடைத்து-ப, தன்மையை-செ, மன்-அசை, (அகத்தியச்சூத்திரம்) முற்பாமுதலடிக் செழுத்து மொழியிற்-பதின்மூன்று பன்னிரண்டும் பகர்வகரீற்றடிக் கெட்டு மேழுங் குற்றுகரமின்றியாம். (ச)

யாஅரொருவ ரொருவர்தம்முள்ளத்தைதத்
தேகுந்துணைமை யுடையவர்-சாரற்
கனமணிநின்றிமைக்கு நாடகேண்மக்கள்
மனம்வேறுசெய்கையும் வேறு.

இ-ள். சாரம்-மலைச்சாலிலே, கனம்-பொன்னும், மணி-அரத்நங்களும், நின்று-இருந்து, இமைக்கும் - பிரகாசிக்கும், நாட-நாட்டையுடைய பாண்டியனே, கேள்-கேட்பாயாக, மக்கள்-மனிதர்கள், மனம் - மனந்திலன்னுவதும், வேறு - வேறு, செய்கையும்-நடக்கையும், வேறு-வேறு, (ஆதலால்) ஒருவர்-ஒருவர், ஒருவர்தம்- மற்றொருவர்தம்முடைய, உள்ளத்தை-மனதை, தேரும்-அறியும், துணைமையுடையவர்-ஞானவிசேயுடையவர், யாவர்-யாவர்—எ-று. *(இ-ம்) பாண்டியனே ஒருவர்மனதை மற்றொருவரறியார் என்பதாம். உடையவர்-எ, யாவர்-ப. (எ)

உள்ளத்தானள்ளா துறுதித்தொழிலாய்க்
கள்ளத்தானட்டார் கழிகேண்மை-தெள்ளிப்
புனற்செதும்புநின்றலைக்கும் பூங்குறன்நாட
மனத்துக்கண்மாசாய் விடும்.

இ-ள். தெள்ளி-மணலைக்கொழித்து, புனல் - அருவிநீரானது, செதும்புநின்று-சேறுபொருந்தி, அலைக்கும் - ஒதுக்கும், பூ-அழகிய, குன்றம்-மலையையும், நாட-நாட்டையுமுடைய பாண்டியனே, உள்ளத்தால்-மனதால், தள்ளாது - சினேகியாது, உறுதித்தொழில

நாய்-பலம்பொருந்திய செய்கையையுடையராய், வள்ளத்தாசீ-வரு
கத்தாசீ, நட்பார்-சிநேகிதர்களாய், சுற்-பிரதி, சேவோய்-சே
கம், மனத்துங்கை-மனதினிடத்திலே, மாயம்பிரிய்-நற்றமாய்வை
ம—ன-ய. * (இ-ம்) பாலர்முடிவே யாவர்மேலதிலு உறவுசெய்யா
வருந்தமாக உறவுசெய்தல் மனதிடத்திலே நற்றமாம் என்பதாம்.
கேகயனை-ன, மாசாயம்பிரிட-ப,

(அ)

ஏவிய்பிலவாள்வாடன் வெஞ்சுரீசைபட்டக்கா
லோக்கமழிப்பதூடை மெய்யாகு-மாசீக
மிருவாமையுஞ்செய்று கடுநலனல்ல
வருமேமகவல்லாசீகட் டீவு.

இ-ள். ஏவிய-ஏவிய, ஏள்-ஏவிபொருந்திய, வாள்-தலைவாளா
யுதம், வாடன்-வெஞ்சுரீ-தன்சத்துருக்களின், சைனயில், பட்டாக்கால்-
ஸ்படப்பட்டால், உலக்கம்-மனத்தைநிபதீனத, அழிப்பதூடை - கெடு
ப்பதும், மெய்யாகுசீ-உண்மையாகும், சீக்கம்-நிலிகிளப்பலன், நி
ருவாமையும்-நிர்மானமுமாமையும், செயற்ற - தன்றுட்செய்த, கடு
நலன்-வருதீறநலனல், சல்லாசீகள்-நிலினையானிடத்து, நீவு-நிரே
நகு நீவுதல், நல்லாநகுமே-நல்லகாரியமே—ன-ய. *(இ-ம்) நிலினையா
டத்துச் சிரேகநிம்புதல் நல்லது என்பதாம். நீவு - எ, கருமம்-ப,
எ-தொ, (ரூப்ரை) வலித்தல்விட்டலல் ருலுக்கல்விரித்த லிறுதீத
நுமீவருஞ் செய்யுள்வெண்பிறி, நிலிவிதியால் ஒப்பிய என்றதற் ழ்ந்
பிபலென வலித்தலும் விகாரமாயிற்று.

(கூ)

மனைப்பாசசீகைவிடாய் மக்கட்செவ்வேறன்றி
யெனைத்தூழிவாழ்த்திடியா நெறுசே-யெனைத்தும்
நிலவாமையோமுன்று செய்நகன்றல்லா
லெல்லாபயனீருவில்லை யுயிர்சீருகு.

இ-ள். நெறுசே-மனதே, மனை-இல்லாழ்சீகையிலே, பாசம்-நே
சையை, வைவிடாய்-விட்டுவிடாய், மக்கட்செவ்வே-மக்களுடைகளே
றை, எறி-நிரம்பி, எனைத்தூழி-எவ்வளவுகாலம்,வாழ்திடினா-வாழ்வா
யோ, நிறுவாசா-நிலவிபாழுகாது, நுயிரிறும் - மடிதலும், செய்த-தான்
செய்த, நல்ல-நற்றப்பலனே, யல்லாசீ-அல்லாது, எல்லாபயனும்- எவ்வ
ளவுசீ, நடிசீக்கு-நம்முடியிசீக்கு, உறுபயன்-பிபருந்தியபலனே, நில்
லா-நிலியா—ன-ய. * (இ-ம்) மனதில் நம்முடியிசீக்குத் தருமத்தையன்
றிப் பலனிசீலை என்பதாம். உறுப்பயன் - எழுவாய், நில்லா-பயனி
லை, ன-ஒ-அசைகள்.

(ஙி)

நிலிலையச்சாசீ-மூசீதீதீறை
யீ-ன சிகரார்-பெ-சீரு ளாப்பயசீ-சாலை.
சாசீப்பயசீ-முசீதீ சீறை.

இரண்டாவது

பொருட்பால்.

அஃதாவது-பொருளிலக்கணமுடைய பகுப்பாம்.

இயல்-அதிகாரம்.

கல்வி.

அஃதாவது-கல்வியைப்பற்றிச் சொல்லியது.

குஞ்சியழகும் கொடுந்தாடைக்கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல-நெஞ்சத்து
நல்லம்யாமென்னு நடுவுநிலைமையாற்
கல்வியழகே யழகு.

இ-ள். குஞ்சி-மயிரினுடைய, அழகும்-அழகும், கொடும்-கொழுய, தாடை-யாடையினுடைய, கோடு-கன்னக்கோட்டினுடை, அழகும்-அழகும், மஞ்சள்-மஞ்சளினுடைய, அழகும்-அழகும், அழகல்ல-அழகல்லவாம், நெஞ்சத்து-மனதில், நடுவுநிலைமையால்-நடுநிலைமையால், நல்லம்-நன்மையுடையோம், யாமென்னும்-யாமென்று சொல்லும், கல்வி-வித்தையினுடைய, அழகே-அழகு, ஒருவர்க்கழகாகும்—எ-று. * (இ-ம்) ஒருவர்க்குக் கல்வியழகேயழகாகும், மற்றையழகுகள் அழகல்லவாம் என்பதாம். அழகு-எ, கல்வியழகு-ப, "ஒருவனென்ப துயரிருபாற்றுயிற்-பன்னமவிணைகொளும் பாங்கிற்றென்ப" இவ்விதியால் ஒருவனென்றது-ஆண்பாற்கும் பெண்பாற்குங்கொள்க, மஞ்சள்-பெண்பாற்கும், மஞ்சள்கலந்தசந்தனம், ஆண்பாற்குமாம், கல்வி-பெண்பாற்கும் வேண்டுமென்றதாயிற்று. (க)

இம்மைபயக்குமா லீயக்குறைவின்றுற்
றம்மைவிளக்குமாற் றுமுணராக்-கேடின்று
லெம்மையுலகத்தும் யாங்காணேங்கல்விபோன்
மம்மாறுக்கு மருந்து.

இ-ள். இம்மை-இப்பிறப்பில், பயக்கும்-பயன்கொடுக்கும், ஈய-பிறர்க்குக்கொடுக்க, குறைவின்றி-குறைதலின்றி, தம்மை-சற்றவர்தங்களை, விளக்கும்-விளங்கச்செய்யும், தாமுணரா-தாமறியாத, கேடின்று-கேடில்லை, எம்மையுலகத்தும்-எவ்வுலகத்தும், யாம்-நாம், கல்விபோல்-வித்தையைப்போல, மம்மர்-மயக்கத்தை, அறுக்கும்-தீர்க்கும், மருந்து-மருந்தை, காணேம்-கண்டறியோம்—எ-று. * (இ-ம்) கல்விக்கு மேலானதொன்றில்லை என்பதாம். யாம்-எ, காணேம்-ப, மருந்து-செ, ஆல் நான்கும் அசைகள். (உ)

களர்நிலத்துப்பிறந்த வுப்பினைச்சான்றோர்
விளைநிலத்துநெல்லி விழிதிதாக்-கொள்வர்

கடைநிலத்தோராயினுங் கற்றுணர்ந்தோரைத்
தலைநிலத்துவைக்கப் படும்.

இ-ள். கடைநிலத்து-உயர்நிலத்தில், பிறந்த-உண்டான, உப்பி னை-உப்பை, சான்றோர்-பெரியோர், விலை-விலைகின்ற, நிலத்து-வ யலிலத்துப்பிறந்த, நெல்லிற்-நெல்லைப்பார்க்கிலும், விழுமிதா-சி றப்பாக, கொள்வர்-கொள்வார்கள், (அதுபோல) கடை-கடையான, நிலத்தோராயினும்-சாதியிற்பிறந்தாராயினும், கற்றறிந்தோரை-கற் றுணர்ந்தவரை, தலைநிலத்து-முதன்மையான விடத்து, வைக்கப்படு மை-வைக்கத்தகும்—எ-று, ✻ (இ-ம்) தாழ்ந்தநிலத்திற் பிறந்தவுப்பை உயர்ந்த நிலத்திற்பிறந்த நெல்லினுஞ் சிறப்பாகக்கொள்வர் அது போலக் கீழ்குலத்தோராயினும் கற்றோரை நல்லிடத்து வைக்கத்த குஞ் ஏன்பதாம், சான்றோர்-எ, கொள்வர்-ப, (கூ)

வைப்புழிகோட்படா வாய்த்தியிற்கேடில்லை
மிக்கசிறப்பி னரசர்செறின்-வவ்வா
ரொச்சமெனவொருவன் மக்கட்குச்செய்வன
விச்சைமற்றல்ல பிற,

இ-ள். வைப்புழி-வைத்தவிடத்தில், கோட்பட்டா - பிறரால்கொ ள்ளப்படாத, வாய்த்து-பொருந்தி, தியில்-கொடுத்தால், கேடில்லை-குறைவில்லை, மிக்க-மிகுந்த, சிறப்பின்-சிறப்புடைய, அரசர்-அர சர்கள், செறின்-கோபித்தால், வவ்வார்-கவரார், (ஆகையால்) ஒருவ ன்-ஒருவன், மக்கட்கு-தன்புதல்வர்க்கு, எச்சமென - (தேடியிடும்) பிள்ளையென, செய்வன-செய்யத்தகுவன, விச்சை-கல்விகளே, பி றபிறவெல்லாம், அல்ல-தேடிவைக்கும் செல்வங்களல்ல—எ-று. ✻ (இ-ம்) ஒருவன் தன்பிள்ளைக்குத் தேடியிடும் பிள்ளையாகக் கல்வி யொன்றே கற்பிக்கவேண்டும் என்பதாம். விச்சை - எ, செய்வன- ப, மற்று-அசை, (சங்கையாப்புச் சூத்திரம்) [காய்முன்னேரும் வி ளமுன்னேரு-மாமுன்னிலையும் வருமெவ்வெள்ளாக்கை] இவ்விதியாற் றிலையறிக. (சு)

கல்விகடையில கற்பவர்நாள்சில
மெல்லநினைக்கிற் பிணிபல-தெள்ளிதி
னாய்ந்தமைவுடைய கற்பவேநீரொழியப்
பாலுண்குருகிற் றெரிந்து.

இ-ள். கல்வி-கல்விகள், கடையில்-அளவில், கற்பவர்-கற்பவர்க ளுக்கு, நாள்-வாழ்நாள்கள், சில-சிலவுள, மெல்ல-மெதுவாக, நினை க்கில்-ஆராய்ந்தால், பிணி-நோய்கள், பல-பலவுள, தெள்ளிதின்-தெளி வுள்ளவறிவால், ஆராய்ந்து-விசாரித்து, அமைவுடைய-நிறைவுடைய தால்களை, நீரொழிய-சலநீங்க, பால்-பாலை, உண்-உண்ணும், குருகில்-

அன்னல்போல,தெரிந்து-அறிந்து, கற்ப-(அறிவுடைபோர்கள்) கற் பர்கள்—எ-று. * (இ-ம்) அன்னம் நீரைநீக்கிப் பாலைக்கொள்ளுதல் போல அறிவுடையோர்கள் பொய்த்நூலைத்தள்ளி மெய்த்நூலைக்க ற்பார்கள் என்பதாம். அறிவுடையோர்கள்-தோன்றுவெழுவாய், க கற்ப-ப, அமைவுடைய-செ, எகாரம்-அசை. (ரு)

தோணிவியக்குவான் றொல்லைவருணத்துக்
காணிற்கடைப்பட்டா னென்றிகழார்-காணு
யவன்றுணையாவாறுபோ லற்றேநூல்கற்ற
மகன்றுணையாநல்ல கொளல்.

இ-ள். தொல்லை-பழைய, வருணத்து-சாதிகளுள், காணில்-ஆ ராயில், தோணி-தோணியை, இயக்குவான்-ஓட்டுவான், கடை-கீழ் ச்சாதியில், பட்டானென்று-பிறந்தவனென்று, இகழார் - இகழார்க ள், அவன்-அவனையே, துணையா-துணையாக, ஆறு-ஆற்றை, போய ற்றே-கடத்துபோவதுபோலும், காணுய்-பாராய், நூல்-நூல்களை, கற்றமகன்-கற்றவனிழிவானவனுயினும், துணையா - அவனை துணை யாக, நல்ல-நல்லநூலின, துபொருள்களை, கொளல் - (ஒருவன்) கற் றுக்கொள்ளல்வேண்டும்—எ-று. * (இ-ம்) ஒருவன் இழிந்தோனிடத் தும்கல்வியைக்கற்கவேண்டுமென்பதாம், ஒருவன்-தோன்றுவெழு வாய், கொளல்-ப, நல்ல-செ. (சு)

தவலருந்தொல்கேள்வித் தன்மையுடையா
ரிகலிலரொஃகுடையார் தம்முட்-குழீஇ
நகலினினிதாயிற் காண்பாமகல்வானத்
தும்பருறைவார் பதி.

இ-ள். தவலரும்-கெடுல்லாத, தொல்-பழைய, கேள்வி-கல்வி களால்வரும், தன்மை-குணங்களை, உடையார்- உடையவர்கள், இக விலர்-பகையில்லாதவர்கள், எஃகுடையார் - கூரியபுத்தியுடையார், தம்முள்-தங்களிடத்தில், குழீஇ-கூடியிருந்து, நகலின்-மகிழ்தலைப் பார்க்கிலும், அகல்-அகன்ற, மானத்து-வானத்தில், உம்பர் - தேவர் கள், உறை-வாசம்பண்ணும், வார்பதி-நெடும்பதி, இனிதாகில்-இனி தாயிற்றால், காண்பாம் - காணக்கடவோம்—எ-று, * (இ-ம்) அறிவு டையோரிடத்துக்கூடி மகிழ்தலைப்பார்க்கிலும் தேவருலக மினிதா யிருக்கு மாறுகாண்போம் என்பதாம், யகம்-எ, காண்பாம்-ப, ()

கனைகடற்றண்சேப்ப கற்றறிந்தார்கேண்மை
நனியிற்கரும்பு தின்றற்றே-நனிநீக்கித்
தூரிற்றின்றன்ன தகைத்தோபண்பிலா
வீரிலாளர் தொடர்பு.

இ-ள். கனை-சத்திக்கும், தண்-குளிர்ந்த, கடல்-கடலினது, சே ர்ப்ப-கரையையுடையபாண்டியனே, கற்றறிந்தார்-கற்றுணர்ந்தோ

ர்கள், கேண்மை-சிநேகமான து, கரும்பு-கரும்பை, நனிபில்-நனி, பிலிருந்து, நின்றற்று-நின்றுற்போலும், பண்பிலா-நற்குணமகளி வ்லாத, ஈரமிலாளர்-அன்பில்லாதவர்கள், தொடர்பு-சிநேகமாவை து, நனி-கரும்பினுனியை, நீக்கி-விட்டு, தூநில்- அடியிலிருந்து, நின் றன்ன-நின்றுற்போலும், தகைத்து-தன்மையையுடையது—எ-று. ※ (இ-ம்) கற்றோர்சிநேகங் கரும்பைநனியிலிருந்து நிற்றற்போ லும் மற்றோர்சிநேகம் கருப்பை அடியிலிருந்து நின்றுற்போலும் என்பதாம். கேண்மை-எ, நின்றற்று-ப, தொடர்பு-எ, தகைத்து-ப, எ-ஆரோ, அசைகள்.

(அ)

கல்லாரோயினும் கற்றாைச்சேர்ந்தொழுகி
னல்லறிவுநாளுந் தலைப்படுவர்-தொல்சிறப்பி
னெஞ்ஞான்றுபாதிரிப்பூச் சேர்தலாற்புத்தேடு
கண்ணிணீர்க்குத்தான்பயந் தாங்கு.

இ-ள். ஒள்-ஒள்ளிய, நிறம்-நிறமுடைய, பாதிரிப்பூ-பாதிரிப்பூ வின் : புத்தேடு-புதியமிழலையை, சேர்தலால்- அடைதலால், கண்ணீர்க்கு-சலத்திற்கு, தான்-வாசினைதான், பயந்தாங்கு-பயன்பட்டாற்போலும், கல்லாராயினும்-கற்றிலராயினும், கற்றவரை-கற்றவரை, சேர்ந்து-சார்ந்து, ஒழுகின்-நடப்பாராயின், தொல்-பழைய, சிறப்பின்-சிறப்புடைய, நல்-நல்ல, அறிவு-அறிவில், நாளும்-நாடோறும், தலைப்படுவர்-முதன்மையையடையவர்—எ-று. ※ (இ-ம்) பாதிரிப்பூக்களிதழ்களானவை தண்ணீர்க்குவாசந்தந்தாற்போலும் கல்லாதவருங்கற்றோரைச்சார்ந்தாலறிவின்முதன்மையையாவர்என்பதாம். ஒருவர்-எ, தலைப்படுவர்-ப, எ-அசை, பத்து-தடைக்குறைந்தகுபுநியீற்வா டுஎனவுரை கூறையாருஞ்சிலருளரிவர் முறைக்கமறிபார்போலும். (கூ)

அலகுசால்கற்பின னறிவுநூல்கல்லா
துலகநூலோதுவ தெல்லாங்-கலகல
கூஉந்துணையல்லாற் கொண்டுதடுமாற்றம்
போஒந்துணையறிவா ரில்.

இ-ள். அலகு-அளவு, சால்-மிக, கற்பின்-நூல்களைக்கற்றல், அறிவுநூல்-ஞானநூல்களை, கல்லாது-கற்காமல், உலகநூல்-உலகத்திற்குரியநூல்களை, ஓதுவதெல்லாம்-கற்பதெல்லாம், கலகல-கலகலவென் னுமோசையாம், கூஉந்துணை-கூவுமளவு, அல்லால்-அல்லது, தடுமாற்றம்-பிறவித்துன்பந்தவிட்டு, கொண்டு-நல்வழியைக்கொண்டு, போஒந்துணை-போகுமளவை, அறிவார்-அறியவல்லவர், இல்-இல்லை—எ-று. ※ (இ-ம்) ஞானத்திற்குரியநூல்களைக்கற்காமல் உலகத்திற்குரியநூல்களைக்கற்குகல்வியைஎன்பதாம். அறிவார்-எ, இல்-ப()

கல்வி - முற்றிற்று.

குடிப்பிறப்பு.

அஃதாவது-நற்குடியிற் பிறத்தலாம்.

உடுக்கையுலறி யுடம்பழிந்தக்கண் ணூங்
குடிப்பிறப்பாளர்தங் கொள்கையிற்-குன்று
மிடுக்கண்டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற்கறிக்குமோ மற்று.

இ-ள். குடிப்பிறப்பாளர் - நற்குலத்திற்பிறந்தோர், உடுக்கை-ஆடை, உலறி-கெட்டு, உடம்பு - உடலானது, அழிந்தக்கண்ணும்-அழிந்தாலும், தம்-தங்களுடைய, கொள்கையில்-நன்னடக்கையில், குன்றார்-குறைவுபடார், அரிமா-சிங்கமானது, இடுக்கண் - (பசித்) துன்பம், தலைவந்தக்கண்ணும்-முதன்மையாகவந்தாலும், கொடிப்புல்-கொழுகளையுடையபுல்லை, தறிக்குமோ-தின்னுமோ—என்று. ※ (இ-ம்) நற்குடியிற்பிறந்தார் துன்பம்வந்தாலும் நன்னடக்கையிற் குறையார், சிங்கம் பசித்தாலும் புல்லைத்தின்னாது என்பதாம். குடிப்பிறப்பாளர்-எ, குன்றார்-ப, மற்று-அசை. (உ)

சான்றாண்மைசால வொழுக்கமிவைமூன்றும்
வான்றோய்குடிப்பிறந்தார்க் கல்லது-வான்றோயு
மைதவழ்வெற்பனா அபெருஞ்செல்வ
மெய்தியகண்ணும் பிறர்க்கு.

இ-ள். வான்-ஆகாயத்தை, தோயும்-அளாவும், மை-மேகம், தவழ்-தவழும், வெற்ப-மலையையுடையபாண்டியனே, சான்றாண்மை-பெருந்தன்மை, சால்-மேன்மை, ஒழுக்கம்-நன்னடக்கை, இவை மூன்றும்-இம்முக்குணங்களும், வான்-பெருமை, தோய்-நிறைந்த, குடிப்பிறந்தார்க்கு-நற்குடியிற்பிறந்தார்க்கு, அல்லது-அல்லாமல், பிறர்க்கு-நற்குடியிற்பிறவாதார்க்கு, பெருஞ்செல்வம்- பெரியசெல்வம், எய்தியக்கண்ணும்-வந்தாலும், படாஅ-அம்முக்குணங்களுண்டாகாவாம்—என்று ※ (இ-ம்) பாண்டியனே பெருந்தன்மை மேன்மை நன்னடக்கை இவை நற்குடியிற் பிறந்தார்க்கல்லது அக்குடியிற் பிறவாதாருக்கில்லை என்பதாம். இவை-எ, படாஅ-ப. (ஊ)

இருக்கையெழலு மெதிர்செலவுமேவல்
விடுப்பவெழிதலோ டின்ன-குடிப்பிறந்தார்
குன்றுவொழுக்கமாக் கொண்டார்கயவரோ
டொன்றுவுணரற்பாற் றன்று.

இ-ள். குடிப்பிறந்தார் - நற்குடியிற்பிறந்தார், இருக்கையெழலும் - (பெரியோரைச்சண்டி) இருக்குமிடம்விட்டெழுதலும், எதிர்செலவும்-எதிராகப்போதலும், ஏவல-இவைநீங்க, விடுப்ப-வழிவிட

நலும், ஒழிதல் - நீங்கலும், ஒடு-இவற்றுடன், இன்ன -இவைபோல் வன உபசாரங்களை, குன்றுகுறைபடாத, ஒழுக்கமா - நன்னடக்கை யாக, கொண்டார்-கொண்டார்கள், கயவரோடு-கீழ்மக்களோடு, ஒன்று-அச்சுணங்கள் பொருந்தாவாம், உணர்ப்பாற்று-அறியுந்தன்மை, அன்ற-கீழோர்க்கல்ல—எ-று. ※ (இ-ள்) நற்குடியிற்பிறந்தோர் ஆசாரவுபசாரங்களையிடார், அக்குடியிற்பிறவாதார்க்கு ஆசாரவுபசாரங்களில்லை என்பதாம். குடிப்பிறந்தார்-எ, கொண்டார்-ப, (ங்)

நல்லவைசெய்யி னிபம்பாகுந்தீயவை
பல்லவர்தூற்றும் பழியாகு-மெல்லா
முணருங்குடிப்பிறப்பி னூதியமென்றே
புணருமொருவர்க் கெனின்.

இ-ள். நல்லவை-நன்மைகளை, செயின்-செய்தால், இயல்பாகும்-இயற்கையாகும், தீயவை-தீவன்பங்களைச்செய்தால், பல்லவர்-பலரும், தூற்றும்-தூற்றத்தக்க, பழியாகும்-பழிப்பாகும், எல்லாம்-நற்குணமெல்லாம், உணரும்-அறியும், குடிப்பிறப்பு-நற்குடிப்பிறப்பு, ஒருவர்க்கு-ஒருவருக்கு, இன்-இனிதாக, புணருமெனின்-கூடுமானால், ஊதியமென்-நிதி விலாப லாபமாகு—எ-று ※ (இ-ம்) ஒருவருக்கு நற்குடிப்பிறப்புப் பொருந்துமாகு விதைவிடலாபமென்ன என்பதாம். ஊதியம்-எ, என்-ப, ஓ-அசை. (ச)

கல்லாமையச்சம் கயவர்தொழிலச்சம்
சொல்லாமையுள்ளுமோர் சோர்வச்ச-மெல்லா
மிரப்பார்க்கொன்றீயாமை யச்சமரத்தாரிம்
மாணாக்குடிப்பிறந் தார்.

இ-ள். கல்லாமை-கற்காதிருக்கை, அச்சம்-அச்சம், கயவர்-கீழ்மக்கள், தொழில்-தொழில்செய்தல், அச்சம்-அச்சம், சொல்லாமையுள்ளும்-பொய்சொல்லாமையிடத்தும், ஓர்-ஒரு, சோர்வு-சொற்சோர்வுபடல், அச்சம்-அச்சம், எல்லாம்-யாவும், இரப்பார்க்கு-யாசிப்பவர்க்கு, ஒன்று-ஒருபொருள், ஈயாமை-கொடாமை, அச்சம்-அச்சம், (ஆதலால்) இம்மாணாக்குடி-பெருமையில்லாத இக்குடியிற்பிறந்தார், மரத்தார்-மாந்தோடொத்தவர்—எ-று. ※ (இ-ம்) கல்லாமையும் இழிதொழிலும் சொற்சோர்வும் ஈயாமையும் உடையவர்கள் மரத்திற்கு ஒப்பானவர் என்பதாம். குடிப்பிறந்தார்-எ, மரத்தார்-ப. ()

இனநன்மையின்சொ லொன்றீதன்மற்றேனை
மனநன்மையென்றிவை யெல்லாங்-கனமணி
முத்தோடிமைக்கு முழங்குவரித்தன்சேர்ப்ப
விற்பிறந்தார்கண்ணே யுள.

இ-ள். கனம்-பொன்னையும், மணி-இரத்தினங்களையும், முத்தோடு-முத்துகளுடன், இமைக்கும்-பிரகாசிக்கச்செய்யும், முழங்கு-ச

கறிக்கின்ற, கண்-குளிர்ந்த, உவரி-கடலையும், சேர்ப்ப-கழியையுமுடையபாண்டியனே, இனநன்மை - இனநன்மையும், இன்சொல்-இனியசொற்களும், ஒன்று-ஒருபொருளோ, ஈதல்-கொடுத்தலும், எஞ்ஞை-ஏழிந்த, மனநன்மை-மனத்தினன்மையும், என்றிவையெல்லாம் - என்றுமிவைகளெல்லாம், குடிப்பிறந்தார் - நற்குடியிற்பிறந்தார், கண்ணே-இடத்தே, உள-இருக்கின்றன—எ-று. * (இ-ம்) பாண்டியனே நல்லினம் நற்சொல்-முதல நன்மனம்-இவைகளெல்லாம் குடிப்பிறந்தார்க்கேவுளவாம் என்பதாம். எல்லாம்-எ, உள-ப, மரபு-அசை. (க)

செய்கையழித்து சிதன்மண்டிற்றுயிறும்
பெய்யாவொருசிறை பேரி-லுடைத்தாகு
மெவ்வமுழத்தக் கடைத்தும்குடிப்பிறந்தார்
செய்வர்செயற்பா லலை.

இ-ள். செய்கை-செய்கைகள், அழித்து-கெட்டு, சிதல்-கறையான், மண்டிற்றுயிறு-பற்றியதாயிறும், பெய்யா-ஒழுகாத, ஒருசிறை-ஓரிடமுள்ள, பேரில்-பெரியவீடு, உடைத்தாகும்-உண்டாயிருக்கும், (அதுபோல) எவ்வம்-துன்பம், உழத்தக்கடைத்தும்-வருந்தினாலும், குடிப்பிறந்தார்- நற்குடியிற்பிறந்தோர், செயற்பாலவை-செய்யத்தக்கவைகளை, செய்வர்-செய்வார்கள்—எ-று. * (இ-ம்) நற்குடியிற்பிறந்தோர் துன்பத்தால் வருந்தினாலுஞ் செய்யத்தக்க தருமங்களைச்செய்வர் என்பதாம். குடிப்பிறந்தார்-எ, செய்வர்-ப, செயற்பால்வை-செ. (ஏ)

ஒருபுடைபாம்பு கொளினுமொருபுடை
யங்கண்மாஞாலம் விளக்குறூஉந்-திங்கள்போற்
செல்லாமைசெல்வனேர் நிற்பினுமொப்புரவிற்
கொல்கார்குடிப்பிறந் தார்.

இ-ள். ஒருபுடை-ஒருபக்கம், பாம்பு-பாம்பு, கொளினும்-பற்றிக்கொள்ளினும், ஒருபுடை-ஒருபக்கம், அம்-அழகிய, கண்-இடமகன்ற, மா-பெரிய, ஞாலம்-பூமியை, விளக்குறூஉம்-விளக்கும், திங்கள்போல்-சந்திரன்போல, குடிப்பிறந்தார்-நற்குடியிற்பிறந்தார், செல்லாமை-வறுமை, செல்வனேர்-செல்வமுடையாக, நிற்பினும்-நின்றாலும், ஒப்புரவிற்கு - தருமஞ்செய்தற்கு, ஒல்கார்-தளரார்—எ-று. * (இ-ம்) நற்குடியிற்பிறந்தார் வறுமையடைந்தாலும் தருமஞ்செய்தற்குத் தளரார் என்பதாம். குடிப்பிறந்தார்-எ, ஒல்கார்-ப. (அ)


செல்லாவிடத்துங் குடிப்பிறந்தார்செய்வன
செல்லிடத்துஞ்செய்வார்சிறியவர்-புல்லாய்
பருமம்பொறுப்பினும் பாய்பரியாபோற்
பொருமுரணற்றதன் றே.

இ-ள். குடிப்பிறந்தார் - நற்குடியிற்பிறந்தார், செல்லாவிடத்தும்-வறுமையிடத்தும், செய்வன-செய்தருமங்களை, சிறியவர்-கீழ்மக்கள், செல்விடத்தும்-செல்வமுள்ளவிடத்தும், செய்யார்-செய்யார்கள், புல்வாய்-கலைமான், பருமம் - கல்லணையை, பொறுப்பினும்-சுமந்தாலும், பாய் - பாயும், பரிமாபோல - குதிரையைப்போல, பொருட்-தாக்கும், முரண்-சண்டையை, ஆற்றுதல்-செய்தல், இன்று-இல்லை—எ-று. * (இ-ம்) மேன்மக்கள் வறுமையிடத்துஞ் செய்தருமங்களைக் கீழ்மக்கள் செல்வத்திடத்துஞ்செய்யார்கள் என்பதாம். சிறியவர்-எ, செய்யார்-ப. (கூ)

எற்றென்றுமில்லா விடத்துங்குடிப்பிறந்தா
ரற்றுத்தற்சேர்ந்தாக் கசைவிடத்-தூற்றுவ
ரற்றக்கடைத்தும் மகல்யாறதஞ்சந்தக்காற்
றெற்றெனத்தெண்ணீர் படும்.

இ-ள். அகல்-அகன்ற, ஆறு - ஆறானது, அற்றக்கடைத்தும்-நீர்வற்றினாலும், அகஞ்சந்தக்கால்-தோண்டினால், தெற்றென - அலைப்போடு, தெண்ணீர்-தெளிந்தநீர், படும்-தரும், (அதுபோல) குடிப்பிறந்தார்-நற்குடியிற்பிறந்தார், எற்றென்றும்-யாதொன்றும், இல்லாவிடத்தும்-இல்லாதிருந்தும், அற்று - பொருளிழந்து, தற்சேர்ந்தார்க்கும்- தம்மையடுத்தார்க்கு, அசைவிடத்து - தளர்ந்தவிடத்து, ஊற்றுவர்-உதவியாவார்—ற்-று. * (இ-ம்) நற்குடியிற்பிறந்தார் வறுமையிலும் தம்மையடுத்தவர்க் குதவிசெய்வார்கள் என்பதாம். குடிப்பிறந்தார்-எ, ஊற்றுவர்-ப. (ங)

குடிப்பிறப்பு-முற்றிற்று.



ஙசு-ம்-அதிகாரம்.

மேன்மக்கள்.

அஃதாவது-மேன்மக்கள் தன்மையைச் சொல்லுதலாம்.

அங்கண்விசும்பி னகனிலாப்பாரித்தூங்
கிங்களுஞ்சான்றோரு மொப்பர்-மற்றிங்கண்
மறிவாற்றுஞ்சான்றோ ரஃதாற்றார்தெருமருந்து
தேய்வரொருமா சுறின்.

இ-ள். அங்-அழகிய, கண்-இடமகன்ற, விசும்பின்-ஆகாயத்தின், அகல்-விரிவான, நிலா-கிரணங்களை, பாரிக்கும்-பரப்புமிடத்து, இங்களும்-சந்திரனும், சான்றோரும்-பெரியோர்களும், ஒப்பர் -தம்மிலொப்பாவார், இங்கள்-சந்திரன், மற-களங்கத்தை, ஆற்றும்-பொறுத்துக்கொள்வான், சான்றோர்-பெரியோர்கள், அஃது-அக்களங்கத்தை, ஆற்றார்

பொறுத்துக்கொள்ளார், ஒரு-தமக்கொரு, மாசு-குற்றம், உறின்-வந்தால், தெருமருத்து-மயக்கமடைந்து, தெய்வர்-மாய்வர்—எ-று. ※ (இ-ம்) சந்திரன் களங்கத்தைச் சுமக்கிறானும் பெரியோர்கள் அக்களங்கத்தைச்சகியார் என்பதாம். சான்றோர்-எ, தெய்வர்-ப, முன்-அசை (நன்னூல்) [நிலைபால்பொருள்பலன்ரஷ்ஷின்சிறப்பினு, மிகவினுமிழியினு மொருமுடிபினவே] இவ்விதியால் சந்திரனுகிய அஃறிணை உயர்திணை முடிபேற்றது. (௪)

இசையுமெனினு மிசையாதெனினும்
வசைநீரவெண்ணுவர்சான்றோர்-விசையி
னரிமாவுளங்கிழித்த வம்பினிற்றீதோ
வுரிமாப்பிழைப்பெய்த கோல்.

இ-ள். இசையுமெனினும்-கூடுமாகிலும், இசையாதெனினும்-கூடாதாகிலும், வசை-குற்றம், நீர-நீங்க, எண்ணுவர்-நினைப்பார்கள், சான்றோர்-பெரியோர்கள், விசையின்-வேகத்தால், அரிமா-அரிமை, உளம்-நெஞ்சம், கிழித்த-பிளந்த, அம்பினில்-கணையைப்பார்க்கிலும், அரிமா-சிங்கத்தை, பிழைப்பு-பிழைக்க, எய்த-தொடுத்த, கோல்-கணையான தை, தீதோ-பொல்லாதோ?—எ-று. ※ (இ-ம்) பெரியோர்கள் பிறராற் பொருள்கிடைத்தாலும் கிடையாவிட்டாலும் குற்றம் நினைப்பார்கள் என்பதாம். சான்றோர்-எ, எண்ணுவர்-ப, நரிமேலெய்த அம்பிலும் அரிமேலெய்த அம்பு வுயர்வு. (௫)

நாம்பெழுத்துநல்கூர்ந்தாராயினுஞ்சான்றோர்
குரம்பெழுத்துங்குற்றங் கொண்டேறு-ருரம்கவறு
வுள்ளமெனுநாரிறற் கட்டியுளவனையாம்
செய்வர்செயற்பாலவை.

இ-ள். சான்றோர்-பெரியோர்கள், நாம்பு-நாம்புகள், எழுத்து-தோன்றி, நல்கூர்ந்தாராயினும்-வறுமைப்பட்டாராயினும், குரம்பு-வரம்பு, எழுத்து-கட்டந்து, குற்றங்கொண்டு-குற்றத்தைக்கொண்டு, ஏறுர்-(யாக்கச்) சொல்லார், ஆம்-அறிவே, கவறு-கவறுகொண்டு, உள்ளமெனும்-முயற்சியென்கிற, நாரிறல்-நாரால், கட்டி-மனைதைக்கட்டி, உளவனையால்-தமக்குள்ளபொருளளவால், செயற்பாலவை-செய்யத்தக்கதருமங்களை, செய்வர்-செய்வார்கள்—எ-று. ※ (இ-ம்) பெரியோர்கள் வறுமையடைந்தாலும் யாசிக்கார்கள் உள்ளமட்டுந் தருமஞ்செய்வார்கள் என்பதாம். சான்றோர்-எ, செய்வர்-ப, செயற்பாலவை-செ, கவறு என்றது-திருபிளவாகிய பனையின் அடிமட்டை இம்மட்டை மரத்தைக் கவியப்பற்றியதுபோல, மனதை அறிவு கவியப்பற்றுதலாம். (௬)

செல்வழிகண்டெறுழ்நாட் காணினுஞ்சான்றவர்
தொல்வழிக்கேண்மையிற்றேறுன்றப்-புரிந்தியாப்பர்

நல்வரைநாட சிலநாளடிப்பழற்
கல்வரையுமுண்டா நெறி.

இ-ள். நல்-நல்ல, வரை-மலைபோன்ற, நாட-நாட்டையுமுடைய பாண்டியனே, செல்-போகின்ற, வழிக்கண்-வழியிடத்து, ஒருநாள்-(ஒருவரை) ஒருநாள், காணினும்-கண்டாலும், சான்றவர்-பெரியோர்கள், தொல்-பழைய, வழியில்-வந்த, கேண்மையில்-உறவைப்போலவு, தோன்ற-விளங்க, புரிந்து-விரும்பி, இயாப்பர்-சிநேகஞ்செய்வர், கல்வரையும்-கன்மலையும், சிலநாள்-சிலகாலம், அழப்பழல்-சரழப்பட்டால், நெறி-வழி, உண்டாம்-உண்டாகும்—எ-று. ※ (இ-ம்) பாண்டியனே பெரியோர்கள் புதியவரைக்கண்டாலும் பழையவரைப்போலவே சிநேகஞ்செய்வர் என்பதாம். சான்றர்-ஏ, யாப்பர்-ப, (நன்னூல்) [இணைந்நிலல்காலையரலக்கிரசமும், மவ்வக்ககரமுநகாக்குகாமும், மிகைவருமிரவ்வழியவ்வுமாம்பிற, இவ்விதியால் யாப்பர் இயாப்பனென்றுயிற்று.] (ச)

புல்லாவெழுத்திற் பொருளில்வருங்கோட்டி
கல்லாவொருவ னுரைப்பவுங்-கண்ணுறுதி
நல்லார்வருந்தியுஞ் சேட்படோமற்றவன்
பல்லாருணாணல் பரிந்து.

இ-ள். புல்லா-இலக்கணம்பொருந்தாத, எழுத்தில்-எழுத்தினையுடைய, பொருளில்-பொருளறிவில்லாத, வரும்-வீணரிய, கோட்டி-சபையில், கல்லாவொருவன்-கற்காதவொருவன், உரைப்பவும்-ஒன்றுரச்சொல்லவும், நல்லார்-மேன்மக்கள், கண்ணுறுதி-நாட்சணியங்கொண்டு, வருந்தியும்-வருத்தமடைந்தும், அவன்-அவ்வறிவிலான், பல்லாருள்-பலர்முன், நாணல்-நாணுதற்கு, பரிந்து-இரங்கி, கேட்பர்-கேட்பார்கள்—எ-று. ※ (இ-ம்) பெரியோர்கள் கல்லார்சபையில் விவேகசூனியனென்றைதச்சொல்லினும் அவனுணர்தலுக்குரங்கிக்கேட்பார்என்பதாம். நல்லார்-எ, கேட்பர்-ப, எ-மற்று-ஆசைகள்.

கடிந்துக்கருப்பினைக் கண்டகரநூறி
யிடிந்துநீர்கொள்ளினு மின்சுவைத்தே-யாகும்
வடுப்படவைகிறந்தக் கண்ணுங்குடிப்பிறந்தார்
கூறுந்தம்வாயிற் சிதைந்து.

இ-ள். கருப்பினை-கருப்பை, கடிந்து-தரித்து, கண்-கண்ணுகள், தகா-உடைய, நூறி-நெறித்து, இடிந்து-(ஆலையில்) ஆடி, நீர்-இரசத்தை, கொள்ளினும்-கொண்டாலும், (அக்கருப்பு) இன்-இனிய, சுவைத்தே-மதுரமுடையதே, ஆகும்-ஆம், (அதுபோல) வடுப்படகுற்றமுண்டாக, வைகு-ஒருவர்வைத்து, இறந்தக்கண்ணும்-போனாலும், குடிப்பிறந்தார்-நற்குடியிற்பிறந்தார், தம்-தம்முடைய, வாயில்-வாயினுலே, சிதைந்து-சிதைய, கூறார்-சொல்லார்—எ-று. ※

(இ-ம்) சரும்பைவருத்தினும் இனியசாற்றைக்கொடுக்கும்அதுபோல ஒருவர்வைதாலும் நற்குடியிற்பிறந்தார் கூடவையமாட்டார் என்பதாம், குடிப்பிறத்தார்-எ, கூறார்-ப. (கூ)

கள்ளார்கள்ளுண்ணுரீர் கடிவகடிந்தொரீஇ
யெள்ளிப்பிறனை யிகழ்ந்துரையார்-தள்ளியும்
வாயிற்பொய்கூறார் வயிவறுகாட்சியார்
சாயிற்பரிவ நிலர்.

இ-ள். வடு-குற்றம், அறு-அற்ற, காட்சியார்-அறிவுடையார், கள்ளார்-திருடார், கள்ளுண்ணுரர்-கள்ளைக்குடியார், கடிவ-நீக்கத்தக்கவைகளை, கடிந்து-நீக்கி, ஒரீஇ-நீமையினீங்கி, பிறனை-அயலானை, எள்ளி-அவமதித்து, இகழ்ந்து-நிந்தித்து, உரையார்-சொல்லார், தள்ளியும்-தவறியும், வாயில்-வாயால், பொய்கூறார்-பொய்சொல்லார், சாயில்-துன்பம்வந்தால், பரிவதிலர்-விசனப்படார்—எ-று. *(இ-ம்) மேன்மக்கள் திருடார் கள்ளுண்ணுரர் பிறனையிகழார் பொய்சொல்லார் வறுமைவந்தால் விசனப்படார் என்பதாம். காட்சியார்-எ, பரிவதிலர்-ப. (எ)

பிறர்மறையின்கட் செவிடாய்த்திறனறிந்
தேதிலாரிற்கட் குருடாய்த்-நிய
புறங்கூற்றின்மூகையாய் நிற்பானேல்யாது
மறங்கூறவேண்டா வவற்கு.

இ-ள். பிறர்-அயலாருடைய, மறையின்கண்-இரகசியச்சொல்லிடத்து, செவிடாய்-செவிடனாகவும், திறமறிந்து-நல்லொழுக்கத்திறமறிந்து, ஏதிலார்-அயலாருடைய, இல்-மனையாள், கண்-இடத்து, குருடனாய்-குருடனாகவும், நீய-கொடிய, புறங்கூற்றின்-பொறுமைச்சொல்லிடத்து, மூகையாய்-ஊமையனாகவும், நிற்பானேல்-இருப்பானாயின், அவற்கு-அவனுக்கும், யாதும்-யாதொரு, அறம்-தருமமும், கூறவேண்டா-சொல்லவேண்டா—எ-று.*(இ-ம்) பிறரகசியத்திற் செவிடனாகவும், பிறமனையாளிடத்துக் குருடனாகவும், பொறுமை சொல்வோனிடத்து ஊமையனாகவும், ஒருவனிருந்தானால் அவனுக்கிதுவே பெரியதருமம் என்பதாம். ஒருவன்-எழுவாய், கூறவேண்டா-பயனிலை. (அ)

பன்னாளுஞ்சென்றக்காற் பண்பிலார்தம்மூழை
யென்னானும்வேண்டுப வென்றிகழ்ப-வென்னானும்
வேண்டினநன்றுமற் றென்றவிழுமியோர்
காண்டோறஞ்செய்வர் சிறப்பு.

இ-ள். பண்பிலார்-நற்குணமில்லார், தம்மூழை-தம்மிடத்து, பன்னாளும், பலநாளும், சென்றக்கால்-சென்றால், என்னானும்-யாதாகிலும், வேண்டுப-வேண்டுவார்கள், என்று-என்றுசொல்லி, இக

ழ்ப-இழிவார்கள், விழுமியோர்-மேன்மக்கள், என்றுஞும்-யாதா னிலும், வேண்டிஞும்-வேண்டினாலும், நன்று-நல்லது, என்று-என் றசொல்லி, காண்டோறும்-காணுந்தோறும், சிறப்பு-சிறப்பை, செ ய்வர்-செய்வார்கள்—எ-று. * (இ-ம்) கீழ்மக்கள் தம்களிடத்து ஒரு வர்வந்தா லியார்தாவதொன்றைத் கேட்பரீகளென்றிகழ்வார்கள் மே ன்மக்கள் தங்களிடத்து வந்தவருக்குந் காணுந்தோறுந் சிறப்புச் செய்வார்கள் என்பதாம். பண்பிலார்-எ, இகழ்ப-ப, விழுமியோர் க்; செய்வர்-ப, சிறப்பினை-செ, பற்று-அசை. (கூ)

உடையாரிவரொன் றுரைநலையாப்பற்றிக்
கடையாயார்பின்சென்று வாழ்வ-ருடைய
பிலத்தலைப்பட்டது போலாதேநல்ல
குலத்தலைப்பட்ட விடத்து.

இ-ள். உடையார்-செல்வமுள்ளவர், இவரொன்று-இவர்களென் ற, ஒருதலையர்-ஒருதுணிவாக, பற்றி-பிடித்து, கடையாயார்-கீழ்ம கள், பின்சென்று-பின்போய், வாழ்வர்-சிலர்வாழ்வார்கள், நல்ல-ந ன்மை, குலம்-குலத்திற்பிறந்தாரை, தலைப்பட்ட-முதன்மையாகச்சேர ப்பட்ட, விடத்து-இடத்திலே, உடைய-எல்லாப்பொருளுமுடைய, பிலம்-குகையை, தலைப்பட்டதுபோலாதே-தலைப்பட்டதுபோலு ம்லலவோ—எ-று. * (இ-ள்) கீழ்மக்கள் பின்சென்று சிலர் வாழ்ந்தி ருப்பர், மேன்மக்களைச்சேர்தல் எப்பொருளுமுள்ளகுகை அகப் பட்டதுபோலும் என்பதாம். சிலர்-தானறுவெழுவாய், வாழ்வர்-பயனிலை. (ஙி)

மேன்மக்கள்-முற்றிற்று.

ஙெ-ம்-அதிகாரம்.

பெரியாளைப்பிழையாமை.

அஃதாவது-பெரியோர்களைப் பிழைசெல்லாமையாம்.

பொறுப்பவொண்ணிப் புனைநீர்ந்தார்மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்-வெறுத்தபி
னூர்க்குமருவி யணிமலைநன்னாட
பேர்க்குதல்யார்க்கு மரிது,

இ-ள். ஆர்க்கும்-சத்திக்கும், அருவி-வையையாற்றையும், அ ணி-அழகிய, மலை-பொதியமலையையும், நல்-நல்ல, நாட-நாட்டையு முடையபாண்டியனே, பொறுப்பவொன்று-குற்றம்பொறுப்பாவொ ன்று, எண்ணி-நினைத்து, புனைநீர்ந்தார்-குற்றமற்றவர், மாட்டும்-இ டத்தும், வெறுப்பன-வெறுக்கத்தக்கனவாக, செய்யாமைவேண் டும்-செய்யாதிருக்கவேண்டும், வெறுத்தபின்-வெறுத்தபின்பு, பே

கீருதல்(அவர்கோபத்தை)நீக்கல்,வாரிக்கும்-வாவருக்கும், அரிது-அருமை—எ-று. * (இ-ம்)பாண்டியனே-குற்றமற்றவரிடத்தும்-குற்றஞ்செய்யாதிருப்பாயாக அவர்க்கோபத்தைநீக்குதல் வீர்க்குமரிது என்பதாம்—பேர்க்குதல்-எழுவாய், அரிது-பயனிலை. (க)

பொன்னைகொடுத்தும் புணர்தற்கரியாரை
கொன்னைதலைக்கூடப் பெற்றிருந்து-மன்னே
பயனில்பொழுதாக் கழிப்பரோநல்ல
நயமிலறிவினவர்.

இ-ள். பொன்-பொன்னை, கொடுத்தும்-ஈந்தும், புணர்தற்குச்சேர்தற்கு, அரியாரை-அரியபெரியோரை, கொன்-பயனில்லாமல், தலைக்கூட-வந்துபொருந்த, பெற்றிருந்தும்-பெற்றும், அன்னே-ஐயோ, நல்ல-நல்ல, நயமில்-நன்மையில்லாத, அறிவினர்-அறிவுடையார், பயனில்-பிரயோசனமில்லாத, பொழுதா-காலமாக, கழிப்பர்-போக்குவர்—எ-று. * (இ-ம்) அறிவிலார்-அறிவுடையாரைப்பெற்றிருந்தும், வீண்காலங்கழிப்பர் என்பதாம். நயனிலறிவினவர்-எ, பழிப்பர்-ப, எ-மூன்றும்-அசைகள். (உ)

அவமதிப்புமான்ற மதிப்புமிரண்டு
மிகைமக்களாண்மதிக் கற்பால-நயமுணராக்
கையரிமாக்க ளிழிப்புமெய்தெத்தும்
வையர்வழுத்த நூலார்.

இ-ள். அவமதிப்பும்-இகழ்வாகமதித்தலும், ஆன்றமதிப்பும்-புகழ்வாகமதித்தாலும், இரண்டும்-இவ்விரண்டும், மிகைமக்களால்-மேன்மக்களால், மதிக்கற்பால-மதிக்கத்தக்கனவல்ல, நயம்-நீதியை-உணரா-அறிபாதகர்-ஒழுக்கத்தை, அறியா-தெரியாத, மாக்கள்-மனிதர்கள், இழிப்பும்-பழிப்பும், எடுத்து-எடுத்து, எத்தும்-புகழ்தலும், வழுத்தநூல்லார்-ஆராய்ந்தநூலறிவுள்ளார், வையார்-மனதில்வையார்-எ-று. * (இ-ம்) ஒருவனாலிகழ்தலும் புகழ்தலும் பெரியோர்க்கில்லை பிரிகழினும் அவர்க்கு மனக்குறையில்லை என்பதாம். *(இலக்கணத்திரட்டு) [எதிர்மன்றப்பெய பொச்சத்திசைவலியியல்பு - மீறுகெடுங்காண்மிகுதலுமியல்பாம்]இவ்விதியால் உணராத-என்னும், எதிர்மறைப்பெயரொச்சம், நூல்கெட்டு-ஒற்றுமிக்கநூலார்-எ-வையார்-ப. (ஊ)

விரிநிறநாகம் வீருளதேறு
முடுமின்கடுஞ்சினஞ் சேணின்று-முட்கு
மருமையுடைய வாண்சேர்த்துமுய்யார்
பெருமையுடையார் செறின்,

இ-ள். விரி-பிக்க, நிறம்-நிறமுள்ள, நாக்கம்-பாம்பான தது, விடர்-கற்பிளப்பில், உளதேறும்-உள்ளதாலும், உருமின்-இடியின், கடுமுக்-கடிய, சினம்-உக்கிரம், சேணின்றும்-ஆகாயத்திருந்தும், உட்கு

ம்-பாம்பைப்போல (அதுபோல) பெருமையுடையார் - பெரியோர்கள், சினின - கோபித்தால், அருமையுடைய-அரிய, அரண்சேர்த்தும்-கோட்டையைச்சேர்த்தும், உய்யார்- (பகைவர்) பிழையார்—எ-று. * (இ-ம்) பாம்புபிளப்புள்ளிருப்பினும்-இடிகண்டஞ்சும், அதுபோல-பகைவர் பெரியோர்கோபிக்கில் கோட்டையைச்சார்த்தும், பிழையார் என்பதாம். * பகைவர்-தொன்று எழுவாய், உய்யார்-ப.(ச)

எம்மையறிந்திலி ரம்போல்வாரில்லென்று
தம்மைத்தாங்கொள்வது கோளன்று-தம்மை
யரியாரோக்கி யறனறியுஞ்சான்றோர்
பெரியராகக்கொள்வது கோள்.

இ-ள். எம்மை-எங்களை, அறிந்திலிர்-அறியீர், எம்போல்வார்-எங்களைநிகர்த்தவர், இல்லென்று-இல்லையென்று, தம்மைத்தாம்-தங்களைத்தாமே, கொள்வது-உயர்த்திக்கொள்வது, கோளன்று - கொள்கையன்று, தம்மை-தங்களை, அரியரா-எளியராக, நோக்கி-பார்த்து, அறன்-தருமத்தை, அறியும் - உணரும், சான்றோர் - மேன்மக்கள், பெரியரா-பெரியோராக, கொள்வது- மதித்துக்கொள்வது, கோள்-கொள்கை—எ-று. * (இ-ம்) தங்களைத்தாங்களே புகழ்ந்துகொள்வது கொள்கையல்ல தங்களை வெளியவராகத் தாழ்த்திக்கொள்வது பெரியோர்கொள்கை என்பதாம். கொள்வது-எ, கொள்-ப. (ஞ)

நளிகடற்றண்சேர்ப்ப நாணிழற்போல
வினியுஞ்சிறியவர் கேண்மை-வினிவின்று
யல்குநிழற்போ லகன்றகன்றோடுமே
தொல்புகழாளர் தொடர்பு.

இ-ள். நளி-அகன்ற, கடல்-கடலையும், தண்-குளிர்ந்த, சேர்ப்ப-னைவையுமுடையபாண்டியனே, சிறியவர் -சிறியோர்கள், கேண்மை-சிநேகம், நாள்-முற்பகல், நிழற்போல-நிழலைப்போல, வினியும்-குறையும், தொல்-பழைய, புகழாளர்- பெரியோர்கள், தொடர்பு-சிநேகம், வினின்று-கெடுல்லாது, அல்கு-பிற்பகல், நிழற்போல்-நிழலைப்போல, அகன்றகன்று-வளர்ந்துவளர்ந்து, ஓடும்-செல்லும்-எ-று. * (இ-ம்) பாண்டியனே சிறியவர் சிநேகம்முற்பகல் நிழலைப்போற் குறையும் பெரியவர்சிநேகம்முற்பகல்நிழலைப்போலவளருமென்பதாம். கேண்மை-எ, வினியும்-ப, தொடர்பு-எ, ஓடும்-ப, எ-அசை. (ஈ)

மன்னர்திருவு மகளிரொழினலமுந்
துன்னியார்க்கப்பர் தகல்வேண்டா-துன்னிக்
குழைகொண்டுதாழ்ந்த குளிர்மாமெல்லா
முழைத்தங்கட்சென்றூர்க்கொருங்கு.

இ-ள். துன்னி-நெருங்கி, குழைகொண்டு-தளிர்கொண்டு, தாழ்ந்த-தாழ்ந்த, குளிர்ந்த-குளிர்ந்த, மாமெல்லாம்-மரங்களெல்லாம், தங்

கண்-தம்மிடத்து, சென்றார்க்கு-வந்தவர்க்கு, ஒருங்கு-ஒருமிக்க, உழை-புகலிடமாவது போல, மன்னர்-அரசர், திருவும்-செல்வமும், மகளிர்-பெண்களுடைய, எழில்-அழகின், நலமும்-நன்மையும், துன்னியார்-சேர்ந்தவர், தகல்வேண்டா-தடையில்லாமல், துய்ப்பர்-அநுபவிப்பர்—எ-று. * (இ-ம்) அரசர்செல்வத்தையும் பெண்கள் நலத்தையும் அருகிருந்தோ ரநுபவிப்பர் என்பதாம். * துன்னியர்கள்-எ, துய்ப்பர்-ப. (எ)

தெரியத்தெரியுந் தெரிவிலார்கண்ணும்
பிரியப்பெரும்படர் நோய்செய்யும்-பெரிய
வுலவாவிருங்கழிச் சேர்ப்பவர்மாட்டும்
கலவாமைகோடியுறும்.

இ-ள். பெரிய-பெரிதாகிய, உலவா-வற்றாத, இரும்-மிக்க, கழி-கழிலையும், சேர்ப்ப-கானலையுமுடையபாண்டியனே, தெரிவிலார் கண்ணும்-தெளிவில்லாரிடத்தும், தெரிய(சிநேகஞ்செய்)தறிய, தெரியும்(அவர்குணஞ்)தெரியும், பிரிய(அவர்சிநேகம்)பிரிய, பெரும்-பெரிய, படர்மேநாய்-துன்பமேநாய். செய்யும்-செய்யும் (ஆதலால்) வார்மாட்டும்-வாணுதலிடத்தும், கலவாமை-சிநேகியாமையே, கோடியுறும்-கோடிபங்கதிகம்—எ-று. * (இ-ம்) பாண்டியனே! தெளிவிலார் நட்புச்சிநேகஞ் செய்தறியத்தெரியும் யாவரிடத்துஞ் சிநேகஞ்செய்யாதிருக்கைநல்லது என்பதாம். * கலவாமை-ச, கோடியுறும்-ப()

கல்லாதுபோகிய நாளும்பெரியவர்கட்
செல்லாதுகை கூடியவைகலு-மொல்வ
கொடாவதொழிந்த பகலுமுளாப்பிற்
படாவவாம்பண்படையார் கண்.

இ-ள். பண்புடையார்கண்-நற்குணமுடையாரிடத்து, கல்லாதுநூலைக்கற்காது, போகிய-கழிந்த, நாளும்-நாள்களும், பெரியவர்கண்-பெரியோரிடத்து, செல்லாது-போகாது, வைகிய-இருந்த, வைகலும்-நாள்களும், ஒல்வ-பொருந்தியவற்றை, கொடாவது-கொடுக்காது, ஒழிந்த-கழிந்த, பகலும்-நாள்களும், உளாப்பில்-சொல்லில், படாவவாம்-இவைபொருந்தாவாம்—எ-று. * (இ-ம்) பெரியோர்களிடத்தில் கற்காதகாலமும் தம்மிற் பெரியோரிடத்திற்செல்லாதகாலமும் கொடாதகாலமும் உண்டாகவாம் என்பதாம். * நாள்வைகல்பகல்-மூன்றும் எழுவாய், படாவவாம்-ப. (க)

பெரியோர்பெருமை சிறுதகைமையொன்றிற்
குரியாருரிமை யடக்கந்-தெரியுங்காற்
செல்வமுடையாருஞ் செல்வரோதற்சேர்ந்தா
ரல்லல் * களோபவெனின்.

இ-ள். பெரியார்-பெரியோர்க்கு, பெருமை-பெருமையாவது, சிறுதகைமை-பணிந்து நடக்குதல், ஒன்றிற்கு-ஒருகல்விக்கு, உரியார்-உரியவர்களுக்கு, உரிமை-தகுதியாவது, அடக்கம்-அடங்கியிருக்கை, தெரியுங்கால்-ஆராய்ந்தால், தற்சேர்ந்தார்-தன்னைச்சேர்ந்தவர்கள், அல்லல்-துன்பங்களை, களைப-நீக்குவர், எனின்-என்றால், செல்வமுடையாரும்-செல்வமுள்ளவரும், செல்வரோ-செல்வமுள்ளவர்களே—எ-று. * (இ-ம்)பெரியோர்க்குப்பணிவும் கற்றோர்க்குக்கடக்கமும் செல்வர்க்கீகையும் வேண்டும் என்பதாம். * செல்வமுடையார்-எ, செல்வர்-ப, எ-அசை * இலக்கணைத்திரட்டு [அர்ஆர்பம்மார் லோர்படர்க்கை.]

(ய)

பெரியாரைப்பிழையாமை-முற்றிற்று.

ய அ-ம்-அதிகாரம்.

நல்வினைஞ்சேர்தல்.

அஃதாவது நன்மையாகிய இனத்தைச்சேர்தல்.

அறியாப்பருவத் தடங்காரோடொன்றி
நெறியல்லசெய்தொழுகி லவ்வு-நெறியறந்த
நற்சார்வுசாரக் கெடுமேவெயிற்முறுகப்
புற்பனிப்பற்றவிட் டாங்கு.

இ-ள். வெயில்-வெயிலானது, முறுக-அதிகறிக்க, பல்-புல்லில், பனிப்பற்ற-பனியின்பற்ற, விட்டாங்கு-விட்டாற்போல, அறியாப்பருவத்து-சிறுவயதில், அடங்காரோடு-அடக்கமில்லாருடன், ஒன்றி-பொருந்தி, நெறியல்ல-நீமைகளை, செய்தொழுகிலவ்வும்-செய்கடந்தவையும், நெறியறிந்த-நன்மார்க்கமறிந்த, நற்சார்வு-கல்வினைக்களை, சார-சேர, கெடும்-கெட்டுவிடும்—எ-று, * (இ-ம்) வெயிலைக்கண்டு பனிநீங்குறும்போல தன்மார்க்கனைச்சேர்ந்த தீர்ந்தடக்கை நன்மார்க்கனைச்சேரக்கெடும் என்பதாம். ஒழிபவவ்வும்-எ, கெடும்-ப, எ-அசை.

(க)

அறிவினறநெறி வஞ்சுமிகூற்றம்
பொருண்மிறர்கடுஞ்சொற் பொறாறி னின்-வஞ்சம்
வெறுமின்வினைதீயார் சேண்மைசெற்றாஞ்சும்
பெறுமின்பெரியார்வாய்ச் சொல்.

இ-ள்-அறம்-தருமத்தின், நெறி-வழியை, அறிவின்-அறியுங்கள், கூற்றம்-இயமனுக்கு, அஞ்சுமின்-பயப்படுங்கள், பிறர்-மயலாருடைய, கடுஞ்சொல்-கொடுஞ்சொல்லை, பொருண்மின்-பொறுத்துக்கொள்ளுங்கள், வஞ்சம்-வஞ்சத்தை, பொறாறுமின்-வாராதுபொறுங்கள், வினை-நிஷ்டையுள்ள, தீயார்-கொடியர், சேண்மை-சிநேகத்தை, வெறுமின்-வெறுத்துவிடுங்கள், செற்றாஞ்சும்-எந்நாளும்,

பெரியார்-பெரியோர்கள், வாய்ச்சொல்-வாயிற்பிறக்குஞ்சொல்லை, பெறுமின்-பெறுங்கள்—எ-று.*(இ-ம்) தருமத்தையறியுங்கள் இயமனுக்கஞ்சுங்கள் கொடுஞ்சொல்லைப்பொறுங்கள் வஞ்சனைவராதகாத்துக்கொள்ளுங்கள் நியவர் நட்பைவிடுங்கள் பெரியோர்சொல்லைப் பெறுங்கள்என்பதாம். நீங்கள் தோன்றுமுன்-பெறுமின்-ப. (

அடைந்தார்பிரிவு மரும்பிணியுஞ்சேடு
முடங்குடம்புகொண்டார்க் குறலூற்-றொடங்கிப்
பிறப்பின்றுதென்றுணரும் பேரறிவினாரை
யறப்புணர்க*வம்மாவென் னெஞ்சு.

இ-ள். அடைந்தார்-அடைந்தவரை, பிரிவும்-பிரிதலும், அரும்-அரிய, பிணியும்-நோய்களும், சேடும்-மரணமும், உடம்பு-உடம்பை, கொண்டார்க்கு-கொண்டவர்க்கு, உடம்கு-உடனே, உறலால்-வாலால், தொடங்கி-இனிதொடங்கி, பிறப்பு-வரும்பிறப்பு, இன்றுதென்று-துன்பமென்று, உணரும்-அறியும், பேரறிவினாரை-பெரியோரை, என்னெஞ்சு-என்மனம், உறற்கு-சேர்கென், புணர்க-இணைப்பதாக—எ-று. * (இ-ம்) பெரியோரை என்மனம் இணைக்கச்சுடவது என்பதாம். நெஞ்சு-எ, புணர்க-ப, பேரறிவினாரை-செ, (இலக்கணைத் திரட்டு) [அம்மாவனாயைசகேளென்றுகும்.] (ங)

இறப்பும்பிணியுங்கா மின்றுதெனினுறும்
பிறப்பினைவாரு முனிவார்-பிறப்பினைட்
பண்பாற்றுநெஞ்சத் தவர்களோடெஞ்ஞான்று
நண்பாற்றிநட்கப் பெறின்.

இ-ள். பிறப்பினுள்-பிறப்புள், பண்பு-நற்குணங்களை, ஆற்றும்-சுமந்திருக்கும், நெஞ்சத்தவர்களோடு-மனமுள்ளநல்லோருடன், எஞ்ஞான்றும்-எந்நாளும், நண்பாற்றி-சிநேகஞ்செய்து, நட்கப்பெற்றால்-சிநேகிக்கப்பெற்றால், இறப்பு-மிகவும், நினையுங்கால்-நினைத்தால், இன்றுதெனினும்-துன்பமானாலும், பிறப்பினை-பிறவியை, யாரும்-யாவரும், முனிவார்-வெறுக்கார்—எ-று. * (இ-ம்) பிறப்புத்துன்பமாயினும் பெரியோரைச் சிநேகித்தால் அப்பிறப்பைவெறுக்கார்என்பதாம். யாவரும்-எ, முனிவார்-ப, பிறப்பினை-செ. (ச)

ஊரங்கணீருறவுநீர்ச்சேர்ச்சாற்
பேரும்பிறிதாகித் தீர்த்தமா-மோருஞ்
குலமாட்சியில்வாருங் குன்றுபோனிற்பர்
நலமாட்சிநல்லாரைச்சார்ந்து.

இ-ள். ஊர்-ஊரின்- அங்கணைநீர்-சலதானைநீர், உறவுநீர்-மிகுந்தநீரை, சேர்ந்தக்கால்-சேர்ந்தால், பேரும்-பெயரும், பிறிதாகி-வேறுகி, தீர்த்தமாம்-தீர்த்தமாகும்,(அதுபோல) குலமாட்சி-குலப்பெருமை,இல்லாரும்-இல்லாதவரும், நலமாட்சி-நற்பெருமையுள்ள,

நல்லானை-நல்லோனை, சார்த்து-சேர்த்து, குன்றுபோல்-மலைபோல், நிற்பர்-உயர்ந்துநிற்பர்—எ-று. * (இ-ம்) சலதாரைநீர்பெருவெள்ளத்தைச்சேர்த்துநிர்த்தமாகும் அதுபோல உயர்தோரைச்சேர்ந்ததழ்ந்தோரும் உயர்ந்தோராவர் என்பதாம். குலமாட்சியில்லார் - எ, நிற்பர்-ப, ஒருஉம்-அசை (கூ)

ஒண்கதிர்வாண்மதியஞ் சேர்தலாலொண்டிய
வுக்கண்விசும்பின் முயலுத்-தொழப்படூஉம்
குன்றியசிர்மைய ராயினுஞ்சிறப்பெறுவர்
குன்றன்னர்கேண்மை கொளின்.

இ-ள். ஒண்-ஒள்ளிய, கதிர்-செணைக்கிளையுடைய, வாள்-பிரகாசிக்கும், மதியம்-சந்திரனை, சேர்தலால்-அடைதலால், ஓங்கிய-உயர்ந்த, அம்-அழகிய, கண்-இடமுடைய, விசும்பின்-ஆகாயத்துள்ள, முயலும்-முசலும், தொழப்படூஉம்-வணங்கப்படும், (அதுபோல) குன்றிய-குறைந்த, சிர்மையராயினும்-சிறப்பையுடையராகிலும், குன்றன்னர்-மலைபோன்ற பெருமையோர், கேண்மை-சிநேகத்தை, கொளின்-கொண்டால், சிறப்பெறுவர்-சிறப்படைவர்—எ-று. * (இ-ம்) சந்திரனைச்சேர்ந்த களங்கமுந் தொழப்படும் அதுபோல் பெரியோரைச்சேர்ந்த சிறியோருஞ் சிறப்படைவர் என்பதாம். கேண்மை கொள்பவர்-தோன்றுஎழுவாய், பெறுவர்-ப, சிறை-செ. (கூ)

பாலோடளாவநீர் பாலாகுமல்லது
நீராய்நிறந்தெரிந்து தோன்றுதாம்-நேரிற்
சிறியாரிமையுந் தோன்றுதாநல்ல
பெரியார்பெருமைமையைச் சார்ந்து.

இ-ள். பாலோடு-பாலுடன், அளாய்-கலந்த, நீர்-நீரானது, பாலாகும்-பாற்போலாம், அல்லது-அல்லாமல், நீராய்-நீர்போலாய், நிறம்-நிறம், தெரிந்து-விளங்கி, தோன்றுது-தெரியாது (அதுபோல) நேரில்-ஆராயில், நல்ல-நல்ல, பெரியோர்-பெரியோர், பெருமையை-பெருந்தன்மையை, சார்ந்து-சேர்ந்து, சிறியார்-சிறியோருடைய, சிறுமையும்-பெருந்தன்மையின்மையும், தோன்றுது-தெரியாது—எ-று. * (இ-ம்) பாலைச்சேர்ந்தநீரும் பால்போலாம் அதுபோல பெரியோரைச்சேர்ந்த சிறியோரிழிவுந்தோன்றுதுஎன்பதாம். சிறுமை-எ, தோன்றுது-ப, ஆம்-இரண்டு அசைகள். (எ)

கொல்லேறிரும்புனத்துக் குத்தியடைந்தபின்பு
லொல்காவேயாகு முழவு-முழுபடைக்கு
மெல்லியமோவாயினு நற்சார்வுசார்ந்தாம்மேற்
செல்லாவாஞ்செற்றார் சிலை.

இ-ள். கொல்லேறு-கொல்லேற்றின், இரும்-பெரிய, புனத்து-புனத்திலே, குத்தி-முகத்தேட்டையை, அடைந்த-சேர்ந்த, புல்-புல்லானது,

உழவர்-பயிர்செய்வோர், உழு-உழுகிற, படைக்கு-கலப்பைபோல, ஒல்காவாம்-அசையாவாம் அதுபோல) மெல்லியவாயினும்- பெரிய வலரியினும் நற்சார்-நல்லசார்பை, சார்ந்தார்மெல்-சேர்ந்தவரிடத்து செற்றார்-பகைவருடைய, சினம்-கோபங்கள், செல்லா-செல்லா மாட்டாவாம்—எ-று. * (இ-ம்) மரக்கட்டையைச் சார்ந்தபுல் கலப்பைக்கசையாது-அதுபோல வலியாரைச்சேர்ந்த மெலியாரிடத்து ப்பகைவர் கோபஞ்செல்லாது என்பதாம். * சினம்-எ, செல்லா-ப, எ-தொண்டும்-ஆம்-ஒன்றும்-அசைகள் (இலக்கணக்குறிப்பு) (ஒவ்வொன்விகுதிபன்மை முற்றெதிர்மறை) (அ)

நிலநலத்தானந்திய நெல்லேபோற்றந்தந்
குலநலத்தாலாகுவர் சான்றோர்-கலநலத்தைதத்
நிவளிசென்ற சிறைத்தாங்குசான்றுண்மை
நியினஞ்சேரதக் கெடும்.

இ-ள். நிலம்-நிலத்தின், நலத்தால்-தன்மையால், நந்திய-வளர்ந்த, நெல்லேபோல்-நெல்லைப்போல, தந்தார்-அவரருடைய, குலம்-குலத்தின், நலத்தால்-நன்மையால், சான்றோர்-பெரியோர், ஆகுவர்-ஆவர், கலம்-கப்பலின், நலத்தை-நன்மையை, நிவளி-நிக்சாற்று, சென்று-போய், சிறைத்தாங்கு-தடுத்தார்போல, சான்றுண்மை-பெரியோர்தன்மை, நியினம்-நியினத்தை, சேர-அடைய, கெடும்-கெட்டுவிடும்—எ-று. * (இ-ம்) கடற்காற்றுக் கப்பலைக்கெடுத்தாற்போல நல்லினந் நியினத்தைச் சேரக்கெடும் என்பதாம். * சான்றோர்-எ, ஆகுவர்-ப, சான்றுண்மை-ச, கெடும்-ப. (கூ)

மனத்தான்மறவில சோ்ந்தாஞ்சேர்ந்த
வினத்தாலிகழப் படுவர்-புனத்து
வெறிகமழ்சந்தனமும் வேங்கையும்வேமே
வெறிபுனந்தீப்பட்டக் கால்.

இ-ள். எறிபுனம்-வெட்டப்பட்டவனம், தீப்பட்டக்கால்-தீப்பட்டால், புனத்து-வனத்தில், வெறி-வாசனை, கமழ்-வீசும், சந்தனமும்-சந்தனமாமும், வேங்கையும்-வேங்கைமாமும், வேம்-வேகும், (அதுபோல) மனத்தால்-மனதால், மறிவிலரேனும்-குற்றமிலராகிலும், தாஞ்சேர்ந்த-தாங்கள்சேரப்பட்ட, இனத்தால்-நியினத்தால், இகழப்படுவர்-இகழப்படுவார்கள்—எ-று. * (இ-ம்) காடுதீப்பட்டால் அதைச்சார்ந்தமரங்கள்வேகும், அதுபோலக் குற்றமற்றவராகிலும் நியினத்தைச்சேர்ந்தால் இகழப்படுவார்கள் என்பதாம். மறிவிலர்-எ, இகழப்படுவர்-ப, எ-அசை. (ஏ)

நல்லினஞ்சேர்தல்-முற்றிற்று.

பெருமை.

அஃதாவது-பெருந்தன்மையைச்சொல்லுதலாம்.

ஈதலிசையா இளமைசெலவீக்குதலாற்
காதலவரும் கருத்தல்லர்-காதலிற்
தாதுநாமென்னு மவாவினைக்கைவிட்டுப்
போவதேபோலும் பொருள்.

இ-ள். ஈதல்-கொடுத்தல், இசையாது-பொருந்தாது, இளமை-இளமையப்பருவம், செல்லுதலால்-நீங்குதலால்-நீங்கலால், காதலவரும்-இச்சையுள்ளபெண்களும், கருத்தல்லர்-கருத்துள்ளவரல்லர், காதலித்து-இச்சித்து, தாதுநாமென்னும்-நாம்வாழுக்கடவோமென்னும், அவாவினை-ஆசையை, கைவிட்டு-கைவிட்டு, போவது-நீங்குவதை, பொருள்-பொருளாம்—எ-று. * (இ-ம்) ஆசையை விட்டுதுறப்பதே பொருளாகும் என்பதாம். பொருள்-எ, போவது-ப, போலும்-எ, அசைகள். (க)

நிச்சார்வினைமாந்தே மீக்கண்மந்தேமென்றெண்ணி
பொச்சாந்தொழுகுவர் பேதையார்-நிச்சார்வு
நின்றனபோன்றுநிலையாவெனவுணர்ந்தார்
என்றும்பரிவதிலர்.

இ-ள். நிச்சார்வின்-நில்வாழ்க்கையில்-எமாந்தோம்-மகிழ்ச்சியடைந்தோம், ஈங்கு-இவ்விடத்து, அமைந்தோமென்று-யாவும்நிறைவுற்றோமென்று, எண்ணி-நினைந்து, பொச்சாந்து-மறந்து, ஒழுகுவர்-நடப்பர், பேதையார்-அறிவில்லார், நிச்சார்வு-அவ்வில்வாழ்க்கை, நின்றனபோன்று-நின்றனபோலானவை, நிலையாவெனவுணர்ந்தார்-நில்லாவென்று, உணர்ந்தார்-அறிந்தார், என்றும்-எந்நாளும், பரிதிலர்-விசனப்படார்—எ-று. * (இ-ம்) அறிவினர் இல்வாழ்க்கையை யிச்சித்து நடப்பார் அறிவுளோர் அவ்வாழ்க்கையை யிச்சித்துத் துன்பமடையார்என்பதாம். * பேதையார்-எ, ஒழுகுவர்-ப, உணர்ந்தார்-எ, பரிவதிலர்-ப. (உ)

மறுமைக்குவித்தும்மயலின்றிச்செய்து
சிறுமைப்படாதே நீர்வாழ்மி-னறிஞராய்
நின்றநின்றே நிரம்வேறுங்காணே
மின்றிப்பலவு முள.

இ-ள். மறுமைக்கு-மறுபிறப்பிற்கு, வித்தும்-வித்தானதருமங்களை, மயலின்றி-மயக்கமில்லாமல், செய்து-செய்து, சிறுமை-துன்பம், படாது-உண்டாகாமல், நீர்-நீங்கள், வாழ்மின்-வாழுங்கள், அறிஞராய்-விவேகிகளாய், நின்றநின்றே-நின்றநிலையினேநின்று;

நிறம்-குணம், வேறுங்காணம் - வேறுபடுமுகாந்திரம், இன்றி-இல்லாமல், பலவுமுள-பலவுமுள்ளன—எ-று. * (இ-ம்) நீங்கள்தரு மத்தைச்செய்துவாழுங்கள் - அறிவாளிகளாயிருந்து கருமஞ்செய்யாது குணம் வேறுபடுதல் பலவிருக்கின்றன என்பதாம். நீர்-எ, வாழ்மின்-ப, பலவம்-எ, உ-ப, எ-உம், அசைகள். (ங)

உறைப்பருங்காலத்து மூன்றுநீர்க்கேணி
யிறைத்துணிமூவாறுற்று மென்பர்-கொடைக்கடனுஞ்
சாஅயக்கண்ணும் பெரியார்போன்மற்றையா
ராஅயக்கண்ணு மரிது.

இ-ள். உறைப்பு-மழை, அருங்காலத்து-இல்லாக்காலத்து, ஊற்றுநீர்-ஊற்றுநீருள்ள, கேணி-குளமானது, இறைத்து-நீரை இறைத்தது, உண்ணும்-உண்டாஞும், ஊராற்றம்-ஊரைக்காப்பாற்றும், என்பர்-என்றுசொல்வர் (அதுபோல) கொடை-நியாகத்தின், கடனும்-முறைமையும், சாஅயக்கண்ணும் - தளர்ந்தவிடத்தும், பெரியார்போல் - பெரியோர்களைப்போல, மற்றையார் - சிறியோர்கள், அஆ அயக்கண்ணும்-செல்வமுண்டாயிருந்தும், அரிது-செய்தல்அரிது—எ-று. * (இ-ம்) பெரியோர் செய்தல்போல சிறியோர்செய்தலரிது என்பதாம். செய்தல்-தொன்று எழுவாய் அரிது-ப. (ச)

உறுபுனறந்துல கூட்டியறமிடத்துங்
கல்லூற்றழியூறு மாறேபோற்-செல்வம்
பலர்க்காற்றிக்கெட்டுலந்தக் கண்ணுஞ்சிலர்க்காற்றிச்
செய்வர்செயற்பா லவை.

இ-ள். உறு-மிக்க, புனல்-நீரை, தந்து-கொடுத்து, உலகு-உலகத்தை, ஊட்டி-உண்பித்து, அறமிடத்தும்-நீரற்றகாலத்தும், கல்-தோண்டின, ஊற்றழி-ஊற்றுக்குழியிடத்து, ஊறும்-ஊறுகின்ற, ஆறேபோல்-ஆறேபோல, செல்லம்-பாக்கியத்தை, பலர்க்கு-பலருக்கும், ஆற்றி-கொடுத்து, கெட்டு - கெட்டு, உலர்ந்தக்கண்ணும்-அழிந்தாலும், சிலர்க்கு-சிலருக்கு, ஆற்றி-கொடுத்து, செயற்பாலவை-செய்யத்தக்கதருமங்களை, செய்வர்-பெரியோர்செய்வர்—எ-று. * (இ-ம்)மழையில்லாதநாளிலும் ஆறூறுற்றுநீர்கொடுக்கும் (அதுபோல) செல்வமழிந்தாலும் பெரியோர்செய்யுந் தருமங்களைச்செய்வர்-என்பதாம். பெரியோர் தொன்று எழுவாய், செய்வர்-ப, செயற்பாலவை-செ, எகாரம்-அசை. (ஞ)

பெருவனைநாட பெரியார்கட்டூமை
கருநனைமேற்சூடேபோற் றேன்றுங்-கருநல்வினைக்
கொன்றன்னவின்ன செயினுஞ்சிறியார்மே
லொன்றனுந்தோன்று கெடும்.

இ-ள். பெரு-பெரிய, வரை-மலையையும், நாட-நாட்டையுமுடையபாண்டியனே, பெரியார்கண்-பெரியோரிடத்துண்டாம், நிமை-குற்றம், கரும்-பெரிய, நரை-இடபத்தின், மேல்-முதுகின் மேலிருக்கும், சூடேபோல்-திமிலைப்போல, தோன்றும்-காணப்படும், கரும்-பெரிய, நாளையை-இடபத்தை, கொன்றன்ன-கொன்றாற்போலும், இன்னா-குற்றங்களை, செயினும்-செய்தாலும், சிறியார்மேல்-சிறியவரிடத்து, ஒன்றானும்-ஒருகுற்றமும், தோன்றா-தோன்றாமல், கெடும்-கெட்டுவிடும்—எ-று. * (இ-ம்) பாண்டியனே பெரியோர்கள் செய்தகுற்றம் பிரகாசமாய்க் காணப்படும் சிறியோர்கள்செய்தகுற்றம் காணப்படாது என்பதாம். நிமை-ய, தோன்றும்-ப், குற்றம்-தோன்றா எழுவாய் கெடும்-ப. (கூ)

இசைந்தசிறுமை யியல்பிலாதார்கட்
பசைந்ததுணையும் பரிவ-மசைந்து
நகையேயும்வேண்டாத நல்லறிவினர்கட்
பகையேயும்பாடு பெறும்.

இ-ள். சிறுமை-அற்பமும், இசைந்த-பொருந்திய, இயல்பு-தன்மையும், இல்லாதார்கண்-இல்லாதாரிடத்து, பசைந்த-நட்புக்கொண்ட, துணையும்-அளவும், பரிவாம்-துன்பமாகும், அசைந்த-தளர்ந்த, நகையேயும்-மகிழ்ச்சியிலும், வேண்டாத (நிமையை) விரும்பாத, நல்லறிவினர்கண்-நல்லறிவாளிடத்து, பகையேயும்-பகையாகிலும், பாடுபெறும்-பெருமையடையும்—எ-று. * (இ-ம்) சிறியவர்களிடத்திற்கொண்ட சினேகம்துன்பத்தரும் பெரியவர்களிடத்திற்கொண்டபகையும் பெருமைதரும் என்பதாம். பசைந்ததுணை-எ, பரிவாம்-ப, பகை-எ, பெரும்-ப. (எ)

மெல்லியநல்லாருண் மேன்மையதுவிறந்
தொன்னருட்கூற்றுயிட்கு முட்குடைமை-யெல்லாஞ்
சலவருட்சாலச் சலமேநலவரு
ணன்மைவரம்பாய் விடல்.

இ-ள். மெல்-மெல்லிய, இயல்-நற்குணமுடைய, நல்லாருள்-பெண்களிடத்து, மேன்மை-மேன்மைசெலுத்துக, அதுவிறந்து-அதொழிந்து, ஒன்னருள்-பகைவரிடத்து, கூற்று-இயமன், உட்கும் அஞ்சத்தகும், உட்குடைமை-அச்சத்தைச்செலுத்துக, எல்லாம்-முற்றும், சலவருள்-பொய்யாரிடத்து, சால-மிகவும், சலமே-பொய்யே செலுத்துக, நலவருள்-நல்லவரிடத்து, நன்மை-நன்மையை, வரம்பாய்-அளவாய், விடல்-செலுத்துக—எ-று. * (இ-ம்) பெண்களிடத்து மேன்மையையும், பகைவரிடத்து-அச்சத்தையும், பொய்யாரிடத்துப்பொய்யையும், நல்லவரிடத்து- நன்மையையும், செலுத்தக்கடவாய் என்பதாம். நீவிர்-தோன்று-எழுவாய்-செலுத்துக-ப. (அ)

கடுக்கியொருவன் கடுங்குறஹோ பெரி
மயக்கிமிழுறு மனப்பிரிப்பொன்-றின்றிக்
குளக்கறிலாதவர் தாயமனத்தார்
விளக்கிறுளொண்சுடரோ போன்று.

இ-ள். கடுக்கி-கடுமையாகி, ஒருவன்-ஒருவன், கடுங்குறஹோ-பொய்வாதசொற்களை, பெரி-சொல்லி, மயக்கிமிழுறும்-மயக்கிருலும், மனம்-தம்மனத்து, பிரிப்பு-வேறுபாடு, ஒன்றின்றி-ஒன்றில்லாமல், விளக்கிறுள்-தீபத்துள், ஒள்-ஒள்ளிய, சுடரோபோன்று-தீபம்போலாகி, குளக்கறில்லாதவர்-அசைவில்லாதவர், தாயமனத்தார்-பரிசுத்தமனமுடையார்—எ-று. ※ (இ-ட) ஒருவன் கொடுஞ்சொற்களைச் சொல்லி மயக்கினாலும் வேறுபடாமல் நிற்பவரோ பரிசுத்தமனமுடையவர் என்பதாம். குளக்கறில்லாதவர்-எ, தாயமனத்தவர்-ப (க)

முற்றத்துறந்தவர்நோ நாருமறஞ்செய்து
பிற்றைக்கருத்துவர் சான்றவ-ரத்தற்கு
முக்குற்றநீக்கி முடியுமளவெல்லாம்
தக்கசத்துநீக்கி விடும்.

இ-ள். முற்றத்துறந்தவர்-முன்புள்ள ஏழும், துறந்தவர்-உணவை, நாருமும்-எந்நாளும், அறம்-தருமம், செய்து-செய்து, பிற்றைக்கு-பின்புள்ள ஏழுணவை, கருதுவர்-உண்ணுவர், சான்றவர்-பெரியோர், அற்றத்தற்கு-அவ்வுணவு, முக்குற்றம்-மூன்றுகுற்றங்களும், நீக்கி-கள்ளி, முடியுமளவெல்லாம்-இடைக்குமளவெல்லாம், தக்கசத்துள்-துன்பத்திலிருந்து, நீக்கிவிடும்-நீக்கும்—எ-று. ※ (இ-ம்) முக்குற்றமற்றவுந்த உணவு துக்கத்தைவிட்டுநீக்கும் என்பதாம். குற்றம் (ஈ) அதுகளவுசெய்தல் வஞ்சித்தல் யாசித்தல் எஷ்டனவாம் அற்றத்தற்கு-எ, நீக்கிவிடும்-ப. (ஐ)

பெருமை - முற்றிற்று.

உயம்-அதிகாரம்.

தாளாண்மை.

அஃதாவது-முயற்சிசெய்தலாம்.

கோளாற்றக்கொள்ளாக் குளத்திண்கீழ்ப்பைங்கூழ்போற்
கேளீவதுண்டு கிளைகளோ-துஞ்சுக
வாளாடுகூத்தியர் கண்போற்றடுமாறுந்
தாளாளர்க்குண்டோ தவறு.

இ-ள். கோள்-நீர்கொள்ளுதல், ஆற்ற-மிகவும், கொள்ளா-கொள்ளாத, குளத்திண்கீழ்-குளத்திண்கீழே, பைங்கூழ்போல்-பசியபயிர்போல, கேள்-இரந்தார், ஈவது-கொடுப்பதை, உண்டு-புசித்து, கிளைகள்-இனத்தார், துஞ்சுக-இறக்கக்கடவர்கள், வாளாடு-வாள்கொ

ண்டுசுழற்றும், கூத்தியர் - கூத்தாடுவோர், கண்போல் - கண்ணைப் போல, தடுமாறும்-புடைபெயர்ந்துநிற்கும், தாளார்க்கு - முயற்சி செய்வார்க்கு, தவறு-பொருண்முட்டுப்பாடு, உண்டோ-இல்லை—எ-று. * (இ-ம்) முயற்சிசெய்வார்க்கு - யாதொருகுறையுமில்லை-என்பதாம். இலேகள்-துஞ்சுக-ப, தவறு-எ, உண்டோ-ப, ஓ-அசை(க)

ஆடுகோடாகி யதரிடைநின்றதூஉம்
காழ்கொண்டகண்ணே களிறஃகக்குங்-காந்தாகும்
வாழ்தலுமன்ன தகைத்தேயொருவன்றன்
ருழ்ன்றித்தன்னைச் செயின்.

இ-ள். ஆடு-அசைகின்ற, கோடாகி-கொம்பாகி, அதரிடை-வழியிடத்து, நின்றதூஉம்-நின்றதுவும், காழ்-வைரம், கொண்ட-கொண்ட, கண்ணே-இடத்தே, களிறு-யானையை, அஃகக்குங்-சேர்த்துக்கட்டும், காந்தாகும்-தறியாகும், ஒருவன்-ஒருவன், தாழ்வு-தாழ்ச்சி, இன்றி-இல்லாமல், தன்னைச்செயின் (முயற்சியில்) தன்னையாக்கிக்கொண்டால், வாழ்தலும்-செல்வமுடையனாதலும், அன்ன தகைத்தே-அத்தன்மையாம்—எ-று. * (இ-ம்) இலேயமரமுற்றினால் யானைகட்டலாம் ஒருவன் முயற்சி செய்வானாயின் வாழ்கலாம் என்பதாம். வாழ்தல்-எ, தகைத்து-ப-தான்-அசை, ஈவரத்தின்பகுதி-வோம் - இது-(வீரசோழியத்திற்காண்க) (உ)

உறுபுலிஊனினை யின்றியொருநாட்
சிறுதகைபற்றியுந் தின்னு-மறிவினாற்
காற்றெழிலென்ற கருதற்கையிலான்
மேற்றெழிலுமாங்கே மிகும்.

இ-ள். உறு-பலமுற்ற, புலி-புலி, ஊன்-இறைச்சி, இனை-உணவு, இன்றி-இல்லாமல். ஒருநாள்-ஒருதினம், சிறுதகை-சிறியதவளையை, பற்றியும்-பிடித்தும், தின்னும்-உண்ணும் (ஆதலால்) அறிவினால்-அறிவால், காற்றெழிலென்ற-கற்பதொழிலென்ற, கருதற்க-நினையாதொழிக, கையினால்-முயற்சியால், மேற்றெழிலும் - மேலான தொழிலும், மிகும்-மிகும்—எ-று. * (இ-ம்) புலி-இனை இல்லாவிடில் சிறுதவளையையுந் தின்னும் ஆகையால் அற்பதொழிலென்றெண்ணுதே அதுவே பெரிய தொழிலாகும் என்பதாம். மேற்றெழில்-எ-மிகும்-ப-ஆங்கு-எ-அசைசுள். (ஊ)

அசையாதெனினு மியற்றியோராற்று
லசையாதுறிற்பதா மன்பை-யிசையுங்காற்
கண்டறியாவலகுக்குங் கானலந்தண்சேர்ப்ப
பெண்டிலும்வாழாரோ மற்று.

இ-ள். கண்டல்-முள்ளிச்செடியை, இலை-அலகுகள், அலகுக்கும்-ஒதுக்கும், கானலம்-உப்பளத்தையும், தண்-குளிர்ந்த, சேர்ப்ப-கடற்

கலையையுமுடைய பாண்டியனே, இசையாதெனினும் - முயற்சி பொருந்தாவிடினும், இயற்றி-முயற்சிசெய்து, ஒராற்றல்- ஒருவழியால், அசையாது-தளராமல், நிற்றல்தாம்-நிற்பதாகும், ஆண்மை-ஆண்மைத்திறம், இசையுங்கால்-முயற்சிபொருந்துமாயின், பெண்டிருஃ-பெண்பிள்ளைகளும், வாழாரோ-வாழ்வார்கள்—எ-று. *(இ-ம்) பாண்டியனே முயற்சிபொருந்தாவிடினும் மேன்மேலும் முயற்சிசெய்துவாழ்தல் ஆண்மைத்திறம் முயற்சிபொருந்துமாயின் பெண்பிள்ளைகளும் வாழ்வார்கள் என்பதாம். ஆற்றல்-ச, நிற்பதாட்பமற்று-அசை. (ச)

நல்லகுலமென்றுந் தீயகுலமென்று
சொல்லளவல்லாற் பொருளில்லை-தொல்சிறப்பி
னெண்பொருளொன்றே தவப்கல்வியாள்விழை
யொன்றிவற்றலுகும் குலம்.

இ-ள். நல்லகுலமென்றும்-நல்லகுலமென்றாட்டி, தீயகுலமென்றும்-கெட்டகுலமென்றாட்டி, சொல்லளவல்லால்- சொல்லுமளவல்லாமல், பொருளில்லை-யாதொருபொருளுமில்லை, தொல்-பழைய, சிறப்பின்-சிறப்புடைய, ஒண்-ஒள்ளிய, பொருள்-பொருளும், தவம்-தவமும், கல்வி-கல்வியும், ஆள்விழை-முயற்சியும், என்றிவற்றான்-என்றுசொல்லியவிவைகளால், குலம்-குலம், ஆகும்-ஆம்—எ-று. *(இ-ர்) பொருள் தவம் கல்வி தொழில் இவற்றற்குலமாகும்என்பதாம். குலும்-எ, ஆகும்-ப, ஒன்றே இடைச்சொல். (ரு)

ஆற்றற்றுணையு மறிவினையுள்ளடக்கி
யூக்கமுடையா ருணர்வுடையா-ருக்க
முறப்பிறலாராயு மொண்மையுடையார்
குறிப்பின்கீழ்ப்பட்ட துலகு.

இ-ள். ஆற்றலும் செய்யுங்(காரியம்)துணையும்-முடியுமளவும், அறிவினை-அறிவை, உள்ளடக்கி-தம்முள்ளடக்கி, ஊக்கம்-தன்வலிமையை, உணர்வுடையார்-அறிவுடையார், உடையார்-பிறரறியச்சொல்லார், ஊக்கம்-பிறர்வலிமையை, உறப்பிறல்-அவயவத்தால், ஆராயும்-விசாரிக்கும், ஒண்மையுடையார்-அறிவுடையார், குறிப்பின்கீழ்-அவர்குறிப்பினிடத்து, உலகு-உலகமானது, பட்டது-தங்கியது—எ-று. * (இ-ம்) அறிவுடையோர் தமதுகாரியமுடியுமளவும் தமதுவலிமையைச்சொல்லார்கள் உலகு அறிவுடையோர்குறிப்பிற்றங்கியது என்பதாம். உணர்வுடையார்-எ, உடையார்-ப, ஊக்கம்-செ. (கூ)

சிதலினப்பட்ட வாலமரத்தை
மதலையாய்மாற்றதன் வீழ்நீழ்றி-யாங்குக்
குதலைமைதந்தைகட் டோன்றித்தான்பெற்ற
புதல்வன்மறைப்பக் கெடும்.

இ-ள். சிதலை-செல், நிரப்பட்ட-நின்னப்பட்ட, ஆலமரத்தை-ஆலமரத்தை, அதன்-அம்மரத்தில், வீழ்-வீழ்ந்த, வீழ்மதலையாய்-பற்றுக்கோடாய், ஊன்றியாங்கு-தாங்கினற்போல, தற்றைகண்-தன் பிதாவிடத்து, ஞதலைமை-தளர்ச்சி, தோன்றில்-தோன்றினால், தான் பெற்ற-தானீன்ற, புதல்வன்-பிள்ளை, மறைப்ப-தன் முயற்சியால்மறைக்க, கெடும்-கெட்டுவிடும்—எ-று. * (இ-ம்) ஆலமரத்தைவீழ்தாங்கினற்போலப் பிதாவிடத்துத் தளர்ச்சிதோன்றில் பிள்ளைதாங்குவான் என்பதாம். ஞதலைமை-எ, கெடும்-ப, மற்று-அசை. (எ)

ஈனமாயில்லிருந்தின்றிவினியினு
மானந்தலைவருவசெய்பவோ-யானை
வரிமுகம்புண்படுக்கும்வள்ளுகிர்த்தோன்று
ளரிமாமதுகையவர்.

இ-ள். யானை-யானையினது, வரிமுகம்-புள்ளியுடையமுகத்தை, புண்படுக்கும்-பண்புசெய்யும், வள்-கூரிய, உகிர்-நகத்தையும், தோன்றுள்-வலியகாலையுமுடைய, அரிமா-சிங்கத்தினது, மதுகையர்-வலியுள்ளவர், ஈனமாய்-இழிவாய், இல்லிருந்து-வீட்டிலிருந்து, இன்றி-முயற்சியில்லாது, வினியினும்-இறந்தாலும், மானம்-குற்றம், தலை-தம்மிடத்து, வரும்-வருங்காரியங்களை, செய்பவோ-செய்வாரோ—எ-று * (இ-ம்) சிங்கம்போலும் வலிமையுள்ளவர் முயற்சியில்லாதுவிட்டிலிருந்தழியினும் குற்றமுள்ளகாரியங்களைச்செய்வார்கள் என்பதாம். மதுகையவர்-எ, செய்பவோ-ப. (அ)

தீங்கரும்பீன்ற திரள்சாலுளையுலறி
தேங்கமழ்நாற்ற மிழந்தாங்-சோங்கு
முயர்குடியுட்பிறப்பி னென்னும்பெயர்பொறிக்கும்
பேராண்மையில்லாக் கடை.

இ-ள். தீங்கரும்பு-மதுரக்கரும்பு, ஈன்ற-தந்த, திரள்-திரண்ட, கால்-தாளினையும், உளைவெளுமையிர்போற்-கற்றையையுடைய, அலரி-பூ, தேங்கமழ்-இனியபரிமளமாகிய, நாற்றம்-வாசனையை, இழந்தாங்கு-இழந்தாற்போல, பெயர்-தன்பெயரை, பொறிக்கும்-என்கு நாட்டு, பேராண்மை-பெரியமுயற்சி, இல்லாக்கடை-இல்லையாயிடில், ஞ்ஞ்சும்-ஓங்கி, உயர்-உயர்ந்த, குடியுள்-நற்குடியில், பிறப்பின்-பிறந்தால், என்-என்ன, ஆம்-பயனுண்டாம்—எ-று. * (இ-ம்) முயற்சியால் தன்பெயரை வெங்கு நாட்டானவன் உயர்ந்த குடியிற் பிறந்து என்னபலன் என்பதாம். என்-எ, ஆம்-ப. (க)

பெருமுத்தலைவர் பெரிதுவந்தீயும்
கருணைச்சோராவர் கயவர்-கருணையைப்
பேருமறிவார் தனிவிரும்புதாளாண்மை
நீரும்நிழற்றாய் விடும்.

இ-ள். பெரும்-பெரிய, முந்தையர்-முன்னையொத்தபரிசுத்த முள்ளவர்கள், பெரிது-மிகவும், உவந்து-மகிழ்ந்து, ஈயும்-இடும், கருணை-பொறிக்கறிவையும், சோறு-சோற்றையும், ஆர்வர்-புகிப்பார், கயவர்-பிழ்மக்கள், கருணையை-பொறிக்கறிவை, பெரும்-பெயரும், அறியார்-அறியாதவர், நனி-மிகவும், விரும்பு-இச்சிக்கத்தக்க, தாளாண்மை-முயற்சியில்வரும், நீரும் (புல்லரிசிக்கூழ்) நீருப், அமிழ்தாய்விடும்-தமக்கமிர்தமாம்—எ-று. ※ (இ-ம்) கீழ்மக்கள் பிறரிடத்துண்பர் மேன்மக்கள் முயற்சிசெய்துண்பர் என்பதாம். கயவர்-எ, ஆர்வர்-ப, சோறு-செ, நீர்-எ, அமிழ்தாய்விடும்-ப, அமிர்தம்என்பதை அமிழ்தமென்றது வடமொழிச்சிதைவு. (ய)

தாளாண்மை-முற்றிற்று.

உக-ம்-அதிகாரம்.

சுற்றந் தழால்.

அஃதாவது-தன்னினத்தைதத் தழுவிக்கொள்ளுதலாம்.

வயாவும்வருத்தமு மீன்றக்காலேவுங்
கவாஅன்மகற்கண்டு தாய்-மறந்தாஅங்
கசாஅத்தாறுற்ற வருத்தமுசாஅத்தன்
கேளினைக்காணக் கெடும்.

இ-ள்: வயாவும்(கருக்கொண்ட)நோவும், வருத்தமும்-அக்கருவைச்சுமக்குநோவும், ஈன்றக்கால்-பெற்றால், நோவும்(சம்பவிக்கு)நோவும், கவாஅன்-தொடையில், மகற்கண்டு-பிள்ளையைக்கண்டு, தாய்-தாயானவள், மறந்தாஅங்கு-மறந்தாற்போல, அசா-தளர்ச்சியால், தாஅறுற்ற-தான்பெற்ற, வருத்தம்-நோவு, உசா-சூழ்ச்சியுடைய, தன்கேளினை-தன்னினத்தாரை, காண-பார்க்க, கெடும்-நீங்கும்—எ-று. ※ (இ-ம்) தொடைமேற் பிள்ளையைக்கண்டு தாய்வருத்தத்தை மறந்தாற்போல ஒருவர் சுற்றத்தாரைக்காணத் தானடைந்த வருத்தம்நீங்கும் என்பதாம். வருத்தம்-எ,கெடும்-ப. (க)

அழன்மண்டுபோழ்தினடைந்தவர்கட்கெல்லா
நிழன்மரம்போனேரொப்பத் தாங்கி-பழுமரம்போற்
பல்லார்பயன்றுய்ப்பத் தான்வருந்திவாழ்வதே
நல்லாண்மகற்குக் கடன்.

இ-ள். அழல்-உஷ்ணம், மண்டு-நெருங்கும், போழ்தின்-காலைகாலத்தின், அடைந்தவர்கட்கெல்லாம்-தன்னைச்சேர்ந்தவர்க்கெல்லாம், நிழல்-நிழலைத்தரும், மரம்போல்-விருட்சம்போல, நேரொப்ப-ஒருசமமாக, தாங்கி-காத்து, பழுமரம்போல்-பழுத்தமரம்போல, பல்லார்-பலரும், பயன்-பலனை, துய்ப்ப-அநுபவிக்க, தான்வருந்தி-தான்வருத்தமடைந்து, வாழ்வது-வாழுவது, நல்-நல்ல, ஆண்மை

சுற்ற-ஆண்மகனுக்கு, கடன்-கடமை—எ-று. * (இ-ம்) தன்னைச்சார்ந்தவர்க்கு நிழலைக்கொடுக்குமரம்போலப் பலர்க்கும் பயன்பட வாழ்தல் ஆண்மகனுக்குக்கடமை என்பதாம். பழுமரம் ஆலமரமும் மாம் வாழ்வது-ப, கடன்-ப, எ-அசை. (உ)

அடுக்கன்மலைநாட தற்சேர்ந்தவனை
யெடுக்கலமென்னுர் பெரியோ-ரடுத்தடுத்து
வன்காய்பலபல காய்பினுமில்லையே
தன்காய்பொறுக்கலாக் கொம்பு.

இ-ள். அடுக்கல் - அணி அணியான, மலை-மலைகளையும், நாட-நாட்டுகளையுமுடையபாண்டியனே, பெரியோர் - பெரியோர்கள், தற்சேர்ந்தவனை-தம்மைச்சேர்ந்தானை, எடுக்கமென்னுர்- தாங்கோ வென்றுசொல்லார்(எதுபோலெனில்) அடுத்தடுத்து - மேன்மேலும், வன்காய்-வலியகாய்கள், பல்பல-பற்பலவாக, காய்பினும்-காய்த்தாலும், தன்காய்-தன்காய்களை, பொறுக்கலா-தாங்காத, கொம்பு-சாய்புகள், இல்லை-இல்லை—எ-று. * (இ-ம்) பாண்டியனே மரக்கொம்புகள் பற்பலகாய்களைக் காய்த்தாலும் தாங்கும் அதுபோலப் பெரியோர்கள் தம்மை யடுத்தவர்களைத் தாங்குவார்கள் என்பதாம். பெரியோர்-எ-என்னுர்-ப, சேர்ந்தவனை-செ, எ-அசை. (ஊ)

உலகறியத்நீக் கலப்பினுநில்லா
சிலபகலாஞ்சிற்றினத்தார் கேண்மை-நிலதிரியா
நிற்கும்பெரியோர் நெறியடையநின்றனைத்தா
லொற்கமிலாளர் தொடர்பு.

இ-ள். சிற்றினத்தார்-கீழ்மக்கள், கேண்மை- சினேகங்களானவை, உலகறிய-உலகமறிய, நீர-முற்றுக, கலப்பினும்-கலந்தாலும், நில்லா-நில்லாவாம், சிலபகலாம்-பலநாளளவாம், ஒற்கமிலாளர்-வறுமையில்லாதவர், தொடர்பு-சினேகம், நிலதிரியா - தன்னிலைதவறுமல், நிற்கும்பெரியோர் - நிற்கின்றபெரியோர்கள், நெறியடைய - நல்வழியடைய, நின்றனைத்து - நின்றற்போலும்—எ-று. * (இ-ம்) கீழ்மக்கள் சினேகஞ் சிலகாலமிருக்கும் மேன்மக்கள் சினேகம் பலகாலமிருக்கும் என்பதாம். கேண்மை-எ, சிலபகலாம்-ப, தொடர்பு-எ, நின்றனைத்து-ப, ஆல்-அசை. (எ)

இன்னரினையுமெமர்பிரென்னுஞ்சொ
லென்னுமிலரா மியல்பினுற்-றன்னித்
தொலைமக்கடன்பந் நீர்ப்பாரேயார்மாட்டின்
தலைமக்களாகற்பா லார்.

இ-ள். இன்னர்-நல்லவர், இனையர்-நியவர், எமர்-உறவினர், பிறர்-அயலார், என்னுஞ்சொல்-என்றுசொல்லுஞ்சொல், என்னுமியாதாகிலும், இலராம்-இல்லாதவர்களாகும், இயல்பினால்-இயற்கையால், து

ன்னி-சேர்த்து, தொலை-நளர்த்த, மக்கள்-மனிதர்களுண்டாய, துன்பம்-துன்பங்களை, நீர்ப்பார்-நீக்குவார், வார்மாட்டும்-யாவரிடத்தும், நலமக்கள்-மேன்மக்கள், ஆகற்பாலார்-ஆகுந்தன்மையுடையார்—எ-று. * (இ-ம்) மேன்மக்கள் யாவர் துன்பங்களையுநீக்குவார்கள் என்பதாம். நலமக்கள்-எ, நீர்ப்பார்-ப, துன்பம்-செ, ஏகாரம்-அசை.

பொற்கலத்துப்பெய்த புலியுகிர்வான்புழுக்க
லக்காரம்பாலோ டமர்கைத்துண்டலி
னுப்பிலிப்புற்கை யுயிற்போற்கிளைஞர்மாட்
டெக்கலத்தாயினு மினிது.

இ-ள். பொற்கலத்து-பொன்னின்கலத்தில், பெய்த-இட்ட, புலியுகிர்-புலிநகம்போன்ற, வான்புழுக்கல்-வெண்சோற்றை, அக்காரம்-சருக்கரையும், பால்-பாலும், ஓடு-இவற்றோடு, அமர்-பகைவர், கைத்து-பொருளை, உண்டலின்-உண்பதைப்பார்க்கிலும், உப்பிலி-உப்பில்லாத, புற்கை-புல்லரிசிக்கூழை, உயிர்போல்-தன்னுயிர்போலும், கிளைஞர்மாட்டு-இனத்தாரிடத்து, எக்கலத்தானும்-எந்தக்கலத்திலாகினும், (உண்டல்) இனிது-இன்பம்—எ-று. * (இ-ம்) பகைவரிடத்துப்பொற்கலத்திற்பாலுஞ்சோறுண்பதிலுமுயிர்போலுமினத்தாரிடத்துப்புல்லரிசிக்கூழுண்ணுதலின்பமென்பதாம். உண்டல்-எ, இனிது-ப, (தொண்ணூல்) ஞவிடைப்பகுபதநண்ணிலுநெறியே. ()

நாள்வாய்ப்பெறினுந்தந் நள்ளாதாரில்லத்து
வேளாண்மைவெங்கருனை வேம்பாகுங்-கோளா
யபரானைப்போழ்தி னடக்கிடுவரோனுந்
தமராவர்மாட்டேயினிது.

இ-ள். கோளாய்-(மனதே) கேட்பாயாக, நாள்வாய்-காலத்திலே, தம்-தமது, நள்ளாதார்-பகைவர், இல்லத்து-வீட்டில், வேளாண்மை-உபகாரமாக, வெங்கருனை-விருப்பத்தரும்பொறிக்கறிச் (சோற்றை) பெறினும்-பெற்றாலும், வேம்பாகும்-வேம்புக்கொப்பாகும், அபரானைப்போழ்தில்-அகாலத்தில், அடக்கு-இலக்கறியை, இடுவரோனும்-இடுவராதலும், தமராவர்மாட்டே-சுற்றத்தாரிடத்தண்ணல், இனிது-இன்பமாம்—எ-று. * (இ-ம்) காலத்தில் பகைவரிடத்தில் பொறிக்கறிசோற்றைப்பெற்றாலும் வேம்பாகும் அகாலத்தில் இலக்கறி சோறிடுவராகிலும் இனத்தாரிடத்திலுண்டாலின்பம் என்பதாம். கருனை-எ, வேம்பாகும்-ப, உண்டல்-தொன்று-எ, இனிது-ப. (எ)

முட்டிகைபோல முனியாதுவைகலுங்
கோட்டியுண்பாருங் குறடுபோற்-கைவிடுவர்
சுட்டுக்கோல்போல வெரியும்புகுவரோ
நட்டாரெனப்படு வார்.

இ-ள். முட்டிகைபோல்-சொல்லன்சம்மட்டிபோல, முனியாது

து-வெறுக்காது, வைகலும்-நாடோறும், கொட்டி-அழித்து, உண்பா
ரும்-உண்பவரும், குறடுபோல்-அவண்குறட்டைப்போல, கைவிடுவர்
விட்டுநீங்குவர், நட்பார்-உறவினர், எனப்படுவார்-என்றுசொல்லப்
படுவார், சுட்டிக்கோல்போல்-உலர்சுணிக்கோல்போல, எரியும்-து
ன்பமெருப்பிலும், புகுவர்-பிரவேசிப்பர்—எ-று. ※ (இ-ம்) சம்ம
ட்டிபோலழிதக்கண் ணுறநட்பில்லார் கூடாட்டைப்போற்கைவிடுவர்உ
றவினென்ற சொல்லப்படுவார் உலையாணிக்கோல்போலத் துன்
பத்திலுமுடனிருப்பர் என்பதாம். உண்பர்-எ, கைவிடுவர்-ப, நட்
டார்-எ, புகுவர்-ப, எ-அசை. (அ)

நறுமலர்த்தண்கோதாய்-நட்டார்க்குநட்டார்
மறுமையிற்செய்வதொன்றுண்டோ-விறுமளவு
மின்புறவலின்புற்றெழீஇயவவரொடு
துன்புறவதுன்புறுக்கால்.

இ-ள். நறுமலர்-வாசம்விசும்மலர்ந்திறுதித்த, தண்-குளிர்ந்த, கோதாய்-மாலையையுடையவளே, நட்டார்க்கு-உறவினர்க்கு, நட்டார்-உறவினர், இறுமளவும்-சாமளவும், இன்புறவ-இன்பமடைவ
னவற்றில், இன்புற்று-இன்பமடைந்து, எழீஇ-நல்வழியினடந்து, அ
வரொடு-அவருடன், துன்புறவ்-துன்பமடைவனவற்றில், துன்புறுக்
கால்-துன்பமடையாவிடில், மறுமையும்-மறுபிறப்பிலும், செய்வது-
செய்யத்தக்கது, ஒன்றுண்டோ-ஒருதவியுண்டோ—எ-று. ※ (இ-ப்)
மாலையையுடையவளே உறவினர்க்குறவினர் மரணபரியந்தம் இன்
பங்களையுந் துன்பங்களையு மநுபவிக்காவிட்டால் மறுபிறப்பிலுஞ்
செய்யத்தக்கஒருதவிக்கடனுண்டோவென்பதாம். ஒன்று-எ, உண்டு-ப

விருப்பிலாரிற்சென்று வேறிருந்துண்ணும்
வெருக்குக்கண்வெங்கருஞை வேம்பாம்-விருப்புடைத்
தன்போல்வாரில்லுட்டயங்குநீர்த்தண்புற்கை
யென்போழியத்த வமிழ்து.

இ-ள். விருப்பிலார்-தம்மிலாசையில்லாதவர், இல்லத்து-வீட்டி
ல், வேறிருந்து-வேறுகவிருந்து, உண்ணும்-உண்கிற, வெருக்குக்
கண்-பூனைக்கண்போலுநிறமுடைய, வெங்கருஞை-விருப்பத்தரும்
பொறிக்கறி-போசனமும், வேம்பாம்-வேம்புக்கொப்பாம், விருப்பு
டை-தன்மேலாசையுடைய, தன்போல்வார்-தன்னினிகர்த்தவர், இல்
லுள்-வீட்டில், தயங்கு-தெளிந்த, நீர்-நீரையுடைய, தண்-குளிர்ந்த,
புற்கை-புல்லரிசிக்கூழானது, என்போடு-எலும்புடனே, இயைந்த-
பொருந்திய, அமிழ்து-அமிழ்தக்கொப்பாம்—எ-று, ※(இ-ம்)விருப்
பில்லார் வீட்டிலுண்ணும் பொறிக்கறியுணவுவேம்புக்கொப்பாகும்
விருப்புள்ளார் வீட்டிலுண்ணும் புல்லரிசிக்கூழ் அமிழ்துக்கொப்
பாகுமென்பதாம். கருஞை-எ, வேம்பாம்-ப, புற்கை-எ, அமிழ்து-ப. ()

சுற்றந்தழால்-முற்றிற்று.

நட்பாராய்தல்.

அஃதாவது-சினேகத்தையாராய்தலாகும்.

கருத்துணர்ந்தகற்றறிந்தார் கேண்மையெஞ்ஞான்றுங்
குருத்திற்கரும்பு நின்றற்றே-குருத்திற்
கெதிர்செலத்தின்ற தகைத்தாகோவென்று
மதாமிலாளர் தொடர்பு.

இ-ள். கருத்து-கருத்தால், உணர்ந்து-அறிந்து, கற்றறிந்தார்-பலநூலையறிந்தவர், கேண்மை-நட்பானது, எஞ்ஞான்றும்-எந்நாளும், கரும்பு-கரும்பை, குருத்தின்-குருத்திலிருந்து, நின்றற்று-நின்றாற்போலும், மதாமிலாளர்-கல்விமதாபிமில்லாதவர், தொடர்பு-நட்பானது, என்றும்-எந்நாளும், குருத்திற்கு-கரும்பின்குருத்திற்கு எதிர்செல்-எதிராகியவழியிலிருந்து, நின்றதகைத்து-நின்றதுபோலும்—எ-று. * (இ-ம்) கற்றோர்சினேகங்கரும்பைநுனியிலிருந்து நின்றாற்போலும் மற்றோர்சினேகமக்கரும்பையடியிலிருந்தநின்றாற் போலும் என்பதாம். கேண்மை-ஏ, நின்றற்று-ப, தொடர்பு-எ, நின்றதகைத்து-ப, ஆரோ-எ-அசைகள். (க)

இற்பிறப்பெண்ணி யிடைதிரியாரென்பதோர்
நற்புடைக்கொண்டமை யல்லது-பொற்கேள்
புனலொழுகப்புள்ளிரியும் பூங்குன்றநாட
மனமறியப்பட்டதொன்றன்று.

இ-ள். பொற்கேள்-பொன்னிறம்போலும், புனல்-அருவிச்சலம், ஒழுக-விழுக, பறவைகள்-பறவைகள், இரியும்-பறக்கும், பூ-அழகிய, குன்றம்-மலையையும், நாட-நாட்டையுமுடையபாண்டியனே, இற்பிறப்பு-நற்குடிப்பிறப்பை, எண்ணி-நினைத்து, இடை-நடுவில், திரியார்-வேறுபடார், என்பது-என்றுசொல்வது, ஓர்-ஒரு, நற்புடை-நல்லிடம்பற்றி, கொண்டமை-நட்புக்கொண்டமை, அல்லது-அல்லாமல், மனம்-அவர்மனமானது, அறியப்பட்டது-பிறரால்அறியப்பட்டது, ஒன்றன்று-ஒன்றல்ல—எ-று. * (இ-ம்) பாண்டியனே நற்குடிப்பிறப்பைநினைத்து நடுவிலேவேறுபட்டொன்று ஒருவனைச்சினேகஞ்செய்ததல்லாது அவர்மனநிலையறியப்பட்டதல்ல என்பதாம்.மனம்-எ, பட்டதன்று-ப. (உ)

யானையானையவர் நண்பொறிதினாயனையார்
கேண்மைதழீஇக் கொளல்வேண்டும்-யானை
யறிந்தறிந்துபாகனையே கொல்லுமெறிந்தவேன்
மெய்பதாவால்குழைக்கு நாய்.

இ-ள். யானை-யானையை, அனையவர்-ஒப்பானவர், நண்பு-சிநேகத்தை, ஓரீஇ-நீக்கி, நாய்-நன்றியறியுநாயை, அனையார்-ஒப்பானவர், கேண்மை-நட்பை, தழீஇக்கொளல்-தழுவிக்கொள்ளுதல், வேண்டும்-வேண்டும், யானை- யானையானது, அறிந்தறிந்தும் (இறைதருவேனென்) றறிந்து, பாகனையே-பாகனை, கொல்லும்-கொலைசெய்யும், நாய்-நாயானது, எறிந்த-எசமானெறிந்த, வேல்-வேலானது, மெய்யதா-தன்னுடலிருக்க, வால்-வாலை, குழைக்கும்-ஆட்டும்-எ-று. *(இ-ம்)யானைக்கொப்பானவர் சிநேகத்தைவிட்டு நாய்க்கொப்பானவர்சிநேகத்தைக்கொள்ளவேண்டுமென்பதாம். நீவிர்தோன்றுவெழுவாய் கொளல்வேண்டும்-ட, கேண்மையை-செ, எ-அசை. (ங)

பலநாளும்பக்கத் தாயினுநெஞ்சிற்
சிலநாளுமொட்டாரோ டொட்டார்-பலநாளு
நீத்தானெனக்கைவிட லுண்டோதந்நெஞ்சத்
தியாத்தாரோடியாத்த தொடர்பு.

இ-ள். பலநாளும்-எந்நாளும், பக்கத்தாயினும்-அருகிலிருந்தாராகிலும், நெஞ்சில்-மனதில், ஒட்டாரோடு -பொருத்தமில்லாருடன், சிலநாளும்-சிலநாளும், ஒட்டார்-சிநேகியார், தம்-தமது, நெஞ்சத்து-மனதில், இயாத்தாரோடு-சம்பந்தப்பட்டாருடன், இயாத்தகட்டுப்பட்ட, தொடர்-சிநேகத்தை, பலநாளும்-பலநாளும், நீத்தானை-நீங்கினானொன்று, கைவிடலுண்டோ-கைவிடக்கடவதோ-எ-று. *(இ-ம்) பலகாலும் பழகினவராகிலும் மனம்பொருத்தமில்லாருடன் சிலகாலமுஞ் சிநேகஞ்செய்யார் மனப்பொருத்தமுடையார் சிநேகத்தைவிடுவார்களோ என்பதாம். ஒருவர்-எ, ஒட்டார்-ப, ஒருவர்-எ, கைவிடலுண்டோ-ப, தொடர்மை-செ. (ச)

கோட்டுப்பூப்போல மலர்த்துபிற்கூம்பாது
வேட்டதேவேட்டசா நட்பாச்சி-தோட்ட
சயப்பூப்போன்முன்மலர்த்து பிற்கூவும்புவானை
நயப்பாருநட்பாரு மில்.

இ-ள்: கோடு-கொம்பிற்பூத்த, பூப்போல்-பூவைப்போல, மலர்த்து-அலர்த்து, பின்,பின்பு, கூம்பாது-முகங்குவியாது, வேட்டதே-இச்சித்ததே, வேட்டதாம்-இச்சித்ததாகும், நாட்பாட்சி-சிநேகவரிமை, தோட்ட-தோண்டிய, கயம்-குளத்தின், பூப்போல்-பூவைப்போல, முன்-முன்னே, மலர்த்து-அலர்த்து, பின்-பின்னை, கூம்புவானை-முகங்குவிப்பானை, நயப்பாரும்-இச்சிப்பாரும், நட்பாரும்-சிநேகிப்பாரும், இல்-இல்லை—எ-று. *(இ-ம்) மரத்திற்பூத்தபூவைப்போல முகமலர்ந்து சிநேகித்தே சிநேகம் குளத்தில்பூத்த பூவைப்போல முகங்குவிப்பார் சிநேகம் சிநேகமல்லவென்பதாம். நட்பாட்சி-ன, வேட்டதாம்-ப, நயப்பார்-ன, இல்-ப. (ரு)

கடையாயார்நட்பிற் கழுகனையரோனை
யிடையாயார்தெங்கி னனையர்-தலையாயா
ரெண்ணரும்பெண்ணேபோன்றிட்டஞான்றிட்டதே
தொன்மையுடையார்தொடர்பு.

இ-ள். கடையாயார்-கடையானவர், நட்பின்-சிநேகத்தில், கழுகனையர்-பாக்குமரத்தையொப்பாவர், ஏனை-மற்ற, இடையாயார்-இடையானவர், தெங்கினனையர்-தென்மரத்தையப்பானவர், தலையாயார்-தலையானவர், எண்ணரும்-நினைத்தற்கரிய, பெண்ணேபோன்ற-பனைமரத்தையொப்பானவர், இட்டஞான்ற-இட்டகாலத்தில், இட்டதே-இடப்பட்டதே, தொன்மையுடையார்-பழமையுடையார், தொடர்பு-சிநேகம்—எ-று. * (இ-ம்) சிநேகத்திலுத்தமர்பனைமரத்தையொப்பாவர், மத்திமர்தென்னைமரத்தையொப்பாகர் அதமர்பாக்குமரத்தையொப்பாவரீ-எ-ம், கடையாயார் இடையாயார் தலையாயார் எழுவாய்-அனையர், பயனிலை. (௬)

கழுநீருட்காரட கேணியொருவன்
விழுமிதாக்கொள்ளி னமிழ்த ரீண்விழுமிய
குப்பத்துவையார்வெண்சோறெயினுமேவாதார்
கைத்துண்டல்காஞ்சிறங் காய்.

இ-ள். கழுநீருள்-அரிசிகழுகுநீரில்வெந்த, கார்-பசிய, அடகேனும்-இலைக்கறியாகிலும், ஒருவன்-ஒருவன், விழுமிதா-சிறப்பாக, கொள்ளின்-(சிநேகரிடத்துக்) கொண்டால், அமிழ்தாம்-அமுதுக்கொப்பாம், விழுமிய-சிறந்த, குப்-தானித்த, துவை-புளக்கறி, ஆர்-நிறைந்த, வெண்சோறெயினும்-வெண்சோறாகிலும், மேவாதார்-பகைவர், கைத்து-பொருளை, உண்டல்-புசித்தல், காஞ்சிரங்காய்-எட்டிக்காயோடொக்கும்—எ-று. * (இ-ம்) ஒருவன் இலைக்கறியாகிலும் சிநேகரிடத்துண்ணல் அமிழ்துக்கொப்பாம்-ஒருவன் சிறந்தகறியோடு பகைவரிடத்துண்ணல் எட்டிக்காயிக்கொப்பாம் என்பதாம்-அடகு-ஏ, அமிழ்தாம்-ப, கைத்து-எ, காஞ்சிரங்காய்-பயனிலை. (எ)

நாய்க்காற்சிறுவிரல்போ னன்கணியராயினு
மீக்காற்றுணையு முதவாதார்-நட்பென்னுஞ்
செய்தானுஞ்சென்றகொளல்வேண்டுஞ்செய்வினைக்கும்
வாய்க்காலனையார் தொடர்பு.

இ-ள். நாய்க்கால்-நாய்க்காலின், சிறுவிரல்போல்-சிறுவிரல்களைப்போல, நன்கணியராயினும்-மிகவுநெருக்கமுடையவராகிலும், ஈக்கால்-ஈயினதுகாலை, துணையும்-அளவும், உதவாதார்-உதவிசெய்யாதார், நட்பென்னும்-சிநேகமென்னபலனும், செய்-செழுனிலை, வினைக்கும்-விளைக்கும், வாய்க்கால்-நீர்வாய்க்காலை, அனையார்-ஒப்பானவர், தொடர்பு-நட்பை, செய்தானும்-தூரத்திலாகிலும், சென்று-

போய், கொளல்வேண்டும்-கொள்ளவேண்டும்—எ-று. * (இ-ம்)சமயினதுகாலளவு உதவிசெய்பாதார் நட்புச்சமீபத்திருந்தென்னபலன் கொடுப்போர் சிநேகத்தைத் தூரத்திற்சென்றுவது கொளல்வேண்டும் என்பதாம். நட்பு-ள், என்னும்-ப, ஒருவர்-எ, கொளல்வேண்டும்ப, தொடர்பை-செயப்படுபொருள்.

(4)

தெளிவிலார்நட்பிற் பகைநன்றுசாதல்
விளியாவருநோயினன்றுலனிய
விகழ்தலிற்கோற லினிதேமற்றில்ல
புகழ்தலின்னாவதலே நன்று.

இ-ள். தெளிவிலார் - விவேகமில்லார், நட்பின்-சிநேகத்தைப் பார்க்கிலும், பகைநன்று-பகைநன்மையாம், விளியா-சாவாமலிருக்க,வரும்-வரப்பட்ட,நோயின்-வியாதியைப்பார்க்கிலும், சாதல்-இறத்தல், நன்று-நன்மையாம், தனிய - ஒருவன்வருத்த, இகழ்தலின்-இகழ்தலைப்பார்க்கிலும்,கோறல்-கொல்லுதல், இனிது-நன்மையாம், இல்ல- இல்லாதனவற்றைச்சொல்லி, புகழ்தலின்-புகழ்தலைப்பார்க்கிலும், வைதலேநன்று-வைதிறதேநன்மையாம்—எ-று. * (இ-ம்) அறிவில்லாச்சிநேகத்திலும்-பகைநல்லது, வியாதியிலும் மரணம்நல்லது, இகழ்தலினும் கொல்லுதல்நல்லது, வீணுகப்புகழ்தலினும் வைதனல்லது என்பதாம். பகை-சாதல்-கோறல் - வைதல்-எ, நன்று-ப, ஆல்-எ, மற்று அசைகள் (அகத்தியச்சூத்திரம்) (ப்லவெழுவாயு மொருபயனிலைபெறும்.)

(5)

மரீஇப்பலரோடு பன்ணுண்முயங்கி
பொரீஇப்பொருட்டக்காக் கோடலேவேண்டும்
பரீஇயுயிர்செகுக்கும் பாம்பொடு மின்ன
மரீஇப்பிரிவுப் பிரிவு.

இ-ள். பலரோடு-பலருடன், மரீஇ-மருவி, பன்ணுள்-பலநாள், முயங்கி-கலந்து, பொரீஇ - (இவர்குணமு) மொப்பாகி, பொருள்-பொருளாக, தக்காரை-பெரியோரை, கோடல்வேண்டும்-சிநேகமாகக் கொள்ளவேண்டும், மரீஇ - ஒருவனாகச்சிநேகித்து, பின்னை - பின்பு, பிரிவு-அவனைவிட்டுப் பிரிதல், பரீஇ- பல்லாற்கழித்து, உயிர் - உயிரை,செகுக்கும்-நீக்கும்,பாம்பொடும்-பாம்போடுகொண்டநட்பிலும், இன்னு-துன்பமாம்—எ-று. * (இ-ம்) ஒருவர் பெரியோனைச் சிநேகமாகக்கொள்ளவேண்டும் சிநேகங்கொண்டுபிரிதல் துன்பம் என்பதாம். ஒருவர்-எ, கோடல்வேண்டும்-ப, தக்கார்-செ, பிரிவு-எ, இன்னு-பு,எ-அசை.

(ய)

நட்பாராய்தல் முற்றிற்று.

நட்பிற்பிழைபொறுத்தல்.

அஃதாவது- நட்பால்வருங்குற்றங்களைப்பொறுத்துக்கொள்ளலாம்.

நல்லாளொனைத்தா நனிவிரும்பிக்கொண்டானை
யல்லாளொனினு மடக்கிக்-கொளல்வேண்டு
நெல்லுக்கு.டியுண்டு நீர்க்குநுனையுண்டு
புல்லிதழ்பூவிற்கு முண்டு.—

இ-ள். நல்லாளொன-நல்லவனென்று, தாம்-தாம், நனி-மிகவும், விரும்பி-இச்சித்து, கொண்டானை-நட்புக்கொள்ளப்பட்டவனை, அல்லாளொனினும்-பொல்லாதவனாகிலும், அடக்கி-குற்றத்தையடக்கி, கொள்ளவேண்டும்-கொள்ளல்வேண்டும், நெல்லுக்கு-நெல்லுக்கு, உமியுண்டு-உமியுண்டு, நீர்க்கு-சலத்திற்கு, நுனையுண்டு-நுனையுண்டு, புல்லிதழ்-பறவிதழ், பூவிற்கும்-மலருக்கும்உண்டு-உண்டென-று *(இ-ம்) நல்லவனென்று சினேகிக்கப்பட்டவனை பொல்லாதவராலும் குற்றத்தைநீக்கிச் சினேகித்துக் கொள்ளவேண்டும் என்பதாம். ஒருவன் தோண்றுமெழுவாய்-கொளல்வேண்டும்-ப, கொண்டானை-செ. (அ)

செற்றோறுஞ்சிறப்பிலுஞ் செம்புனலோடார்
மறுத்துஞ்சிறைசெய்வர் நீர்நசை-வாழ்நர்
வெறுப்பவெறுப்பச் செயினும்பொறுப்பரே
தாம்வேண்டிக்கொண்டார் தொடர்பு.

இ-ள் செறுத்தோறும்- அடைக்குந்தோறும், உடைப்பிலும்-உடைத்தாலும், செம்-நல்ல, புனலோடு-நீருடன், ஆடார்-பிணங்கார், மறுத்தும்-மீண்டும், சிறைசெய்வர்-அணைகட்டுவர், நீர்-சலத்தை, நசை-இச்சிக்கு, வாழ்நர்-வாழ்பவர், (அதுபோல) தாம்-தாங்கள், வேண்டி-விரும்பி, தொடர்பு-நட்பு, கொண்டார்-கொள்ளப்பட்டவர், வெறுப்ப-வெறுக்கத்தக்கவைகளை, செயினும்-செய்தாலும், பொருப்பர்-பொறுத்துக்கொள்வர் —எ-று. *(இ-ம்) சினேகிக்கப்பட்டவர் வெறுப்பானவைகளைச் செய்தாலுஞ்சினேகித்தவர் பொறுத்துக்கொள்வர்-என்பதாம். கொண்டார்-எ, பொறுப்பர்-ப, எ-ஆசை. (உ)

இறப்பவுவேறிய செயினுந்தந்நட்டார்
பொறுத்தற்குவதொன் றன்றே-நிறக்கோங்
குறவலவண்டார்க்கு முயர்வரைநாட
வொருவர்பொறையிருவர் நட்பு.

இ-ள். நிறம்-நிறமுடைய, கோங்கு-கோங்குமலரில், உருகெழுவுள்ள, வண்டு-வண்டினங்கள், ஆர்க்கும்-சத்திக்குஞ், உயர்வரை-உயர்ந்தமலையையும், நாட-நாட்டையுமுடையபாண்டியனே, தம்-தம்மோடு, நட்டார்-சினேகித்தவர், இறப்ப-மிகவும், வேறொல்லாங்குகளை, செயினும்-செய்தாலும், பொறுத்தல்-பொறுத்துக்கொள்ளு

தல், தகுவது-தக்கது, ஒன்றன்றே-ஒன்றல்லவா, (ஆதலால்) ஒருவர் பொறை-ஒருவர்பொறுத்துக்கொள்ளுதல், இருவர்நட்பு-இருவர்க்கு சிநேகமாம் —எ-று. * (இ-ம்) பாண்டியனே தம்முடையசிநேகர் மிகவுங் குற்றங்களைச்செய்தாலும் பொறுத்துக்கொள்ளல் வேண்டும் ஒருவர் பொறுத்தல் இருவருக்குஞ் சிநேகமாம் என்பதாம். நட்பு-எ, ஆம்என்னும்-பயனிலைதொக்கியது, எகாரம்-அசை. (ரு)

மழிநிலைதந்திட்ட வான்கதிர்முத்தங்
கடுவிசைநாவாய் கரையலைக்குஞ்-சேர்ப்ப
விடுதற்கரியா ரியல்பிலரோனெஞ்சஞ்
சுடுதற்குமூட்டிய தீ.

இ-ள். மழி-மழித்த, நிலை-அலைகள், தந்திட்ட-ஒதுக்கிய, வான்-வெள்ளிய, கதிர்-கிரணங்களையுடைய, முத்தம்-முத்துகளையும், கடுவிசை-மிகுத்தவேகமுடைய, நாவாய்-கப்பலையும், கரை-கரையிலே, அலைக்கும்-ஒதுக்கும், சேர்ப்ப-கரையையுடையபாண்டியனே, விடுதற்கு-சிநேகம்விடுதற்கு, அரியார்-அரிதானவர்கள், இயல்பிலார்-நற்குணமில்லாரோவானால், நெஞ்சம்-மனதை, சுடுதற்கு-சுடுகிறதற்கு, மூட்டிய-மூட்டப்பட்ட, தீ-நெருப்புக்கொப்பாவர் —எ-று. * (இ-ம்) பாண்டியனே சிநேகஞ்செய்யப்பட்டவர் நற்குணமில்லாதவரானால் சினைத்தவர் மனதைச்சுடு நெருப்புக் கொப்பாவார் என்பதாம். அரியார்-எ, நிலாவர்-ப. (சு)

இன்னுசெயினும் விடற்பாலரல்லாரைப்
பொன்னுகப்போற்றிக் கொளல்வேண்டும்-பொன்னோடு
நல்லிற்சிதைத்தநீ நாடொறுநாடித்தம்
மில்லத்திலாக்குதலால்.

இ-ள். பொன்னோடு-பொன்னுடன், நல்லில்-நல்லவீட்டை, சிதைத்த-சுட்ட, நீ-நெருப்பை, நாடொறும்-நாள்தோறும், நாடி-தேடி, தம்-தமது, இல்லத்தில்-வீட்டில், ஆக்குதலால்-(சமையற்கு) வளர்த்தலால், இன்னு-துன்புங்களை, செயினும்-செய்தாலும், விடற்பால-நல்லாரை-விடத்தகுதியல்லாதவர்களை, பொன்னுக-பொன்னைப்போல, போற்றி-காப்பாற்றி, கொளல்வேண்டும்-நட்புக்கொளல் வேண்டில்—எ-று. * (இ-ம்) வீட்டைசுட்டநெய்வீட்டிலே தேடிவைத்துக்கொள்ளுதலால் துன்பஞ்செயினும் விடத்தகுதியில்லாதவர்களைச்சிநேகித்துக் கொள்ளவேண்டும் என்பதாம். ஒருவர்-எ, கொளல்வேண்டும்-ப. (கு)

இன்னுசெயினும் விடுதற்கரியாரைத்
துன்னுர்துறந்த நகுவதோ-துண்ணருஞ்சீர்
விண்ணுத்தநீள்வரை வெற்பகளைபவோ
கண்ணுத்திற்றென்று தங்கை.

இ-ள். தண்ணரும்-நெருங்குதற்கரிய, சீர்-சிறப்பையுடைய, விண்-ஆகாயத்தை, குத்தும்-ஆளாவிய, நீள்-நீண்ட, வரை-மூங்கிலைப் பொருத்திய, வெற்ப-மலையையுடையபாண்டியனே, இன்னாமை-குற்றங்களை, செயினும்-செய்தாலும், விடுதற்கு-விட்டொழிதற்கு, அரியானை-அரியசிநேகத்தை, தான்-சிநேகியாமல், துறத்தல்-கைவிடுதல், தகுவதோ-தக்கதோ, தம்-தம்முடைய, கை-கையோனை, கண்-தங்கண்ணை, குத்திற்றென்று-குத்தியதென்று, களைபவோ-தறிப்பாரோ—எ-று. * (இ-ற்) பாண்டியனே குற்றங்களைச்செய்தாலும் விடுதற்கரிய சிநேகிதனைச் சிநேகியாது விடுதல்தகாது என்பதாம். துறத்தல்-எழுவாய், தகுவதோ-ப. (கூ)

இலங்குநீர்த்தண்சேர்ப்ப வின்னாசெயினும்
கலந்துபழிகாணார் சான்றோர்-கலந்தபிற்
றீமையெடுத்துரைக்குந் திண்ணறிவில்லாதார்
தாமுமவரிற் கடை.

இ-ள். இலங்கு-விளங்கும், நீர்-நீரையும், தண்-குளிர்ச்சியையும் பொருந்திய, சேர்ப்ப-கரையையுடையபாண்டியனே, இன்னா-குற்றங்களை, செயினும்-(ஒருவர்) செய்தாலும், சான்றோர்-பெரியோர், கலந்த-சிநேகித்து, பழி-குற்றங்களை, காணார்-பாராதார், கலந்தபின்-சிநேகித்தபின், தீமை-குற்றங்களை, எடுத்துரைக்கும்-எடுத்துச்சொல்லும், திண்-வலிய, அறிவில்லாதார்-அறிவிலாதவர், தாமும்-தாங்களும், அவரின்-அடைப்பார்க்கிலும், கடை-கடையானவர்—எ-று. * (இ-ம்) பாண்டியனே பெரியோர்கள் தம்முடைய சிநேகர் குற்றங்களைச்செய்தாலும் அவர்குற்றங்களைப்பாராது, குற்றங்களைச்சொல்பவர் குற்றஞ்செய்தவரிலுங் கடையாவர் என்பதாம். சான்றோர்-எழு, காணார்-ப, பழி-செ, அறிவில்லாதார்-எ, கடையாவார்-ப. (எ)

எதிலார்செய்ப திறப்பவேதிதெனினு
நோதக்கதென்னுண்டா நோக்குங்காற்-காதல்
கழுமியாற்செய்த கறங்கருவிநாட
விழுமிதாநெஞ்சத்துணின்று.

இ-ள் கறங்கு-சத்திக்கும், அருவி-வாற்றையும், நாட-நாட்டையுமுடையபாண்டியனே, எதிலார்-அயலார், செய்தது-செய்தகுற்றம், இறப்ப-மிகவும், திதெனினும்-குற்றமாகினும், நோக்குங்கால்-பார்க்குமிடத்தில், நோதக்கது-நோவத்தக்கது, என்னுண்டாம்-என்னவுண்டாம், காதல்-தம்மிலாசையுடைய, கழுமியார்-சிநேகர், செய்த-செய்தகுற்றம், நெஞ்சத்துள்-மனத்துள், நின்று-நிருத்தி, விழுமிதாம்-சிறப்பையுடையதாம்—எ-று. * (இ-ம்) பாண்டியனே அரியசிநேகர்செய்தகுற்றம் மனதிலிருத்தி சிறப்பையுடையதாகும், அயலார்செய்தது மிகவுங் குற்றமாயினும் வருத்தத்தக்கதென்னவென்பதாம். குற்றம்-எ, விழுமிதாம்-ப. (அ)

தமரென்றுதாங்கொள்ளப் பட்டவர்தம்மைத்
தமரன்மைதாமறிந்தா ராயி-னவரைத்
தமரினுநன்கு மதித்துத்தமரன்மை
தம்முளடக்குக்கொளல்.

இ-ள். தமரென்ற-உறவென்று, தாம்-தாம், கொள்ளப்பட்டவர் சிநேகிக்கப்பட்டவர், தம்மை-தம்மை, தமரன்மை-உறவில்லாமை யை, தாமறிந்தாராயின்-தாங்கண்டாராகில், அவரை-அவர்களை, தமரினும்-உறவினும், நன்கு-நன்றாக, மதித்து-எண்ணி, தமரன்மை-உறவில்லாமையை, தம்முள்-தமக்குள்ளே, அடக்கிக்கொளல்-அடக்கிக்கொள்ளவேண்டும்—எ-று. * (இ-ம்) சிநேகிக்கப்பட்டவரிடத்துச் சினேகமில்லாமையைக்கண்டால் அவரைச் சிநேகிதரிலும் அதிகமாகக்கொள்ளவேண்டும் என்பதாம். ஒருவர்-எ-, அடக்கிக்கொள்ளல்ப, தமரன்மை-ஒச. (கூ)

குற்றமுமேனைக் குணமுமொருவனை
நட்டபினுடித் திரிவேனே-னட்டான்
மறைகாவாவிட்டவ்ஞ் செல்வுழிச்செல்க
வறைகடல்சூழ்வைய நக.

இ-ள். குற்றமும்-குற்றத்தையும், ஏனை-மற்ற, குணமும்-குணத்தையும், ஒருவனை-ஒருவனை, நட்டபின்-சிநேகித்தபின், நாடி-தேடி திரிவேனேல்-திரிவேனாகில், நட்டான்-சிநேகித்தவன், மறை-இரகசியத்தை, காவாலிட்டவன்-வெளிப்படுத்தினவன், செல்வுழி-செல்லுநரகத்தில், அறை-சத்திக்கும், கடல்சூழ்-கடலாற்சூழப்பட்ட, வையம்-உலகம். நக;(என்னை) நகைக்க, செல்க-நான்போவேனாக—எ-று. * (இ-ம்) ஒருவன் குற்றத்தையுங் குணத்தையுஞ் சிநேகித்தபின் ஆராய்வேனாகில் சிநேகன் இரகசியத்தைச்சொன்னவன் போகுநரகத்திற்போவேனாக என்பதாம். ய்ன்-எ, செல்க-ப. (ஙி)

நட்பிற்பிழைபொறுத்தல்- முற்றிற்று.

உச-ம்-அதிகாரம்.

கூடாநட்பு.

அஃதாவது-பொருந்தாதசிநேகமாம்.

செருப்பில்பழங்கூரை சேறணையாக
விளைத்துநீர்தோற்றுங் கிடப்பர்-கறைக்குன்றம்
பொங்கருவிதாழும் புனல்வனாநன்னெட
தங்கருமமுற்றுந் துணை.

இ-ள். கறை-இருண்ட, குன்றம்-மலையில், பொங்கு-மிகுந்த, அருவி-ஆறு, தாழும்-வீழும், புனல்-நீரையுடைய, நல்-நல்ல, வனநாட-

மலைமீ றுநாட்டையுடையபாண்டியனே, செறப்பில்-கட்டவிழ்ந்த, பழம்-பழைய, கூரை - கூரையையுடையவீட்டில், சேற-சேற்றை, அணையாக-அணைகட்டி, இறைத்து-அணையுள்விழ்நீரையிறைத்தும், நீர்-ஒருநீரை, எற்றும்-மேலேதங்கியும், தம்-தமது, கருமம்- காரியம், முற்றத்துணை-முடியுமளவும், இடப்பர்-சிலர்இருப்பர்—எ-று. ※ (இ-ம்) பாண்டியனே மழைவிடுமளவும் ஏழுக்குலிட்டிலிருப்பார்போலக் காரியமுடியுமளவும் சிலர் சிநேகித்திருப்பார் என்பதாம். சிலர் தோன்று எழுவாய் இடப்பர்-பயனிலை. (க)

சீரியார்கண்ணைமைசிறத்தசிறப்பிற்றுய்
மாரிபோன்மாண்டபயத்ததா-மாரி
வறந்தக்காற்போலுமேலருவிநாடா
சிறந்தக்காற்சிரிலார்நட்பு

இ-ள். வால்-வெள்ளிய, அருவி-ஆற்றையும், நாட- நாட்டையுமுடையபாண்டியனே, சீரியார்- நல்லவர், கண்ணை- சிநேகமானது, சிறந்த-மிகுந்த, சிறப்பிற்றுய்-சிறப்புடைத்தாய், மாரிபோல்- மழைபோல, மாண்ட-மாட்சிமைப்பட்ட, பயத்ததாம்-பயனையுடையதாம், சிரிலார்-கெட்டவர்கள், நட்ப-சிநேகமானது, சிறந்தக்கால் மிக்கவிடத்து, மாரி-அம்மழை, வறந்தக்காற்போலும்-பெய்விட்டாற்போலும்—எ-று. ※ (இ-ம்)பாண்டியனே நல்லவர் சிநேகம் மழை பெய்தாற்போற் பயனுடையதாம் கெட்டவர் சிநேகம் அம்மழை பெய்பாவிட்டாற்போற்பயனில்லாதாம் என்பதாம். கண்ணை-எ, பயத்ததாம்-ப, நட்பு-எ, வறந்தக்காற்போலும்-ப. (உ)

நண்ணுணர்விலோடுகூடிநுகர்வுடைமை
விண்ணுலகேயொக்கும்விழைவிற்று-ணுண்ணூ
லுணர்விலராகியவூதியம்பில்லார்ப்
புணர்தனிரயத்துளொன்று.

இ-ள். நண்-நட்ப, உணர்வுலோடு-அறிவுளாருடன், கூடிசேர்ந்து, நுகர்வுடைமை-அநுபவிக்குமநுபவம், விண்ணுல்கு-தேவருலகை, ஒக்கும்-நிகர்க்கும், விழைவிற்று-பயனுடையது, நண்-நட்ப, நூல்-நூல், உணர்விலராகிய - ஊதியம்பயன், இல்லார்-இல்லாதவனை, புணர்தல்-சிநேகித்தல், நிரயத்துள்-நரகத்துள்ளே, ஒன்று-ஒருநாகத்துக்கொப்பாம்—எ-று. ※ (இ-ம்) அறிவுள்ளாரோடு சிநேகித்தல் சுவர்க்கத்துக்கொப்பாம்-அறிவில்லாரோடு சிநேகிதல் நரகத்துக்கொப்பாம் என்பதாம். நுகர்வுடைமை-எ, விழைவிற்ற-ப, புணர்தல்-எ, ஒன்று-ப, ஆல்-அசைகள். (ஊ)

பெருகுவதுபோலத்தோன்றிவைத்நிப்போ
லொருபொழுதுஞ்சொல்லாதே-நத்து
சந்தனநீள்சோலைச்சாரன்மலைநாட
பந்தமிலாளர்தொடர்பு.

இ-ள். அருகு-பக்கம், எல்லாம்-யாவும், நீள்-நீண்ட, சந்தனச் சோலை-சந்தனச்சோலைகளுள், சுரல்-குளிர்காற்றையுமுடைய, மலை நாட-மலைநாட்டையாளுமபாண்டியனே, பந்தமிலாளர்-உட்பிரிவு கமில்லாதவர், தொடர்பு-சினேகமானது, பெருகுவதுபோல-வளர்வதுபோல, தோன்றி-தோற்றி, வை-வைக்கோல், நிப்போல்-தீயைப்போல, ஒருபொழுதும்-ஒருநாளும், செல்லாது-செல்லாமல், நந்தும்-கெடுமே—என-று. * (இ-ம்) பாண்டியனே உள்ளன்பிலார் சினேகம் வைக்கோலின் தீயைப்போலத் தோன்றி யழியும் என்பதாம். தொடர்பு-எ, நந்தும்-ப, எ, அசை. (ச)

செய்யாதசெய்கு நாமென்றலுஞ்செய்வதனைச்
செய்யாதகாழ்த்துக்கொண்டோட்டலு-மெய்யாக
வின்புறூஉம்பெற்றியிகழ்ந்தார்க்குமதநிலையே
துன்புறூஉம்பெற்றிதரும்.

இ-ள். செய்யாத-செய்யாதகாரியத்தைச்செய்து, நாமென்றலும்-நாஞ்செய்வோமென்றுசொல்லும், செய்வதனை-செய்யுங்காரியத்தை, செய்யாது-செய்யாமல், காழ்த்துக்கொண்டு-நீட்டிக்கவிட்டு, ஓட்டலும்-வைத்தலும், மெய்யாக-உண்மையாக, இன்புறூஉம்-இன்பமடையத்தக்க, பெற்றி-பெருமையை, இகழ்ந்தார்க்கும்-இகழ்ந்தவர்களுக்கும், அந்நிலையே-அப்பொழுதே, துன்புறூஉம்-துன்பமடையத்தக்க, பெற்றி-பெருமையை, தரும்-கொடுக்கும்—எ-று. * (இ-ம்) செய்யாதகாரியத்தைச் செய்வோமென்று சொல்லுதலுஞ்செய்யுங்காரியத்தைச்செய்யாதுவிடுதலுந்துன்பம் என்பதாம். காரியங்கள்-எ, தரும்-ப. பெற்றி-செயப்படுபொருள். (கூ)

ஒருநீர்ப்பிறத்தொருங்குநீண்டக்கடைத்து
விரிநீர்க்குவளையாம்ப-லொக்கல்லா
பெருநீரார்கேண்மைமிகவுளுந்நல்லார்
கருமங்கள்வேறுபடும்.

இ-ள். ஒருநீர்-ஒருசாதிநீரில், பிறந்து-தோன்றி, ஒருங்கு-ஒருவழிப்பட்ட, நீண்டக்கடைத்து-வளர்ந்தாலும், விரிநீர்-பலர்ந்த, நீர்குணமுடைய, குவளை-செங்கழுநீரை, ஆம்பல்-அல்லி, ஒக்கல்லா-ஒவ்வாது, (அதுபோல) பெரு-மிகவும், நீரார்-நற்குணமுடையார் கேண்மை-நட்பை, சிலிதுறும்-கொண்டாலும், நீரல்லார்-நற்குணமில்லார், கருமங்கள்-செய்காரியங்கள், வேறுபடும்-விதியாசப்படும்—எ-று. * (இ-ம்) செங்கழுநீரை அல்லி ஒவ்வாதுபோல நற்குணமுடையாரை நட்பைக்கொண்டாலும் நற்குணமுடையார் செய்காரியங்கள் வேறுபடும் என்பதாம். கருமங்கள்-எ, வேறுபடும்-ப.()

மூற்றச்சிறுமதிமுற்பட்டதற்றதை
கெற்றுக்கண்டன்னவிலான்-ஞெமிர்த்திட்டிக்

குற்றப்பரிக்குமலைநாடவின்றேதே
யொற்றுமைகொள்ளாதார்நட்பு.

இள். முற்றல்-முதிர்ச்சியல்லாத, சிறுமந்தி-சிறுகுரங்கு, முன்தன்முன், பட்ட-வரப்பட்ட, தந்தையை-(இரைகொண்டிவந்த) தந்தையை, நெற்ற-பயற்றநற்றை, கண்டன்ன-கண்டதொத்த, ஞரலால்-ஆரல்களால், எறுழ்த்திவிட்டு-அடித்து, குற்றி-குத்தி, பரிக்கும்-இரையைப்பிடுக்கும், மலைநாட-மலையையுநாட்டையுமுடைய பாண்டியனே, ஒற்றுமை-ஒருவரிடத்தில்கொள்ளாதார்-கொள்ளாத்வதாகிய, நட்பு-சினேகமானது, இன்றுது-பொல்லாது—எ-று. *(இ-ள்) பாண்டியனே மனவுரிமையில்லாதார் சினேகம்பொல்லாது என்பதாம். நட்பு-எ, இன்றுது-ப, எகாரம்-அசை. (எ)

முட்டுற்றபோழ்தின்முடிவென்றுரையினை
நட்டானெருவன்கைநீட்டேனை-நட்டான்
கடிமனைகட்டழித்தான்செல்வுழிச்செல்க
நெடுமொழிவையகம்.

இ-ள். முட்டு-துன்பம், உற்றபொழுதில்-வந்தபோது-முடிவினாலாக, என்-எனது, உரையினை-நிறைந்தவுயிரை, நட்டானெருவன்-சினேகஞ்செய்தவொருவன், கை-கையில், நீட்டேனை-கொடேனாகில், நட்டான்-சினேகனுடைய, கடி-காவல்பொருந்திய, மனை-மனையகத்தை, கட்டு-கற்பை, அழித்தான்-அழித்தவன், செல்வுழி-போகுந்நாகத்தில், நெடு-மிக்க, மொழி-புகழையுடைய, வையம்-உலகம், நகும்-என்னை நகைப்பதாக, செல்க-வான்போகக்கடவேன்—எ-று. * (இ-ம்) சினேகனுக்கு ஆபத்துவந்தபோது என்னுயிரை அவன்கையிற்கொடாதகில் சினேகன்பெண்சாதி கற்பை அழித்தவன் போகுநாகத்திற்போகக்கடவேன் என்பதாம். வான்றோன்ற-எ-செல்க-ப. (அ)

ஆன்படுநெய்பெய் கலனுளதுகளைந்து
வேம்படுநெய்பெய்தற்றோ-தேம்படு
நல்வனாறாட நயமுணர்வார்நண்பொரீஇப்
புல்லறிவுறொடு நட்பு.

இ-ள். தேம்-தேன், படு-பொருந்திய-நல்-நல்ல, வனை-மலையையும், நாட-நாட்டையுமுடையபாண்டியனே, நயம்-நீதியை, உணர்வார்-அறிவிப்பவரது, நண்பு-சினேகத்தை, ஒரீஇ-விட்டு, புல்-அற்ப அறிவிறுமொடு-அறிவாளருடன், கட்பு, கொண்ட) கட்பானது, ஆன்-பசுவால், படு-உண்டான, நெய்-நெய்யை, பெய்-வார்த்திருந்த, கலனுள்-கலசத்துள், உக-அந்தநெய்யை, களைந்து-எடுத்து, வேட்படு-வேர்பிலுண்டான, நெய்-நெய்யை, பெய்வனைத்து-வார்த்துவைத்தாற்போலும்—எ-று. * (இ-ட்) பாண்டியனே அறிவுடையார்சினேகத்தைவிட்டு அறிவிலார் சினேகத்தைக்கொள்ளுதல் கலசத்தில்

பகையின் கெய்மையறிந்து கெம்பின்கெய்மை விட்டாற்போலும் என்பதாம். கட்பு-ஏ, அல்லதற்கு-ப, கோ-அசை, (கூ)

உருவிற்கமைந்தான்க ணூராண்மையின்மை
பருகற்கமைந்த பானீ-ராயற்றே
யறிவுடையார்நியினைத்தா ராருதற்குகம்
வெரிபெடைமேயாடாயுஷ்ட்டற்று.

இ-ள். உருவிற்கு - வடிவழகுக்கு, அமைந்தான்கண்-(அழகு) பொருந்தியவழிடத்து, ஊராண்மை-நிலைகெத்தன்மை, இன்மை-இல்லாமையான தது, பருகற்கு-குழுத்தற்கு, அமைந்த-பொருந்திய, பால்-பாலில், நீர்-சலத்தை, உளாயுற்று-கலந்தாற்போலும், அறிவுடையார்-அறிவுடையவர், நியினைத்தார்-கொடியகூட்டதகார், ஆருதல்-ஆதல், அகம்-காகமானது, வெரி-பிரிய ஒபாம்பின், பெடையோடு-பெட்டையுடன், ஆடிஷ்ட்டற்று-கூடிப்புணர்ந்தாற்போலும்—எ-று. * (இ-ம்) அழகுள்ளவனிடத்துக் கிழக்க மில்லாமையானது பாலிலே நீர்கலந்தாற்போலும், தலைவர்கள் கெட்டவர்களாகுதல்-காகம் பிரியன் பெட்டையோடு சேர்ந்தாற்போலும் என்பதாம். இன்மை-வ, உளாயுற்று-ப, காகம்-எ, ஆடிஷ்ட்டற்று-ப. (ஏ)

கூடாநட்பு-முற்றிற்று.

உறு-ம்-அதிகாரம்.

அறிவுடைமை.

அஃதாவது-அறிவுடையதாயிருக்குந்தன்மையாம்.

பகைவர்பணிவிட நோக்கித்தகவுடையார்
தாமேயநாணித் தலைச்சென்வார்-காலு
யிளம்பிறையாபக் காற்றிலக்கைச்சேரா
தணங்கருந்துப் பினரா.

இ-ள். இளம்பி-றை-இளம்பிறை, ஆப்க்கால்-ஆறுல், நிங்களை-சந்திரனை, அணங்கு, வருந்தச்செய்யும், அரும்-அரிய, துப்பின்-வலியுடைய, அரா-பாம்பான தது, சேரா து-அடையாது, (அதுபோல) பகைவர்-பகையாளிகள், பணிவிடம்-தளர்ந்தவிடம்; நோக்கி-பார்த்து, தகவுடையார்-அறிவுடையார், தாமேயும்-நாங்கள், நாணி- அவர்க்கிரங்கி, தலைச்செல்வார்-(கொடுக்க) முதன்மையாகப்போகார். காலுய்-பாராய்—எ-று. * (இ-ம்) இளம்பிறையாகிற் சந்திரனை பாம்புசேராது, அதுபோலப் பகைவர்தளர்ந்தவிடத்து அறிவுடையோர் அவரை வெல்லச்செல்லார் என்பதாம். தகவுடையார் எ, செல்வார்-ப (சு)

தனிகடற்றண்சேர்ப்ப நல்கூர்ந்தமக்கட்
கணிகலமாவதடக்கம்-பணிவில்லீர்

மாந்தினாயின்றி நடக்குமேல்வாழுமூர்
கோத்திரங்கூறப் படும்.

இ-ள். நனி-பெரிய, தண்-குளிர்ந்த, கடல்-கூலியுர், சேர்ப்பகனையையுமுடையபாண்டியனே, கல்கூர்ந்த-வறுமையடைந்த, மக்கட்கு-மனிதர்க்கு, அணிகலமாவது-ஆபரணமாவது, அடக்கம்-அடங்கி நிற்றல், பணிவில்-அடக்கமில்லாத, சீர்-சிறப்பையுடைய, பாத்திரமின்றி-அளவுகடந்து, நடக்குமேல்-நடப்பானுகில், வாழும்-தான்வாழும், ஊர்-ஊராரால், கோத்திரம்-தன்குலத்திற்குக்குறைந்தது, கூறப்படும்-சொல்லப்படுவான், —எ-று. ※(இ-ம்) பாண்டியனே தனித்திரர்களுக்கு ஆபரணமடக்கமாம்-ஒருவன் அளவுகடந்தடப்பானுகில் ஊராரால்பழிக்கப்படுவான் என்பதாம். அணிகலம்-எ, அடக்கம்-ப, (கன்னூல்(பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற்-செல்லாகாகுஞ் செய்யுமென்முற்றே) இவ்விதியால்-செய்யுமென்றார், வாய்பாட்டு-முற்றபடியெனன்றுயிற்று. (உ)

எந்நிலத்துவித்திடினுங் காஞ்சிரங்காழ்தெங்காகா
தென்னுட்டவருஞ் சுவர்க்கம்-புகுதலாற்
றன்னுற்றுறுமறமைவடநிலையும்
கொன்னுளர்சாலப் பலர்.

இ-ள். எந்நிலத்து-எந்தநிலத்தில், வித்திடினும்-விதைபோட்டாலும், காஞ்சிரம்-எட்டியின், காழ்-விதை, தெங்காகா-தென்னைமரமாகாது, தென்னுட்டவரும்-தெற்கிலுள்ளவருர், சுவர்க்கம் புகுதலால்-(தருமஞ்செய்து) சுவர்க்கத்திற்பிறவேண்டுதலால், தன்-தனது, ஆற்றல்-தருமவழிபால், மறமை-மறுபிறப்பு, ஆகும்-ஆம், வடதிசையும்-வடதிக்கிலும், கொன்னுளர்-தருமப்பலனில்லாதார், சாலப்படர்-மிகவும்பலர்—எ-று. ※(இ-ம்) எட்டிவிதைநாடத்தென்னைமரமாகாதுதெற்குள்ளவருஞ்சுவர்க்கத்திற்போவர், வடத்துள்ளவரும்நரகத்திற்போவரென்பதாம். மறுமை-ஈ, ஆகும்-ப, தெற்கு-யமதிசை, வடக்கு-தெய்வதிசை, உயர்ந்தவிடத்திருப்பினும் பாவிகள்புண்ணியர்களாகார், தாழ்ந்தவிடத்திருப்பினும் புண்ணியர்கள்பாவிகளாகார். (ஊ)

வேம்பினிலையுட் கனியினும்வாழைதன்
நீஞ்சுவையாகற் கிரியாதே-மாங்கே
யினந்நினதினுமியல்புடையார்கேண்மை
மனந்நிதாம்பக்கம் மரிது.

இ-ள். வேம்பின்-வேம்பினுடைய, இலையுள்-இலையில், வாழை-வாழைக்காய், கனியினும்-பழுத்தாலும், தன்-தனது, நிஞ்சுவை-கினியமதாம், யாது-எவ்வளவும், கிரியாது-வேறுபடாது, அங்கு-அதுபோல, இனம்-தன்னினம், நினினும்-குற்றமாகிலும், இயல்புடையார்-கற்குணமுடையார். கேண்மை-உறவாம், மனம்-இருதயம், நிதாம்-குற்றமாகும், பக்கம்-பட்சம், அரிது-அருமை—எ-று. ※

(இ-ம்) வாழை வேம்பிலையிற்பழுத்தாலும் மதுரங்கெடாதுஅதுபோல கல்லவர் தீயவருடன் சேரினும் அவர்மனங்கெடாது என்பதாம். மனம்-எ, அரிது-ப, ஆம்-எ, அசை. (ச)

கடல்சார்ந்துபின்னீர் பிறக்குமலைசார்ந்து
முட்பீண்டுவரி பிறத்தலாற்-றக்க
வினத்தனையரல்ல ரெறிகடற்றண்சேர்ப்ப
மனத்தனையர்மக்க ளென்பார்.

இ-ள். எறி-அலைகளையெறியும், கடல்-கடலையும், தண்-குளிர்ந்த சேர்ப்ப-இறங்குதுறையையுமுடையபாண்டியனே, கடல்-சமுத்திரம், சார்ந்தும்-சார்ந்தவிடத்தும், இன்னீர்-இனியநீரானது, பிறக்கும்-உண்டாம், மலை-மலை, சார்ந்தும்-சார்ந்தவிடத்தும், உப்பு-உப்பு, ஈண்டு-திருந்த, உவரி-உவர்நீர், பிறத்தலால்-உண்டாதலால், மக்களென்பார்-மக்களென்றுசொல்லப்படுவார், தத்தம்-தந்தம், இனத்து-கூடினவினத்தின், அனையர்-ஒப்பானவர்—எ-று. ※ (இ-ம்)பாண்டியனே கடல்சார்ந்தவிடத்திலும் நல்லநீருண்டாம் மலைசார்ந்தவிடத்திலும்உப்புநீருண்டாம் ஆதலால் அறிவுளோர்மனத்தாலொத்தவரல்லதுஇனத்தாலொத்தவரல்லர் என்பதாம். மக்களென்பர்-எ, மனத்தனையர்-ப. (கூ)

பாரமரைப்புன்னைபடுகடற்றண்சேர்ப்ப
வொராஅலுமொட்டாலுஞ் செய்பவோ-நல்ல
மருவுச்செய்தியார் மாட்டுந்தங்குமனத்தார்
விராஅயச்செய்யாமை நன்று.

இ-ள். பாரமரை-பருத்தவடியினையுடைய, புன்னை-புன்னைமரங்கள், படு-பொருந்திய, தண்-குளிர்ந்த, கடற்சேர்ப்ப-கடற்கரையையுடையபாண்டியனே, தங்கும்-(சுத்தத்) தங்கும், மனத்தார்-மனமுடையவர், கல்ல-நன்மைகள், மருவு-மருவிய, செய்தியார்மாட்டும்-ஒழுக்கமுடையாரிடத்தும், ஓராஅலும்-நீங்கலும், ஒட்டலும்-கூடுதலும், செய்பவோ-செய்வார்களோ, விராஅய்-ஒருவருடன்கலந்து செய்யாமை-சிநேகியாதிருத்தல், நன்று-நல்லது—எ-று. ※ (இ-ம்) பாண்டியனே சுத்தமுனமுள்ளோர் நல்லவரிடத்து கட்டுக்கொள்ளலும் கட்புவிடுதலுஞ் செய்யார் யாவரிடத்துஞ் சிநேகியாமை நல்லதுஎன்பதாம். செய்யாமை-எ, ன்று-ப, (கூ)

உணரவுணரு முணர்வுடையாரைப்
புணரப்புணருமா மின்பம்-புணரிற்
றெரியத்தெரியுந் தெரிவிலாதாரைப்
பிரியப்பிரியுமா நோய்.

இ-ள். உணர-(சிநேகஞ்) செய்தற்கரிய, உணருர்(சிநேக)நிலையறியும், உணர்வுடையாரை-அறிவுடையாரை, புணர-சிநேகிக்க, இன்பம்-இன்பமானது, உணரும்-பொருந்தும், உணர்வு-சிநேகிக்கும்; தெரி

வ-சிநேகிதஞ்செய்தறிய, தெரியும்-சிநேகநிலைதெரியும், தெரிவிலா தானை-அறிவிலாதவனை, பிரிய-சிநேகம்விட்டுப்பிரிய, நோய்-துன்பமானது, பிரியும்-நீங்கும்—எ-று. * (இ-ம்) அறிவுடையோனைச் சிநேகித்தால் இன்பமுண்டாகும் அறிவிலார் சிநேகத்தை விட்டால் இன்பமுண்டாகும் என்பதாம். இன்பம்-எ, புணரும்-ப, நோய்-எ, பிரியும்-ப, ஓம்-இரண்டும்-அசைகள். (எ)

நன்னிலக்கட்டன்மை நிறுப்பானறிந்தன்னை
நிலைகலக்கிக்கீழ்நிலையாக்கி-நிலையினு
மேன்மேலுயர்த்துறுப்பானுற்றன்னை
கலையாகச்செய்வானுற்றான்.

இ-ள். நல்ல-நல்ல, நிலைக்கண்-நிலையினிடத்து, தன்னை-தன்னை, நிறுப்பானும்-நிறுத்திக்கொள்பவனும், தன்னை-தன்னை, நிலைகலக்கி-அந்நிலைகெடுத்து, கீழ்நிலையாக்கி-கீழாக்கிக்கொள்பவனும், நிலையினும்-முன்னிருந்தநிலையிலும், மேன்மேல்-(தன்னை)மேலுமேலும், உயர்த்து-உயரப்பண்ணி, நிறுப்பானும்-நிறுத்திக்கொள்பவனும், தன்னை-தன்னை, கலையாக-தலைமையாக, செய்வானும்-செய்துகொள்பவனும், தான்-தானே—எ-று. *(இ-ம்) ஒருவன் தன்னை நல்லநிலையினிறுத்திக்கொள்ளலும் அந்நிலைக்குக் கீழாக்கிக்கொள்ளலும் முன்னிருந்தநிலையிலு மேலாக்கிக்கொள்ளலும் தலையாக்கிக்கொள்ளலும் தன்னிலைதான் என்பதாம். தான்-எ, நிறுப்பான்முதலிய-ப. ()

கருமவரிசையாற் கல்லாதார்பின்னும்
பெருமையுடையாருஞ் சேற-லருமரபி
னேதமாற்ற மொலிகடற்றண்சேர்ப்ப
பேதைமையன்ற கறிவு.

இ-ள். ஓதம்-அலைகளை, அற்றம்-சத்திக்கும், ஒலி-சத்தத்தையுடைய, தண்-குளிர்ந்த, கடற்சேர்ப்ப-கடற்கரையையுடையபாண்டியனே, கருமவரிசையால்-காரியமுறைமையால், கல்லாதார்-கற்காதவர், பின்னும்-பின்னரவும், அரும்-அரிய, மரபின்-குலமுள்ள, பெருமையுடையாரும்-பெருமையுடையவறிவாளிகளும், சேறல்-சொல்லுதல், பேதைமையன்று-அறியாமையல்ல, அதறிவு-அந்தறியுடைமை—எ-று. * (இ-ம்) பாண்டியனே கல்லாதவர் பின்னுங்கற்றவருஞ் செல்லுதல் அறியாமையல்லகாரியமாகு மறிவுடைமையாம் என்பதாம். அது-எ, அறிவு-ப. (கூ)

கருமமுமுட்படாப் போகமுந்துவ்வாத்
தருமமுந்தக்கார்க்கே செய்யா-வொருநிலையே
முட்டின்றிமூன்று முடியுமேலஃதென்ப
பட்டினம்பெற்ற கலம்.

இ-ள். கருமமும்-காரியங்களும், உட்படா-உட்படும், போகமும்-போகத்தையும், துவ்வா-அநுபவித்து, தருமமும்-தருமத்தை

யும், தக்கார்க்கே-பெரியோர்க்கே, செய்யா-செய்து, ஒருநிலையே-ஒருபிறப்பில், முட்டின்றி-தடையில்லாமல், இம்மூன்றும்-இம்முச் செய்கைகளும், முடியுமேல்-ஒருவனுக்குவாய்க்குமாகில், அஃது-அம்முடிவு, பட்டாங்கு-தன்பட்டினத்தை, பெற்ற-அடைந்த, கலம்-(பொருள்கொண்டுவந்த) மாக்கலம், என்ப-என்பார்கள்—எ-று. * (இ-ம்) ஒருவனுக்குக் காரியங்களும் போகமுந் தருமமுங் கைகூடுமாகில் அதுபொருள்கொண்டுவந்த கப்பலுக்கொப்பாம்என்பதாம் அஃது-எ, கலமென்ப-ப. (ஈ)

அறிவுடைமை-முற்றிற்று.

உசு-ம்-அதிகாரம்.

அறிவின்மை.

அஃதாவது-அறிவில்லாமையைச் சொல்லுதலாம்.

நண்ணுணர்வின்மை வறுமையஃதுடைமை
பண்ணப்படைத்த பெருஞ்செல்வ-மெண்ணுங்கால்
பெண்ணாவாயாணிழந்த பேடியணியாளோ
கண்ணாவாத்தக்க கலம்.

இ-ள். நண்-நட்பமாகிய, உணர்வின்மை - அறிவில்லாமையே, வறுமை-தரித்திரமாம், அஃது-அவ்வறிவுடைமையே, பண்ண-செய்ய, படைத்த-வளர்த்த, பெருஞ்-பெரிய, செல்வம்- செல்வமாம், எண்ணுங்கால்-ஆராயுமிடத்து, பெண்-பெண்ணின்வடிவை, ஆவாய்-இச்சித்து, ஆண்-ஆணின்வடிவை, இழந்த - நீங்கிய, பேடி-பேடியானவள், கண்-கண்ணுக்கு- ஆவாத்தக்க-இச்சிக்கத்தக்க, கலம்-ஆபரணங்களை, அணியாளோ-தரியாளோ—எ-று. * (இ-ம்) அறிவில்லாமையே தரித்திரம் அறிவுடைமையே செல்வம் ஆசையால் மெண்ணழகை இச்சித்து ஆணழகைவிட்டபேடி ஆபரணங்களை அணியாளோ என்பதாம். உணர்வின்மை-எ, வறுமை-ப, உணர்வுடமை-எ, செல்வம்-ப. (க)

பல்லான்றகேள்விப் பயனுணர்வார்பாடழிந்
தல்லலுழப்பதறிதிரோ-தொல்சிறப்பி
னாவின்கிழத்தி யுறைதலாற்சேராளே
பூவின்கிழத்தி புலந்து.

இ-ள். பல்லான்ற-பலவிதமாகிநிரம்பிய, கேள்விப்பயன்-கல்விப்பயனை, உணர்வார்-அறிபவர், பாடு - தம்பெருமை, அழிந்து-கெட்டு, அல்லது-துன்பத்தில், உழப்பது-வருந்துவது, அறிதிரோ-அறியீரோ, தொல்-பழைய, சிறப்பின்-சிறப்பையுடைய, நாவின்கிழத்தி-சரஸ்வதி, உறைதலால்-வாசம்பண்ணலால், பூவின்கிழத்தி-இலக்குமி, புலந்து-பிணங்கி, சேராள்-அடையாள்—எ-று. * (இ-ம்)

சான்றவரிடத்தில் நிலக்குறி வாசம்பண்ணுதல் என்பதாம். பூவின்கிழத்தி-எ, சோள்-ப, எ-அசை. (உ)

கல்லென்றநந்தை கழறவதனினோர்
சொல்லென்றுகொள்ளா திகழ்ந்தவன்-மெல்ல
வெழுத்தோலைபல்லார் முன்னீட்டலினிபா
வழுக்கோலைக்கொண்டு விடும்.

இ-ள். நந்தை-பிதாவானவன், கல்லென்று-(நூல்களைக்) கற்றுக் கொள்ளென்று, கழற-சொல்ல, அதனின்-அச்சொல்லை, ஓர்சொல்லென்று-ஒருசொல்லென்று, கொள்ளாது-கொள்ளாமல், திகழ்ந்தவன்-பழித்தவன், மெல்ல-மெதுவாக, எழுத்தோலை-(ஒரு) னெழுதிய வோலையைவாசியென்று, பல்லார்முன்-பலபேர்முன், நட்ட-கொடுக்க, இனிபா-அவமதித்து, வழு-கெடுதியாக, கோலை-அடிப்பதற்குக்கோலை, கொண்டுவிடும்-எடுத்துக்கொள்வான்—எ-று. * (இ-ம்) பிதாபடியென்றுசொல்ல அச்சொல்லைக்கொள்ளாது பழித்தவன் கையில் வெறொருவன் எழுத்தோலை வாசியென்று பலர்முன்கொடுக்க அவன்திகழ்ந்து அடிக்கத்தடியெடுத்துக்கொள்வான் என்பதாம். திகழ்ந்தவன்-எ, கொண்டுவிடும்-ப, கோலை-செ. (ஈ)

கல்லாதுநீண்ட வொருவனுலகத்து
நல்லறிவாள ரிடைபுக்கு-மெல்ல
விரும்பினுநாயிருந் தற்றேயிரா அ
துரைப்பினுநாய்குரைத் தற்று.

இ-ள். கல்லாது-கற்காது, நீண்ட-வளர்ந்த, ஒருவன்-ஒருத்தன், உலகத்து-உலகத்தில், நல்லறிவாளர்-நல்லறிவுடையார், இடை-நடுவே, புக்கு-பிரவேசித்து, மெல்ல-மெல்ல, இருப்பினும்-இருந்தாலும், நாயிருந்தற்று-நாயிருந்தாற்போலும், இரா அது-இருக்காமல், உரைப்பினும்-ஒன்றைச்சொன்னாலும், நாய்குரைத்தற்று-நாய்குரைத்தாற்போலும்—எ-று, * (இ-ம்) கற்றவர்சபையில்கல்லாதவனிருந்தாலுநாயிருந்தாற்போலும் அவன் ஒன்றைச்சொன்னலு நாய்குரைத்தாற்போலும் என்பதாம். இருப்பு-உரைப்பு-எ, இருந்தற்று-குரைத்தற்று-ப, எ-அசை. (ச)

புல்லாப்புன்கோட்டிப் புலவரிடைப்புக்குக்
கல்லாதசொல்லுங் கடைவெலரிங்-கற்ற
கடாஅயினஞ்சான்றவர் சொல்லாற்பொருண்மேற்
படாஅவிடி பாக்கறிந்து.

இ-ள். கடை-கடையானவன், புல்லர்-இலக்கணத்தோடுபொருந்தாத, புன்-அற்ப, கோட்டி-சபைகூடியிக்கும், புலவர்-புன்புலவர், இடை-நடுவே, புக்கு-பிரவேசித்து, கல்லாத-கற்காதவற்றை, சொல்லும்-சொல்வான், சான்றவர்-பெரியோர், எல்லாம்-எல்லாம், கற்ற-கற்றவற்றை, கடாஅயினும்-பிறர்கேட்பினும், பொருண்மேல்-செ

வல்லும்பொருண்மேல், படாஅ-அவர்புக்கிசாராமல், விடுபாக்கு-விடும்டொருட்டு, அறிந்து-தெரிந்து, சொல்லார்-சொல்லார்—எ-று. * (இ-ம்) கடையானவன் கல்லார்சபையிற் கல்லாதனவற்றைச்சொல்லுவான்கற்றோர்பிறர்கேட்பினுங் கற்றவனைச்சொல்லார் என்பதாம். கடை-எ, சொல்லும்-ப, கல்லாத-செ, சான்றவர்-எ, சொல்லார்-ப, கற்ற-செ. (ஙு)

கற்றறிந்தநாவினர் சொல்லார்தஞ்சோர்வஞ்சி
மற்றையாவார் பகர்வர்-பனையின்மேல்
வற்றியவோலை கலகலக்குமெய்ஞ்ஞான்றும்
பச்சோலைக்கில்லை யொலி.

இ-ள். பனையின்மேல்-பனைமரத்தின்மேல், வற்றியவோலை-உலர்ந்தவோலை, கலகலக்கும்-கலகலவென்றுசத்திக்கும், எஞ்ஞான்றும்-எந்நாளும், பச்சோலைக்கு-பசியவோலைக்கு, ஒலி-சத்தம், இல்லை-இல்லை, (அதுபோல) கற்ற-நூல்களைக்கற்ற, அறிந்த-உணர்ந்த, நாவினர்-நாவுடையார், தம்-தமது, சோர்வு-சொற்சோர்வுக்கு, அஞ்சி-பயந்து, சொல்லார்-ஒன்றுஞ்சொல்லார், மற்றையாவார்-கல்லாதவர் பகர்வர்-ஆராயாதுசொல்வார்—எ-று *(இ-ம்)காய்ந்தவோலை சத்திக்கும் பச்சைஓலை சத்திக்காதுஅதுபோலக்கற்றோர்சொற்சோர்வுக்கஞ்சிஒன்றுஞ்சொல்லார்மற்றோர்சொற்சோர்வுபடாமற்சொல்லுவர் என்பதாம். நாவினர்-எ, சொல்லார்-ப, மற்றையாவார்-எ, பகர்வர்-ப.

பன்றிக்கூழ்பத்தரிற் றோமர்வடித்தற்று
னன்றறியாமாந்தர்க் கறத்தா-றுரைக்குங்காற்
குன்றின்மேற்கொட்டுந் தறிபோற்றலைதகர்த்து
சென்றிசையாவாகுஞ் செவிக்கு.

இ-ள். பன்றி-பன்றிக்கு, கூழ்-கூழ்வார்க்கும், பத்தரில்-தொட்டியில், தோமர-மதுரமாங்கனியை, வடித்தற்று-பிழிந்தாற்போலும், நன்மை-நன்மையை, அறியா-அறியாத, மாந்தர்க்கு-மனிதர்க்கு, அறத்து-தருமத்தினது, ஆறு-வழியை, உரைக்குங்கால்-சொல்லுமிடத்து, குன்றின்மேல்-மலைமேல், கொட்டும்-அடிக்கும், தறிபோல்-கட்டுத்தறிபோல், தலைதகர்த்து-தலைசிதறி, செவிக்கு-காதுக்கு, சென்று-போய், இசையாவாகும்-ஏறுவாகும்—எ-று. * (இ-ம்) நன்மையறியாத மனிதர்களுக்கு தருமத்தின்வழியைச்சொல்லுதல்பன்றித் தொட்டியில் மாங்கனியைப்பிழிந்தாற்போலும் மலைமேலடிக்குந் தறிபோலவர்காதுக்கேறுது என்பதாம். அறத்தாறு-எ, இசையாவாகும்-ப, ஆல்-அசை. (எ)

பாலாற்கழீஇப் பலநாளுணக்கினும்
வாலிதாம்பக்க மிருந்தைக்-கிருந்தன்று
கோலாற்கடாவுயக் குறினும்புகலொல்லா
நோலாவுடம்பிற் சிறிவு,

இ-ள். டலநாள்-பலகாலமும், பாலால்-பாலிலுள், கழீஇ-கழுவி, உணக்கினும்-உணத்தினாலும், வாயிதாம்-வெள்ளிதாகிய, பக்கம்-தன்மை, இருத்தைதக்கு-கரிக்கு, இருத்தல்போல்-இருந்தாலில்லை (அதுபோல) கோலால்-கோலினால், கடாய்-உருத்தி, குறினும்-கூறினாலும், கோல-முற்பிறப்பிற்றவஞ்செய்யாத, உடம்பிற்கு-உடலிற்கு, அறிவு-உணர்வு, புகலொல்லா-பிரவேசியாது—எ-று. * (இ-ர்) கரியவப்பாலிற்கழுவி யுலர்த்தினாலும் வெள்ளையாகாது அதுபோல மூன்செய்தவரில்லாதற்குச்சொல்லினுமறிவுபிரவேசியாதுஎன்பதாம். அறிவு-எ, புகலொல்லு-ப, குறினும்என்றதற் குருபந்துள்ளாரம்:

பொழிந்திலிரு நாறினும் பூமிசைதல்செல்லா
நிழிந்தனைகாமுறூஉமீப்போப்போ-ழிழிந்தனவை
தாங்கலத்தநெஞ்சினர்க் கொன்றுகுற்றக்காய்வாய்த்
தேங்கலத்தநேற்றச்சொம் றோர்வு.

இ-ள். பொழிந்து-தேன்பொழிந்து, இனிது-இனிதாக, நாறினும்-பரிமளித்தாலும், பூ-பூவிற்றேனை, மிசைதல்-உண்ணுதற்கு, செல்லாது-போகாது, இழிந்தனை-இழிபிரனைமலந்தோளை, காமுறூஉம் இச்சிக்கும், ஈப்போல-ஈயைப்போல, இழிந்தனை-இழிந்தசெய்கைகள், கலந்த-பொருந்திய, நெஞ்சினர்க்கு-மனமுடையார்க்கு, தம்கார்-பெரியோர், வாய்-வாயில், தேன்-தேனை, கலந்த-கலந்தாற்போலும், தேற்ற-தெளிந்த, சொல்-சொற்களுடைய, தேர்வு-ஆராய்ச்சி, என்னுதும்-என்னபயனுகும்—எ-று. * (இ-ம்) நிறைமானமலங்களை இகழ்ந்தும் ஈயை நிகர்த்தவர்களுக்குப் பெரியோர்சொல்லும் வாக்கியம் என்னபலன்பெறும் என்பதாம். தேர்வு-எ, என்னுகும்-ப, தாம்-அசை,

(ஈ)

கற்றுருவாக்குஞ் சுடறறுகண்கேள்வி
பற்றுகதன்னெஞ்சு தைத்தலான்-மற்றுமோர்
தன்போலொருவன் முகநோக்கித்தானுமோர்
புன்கோட்டிகொள்ளுமாங் கீழ்.

இ-ள். கற்றுர்-கற்றோர், உணர்க்கும்-சொல்லும், சுடர்-குற்றம், அறு-அற்ற, நண்-நட்பமான, கேள்வி-சொற்களை, பற்றுது-கொள்ளாது, தன்னெஞ்சு-தன்மனது, உதைத்தலால்-உதைத்துப்போதலால், மற்றும்-பின்னும், தன்போலொருவன்- தன்னைப்போலொருவன், முகநோக்கி-முகத்தைப்பார்த்து, தானுமோர் - தானுமொரு, புன்-அற்ப, கோட்டி-சபையை, கொள்ளும்-கொண்டிருப்பான், கீழ்-கீழ்மகன்—எ-று. * (இ-ம்) கீழானவன் கற்றோர்சொல்லு நட்பசொற்களைக்கொள்ளாமல் தன்போலொருவனுடன்சேர்ந்து அற்பசபையிற்சேருவான் என்பதாம். கீழ்-எ, கொள்ளும்-ப, புன்கோட்டி-செ, ஐ-ஓர்-ஆம்-அசைகள்,

(உ)

அறிவின்மை - முற்றிற்று.

நன்றியில்செல்வம்.

அஃதாவது-தன்மையில்லாதசெல்வமாம்.

அருகலதாகிப் பலபழுத்தக்கண்ணும்
பொரிதாள்விளவின வாவல்-குறுகா
பெரிதணியராயினும்பீடிலார்செல்வங்
கருதுங்கடப்பாட்ட தன்று,

இ-ள். அருகலதாகி-தானிருக்குமிடத்திற்கலலாகி, பல-அனேகம், பழுத்தக்கண்ணும்-பழுத்தாலும், பொரி-பொரித்த, தாள்-தாள் கோயுடைய, விளவின-விளாமரத்தை, வாவல்-வெளவால்கள், குறுகா-சேரா, (அதுபோல) பெரிது-மிகவும், அணியராயினும்-சமீபராயினும், பீடு-பெருமை, இலார்-இல்லாதவர், செல்வம்-ஐசுவரியம், கருதும்-நினைக்கத்தக்க, கடப்பாட்டதன்று-முறைமையுடையதன்று—எ-று. * (இ-ம்) வெளவால்கள் விளாமரம்பழுத்தாலும் சேராவாம் அதுபோல பெருமையிலார் பக்கலிலிருப்பாராயினும் அவர் செல்வம் பயன்படாது என்பதாம். செல்வம்-எ, கடப்பாட்ட தன்று-ப, (க)

அள்ளிக்கொள்வன்ன குறுமுகிழ்வாயினுங்
கள்ளிமேற்கைநீட்டார் சூடும்பூ-வன்மையால்
செல்வம்பெரிதுடைய ராயினுஞ்சீர்கெழு
நல்லாரறிவுடை யார்,

இ-ள். அள்ளிக்கொள்வன்ன-அள்ளிக்கொள்வதுபோலும், குறு-குறிய, முகிழ்வாயினும்-அரும்புகளையுடையவாயினும், சூடும்-அணியத்தகும், பூவன்மையால்-மலரல்லாமையால், கள்ளிமேல்-கள்ளியின்மேல், கைநீட்டார்-கைகளைநீட்டார், (அதுபோல) செல்வம்-பாக்கியம், பெரிது-மிகவும், உடையராயினும்-உடையரானாலும், சீர்கெழு-சீர்மைக்களை, அறிவுடையார்-விவேகமுடையார், நல்லார்-சேரார்—எ-று. * (இ-ம்) கள்ளிப்பூவைப்பறிக்கமாட்டார் அதுபோல அறிவுடையோர் கீழ்மக்களைசேரமாட்டார்என்பதாம். *அறிவுடையார்-ஏ, நல்லார்-பயனிலர், கீழ்களை-செ, (உ)

மல்குதிரைவளைக் கடற்கோட்டிருப்பினும்
வல்லாற்றவரில் லிலைநற்றிங்கட்-சென்றுண்பர்
செல்வம்பெரிதுடைய ராயினுஞ்சேட்சென்ற
நல்குவார்கட்டே நசை,

இ-ள். மல்கு-நிக்க, திரையை-அலைகளையுடைய, கடல்-சமுத்திரத்தின், கோடு-கரையில், திருப்பினும்-திருத்தாலும், வல்லாற்ற-வலி

பலநூற்றையுடைய, உவரில்-உப்பில்லாத, ஸ்ரைத்றிக்கன்-வெற்றினிடத்துசென்று-போம், உண்பர்-தீனாயுள்ளவர்(அதுபோல)செல்வம்-(அருகிருந்தோர்)பாக்கியம், பெரிது-மிகவும், உடையராயிருக்கும் உடையவராலுலும், சென்-தூரத்தில், சென்று-போய், நல்லார்கட்டே-கொடுப்பவரிடத்தே, நசை-ஒருவர்க்கிச்சையிருக்கும்-என்று. * (இ-ம்) நல்ல நீர்க்கிணறு கடற்கரையிலிருந்தாலும் அவ்விடத்திற் சென்று தீனாக்குடிப்பார்கள் அதுபோலக் கொடுப்பவர் தூரத்திலிருந்தாலும் அவரிடத்தே யொருவர்க்கு இச்சையிருக்கும் என்பதாம். நசை-எ, இருக்கும்-நோன்றுப்பயனிலை. (ஈ)

புணர்கடல்சூழ்வையத்துப் புண்ணியமோவேறே
யுணர்வதுடையா ரிருப்ப-வுணர்வில்லா
வட்டிம்வழுதுணையும் போல்வாரும்வாழ்வரோ
பட்டுத்துகிலு முடுத்து.

இ-ள். உணர்வதுடையார்-அறிவுடையார், இருப்ப-தரித்திராயிருக்க, உணர்வில்லா-அறிவில்லாத, வட்டிம் - பணைவட்டும், வழுதுணையும்-வழுதுணைக்காயும், போல்வாரும்-ஒத்தவரும், பட்டும்-பட்டாடையும், துகிலும்-வஸ்திரத்தையும், உடுத்து - தரித்து, வாழ்வர்-வாழ்வார்கள், (ஆதலால்) புணர்-பொருந்திய, கடல் - சமுத்திரம், சூழ்-சூழ்ந்த, வையத்து-பூமியில், புண்ணியம்-புண்ணியமானது, வேறு-வேறுபட்டிருக்கும்—எ-று. * (இ-ம்) கற்றோர் வருந்தியிருப்பர் மற்றோர் செல்வத்தை யநுபவிப்பர் அது புண்ணியவசம்—என்பதாம். புண்ணியம்-எ, வேறு-ப, எ-உ-ம், ஒ-க-ம், அசைகள். (உ)

நல்லாநயவ நிருப்பநயமிழாக்
கல்லார்க்கொன்றுகிய காரணந்-தொல்லை
வினைப்பயனல்லது வேனெடுங்கண்ணுய்
நினைப்பவருவதொன் றில்.

இ-ள். வேல்-வேல்போலும், நெடும்-நீண்ட, கண்ணுய்-கண்களையுடையவளே, நல்லார்-நல்லவர்கள், நயவர்- நீதியையுடையவர்கள், இருப்ப-தரித்திராயிருக்க, நயமிலா- நன்மையில்லாத, கல்லார்க்கு-விவேகமில்லார்க்கு, ஒன்றுகிய- ஒருபொருளுண்டாகிய, காரணம்-முகாந்தரம், (என்னவெனில்) தொல்லை-பழைய, வினை-நல்வினையினது, பயனல்லது-பயனல்லாமல், நினைப்ப-ஒருவரினைக்க, வருவது-வரத்தக்கதுஒன்று, இல்-இல்லை—எ-று * (இ-ம்) பெண்ணே நல்லவர்களும் நீதியுள்ளவர்களுந் தரித்திரப்பட்டிருக்கக் கல்லாதவர்களுக்குச் செல்வமுண்டான காரணம் என்னவெனில், முன்செய்தநல்வினைப்பலனுகும் என்பதாம். ஒன்று, எ, இல்-ப. (ஊ)

நாறுத்தகடேபோ லன்மலர்மேற்பொற்பாவாய்
நீறுற்றிலத்து விளியமோ-வேறுயர்

புன்மக்கள்பக்கம் புகுவாய் நீபொன்போலு
நன்மக்கள்பக்கந் துறந்து.

இ-ள். நாறு-பரிமளியாத, தகடு- புறவிதழ்களையுடைய, நன்மலர்மேல்- நல்லபொற்றமரைமலர்மேலிருக்கும், பொற்பாவாய்-இலக்குமியே, பொன்போலும் - பொன்னைநிகர்த்த, நன்மக்கள்-நல்லமனிதர்கள், பக்கம்-இடத்தை, துறந்து-விட்டு, வேறுவ-குணம்வேறான, புன்மக்கள்பக்கம்-புல்லியமனிதர்களிடத்து, புகுவாய்-பிரவேசிப்பாய், (ஆகையால்) நீறுய்-பொடியாய், நிலத்து-பூமியில், நீ-நீ, விளி-கெடுவாயாக—எ-று. * (இ-ம்) இலக்குமியே நன்மக்களைவிட்டு நீங்கிப் புன்மக்களிடத்திற் பிரவேசிக்கிறாய் ஆகையால் நீ நீறுய்வெற்று போகக்கடவாய் என்பதாம். எ - விளி - ப, ஆகாபோல்-அசைகள்.

(கூ)

நயவார்கணல்குரவு நாணின்றுகொல்லோ
பயவார்கட்செல்வம் பறம்பப்-பரியின்கொல்
விவவாய்காண்வேந்தன்றொ யிவ்விரண்டுமாங்கே
நயவாதநிற்கு நிலை.

இ-ள். வேற்கண்ணாய் - வேல்போன்றகண்களையுடையவளே, நயவார்கண்-நன்மையுள்ளவரிடத்திற்கும், நல்குரவு- வறுமைக்கு, நாண்-வெட்கம், இன்றோ-இல்லையோ, பயவார்கண்-கொடாதவரிடத்திருக்கும், செல்வம்-செல்வமானது, பறம்ப-அதிகரிக்க, பரியின்கொல்(ஒட்டும்)பிரிதோ, இவ்விரண்டும்-இந்தவிரண்டும், ஆங்கே-அங்கங்கே, நயவாது-(தாராதரம்) விரும்பாது, நிற்குநிலை-நிற்கின்றநிலையை, வியவாய்-அதிசயமாய், காண்-நீயறி—எ-று. * (இ-ம்) பெண்ணே நல்லோரிடத்துத் தரித்திரமும் உதவியில்லோரிடத்துச் செல்வமும் தாராதரமறியாது நின்றின்றநிலையைநீயறி என்பதாம்.

(எ)

நீ-எ, காண்-ப, நிலை-செ, சொல்-ஓ-அசை.

வலவைகளல்லாதார் காலாறுசென்று
கலவைகளுண்டு கழிப்பர்-வலவைகள்
காலாறுஞ்செல்லார் கருணைவாற்றுப்பவே
மேலாறுபாய விருத்து.

இ-ள். வலவைகளல்லாதார்-வல்லமைகளில்லாதவர்கள், காலாறு சென்று-தூரதேயங்களிற்போய், கலவைகள்-பலவகைப்போசனங்களை, உண்டு-சாப்பிட்டு, கழிப்பர்- காலம்போக்குவார், வலவைகள்-வல்லமையுடையவர்கள், காலாறுஞ்செல்லார்-தூரதேயங்களிற்போகார், மேல்-உடலில், ஆறுபாய-ஸ்வர்வுநீர்வர, இருத்து-உள்ளூரிலிருந்து, கருணைவால்-பொரிக்கறியுடன்போசனத்தை, துய்ப்ப-உண்பார்கள்—எ-று. *(இ-ம்)வல்லமையில்லார்தூரதேயங்களிற்சென்று இறந்துண்பர் வல்லமையுள்ளார் உள்ளூரிலிருந்து முயற்சிசெய்து

உண்பர் என்பதாம். அல்லாதார்-எ, கழிப்பர்-ப, வலவைகள்-எ, குப்பை-ப, எ-அசை. (அ)

பொன்னிறச்செற்நெற் பொதியொடுழுவாட
மின்னெளிர்வானங் கடலுள்ளும்-கான்றக்கும்
வெண்மையுடையார் விழுச்செல்வமெய்தியக்கால்
வண்மையுமன்ன தகைத்து.

இ-ள். பொன்னிறம்-பொன்போலுநிறமுடைய, செற்நெல்-செந்நெற்பயிர், பொதியொடு-பொதிதலுடன், பீள்வாட-கருவாட, மின்-மின்னல், ஒளிர்-பிரகாசிக்கும், வானம்-மேகமானது, கடலுள்ளும்-கடலிடத்து, கான்று-கக்கி, உகுக்கும்-நீரைச்சொரியும், வெண்மையுடையார்-அறிவிலார், விழுச்செல்வம்-சிறந்தசெல்வம், மெய்தியக்கால்-பெற்றால், வண்மையும்-(அவர்க)ளுபகாரமும், அன்னதகைத்து-அத்தன்மைத்தாம்—எ-று. * (இ-ம்) மேகமானது நெற்பயிர்வாடச் சமுத்திரத்திலே நீரைச்சொரியும் அதுபோல அறிவிலார் செல்வம்பெற்றால் நன்மார்க்கர் வருத்தப்படத் தும்மார்க்கருக்குக் கொடுப்பார்கள் என்பதாம். வண்மை-ஏ, அன்னதகைத்து-ப. (கூ)

ஓதியுமோதா ருணர்விலாரோதாது
மோதுடையரா ருணர்வுடையா-ரோத்தாக
நல்கூர்ந்துஞ்செல்வ ரிலாதார்செல்வரு
நல்கூர்ந்தாரீயா ரினின்.

இ-ள். உணர்விலார்-அறிவிலார், ஓதியும்-பலநூல்ப்படித்தும், ஓதார்-படியாதாவர், உணர்வுடையார்-அறிவுடையார், ஓதாதும்-படியாதிருந்தும், ஓதியனையார்-படித்தவராவர், இலாதார்-வாசியாதவர், ஓத்தாக-பரிசுத்தமாக, நல்கூர்ந்தும்-தரித்திரப்பட்டிருந்தும், செல்வர்-செல்வராவார்கள், செல்வரும்-செல்வமுடையாரும், ஈயாரினின்-கொடாராகில், நல்கூர்ந்தார்-தரித்திரராவர்—எ-று. * (இ-ம்) அறிவிலார் படித்தும் படியாத்வரோ அறிவுடையார் படியாதிருந்தும் படிதீதவரோ இலாதார் வறுமையடைந்தும் செல்வர்களே செல்வருங் கொடாராகில் வறியவர்களே என்பதாம். உணர்விலார் உணர்வுடையார் இலாதார் செல்வர்-ஏ, ஓதார்-ஓதியனையார் செல்வர் நல்கூர்ந்தார்-ப. (ங)

நன்றியில்செல்வம்-முற்றிற்று.

ஈ யா மை.

அஃதாவது-கொடாமலிருக்குந்தன்மையாம்.

நட்டார்க்குநல்லா தவர்க்குமுளவனாவா
லட்டதுபாத்துண்டலட்டுண்ட-லட்ட
தடைத்திருந்துண்டெழுகு மாவதின்மாக்கட்
கவடக்குமாமாண்டைக் கதவு.

இ-ள். அட்டுண்டல்-சமைத்துண்டுவாழ்தலாவது, நட்டார்க்கும்-சிநேகர்க்கும், நல்லாதவர்க்கும்-சிநேகமில்லாதவர்க்கும், உள-தமக்குள்ள, வளவால்-அளவால், அட்டது-சமைத்ததை, பார்த்துண்டல்-பகுத்துண்ணல், அட்டது-சமைத்தமை, அடைத்திருந்து-கதவை யடைத்திருந்து, உண்டு-புசித்து, ஒழுகும்-நடக்கும், ஆவது-செல்வம், இல்-இல்லாத, மாக்கட்கு-மனிதர்க்கு, ஆண்டைக்கதவு-சுவர்க் சுவாயிற்கதவுகள், அடைக்கும்-அடைத்திருக்கும்-என-று. ※ (இ-ம்) சிநேகருக்குஞ் சிநேகமில்லாதவருக்கும் இருக்குமளவாவிட்டுண்ணுதலே உண்ணுதலால் விட்டுண்ணுதவர்க்குச் சுவர்க்கவாயிற் கதவுகளடைக்கும் என்பதாம். அட்டுண்டல்-எ, பார்த்துண்டல்-ப, கதவு-எ, அடைக்கும்-ப, ஆம்-அசை. (க)

எத்துணையாயு மிலைபந்தவளவிறற்
சிற்றஞ்செய்தார் தலைப்படுவர்-மற்றைப்
பெருஞ்செல்வமெய்தியக்காற் பின்னறிதுமென்பா
ரழிந்தார்பழிகடலத் துள்.

இ-ள். எத்துணையாயும்-எவ்வளவாகிலும். இலைபந்த-பொருந்திய, அளவிறல்-அளவால், சிற்றம்-சிறியதருமத்தை, செய்தார்-செய்தவர்கள், தலைப்படுவர்-முதன்மையையடைவர், பெரும்-பெரிய, செல்வம்-ஐசுவரியத்தை, எய்தியக்கால்-அடைந்தால், பின்-பின்பு, அறிதும்-தருமஞ்செய்வோம், என்பார்-என்றுசொல்வோர், பழி-பழிக்கப்பட்டு, கடத்துள்-கடல்சூழ்ந்தபூமியில், அழிந்தார்--கெட்டார்-என-று. ※ (இ-ம்) எவ்வளவாகிலுஞ் சிறியதருமத்தைச்செய்தவர் சுவர்க்கத்தையடைவர் பெருஞ்செல்வம் கிடைத்தாற் றருமஞ்செய்வோமெனபவர் அழிந்தவர்களே என்பதாம். செய்தார்-எ, தலைப்படுவர்-ப, அறிதுமென்பார்-எ, அழிந்தார்-ப, மற்று-ஐ-அசைகள்.()

கைப்பக்கழியான் றறிவார்சொன்றீகலா
வைத்துக்கழியுமட வோரே-வைத்த
பொருளுமவரே நுகுமேயுலகத்
தருளுமவரே நுகும்.

இ-ள். துய்த்து-உண்டு, கழிபான்- நாவோக்கழியாதவளுகவும், துறவோர்க்கு-துறவிகளுக்கு, என்று -ஒருபொருளையும், ஈகலான்-கொடாதவளுகியும், வைத்து-பொருளைத்தேடிவைத்து, கழியும்-இறக்கும், மடவோளை-அறிவில்லாதபெண்ணை, வைத்த-தேடிவைத்த, பொருளும்-திரவியமும், அவளை-அவளை, நகும்-சிரிக்கும், உலகத்து-உலகத்தில், அருளும்-கிருபையும், அவளை-அவளை, நகும்-சிரிக்கும்-எ-று. * (இ-ம்) தானுண்ணுது பொருளைத்தேடிவைத்தவளைப் பொருளுஞ்சிரிக்கும் உலகத்தருளுஞ்சிரிக்கும் என்பதாம். பொருள்-அருள்-எ, நகும்-ப, மடவோளை-செ, எ-அசை. (கூ)

கொடுத்தலுந் துய்த்தலுஞ் தேற்றுவிடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ-மில்லத்
திருவுடைக்கன்னியரைப் போலப்பருவத்தா
லேதிலான் றுய்க்கப்படும்.

இ-ள். கொடுத்தலும்-ஈதலும், துய்த்தலும்-உண்டலும், தேற்று-தெளியாத, இடுக்குடை-உலுத்தகுணமுள்ள, உள்ளத்தான்-மனமுடையவன், பெற்ற-அடைந்த, பெருஞ்செல்வம்- பெரியசெல்வமானது, இல்லத்து-மனையிடத்து, உருவுடை-வடிவுற்ற, கன்னியரை-பெண்களைப்போன், பருவத்தால்-அநுபவிக்குங்காலத்து, ஏதிலான் அயலானால், துய்க்கப்படும்- அநுபவிக்கப்படும்—எ-று. * (இ-ம்) வீட்டிற்பிறந்தபெண்ணை அயலான் அநுபவிப்பதுபோலக் கொடாதவன்பொருளைப் பிறனநுபவிப்பான் என்பதாம். செல்வம்-எ, துய்க்கப்படும்-ப, ஆல்-அசை. (எ)

எறிநீர்ப்பெருங்கட லெய்தியிருந்து
மறுநீர்ச்சிறுகிணற் றூறல்பார்த்-துண்பர்
மறுமையறியாத ராக்கத்திற்சான்றோர்
கழிநல்குரவே தலை.

— இ-ள். எறி-அலைகள்வெறியும், நீர்-நீரையுடைய, பெரும்-பெரிய, கடல்-சமுத்திரத்தை, எய்தியிருந்தும்-அடைந்திருந்தும், அறுநீர்-நிரற்ற, சிறு-சிறிய, கிணறு-கிணற்றின், ஊறல்-நீரூற்றை, யார்த்து-கண்டு, உண்பர்-உண்ணுவார்கள், (அதுபோல) மறுமை-மறுபிறப்பிற்குரியதருமத்தை, அறியாதார்-செய்யாதவர்கள், ஆக்கத்தின்-செல்வத்திலும், சான்றோர்-பெரியோர்களுடைய, கழி - மிக்க, நல்குரவே-தரித்திரமே, தலை-முதன்மையுடையது—எ-று. * (இ-ம்) தருமஞ்செய்யாதார் செல்வத்தைப்பார்க்கிலும் பெரியோர்கள் தரித்திரமேலானது என்பதாம். நல்குரவு-எ, உடைத்து-ப. (ஏ)

எனதென்றிருக்கு மேழைபொருளை
யெனதுனதென்றிருப்பன் யானுந்-தனதாயிற்

றுறுமதனைவழங்கான் பயன்றுவ்வான்
யாதுறுமதனை யறறு.

இ-ள். ஏழை-அறிவில்லாதான், பொருளை-திரவியத்தை, எனதெ னதென்று-என்னுடையதென்னுடையதென்று, திருக்குப்-நிலை நி ருப்பான், யாதுறுட்-யாதும், எனதெனதென்று-என்னுடையதென் னுடையதென்று, திருப்பன்-நிலைத்திருப்பேன், தனதாயின்-அப் பொருள்தன்னுடையதாயின், தானும்-அவ்வேளையுதானும், அதனை-அப்பொருளை, வழங்கான்-செலவிடான், பயன்-அதனால்வரும் பல னை, தூய்வான்-அநுபவியான், யாதுறும்-எனும், அதனை-அப்பொ ருளை, அது-அப்படிக்கொடேனனுபவியேன்—எ-று. * (இ-ம்) அ றிவிலான்பொருளைத் தன்னுடையதென்றிருப்பான் யாதும் என் னுடையதென்றிருப்பேன் தன்னுடையதாகிற்செலவிடக்கானநுபவி க்கான் என்னுடையதாயில் யாதுங்கெடாடே னநுபவியேனென்ப தாம். யான்-எ, அது-ப, அதனை-செ. (சு)

வழங்காதசெல்வரினல்கூர்ந்தாருய்ந்தா
யுழந்தாரொனப்படுத லுய்ந்தா-ருழந்ததனைக்
காப்புயிற்றார்கல்லுத முய்ந்தார்தங்கைதற்றோவ
யாப்புயிற்றாருந்த பல.

இ-ள். வழங்காத-கொடாதே, செல்வரின்-செல்வரிலும், நல்கூர்ந் தார்-தரித்திரர், உய்ந்தார்-பிழைத்தார், இகழ்ந்தாரொனப்படுதல்-பொருளையிழந்தாரென்று-சொல்லப்படுதலிலும், உய்ந்தார்-பிழை த்தார், உழந்து-வருந்தி, அதனை-அப்பொருளை, காப்பு-காத்தலி லும், உய்ந்தார்-பிழைத்தார், கல்லுதலும்-தோண்டிப்புதைத்தலிலு ம், உய்ந்தார்-பிழைத்தார், தங்கை-தங்கைகள், றோவ-வருந்த, யாப் பு-கட்டுதலிலும், உய்ந்தார்-பிழைத்தார், உய்ந்தபல-பலமுறையா லும்பிழைத்தார்—எ-று. * (இ-ர்) கொடாத செல்வர்களைப்பார்கி லுந் தரித்திரர்கள் பலமுறையாலும் பிழைத்தார்கள் என்பதாம். கல் கூர்ந்தார்-எ, உய்ந்தார்-ப. (எ)

தனதாகத்தான்கொடான்றுயத்தவருந்
தமதாயபோழ்தே கொடாரூர்-தனதாக
முன்னேகொடுப்பி னவர்கடியரார்தான்கடியான்
பின்னையார்கொடுக்கும் போழ்து.

இ-ள். தனதாக-தன்னுடையதாக, தான்-தான், கொடான்(பொ ருளைக்)கொடானாய், தாயத்தவரும்-தாயாதிகளும், தமதாயபோழ்தே பொருள்-தங்களுடையதானகாலத்தே, கொடாரூர்-கொடுக்கார், தனதாக-தன்னுடையதாக, முன்னே-தானிறக்குமுன், கொடுப்பி ன்-கொடுத்தால், ஊர்-அத்தாயாதிகள், கடியர்-கோபியார், பின் னே, தானிறத்தபின், ஆவர்-அத்தாயாதிகள், கொடுக்கும்போழ்து-

வேண்டுங்காலத்தில், தான் கடியான்-தான் கோபியான்—எ-று. ✻ (இ-ள்) பொருள் தன்னுடையதாகத்தான்கொண்டான்-அது உறவினர்க்காலைகாலத்தவர்கொளார் இறக்குமுன்னே தான்கொடுத்தானாயினர் கோபியர் இறந்தபின்னுறவினர்கொண்டுக்காற்றான் கோபியான் என்பதாம். தான்-ஏ, கொடா-ப, காலத்தவர்-ஏ, கொடார்-ப, அவர்-ஏ, கடியார்-ப, தான்-ஏ, கடியான்-ப. (ஈ)

இல்லாரின்றுக வீவாராவாகி
விரைந்சுரப்பதாம் வண்மை - விரைந்றி
யல்லவருன்றவடியா போலாயிவைத்துக்
கொல்லாச்சுரப்பதாங் கீழ்,

இ-ள். இரவலர்-யாசகரே, கன்றுக-கன்றுகவும், ஈவார்-கொடுப்பவரோ, ஆவாக-பசுவாகவும், விரைவில்-சிக்கிரத்தில், சுரப்பது-பொழிப்பது, வண்மை-கொடையாகும், விரைந்றி-மெதுவாக, வல்லவர்-வலிமையையுடையோர், ஊன்ற-நிலத்தை, அடி-அடிக்கும், ஆ போல்-பசுப்போல, வாய்(அவயங்க)ளிடத்து, வைத்து-கருவுற்றுவைத்து, கொல்ல-வருத்த, சுரப்பதாம்-கொடுப்பான், கீழ்-கீழ்மகன்—எ-று. ✻ (இ-ம்) யாசகர் கன்றுகவும் கொடுப்பவர் பசுவாகவும்-விரைவிற்கொடுப்பதேகொடை கீழ்மகனை வருத்திமுற்கொடுப்பான் என்பதாம். வண்மை-ஏ, சுரப்பது-ட, கீழ்-ஏ, சுரப்பது-ப, ஆம்-ஆசை. (ஏ)

சுட்டலுந்துன்பமற் றீட்டியவொண்பொருளை
காத்தலுமாங்கேகடுத் துன்பம் - காத்த
குறைபடிற்றுன்பங் கெடிற்றுன்பந்துன்பக்
குறைபடுமற்றைப் பொருள்,

இ-ள். சுட்டலும் (பொருளைத்) தேடலும், துன்பம்- துயரம், ஈட்டிய-தேடிய, ஒண்பொருளை-ஒள்ளியபொருளை, காத்தலும்-காப்பாற்றுதலும், கடுத்-மிகவும், துன்பம்-துயரம், காத்த-காக்கப்பட்டபொருள், குறைபடில்-குறைவுபட்டால், துன்பம்-துயரம், கெடில்-கெட்டால், துன்பம்-துயரம், மற்றைப்பொருள்மேற் - கொல்பொருள். துன்பக்கு - துயரத்திற்கெல்லாம், உறைபதி-இருப்பிடமாம்—எ-று. ✻ (இ-ம்) பொருளைத்தேடலும் வருத்தம்-காத்தலும்-வருத்தம் அது குறைபட்டால் வருத்தம்-கெட்டால்வருத்தம் என்பதாம். பொருள்-ஏ, உறைபதி-ப, மற்று-ஆங்கு-அசைகள். (ஐ)

ஈயாமை - முற்றிற்று.

இயல்பு.

ஆஃதாவது-இல்லாததன்மையைச்சொல்லுதலாம்,

அத்திட்டகூறை யலாச்சுற்றிவாழினும்
பத்தெட்டுடையம பலருள்ளும் - பாடெய்து
மொத்தகுடிப்பிறத்தாக்கண்ணுமொன்றில்லாதார்
செத்தபிணத்திற் கடை,

இ-ள். அத்து-சிவப்பு, இட்ட-கையிலிட்ட, கூறை-ஆடையை, அலா-இடையில், சுற்றி-உடுத்தி, வாழினும்-ஒருவன்வாழ்ந்தாலும், பத்தெட்டுடைமை-பத்துப்பொன்முதலும் எட்டுப்பொன்முதலும் உடையவனென்ற, பலருள்ளும்-பலரிடத்திலும், பாடு-பெருமை, எய்தும்-அடைவான், ஒத்த-நலமொத்த, குடி-குலத்தில், பிறத்தக்கண்ணும்-பிறந்தாலும், ஒன்றில்லாதார்-ஒருபொருளில்லாதவர், செத்தபிணத்தின்-செத்தபிணத்தைநப்பார்த்திலும், கடை-கடையாவார், எ-று. * (இ-ம்) ஒருவன் நல்லாடையுடுத்தி வாழ்ந்தால் பொருளுடையவனென்று மதிக்கப்படுவான் உயர்குலத்திற்பிறந்தாலும்பணமில்லாவிடில் பிணமாவாரென்பதாம். ஒருவன் - தோன்று-எ, எய்தும்-ப, இலாதார்-எ, கடையாவர்-ப. (உ)

நீரிலுநுண்ணிது நெய்யென்பர்நெய்யிலும்
யாருமறிவர் புகைநுட்பந் - தேரி
னிரப்படுத்தைபயாளன் புகுமோ * புகையும்
புகற்கரியபூழை நுழைந்து,

இ-ள் நீரிலும்-நீரைப்பார்த்திலும், நெய்-நெய்யை, நுண்ணிக்-நுட்பமுடையது, என்பர்-என்றுசொல்வர், நெய்யிலும்-நெய்யைப்பார்த்திலும், புகை-புகையானது, நுட்பம்-நுட்பமுடையதென்ற, யாரும்-யாவருமே, அறிவர்-அறிவார்கள், தேரின்-ஆராயில், புகையும்-புகைதானும், புகற்கு-புகுதற்கு, அரிய-அரிதான, பூழை-வாயில்களை, நுழைந்து-புகுந்து, நிரப்படுத்தைபயாளன்-நரித்திரமுடையவன், புகும்-நுழைவான்—எ-று. * (இ-ம்) நீரிலுநெய்நுட்பம் நெய்யும்புகைநுட்பம் புக்கநுழையா வாயில்களிலுந் தரித்திரனுநுழைவான் என்பதாம். நிரப்படுத்தைபயாளன்-எ, புகும்-ப, எ-அனை (அகசனியம்) புகையுமாவியு மேலேறுக்குப்பொருள். (ஊ)

கலலொங்குயிவலாமேற் காந்தண்மலராக்காற்
செலலாவாஞ்செம்பொறி வண்டினம் - கொலலிலைக்
கலாஅற்கிளிகடியுங் கானகநாட
விலாஅ அர்க்கிலலில தயர்,

இ-ள். கொல்லை-கொல்லைகளிலே, இளி-இளிகளை, கலா அல்-கலால், கடியும்-ஓட்டும், கானகம்-காட்டையும், நாட-நாட்டையுமுடைய பாண்டியனே, கல்-கற்கள், ஒங்கு-மிகுந்த, உயர்-உயர்ந்த, வானமேல்-மலையேல், காந்தள்-காந்தட்பூ, மலராக்கால்-மலராவிடில், செம்பொறி-சிவந்தபுள்ளிகளையுடைய, வண்டினம்-வண்டுக்கூட்டங்கள், செல்லாவாம்-போகாவார், (அதுபோல) இலாதவர்க்கு-பொருளில்லாதவர்க்கு, தமர்-உறவினர், இல்லை-இல்லை—எ-று. * (இ-ம்) பாண்டியனே காந்தள் மலராவிடில் வண்டுகள் சேராவாம் அதுபோலப் பொருளில்லாதவர்க்கு உறவினரில்லை என்பதாம். தமர்-எ, இல்லை-ப. (ரு)

உண்டாயபோழ்தி னுடைத்தழிக்காகம்போற்
றொண்டாயிரவர் தொகுபவே-வண்டாய்த்
திரிதருங்காலத்துத் தேறிலிரோவென்பா
ரொருவருமிவ்வுலகத் தில்.

இ-ள். உண்டாய்-செல்வமுண்டான, போழ்தின்-காலத்து, உடைத்தழி-தேகமழியில், காகம்போல்-சுற்றம்போல், தொண்டு-அடிமையாக, ஆயிரவர்-ஆயிரம்பேர், தொகுப-கூடுவார்கள், வண்டாய்-வண்டுபோல, திரிதருங்காலத்து-திரியும்போது, தேறிலிரோ-(வறுமைக்கு ருற்றமற்றீரோ, என்பார்-என்றுகேட்பார், ஒருவருமம்-ஒருவருமும், இவ்வுலகத்து-இவ்வுலகத்தில், இல்-இல்லை—எ-று. * (இ-ம்) பொருளுண்டானகாலத்துக் காக்கைக்கூட்டம்போலனேகர்வந்து கூடுவார்கள், பொருளில்லாக்காலத் தொருவரும் வரமாட்டார்கள் என்பதாம். ஆயிரவர்-எ, தொகு-ப, ஒருவர்-எ, இல்-ப. (சு)

பிறந்தகுலமாயும் பேராண்மைமாயுஞ்
சிறந்தகல்வியு மாயும்-கறங்கருவி
கன்மேற்கழூஉங் கணமலைநாட
வின்மைதழுவப் பட்டார்க்கு.

இ-ள். கற்றனவும்-கற்றகல்விகளையும், கண்ணகன்ற - இடமகன்ற, சாயலும் - மேன்மைகுணமும், இற்பிறப்பும் - குடிப்பிறப்பையும், பக்கத்தார்-அயலார், பாராட்ட-கொண்டாட, பாடு-பொறுமை, எய்தும்-ஒருவனடைவான், தானுரைப்பின்-தான்சொன்னால், மைத்துனர்-தனைக்குமைந்தனர், பல்கி-அதிகரித்து, மருந்தில்-ஒருமருந்திலும், தணியாத-நீராத, பித்தனென்று- வெறிகொண்டவனென்று, எள்ளப்படும் இகழப்படுவான்—எ-று. * (இ-ம்) கல்வியையும் மேன்மையையும் குடிப்பிறப்பையும் பிறர்சொல்ல ஒருவன் பெருமையடைவான் தான்சொன்னால் வெறியனென்றிகழப்படுவான்-என்பதாம். ஒருவன் தான்று வெழுவாய் எய்தும்-ப, பாடு - செ, தான்-எ, படும்-ப. (அகத்திலம்) சாயன்மேன்மை நிறனுகும்மே(ஏ)

பேதைமை-முற்றிற்று.

கீழ்மை.

அஃதாவது-கீழ்மக்களைக்குறித்துச்சொல்லுதலாம்.

கப்பிகடவதாக்காளைத்தன்வாய்ப்பெயினும்
குப்பைகிளைப்போவாக்கோழிபோன்-மிக்க
கனம்பொதிந்தநூல்விரித்துக்காட்டினுங்கீழ்தன்
மனம்புரிந்தவாறேகுரும்.

இ-ள். காலை-உதயத்தில், கடவதா-கடமையாக, கப்பி-தாவியக்கப்பியை, தன்-தனது, வாய்-வாயில், பெயினும்-போட்டாலும், குப்பை-குப்பையை, கிளைப்பு-கிண்டுதலில், ஒவா-ஓழியாத, கோழி போல்-கோழியைப்போல, மிக்க-மிகுந்த, கனம்-கனமை, பொதிந்த-பொருந்திய, நூல்-தருமநூல்களை, விரித்துக்காட்டினும்-விரிவாகவிரித்தாலும், கீழ்-கீழானவன், தன்-தனது, மனம் - மனது, புரிந்த-விரும்பிய, ஆறே-வழிய, குரும்-போவான்—எ-று.* (இ-ம்) கோழிக்கிளைபோட்டாலும் அது குப்பையைச்சிக்கப்போகும் அதுபோலக் கீழ்மகனுக்குத் தருமநூல்சொன்னாலும் அவன் மனம்போனவழியேபோவான் என்பதாம். கீழ்-எ, குரும்-ப. (க)

* காழாவகொண்டுகசடற்றார்தங்காரம்
ஊழாதுபோவாமெனவுரைப்பிற்-கீழ்தா
னுறங்குவாமென்றெழுந்துபோமாமஃதன்றி
மறங்குமற்றென்றுரைத்து.

இ-ள். காழாவ-உறுதியாயிவையறங்களை, கொண்டு - கற்றுக்கொண்டு, கசடு-குற்றம், அற்றார்-அற்றிவர், தம்-தமது, சால்-பக்கலில், காழாது-காமதியாமல், போவாமென-போவோமென்று, உரைப்பின்-சொன்னால், கீழ்தான்-கீழ்மகன், உறங்குவாமென்று - நித்திரைசெய்வோமென்று, எழுந்து-எழுந்திருந்து, போம்-போவான், அஃதன்றி-அஃதல்லாமல், மற்றென்று - வேறென்னை, உரைத்து-சொல்லி, மறங்கும்-மறுத்துநிற்பான்—எ-று. * (இ-ம்) குற்றமற்றவரிடத்திற் போகலாம்வாவென்றால் கீழ்மகன் தூங்குவோமென்றும் இவ்வேளை நீங்குவோமென்றுஞ்சொல்லுவான் என்பதாம். கீழ்-எ, மறங்கும்-ப, ஒன்று-ஆய்-அசைகள் (அசதியம்) காழென்பதனை வாழுமுறையே. (உ)

பெருநடைதாம்பெறினும்பெற்றபிழையா
தொருநடையராகுவர்சான்றோர்-பெருநடை
பெற்றக்கடைத்தும்பிறங்கருவிநன்னாட
வற்றுமொருநடைகீழ்

இ-ள். பிறங்கு-பிரகாசிக்கும், அருவி-யாற்றையும், நல்-நல்ல, நாட-நாட்டையுமுடையபாண்டியனே, சான்றோர்-பெரியோர்கள், பெருநடை-பெருஞ்சிறப்பு, தாம்பெறினும்-தாங்கள்பெற்றாலும்,

பெற்றி-முன்னிருந்தபெருமையில், திழையாது-வேறுபடாது, ஒருநடையராகுவர்-ஒரோதன்மையுடையராவர், கீழ்-கீழ்மகன், பெருநடை-பெருஞ்சிறப்பை, பெற்றக்கடைத்தும் - பெற்றாலும், ஒருநடை-வேறுநடைநடக்க, வற்றாம்-வல்லமையுடையவனுவான்-எ-று. * (இ-ம்) பாண்டியனே மேலோர் சிறப்பைப்பெற்றது முன்னிருந்தநிலையிலே நிற்பார்கள் கீழானவன் சிறப்படைந்தால் வேறுநடைநடக்கவல்லவனுவான் என்பதாம். சான்றோர்-ஏ, ஆகுவர் - ப, ஏ-வற்றும்-ப [வல்லுவல்று என்றுயிற்று] (கூ)

நினையனைத்தேயாயினுஞ்செய்தநன்றுண்டாற்
பனையனைத்தாவுள்ளுவர்சான்றோர்-பனையனைத்
தென்றுஞ்செயினுமிலங்கருநன்னுட
நன்றுலநன்றறியார்மாட்டு.

இ-ள். இலங்கு-பிரகாசிக்கும், அருவி-வையையாற்றையும், நன்னுட-செந்தமிழ்நாட்டையுமுடையபாண்டியனே, சான்றோர்-மேலோர், நினையனைத்தேயாயினும்-நினையளவேயாகிலும், செய்த-பிறர்செய்த, நன்று-நன்மையானது, உண்டால்-உண்டானால், பனையனைத்தா-பனையளவாக, உள்ளுவர்-நினைப்பார்கள், நன்றறியார்மாட்டும்-நன்றியறியாதவரிடத்து, பனையனைத்து- பனையளவுநன்றியை, என்றும்-எக்காலத்தும், செயினும்-செய்தாலும், நன்றில்-நன்மையில்லனவாம்—எ-று. * (இ-ம்) பாண்டியனே மேலோர்க்குஒருநாள் நினையளவு உதவிசெய்தாற் பனையளவு உதவியாகக்கொள்வார்கள்-கீழோர்க்குப் பலநாளும் பனையளவு உதவிசெய்தாலும் நினையளவும் நினையார்கள் என்பதாம். சான்றோர்-எ, உள்ளுவர்-ப, நன்று-எ, இல்-ப. (எ)

பொற்கலத்தூட்டிப் புறத்தரினுநாய்பிற
கொச்சிற்கிணையர்து பார்த்திருக்கு-மச்சீர்
பெருமையுடைத்தாக் கொளினுங்கீழ்செய்யுங்
கறுமங்கள்வேறுபடும்.

இ-ள். பொற்கலத்து-பொன்னுலாகியகலத்துள், ஊட்டி-உண்பித்து, புறத்தரினும்-ஓப்பாற்றினாலும், நாய்-நாயானது, பிறர்-அவருடைய, எச்சிற்கு-எச்சிற்சோற்றிற்கு, கிணையாது - கண்ணியமையாமல், பார்த்திருக்கும்- பார்த்துக்கொண்டிருக்கும், அச்சீர்-அச்சிறப்பைப்போல, பெருமையுடைத்தா- பெருமையுடையவாக, கொளினும்-கொண்டாலும், கீழ்-கீழ்மக்கள், செய்யும்-செய்யும், கறுமங்கள்-காரியங்கள், வேறுபடும்-வேறுபட்டிருக்கும்—எ-று. * (இ-ம்) நாயைப் பொற்கலத்திற்சோறிட்டு வளர்த்தாலும் அது பிறர் எச்சிற்சோற்றுக்குப்போகும் அதுபோல கீழ்மக்களை மேலாகக் கொண்டாலும் அவர்கள் கீழ்ஞானநிலையிற்போவார்கள் என்பதாம். கறுமங்கள்-எ, வேறுபடும்-பு. (ஏ)

சக்காச்செல்வம் பெறினும்விழுமியோர்
சொக்காலுஞ்சொல்லார் மிகுதிச்சொ-லெக்காலும்
முந்திரிமேற்மாணி மிகுவதேற்கீழ்தன்னை
யிந்திரனெவெண்ணி விடும்.

இ-ள். விழுமியோர்-பெரியோர், சக்காச்செல்வம்-இந்திராசெல்வத்தை, பெறினும்-பெற்றாலும், மிகுதிச்சொல்-தெரிகடந்தசொல்லை, எக்காலும்-எந்நாளும், சொல்லார்-சொல்லார்கள், கீழ்-கீழ்மகனை, முந்திரிமேல்-முந்திரிகைபொன்னுக்குமேல், காணி-காணிப்பொன், மிகுவதேல்-மிகுமாகில், எக்காலும்-எந்நாளும், தன்னை-தன்னை, இந்திரனு-தேவேந்திரனை, எண்ணிவிடும்-நினைத்துவிடுவான்—எ-று. * (இ-ம்) பெரியோர் பெருஞ்செல்வம் பெற்றாலும் வரம்புகடந்துசெல்லார் கீழ்மகன் முந்திரிகை பொன்னுக்குமேல் காணிபொன் பெறுவாராயில் தன்னை இந்திரனுக வெண்ணுவான் என்பதாம். விழுமியோர்-எ, கொல்லார்-ப, மிகுதிச்சொல்-செ, கீழ்-எ, எண்ணிவிடும்-ப, தன்னை-செ. (அ)

மைதீர்பசும்பொன்மேன் மாண்டமணியழுத்தி
செய்தெனினுஞ் செருப்புத்தன்-காற்கேயா
மெய்தியசெல்வத்த ராயினுங்கீழ்களைச்
செய்தொழிலாற் காணப்படும்.

இ-ள். மை-குற்றம், தீர்-அற்ற, பசும்பொன்மேல்-பசுமையாகியபொன்னின்மேல், மாண்ட-பெருமைபொருந்திய, மணி-நவமணிகளை, அழுத்தி-பதித்து, செய்தெனினும்-செய்தாலுலும், செருப்பு-செருப்பானது, தன்-தன்னுடைய, காற்கேயாம்-காலுக்கேயாம், எய்திய-நிரம்பிய, செல்வத்தராயினும்-செல்வமுடையவராலும், கீழ்களை-கீழ்மக்களை, செய்தொழிலால்-அவர்கள்செய்யுந்தொழிலால், காணப்படும்-அறியக்கூடும்—எ-று. * (இ-ம்) பொன்னின்மேல் நவமணிபதித்தாலுஞ் செருப்புத்தன்காலிற்குத் தானுகும் அதுபோல நிரம்பிய செல்வமுடையவராலும் செய்தொழிலிலே கீழ்மக்களையறியாமல் என்பதாம். ஒருவன் தொன்று வெழுவாய் படும்-ப, கீழ்களை-செ [படும்-என்பது-கூடுமென்னும் பொருள்கொள்ளும்] (ஈ)

கடிக்கெனச்சொல்வற்றுங் கண்ணோட்டமின்று
மிடிக்கண்பிறர்மாட்டிலக்கு-மடித்தடித்து
வேகமுடைத்தாம் விறன்மலைநன்னுட
வேகுமா மெள்ளுமாங்கீழ்.

இ-ள். விறல்-பலம்பொருந்திய, மலை-மலையையும், நல்-நல்ல, நாட-நாட்டையுமுடையபாண்டியனே, கீழ்-கீழ்மகன், கடிக்கென்-கடியசொற்களை, சொல்-சொல்ல, வற்றுன்-வல்லவனுவான், கண்ணோட்டம்-சினேகம், இன்றும்-இல்லாதவனுவான், பிறர்மாட்டி-அ

வ்லாரிடத்துண்டாகும், இடிக்கண்-துன்பத்திற்கு, உவக்கும்-மகிழ்ந்திருப்பான், உடித்துடித்து-மேலுமேலும், வேகமுடைத்தாம்-கோபங்கொள்ளுவான், எரும்-செல்லுவான், எள்ளும்-இகழுவான்-எ-று. *(இ-ம்) பாண்டியனே கீழ்மகன் கடுஞ்சொல்லுவான் சிநேகஞ் செய்யான்பிறர்துன்பங்கண்டு மகிழ்வான் கோபிப்பான் செல்லுவான் இகழுவான்என்பதாம். கீழ் மகன்-எ, வற்றும்-இவ்வுறும், உவக்கும்-உடைத்தாய்-எருமை-எள்ளும்-ப, ஆம்-இரண்டும்-அசைகள்- (அ)

பழையரிவரொன்று பன்னூட்பின்னிற்பி
னுழையினியராகுவர் சான்றோர்-விழையாதே
கள்ளுயிர்க்குநெய்தற் கானைகடற்றண்சேர்ப்ப
வெள்ளுவர்க்கீழா யவர்.

இ-ள். கள்-மதுவை, உயிர்க்கும்-பொழியும், நெய்தல்-நெய்தற் பூவையுடைய, கானை-சந்திக்கும், தண்-குளிர்ந்த, கடற்சேர்ப்ப-கடற்சாரலையுடைய பாண்டியனே, சான்றோர்-பெரியோர், உழை-தம்மிடத்து, பன்னூல்-பலநூலும், பின்-பின்னே, நிற்பின்-ஒருவனின்றால், பழையர்-பழமையானவர், இவரொன்று-இவரொன்றுநினைத்து, இனியராகுவர்-இன்பமுடையசிநேகராவர், கீழாயவர்-கீழானவர், விழையாதே-இச்சியாமல், எள்ளுவர்-இகழ்வார்—எ-று. * (இ-ம்) பாண்டியனேபெரியோர் தங்கானையடுத்தவர்களுக்குச் சிநேகமாவர் சிறியோர்தங்கானையடுத்தவரை இச்சிபாதிகழ்வர் என்பதாம்.சான்றோர்-எ, ஆகுவர்-ப, கீழாயவர்-எ, எள்ளுவர்-ப. (கூ)

கொய்புற்கொடுத்துக் குறைத்தென்றுந்நிற்றினும்
வையப்பூண்கல்லா சிறுகுண்டை-யையகே
ளெய்தியசெல்வத்தா ராயினுங்கீழ்களைச்
செய்தொழிலாற் காணப்படும்.

இ-ள். ஐய-பாண்டியனே, கேள்-கேட்பாயாக, கொய்புல்-அறுக்கும்புல்லை, குறைத்த-அறுத்து, என்றும்-எப்பொழுதும், கொடுத்து-வாயிற்கொடுத்து, நிற்றினும்-ஊட்டிவரினும், சிறுகுண்டை-சிறுபயறுகள், வையம்-இரதத்தை, பூண்கல்லா-பூணப்பட்டிழுக்காவாம், (அதுபோல) எய்திய-மிகப்பொருந்திய, செல்வத்தாராயினும்-செல்வமுடையவராயினும், கீழ்களை-கீழ்மக்களை, செய்தொழிலால்-அவர்கள்செய்யுந்தொழிலால், காணப்படும்- அறியக்கூடும்—எ-று. *(இ-ம்)பாண்டியனே சிறியவெறுதுகளுக்குப் புல்லறுத்துவாயிரட்டிவரினும் அவை இரதத்தை யிழுக்கமாட்டாவாம் அதுபோல நிரம்பிய செல்வமுடையவராயினுஞ் செய்தொழிலிலே கீழ்மக்களையறியலாம் என்பதாம். ஒருவன்-தோன்ற வெழுவாய், படும்-ப, கீழ்களை-செ, [நிற்றல் உண்டல் நிலைத்து நெகிசம்.] (ஙி)

கீழ்மை - முற்றிற்று.

யபனைழ்

அஃதாவது-கபகர்களினிலல்பபச்சொல்லுதலாம்.

ஓர்த்தவறிவின ராண்டிலோபராயினும்
காத்தோம்பித்தம்மை யடக்குப-மூத்தோறூஉத்
தித்தாழிலேகன்றிந்றிரிதந் தெரிவைபோற்
போத்தறூர்புல்லறி விஞர்.

இ-ள். ஓர்த்த-மிணிக்கப்பட்ட, அறிவினர்-அறிவிலேயுடையவர், ஆண்டு-வயதால், இலோபராயினும்-இலோபராகவிருந்தாலும், தம்மை-தங்களை, காத்தோம்பி-பாதுகாத்து, அடக்குப-பொறிகளை டக்குவார்கள், புல்லறிவினர்-அறிவில்லாதவர், மூத்தோறூஉம்-மூதிர்ந்தவளருந்தோறும், தித்தாழிலே-நெய்யாகிலபதாழிலே, கன்றி-மினைத்து, திரிந்தது-திரிந்தது, எரிவைபோல்-கொடுக்கைத்தண்டுபோல், போத்து-உட்டுளைக்குற்றம், அறூர்-நீங்கார்—எ-று. ※ (இ-ம்) அறிவுடையார் இலோபராயினும் குற்றம்வராமற் தங்களைக் காத்து நடப்பார்கள், அறிவில்லார் முதிர்வயதுள்ளோராலும் குற்றஞ்செய்தலைவிடார்கள் என்பதாம். அறிவினர்-எ, அறூர்-ப, போத்து-செ, [பொத்துபோத்தெனநீண்டது] (அ)

செழும்பெரும்பொய்கையுள் வாழினுமென்றும்
வழும்பறுக்க※ இல்லாதாந்தேரை-வழும்பில்சிற்
றூல்கற்றக்கண் ணுறுநறுக்க மொண்றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றியரிது.

இ-ள். தேரை-தவளைகள், செழும்-செழித்த, பெரும்-பெரிய, பொய்கையுள்-தடாகத்துள், எந்நாளும்-எந்நாளும், வாழினும்-வாழ்ந்தாலும், வழும்பு-வழும்பென்னுங்குற்றத்தை, அறக்கஇல்லாவாம்-நீக்கமாட்டாவாம், வழும்பு-குற்றம், இல்-இல்லாத, சிற்-சிறப்புடைய, நூல்-நூல்களை, கற்றக்கண்ணும்-கற்றலும், நறுக்கம்-நாட்டவறிவு, ஒன்றில்லாதார்-ஒன்றில்லாதவர், தேர்கிற்கும்-தெரிந்துகொள்ளும், பெற்றி-தன்மை, அரிது-அருமை—எ-று. ※ (இ-ம்) தவளைகள் பொய்கையுள்வாழ்ந்தாலும் வழும்பை நீக்கிக்கொள்ளவாம் (அதுபோல) அறிவில்லாதார் நூலைக்கற்றலும் மதன்பொருளை யறிந்துகொள்ளார் என்பதாம். ஒன்றில்லாதார்-எ, அரிது-ப (அகத்திலம்) நில்லில்லாண்டுமெனிர்மறையிடைச்சொல். (உ)

கணமலைதன்னுட கண்ணின்றெருவர்
குணனெயுங்கூறற்கரிதார்-குணமுழுக்கக்
குற்றமுழைநின்ற கூறஞ்சிறியவர்கட்—
கெற்றுலியன்ற தோள.

இ-ள். கண்மேலே-கூட்டமாகியமலைகளையும், நன்குட-நல்லநாட்டையுமுடையபாண்டியனே, கண்ணின்று-முன்னின்று, ஒருவர்-ஒருவருடைய, குணனேயுந்-நற்குணத்தையாகிலும், கூறற்கு-சொல்லுதற்கு, அரிது-அருமையாயிருக்க, குணன்-அவரதுகுணம், அழுங்க-கெட, குற்றம்-குற்றத்தை, உவறுநின்று-அவரிடத்துநின்று, கூறும்-சொல்லும், சிறியவர்கட்கு-அறிவிலார்க்கு, நா-நாவான தது, எற்றுலியன்றதோ-எதிரற்செய்ததோ—எ-று. * (இ-ம்) பாண்டியனே ஒருவர் குணத்தைப்புகழ்ந்து சொல்லுதலரிதாயிருக்கவவர்கள்முன்னின்று இகழ்ந்துசொல்லுஞ் சிறியவர்கட்கு நாவெதிரற் செய்ததோ என்பதாம். நா-எ, எற்றுலியன்றதோ-ப, ஓ-அசை.()

கோடேந்தகலல்குற்பெண்டிர்தம்பெண்ணீர்மை
சேடியர்போலச்செயறேற்றார்-கூடிப்
புதுப்பெருக்கம்போலத்தம்பெண்ணீர்மைகாட்டி
மதித்திறப்பர்* மற்றையவர்.

இ-ள். கோடு-இருகரைகொண்டு, ஏந்து-உயர்ந்து, அகல்-அகன்ற, அல்குல்-அல்குலையுடைய, பெண்டிர்-தலையாதார், தம்-தமது, பெண்ணீர்மை - பெண்டன்மைபை, சேடியர்போல-தாதிகளைப்போல, செயல்-அழகுசெய்தலை, தேற்றார்-அறியார், கூடி - சேர்ந்து, புதுப்பெருக்கம்போல-புதியவெள்ளம்போல, தம்-தம்முடைய, பெண்ணீர்மைகாட்டி-பெண்டன்மைபைக்காட்டி, மற்றையவர்-பொதுமாதர், மதித்து-தன்மைமதித்து, இறப்பர்-நடப்பர்—எ-று. * (இ-ம்)குலமகளிர் தங்களை யலங்கரித்துக்கொள்ளுதல் விலைப்பெண்கள் தங்களை யலங்கரித்துக்கொள்வார்கள் என்பதாம். பெண்டிர்-எ, தேற்றார்-ப, மற்றையவர்-எ, இறப்பர்-ப, (அகத்திலப்) மற்றையரைச நிலைசுட்டிநின்றமை. (சு)

தளிர்மேலேநிற்பினுந்தட்டாமற்செல்லா
வளிநீர்மாதோகையவ-ளிநீரார்க்
கென்னுழுஞ்செய்யாவெனைத்தானுஞ்செய்பவே
யின்னுங்குசெய்வார்ப் பெறின்.

இ-ள். கையவர்-கீழ்மக்கள், தளிர்மேலே-தளிரின்மேலே, நிற்பினும்-நின்றாலும், தட்டாமல்-அடியாமல், செல்லா - உள்ளிரங்காத, உளிநீர்-உளிகளுக்கொப்பானகுணமுடையவராவர், அளிநீரார்க்கு-இருபைக்குணமுடையார்க்கு, என்னுழும்-யாதாகிலும், செய்யார்-உதவிசெய்யார், இன்னுங்கு-துன்பங்களை, செய்வார் - செய்பவர்களை, பெறின்-பெற்றால், எனைத்தானும்-யாதாகிலுமோருதவி, செய்ப-செய்வார்கள்—எ-று. * (இ-ம்) கீழ்மக்கள் இருபையை யுடையோர்க்குக்கொடாதார்தம் துன்பஞ்செய்பவர்களுக்குக் கொடுப்பார்கள் என்பதாம். கையவர்-உ, செய்ப-ப, மாது-ஒ, எ, அசைகள். (கு)

மலைதலைமுள்ளூம் குறைவ்பயத்த
விள்நிலமுள்ளு முழங்கல்-சிறந்தாருயர்
செய்தநன்றுள்ளுவர் சான்றோர்கையதன்றோ
வைதலையுள்ளி விடும்.

இ-ள். ஒருவன்-வேடன், மலைதலைப்-மலையிலுள்ளதன்மைகளோ, உள்ளூம்-என்னுறுவான், உழுவன்-பயிர்செய்வோன், பயத்த-பயன் தரத்த, விளைநிலம்-விளைநிலத்துதன்மைகளோ, உள்ளூம்-என்னுறுவதன், சான்றோர்-மேலோர், சிறந்த-சிறப்புடைய, ஒருவர்-ஒருவர், செய்த-செய்த, நன்று-நன்மைகளை, உள்ளுவர்-என்னுறுவர், கயம்-கீழ்மகன், நன்றை-தன்மை, வைதலை-ஒருவன்வைதலை, உள்ளிவிடும்-என்னுறுவான்—எ-று. * (இ-ம்) வேடன் மலையின்பாலனை யென்னுறுவான் உழுபவன் நிலத்தின்பலனை யென்றுறுவான் மேலோர் பிறருதவிப்பலனை யென்னுறுவர் கீழ்மகன் ஒருவன்வைதலை யென்னுறுவான் என்பதாம். கயம் - ஏ, உள்ளிவிடும் - ப, வைதலை-செ (சிறந்தவென்பதினகரம்-விகாரத்தாற்றொக்கது) (ஈ)

ஒருநன்றிசெய்தவர்க் கொன்றிவையழுதை
பிழைநூறுஞ்சான்றோர் பொறுப்பர்-கயவர்க்
கெழுநூறுநன்றிசெய்தொன்றதீதாயி
னெழுநூறுந்தீதாய்விடும்.

இ-ள். சான்றோர்-மேலோர், ஒருநன்றிசெய்தவர்க்கு-ஒருநன்மை செய்தவர்களுக்கு, ஒன்றி-பொருந்தி, எழுந்த-உண்டாகிய, பிழை நூறும்-நூறுகுற்றங்களையும், பொறுப்பர்-பொறுத்துக்கொள்வார்கள், கயவர்க்கு-கீழ்மக்களுக்கு, எழுநூறுநன்றி-எழுநூறுநன்மைகளை, செய்து - பண்ணி, ஒன்றதீதாயின் - ஒன்றுகுற்றமாகில், எழுநூறும் - முன்செய்தவெழுநூறுநன்மைகளுந், தீதாய்விடும்-குற்றமாய்விடும்—எ-று. * (இ-ம்) மேலோர் தங்களுக்கொருநன்றி செய்பவர்களுக்குண்டான நூறுகுற்றங்களையும் பொறுத்துக்கொள்ளுவார்கள் கீழோர்க்கெழுநூறுநன்றிசெய்து ஒரு நன்றி குற்றமாகுல் முன்செய்த வெழுநூறுநன்றியுங் குற்றமாய்விடும் என்பதாம். சான்றோர்-எ, பொறுப்பர்-ப, பிழை-செ, நன்றி-எ, தீதாய்விடும்-ப. (எ)

எட்டைடப்பருவத்து மிற்பிறந்தார்செய்வன
மோட்டிடத்துஞ்செய்யார் முழுமக்கள்-கோட்டை
வைரன்செறிப்பினும் வாட்கண்ணுறப்பன்றி
செயிர்வேழமாகுத லின்று.

இ-ள். வாட்கண்ணுறப்-வாள்போலுங்கண்களையுடையவளே, பன்றி-டன்றியானது, கோட்டு-கொம்பினிடத்து, ஐ-அழகிய, வைரர்-வைரமான து, செறிப்பினும்-நெருங்கியிருந்தாலும், செயிர்-கோபம்பொருந்திய, வேழமாகுதல்-யானையாகுதல், இன்று-இல்லை (அ

தபோல) முழுமக்கள்-கீழ்மக்கள், எட்டைப்படித்தும்-தரிதரிசுகாலத்தும், இற்பிறந்தார்-நற்குடியிற்பிறந்தார், செய்வன-செய்தாரியக்கள், மொய்ஷிடத்தும்-செல்வத்தினிடத்தும், செய்யார்-செய்யமாட்டார்கள்—எ-று. * (இ-ம்) கொம்பில் வைரமடைந்தாலும் பன்றியானவாகாது அதுபோல மேலோர் வறுமையிற்செய்தாரியங்களைக் கீழ்மக்கள் செல்வத்திடத்துஞ்செய்யார்கள் என்பதாம். முழுமக்கள்-ஸ, செய்யார்-ப, செய்வன-செ. (அ)

இன்றுதுமித்திலேபோதுமினிச்சிறிது
நின்றுதுமென்றநினைத்திருந்-தென்றி
யுள்ளியின்மகிழ்ந்துதம்முள்ளம்வேறுபி
மனையிலையின்மாய்த்தார்பலர்.

இ-ள். இன்ற-இன்ற, ஆதும் - செல்வம்பெறுவோம், இத்திலே-இப்பொழுதே, ஆதும்-பெறுவோம், இனி-இனிமேல், சிறிது-சிறிதுபொழுது, நின்ற-கழித்து, ஆதுமென்ற-பெறுவோமென்ற, நினைத்திருந்த-எண்ணியிருந்து, ஒன்றி-பொருந்தி, உளாயின்மகிழ்ந்த-சொல்லாமகிழ்ந்த, தம்முள்ளம்-தம்முடையமனம், வேறுபி-வேறுபட்டு, மனையிலையின்-தாமனையிலைபோல், மாய்த்தார்-இறந்தார், பலர்-அநேகர்—எ-று. * (இ-ம்) அநேகர் இன்றுவாழ்வோமிப்பொழுதுவாழ்வோமினிச்சிலகாலஞ்சென்று வாழ்வோமென்று நினைத்துச்சொல்லாமல் மகிழ்ந்திறந்தார்கள் என்பதாம். பலர்-ஸ்மாய்த்தார்-ப(நன்னூல் ஒருமொழி மூவழிக்குறைதலுமனைத்தே, இவிதியால்மனைதலைக்குறைப்பதம் [மனையிலையின் என்றதற்குலர்மான்றின்ன இலைசோணமான தபோலவெனினும்பொருத்தும்] (க)

நீருட்பிறந்தநிறம்பசியதாயினு
மீரங்கிடையதத்தில் லாகு-மோரு
நிறைப்பெருஞ்செல்வத்து நின்றக்கடைத்து
மறைப்பெருங்கலஞ்ஞ ருடைத்து.

இ-ள். நீருட்பிறந்தும் - நீரிடத்திற்பிறந்தும், நிறம்பசியதாயினும்-நிறம்பசுமையாயிருந்தாலும், ஈரம்-ஈரமான து, இடையசத்தடையினுள்ளே, இல்லாகும்-இல்லையாகும் (அதுபோல) நிறைநிறைந்த, பெருஞ்செல்வத்து-பெரியசெல்வத்தின், நின்றக்கடைத்தும்-நின்றாலும், மறை-மறைக்கும், பெருங்-பெரிய, கலஞ்ஞர்-கற்கொப்பானவரை, உடைத்து-உடையதுலகம்—எ-று. *(இ-ம்)சடைநீரிலிருந்தாலு மதனுளீரமிராது(அதுபோல) நிறைசெல்வத்திருந்தாலும் உதவிசெய்யாதானை உலகமுடையது என்பதாம். உலகம்-எ, உடைத்து-ப, கலஞ்ஞர்-செ, ஒருஉ-இடைச்சொல். (ஙி)

கயமை - முற்றிற்று.

பரிவினை.

அஃதாவது-பலவழிகளிற் சொல்லுதலாம்.

மழைநிலைக்குமாடையாய் மாண்பமைந்தகாப்பா
யிழைவிளக்குநின்றிமைப்பி னெனன்றுப்-விழைந்தக்க
மாண்டமனையாளையில்லாதாளில்லதற்
காண்டற்கரியதோர் காடு.

இ-ள். விழைதகத்த-விரும்பத்தக்க, மாண்ட - நற்குணநற்செய்கையுடைய, மனையாளை-மனையவளை, இல்லாதான்-இல்லாதவனுடைய, இல்லகம்-வீடானது, மழை-மேகம், நிலைக்கும்-தவழும், மாடம்-மாளிகையாய், மாண்பு-பெருமை, அமைந்த-நிரம்பிய, காப்பாய்-காவலாய், இழை-ஆபரணங்கள், விளக்கு-விளக்கைப்போல, நின்றிமைப்பின்-நின்றுபிரகாசித்தால், என்னும் - என்னபிரயோசனம், காண்டற்கு-பார்ப்பதற்கு, அரியதோர்காடு-அரிதாயிலதோர் காட்டுக்கொப்பாம்—எ-று. * (இ-ம்) நற்குணநற்செய்கையுடைய மனையவளை இல்லாதவன் வீடானது எவ்வளவுசிறப்புடையதாயினு மிருக்காட்டுக்கொப்பாம் என்பதாம். இல்லகம்-எ, காடுபோலும்-ப. (க)

வழுக்கெஞ்சுத்துமிலலாத வாள்வாய்க்கிடந்து
மிழுக்கினைத்தாம் பெருவாயி-னிழுக்கெஞ்சுக்குஞ்
செய்குறுப்பாணி சிறிதேதவத்தின்மொழியார்
மேயுறுப்பாணி பெரிது.

இ-ள். வழுக்கு-தவறு, எஞ்சுத்தும்-எவ்வளவும், இல்லாத - இல்லாத, வாள்வாய்-வாள்வீரர்காவலி—ற்கு, கிடந்தும்-இருந்தும், நிழுக்கினை-சாவற்சேர்வை, தாம்பெறுவாயின்-தாங்கள்பெறுவாராகில், இழுக்கு-தவ்விழுக்கை, எஞ்சுத்தும் - எவ்வளவாகிலும், செய்குறு-செய்யத்தொடங்காத, பாணி-காலம், சிறிது-சிறிதாம், அச்சின்மொழியார்-மெலலியசொற்களையுடைய அப்பெண்கள், கை-ஒழுக்கத்தை, உறு-பொருந்தாத, பாணி-காலமே, பெரிது-பெரிது-எ-று. * (இ-ம்) தவறுன்றில்லாத வாள்வீரர் காவலிருந்தும் காவலின்சேர்வைச் சிறிது தாங்கள் பெறுவாராகில் எவ்வளவாகிலுங் குற்றஞ்செய்யாதகாலஞ் சிறிதாம், அப்பெண்கள் ஒழுக்கத்தைமே வாதகாலம் பெரிதாம் என்பதாம். பாணி-எ, சிறிது-ப, பாணி-எ, பெரிது-ப. (உ)

எறிவென்றெறிர்நிற்பாள் கூற்றஞ்சிறுகாலை
யட்டில்புகாதாளரும் பிணி-பட்டதனை
புண்டியுதவாதா ளில்வாழ்பெயிர்மூவர்
தொண்டாலைக்கொல்லும் படை.

இ-ள். எறிவென்று-அடிவென்று, எதிர்நிற்பாள்-எதிரேநிற்பவள், கூற்றம்-இயமனுக்கொப்பானவள், சிறுகாலை-சிறுகாலை, அட்டில்-மடப்பள்ளியில், புகாதாள்-நுழையாதவள், அருப்பிணி-அரிதோவுக்கொப்பானவள், சுட்டதூண-சமைத்தனை, உண்டி-உண்பனன்று, உதவாதாள்-கணவனுக்குக்கொடாதவள், இல்-வீட்டில், வாழ் வாழ்கின்ற, பேய்-பேயப்போப்பானவள், இம்மூவர்-இம்மூவரும், கொண்டானை-தொண்டனை, கொல்லும்-கொல்லுகின்ற, படை-ஆயுதங்களுக்கொப்பாவர்—எ-று. * (இ-ம்) எடுவென்று நிற்பவள் யமனுக்கொப்பானவள் சமயல்வீட்டுள் புகாதவள் நோவுக்கொப்பானவள் சமைத்ததைக் கணவனுக்கிடாதவள் பேய்க்கொப்பானவள் இம்மூவரும் ஆயுதங்களுக் கொப்பாவார் என்பதாம். மூவர்-எ, ஒப்பர்-ப. (ஙு)

கடிவெனக்கேட்டுங் கடியான்வெடிபட
வார்ப்பதுகேட்டுமற் றெளிடான்-பேர்த்துமே
றிற்கொண்டினீறிலூ மேமுறுதலென்பவே
கற்கொண்டெறியுந் தவறு.

இ-ள். கடிவென-இவ்வாழ்க்கையைக்கடிவென்று, கேட்டும்-கேட்டும், கடியான்-விடான், வெடிபட-சத்தமுண்டாக, ஆர்ப்பது-தினைப்பறையடிப்பதை, கேட்டும்-கேட்டும், அதுதெளியான்-அதைதெளியான், பேர்த்தும்-மீளவும், ஓர்-ஒரு, இற்கொண்டு-மனைவியைக்கொண்டு, இனிது-இன்பமாக, இருந்தும்-இருக்கும், எழுமுதல்-முயற்சுதலையுடையவனை, கற்கொண்டு-சுக்கலக்கொண்டு, எறியும்-அடிக்கும், தவறென்ப-குற்றஞ்செய்யும், வெறியனென்றுசொல்லுவர்-புலவர்—எ-று. * (இ-ம்) இவ்வாழ்க்கையை விட்டுவிடெனக்கேட்டும் விடான் தினைப்பறையடிப்பதைக்கேட்டுத் தெளியான் மீண்டும் விவாகம்பண்ணி இல்வாழ்க்கையில் முயற்சமனைப்பவனைப்பித்தனென்றுசொல்லுவர் பெரியோர் என்பதாம். அறிவுடையோர்தோன்ற வெழுவாய் என்பது. (ச)

தலைப்தவமுயன்று வாழ்ந்தவிவாருவர்க்
கிடைபேயினியார் கட்டங்கிக்-கடைபே
புணராதென்றெண்ணிப் பொருளனைசயாற்றன்மை
புணராரிற்சென்று நிலை.

இ-ள். ஒருவர்க்கு-ஒருவருக்கு, நவம்-தவத்திலே, முயன்று-முயற்சிசெய்து, வாழ்ந்-வாழுதல், தலையே-உத்தமமே, இனியார்கண்-இனியமகளிரிடத்து, தங்கல்-தங்கிவாழ்தல், இடைப்பே-மத்திமமே, புணராதென்று-பொருள்பொருந்தாதென்று, எண்ணி-நினைத்து, பொருள்-நிரவியத்தின், நசையால்-இச்சையால், தன்மை-தன்மை, உணர

ரார்-அறிவிப்பாரார், பின்சென்று-பின்போய், நிலை-நிற்கின்றநிலையா
ணது, கடையே-அதருமமே—எ-று. * (இ-ட்) ஒருவர்க்குத் தவஞ்
செய்து வாழ்தலுத்தமம் பெண்களிட்டது வாழ்தல் மத்திமம் பொ
ருளாசையால் பிறரிடத்திற்சேவித்தல் அதருமம் என்பதாம். தலை
இடை கடை--எ, வாழ்தல்-தக்கில் நிலை-ப. (ரு)

கல்லாக்கழிப்பர் உலையாயார்நல்லவை
துவ்வாக்கழிப்ப ரிடைகள்-கடைக
ளினிதுண்ணைமாரப் பெறுபியாமென்று
முனிவிற்கண்பா டிலர்.

இ-ள். உலையாயார்-உத்தமர்கள், கல்லா-பலநூலுங்கற்று, கழி
ப்பர்-காலங்கழிப்பார்கள், இடைகள்-மத்திமர்கள், நல்லவை-நல்லவு
ணவுகளை, துவ்வா-உண்டு, கழிப்பர்-காலங்கழிப்பார்கள், கடைகள்-
அதமர்கள், இனிது-இன்பமாக, உண்ணும் - உண்டிலேம், ஆ-நி
றைய, பெறுபம்-செல்வம்பெற்றிலேம், யாமென்னும்-யாமென்று
நினைத்தும், முனிவிலல்-வெறுப்பால், கண்பாடிலர்-நித்திரைசெய்
யார்கள்—எ-று. * (இ-ட்) உத்தமர்கள்கற்றுப் பொழுதுபோக்கு
வார்கள் மத்திமர்கள் உண்டு பொழுது போக்குவார்கள் அதமர்கள்
பொருளில்லையென்று வெறுப்பாற் பொழுதுபோக்குவார்கள் என்
பதாம். உலையாயார் இடைகள் கடைகள்-எ, கழிப்பர்-கழிப்பர்-
இலர்-ப. (க)

செந்நெல்லாலாய செழுமுளைமற்றுமச்
செல்லேபோ லிளைதலா-லந்நெல்
வயனிறையக்காய்க்கும் வளவயலூர
மகனறிவுதந்தை யறிவு.

இ-ள் செந்நெல்லால்-செந்நெல்லினால், ஆய-உண்டாகிய, செ
முமுளை-செழித்தமுளை, மற்றும்-பின்னும், அச்செந்நெல்லேயாகி-
அந்தச்செந்நெல்லேயாகி, விளைதலா-விளைகின்றதால், அந்நெல்-
அந்தச்செந்நெல், வயனிறைய-வயல்முழுவதும், காய்க்கும்-காய்க்
கும், வளம்-வளப்பமுடைய, வயல்-கழனிசூழ்ந்த, ஊர-ஊருதில
த்தையுடையபாண்டியனே, தந்தையறிவு-பிதாவினறிவே, மகனறி
வு-பிள்ளையறிவு—எ-று. * (இ-ம்) பாண்டியனே பிதாவுக்குள்ளவ
றிவே பிள்ளைக்கறிவாம் என்பதாம். தந்தையறிவு-எ, மகனறிவு-ப (ஏ)

உடைப்பெருஞ்செல்வருஞ் சான்றோருங்கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங்கீழும்-பெருகிக்
கடைக்காறலைக்கண்ண தாகிக்குடைக்காபோற்
கீழ்மேலாய்நிற்கு முலகு.

இ-ள். உடை-பொருளுடைய, பெருஞ்செல்வரும்-மிக்கசெல்
வரும், சான்றோரும்-பெரியோரும், கெட்டு-அழிந்து, புடைப்பெ

ண்டிரீ-வைப்பாட்டிகளுடைய, மக்களும்-பிள்ளைகளும், கீழும்-கீழானவர்களும், பெருகி-பெருத்து, கடைக்கால்-கடையிடத்தது, தலைக்கண்ணதாகி-முதலிடத்தாகி, குடைக்கால்போல்-குடையினடைபடுகம்போல, கீழ்-கீழானது, மேலாய்நிற்கும்-மேலானதாய்நிற்கும், உலகு-இவ்வுலகம், —எ-று. * (இ-ம்) செல்வர்களும்பெரியோர்களும் வைப்பாட்டிபிள்ளைகளும் கீழ்மக்களும் பெருத்துக்குடையின்காலைப்போல முடியடியாகி அடிமுடியாகிக் கீழ்மேலாயிருக்கும்உலகு என்பதாம். * உலகு-எழுவாய்-நிற்கும்-ப. (அ)

இனியார்தந்நெஞ்சத்து நோயுணாப்பவற்நோய்
தணியாதவுள்ள முடையார்-மணிவரன்றி
வீழுமருவி விறன்மலைநன்னாட
வாழ்வின்வரைபாய்த லன்று.

இ-ள். மணிவரன்றி-மணிகளள்ளாரிக்கொண்டு, வீழுமருவி-விழுகின்றவாற்றையுடைய, விறல்-பலம்பொருந்திய, மலை-மலையையும், நன்னாட-நல்லநாட்டையுமுடையபாண்டியனே, இனியார்-இனியசிநேகிதர், தம்-தம்முடைய, நெஞ்சத்து-மனதுள், நோய்-துன்பத்தை, உணாப்ப-சொல்ல, அந்நோய்-அத்துன்பத்தை, மாதற்றணியாதா, உள்ளமுடையார்-மனமுடையவர், வாழ்வின்-வாழ்வதிலும், வரைபாய்தல்-மலையிலேறிவீழ்தல், நன்று-நல்லது—எ-று [* (இ-ம்) பாண்டியனே சிநேகர் துன்பத்தை நீக்காதவர்கள் வாழுகிறதிலும் மலைமேலேறி விழுந்திறத்தலே நல்லது என்பதாம். வரைபாய்தல்-எ, நன்று-ப. (கூ)

புதுப்புனலும்பூங்குழையார் நட்புமீரைந்தும்
விதுப்புற்றநாடின் வேறல்லப்-புதுப்புனலு
மாரியறவே யருமேயவரன்பும்
வாரியறவே யறம்.

இ-ள். புதுப்புனலும்-புதுநீரும், பூங்குழையார்-அழகியகுண்டலத்தையுடையவரது, நட்பும்-சிநேகமும், ஈரைந்தும்-இவ்விரண்டும், விதுப்புற-மயக்கமற, நாடின்-ஆராயில், வேறல்ல-வேறுபாடில்லை, புதுப்புனலும்-புதுநீரும், மாரியறவே-மழைநீங்கவே, அறும்-அற்றுப்போம், அவரன்பும்-தம்மாதரன்பும், வாரியறவே-பொருள்வரவுநீங்கவே, அறும்-அற்றுப்போம்—எ-று. * (இ-ம்) புதுவெள்ளமும் வேசையரீநட்பும் ஒன்றுகும் மழையில்லாவிடில் புதுவெள்ளமில்லை பொருளில்லாவிடில் வேசையரன்பில்லை என்பதாம். * அன்பு-எ, அறும்-ப. (ஙி)

பஃறொடை-முற்றிற்று.

பொருண்மொழிக்காஞ்சி.

அஃதாவது - யாவருக்கும் பொதுவாகிய வேதைபற் றன்மையைச் சொல்லுதலாம்.

விளக்கொளியுஞ்வெஞ்சுடர்நட்புமிரண்டுந்தீ
துளக்கறநாடின் வேறல்ல-விளக்கொளியு
நெய்பற்றகண்ணே பறமீபவஞ்சும்
கைபற்றகண்ணே பறும்.

இ-ள். விளக்கொளியும் - விளக்கினது பிரகாசமும், வெஞ்சுடர் நட்பும்-வெஞ்சுடருடையபிரகாசமும், இரண்டும்-இவ்விரண்டும், துளக்கற-குற்றமற, நாடின்-ஆராயில், வேறல்ல-வேறுபாடில்லை, நெய்பற்றகண்ணே - நெய்யைப்பற்றியபொழுது, விளக்கு - விளக்கினுடைய, ஒளியும்-பிரகாசமும், அறும்-அற்றுப்போம், (அதுபோல) அவஞ்சும்-அவ்வெஞ்சுடரும், கைபற்றகண்ணே- கைப்பொருளற்றபொழுது, அறும்-அற்றுப்போமே—எ-று. * (இ-ம்) நெய்யைப்பற்றியபொழுது விளக்கினொளியற்றுப்போம் (அதுபோல்) கைப்பொருளற்றபொழுது வெஞ்சுடர் நட்பற்றுப்போம் என்பதாம். நட்பு-ஒ, அறும்-ப, ஏ-உம்ம், அசைகள். (அ)

அங்கோட்டலைஞ்சுலாயிழையாணஞ்மொடு
செங்கோடுபோற்றுமேலென்றுண்மற்-செங்கோட்டின்
மேற்காணாரின்மையால்மேவாதொழிந்தாளே
காற்காலைக்காட்டிக்கலுழ்ந்து.

இ-ள்: அம்-அழகிய, கோடு-பக்கம், ஆகல்-அகன்ற, அல்குல்-அல்குலையுடைய, ஆய்-ஆய்ந்த, இழையாள்-ஆபரணங்களைத்தரித்தவள், நம்மொடு-நம்முடன், செங்கோடு-செவ்விய,மலைச்சிகரத்தின் மேல்பாய்தும்-எறிவிழுவோம், என்றாள்-என்றுசொன்னவள், செங்கோட்டின்மேல் - செவ்வியமலைச்சிகரத்தில்மேல்எறிவிழுதற்குக் காணப்பொருள், இன்மையால்-இல்லாமையால், கால்-தன்காலுக்கு, காலுவாதத்தினால்வரும்நோய்-நோயை, காட்டி-காண்பித்து, கலுழ்ந்து-அழுது, மேவாது-உடன்படாது, ஒழிந்தான்—எ-று. * (இ-ம்) அழகிய அல்குலையுடையவள் நம்முடன் மலைமேலேறிவிழுவோமென்றுசொன்னாள் பொருளில்லாமையால் மலைமேலேறிவிழுதற்கு நம்முடன்வராதிருந்தாள் என்பதாம். ஆயிழையாள் - எ ஒழிந்தாள்-ப, எ-மன்-அசை. (ஆ)

அங்கண்விசும்பினமார்தொழப்படுந்
செங்கண்மாலாயினுமாகமற்-றங்கைக்
கொடுப்பதொன்றில்லாைக்கொடுத்தனிரன்றுக்
கிடுப்பர்த்தங்கையாற்றிருமுழுது.

இ-ன். கொய்-கொய்யுட், தளிரன்னார்-தளிர்போலு மெனினையு டையவேலைசயர், அம்-அழகிய, கண்-இடமகன்ற, விசும்பில்-சுவர்க் கத்தில், அமரர்-தேவர்களால், தொழப்படும்-வணங்கப்படும், செ ங்கண்-சிவந்தகண்களையுடைய, மாலாகிலும்-இந்திரனாகிலும், ஒக- ஆகக்கடவது, தங்கை-தமதுகையில், கொடுப்பது-கொடுப்பதற்கு, ஒன்று-ஒருபொருளும், இல்லாரை-இல்லாதவரை, தங்கையாற்றெ ழுது-தங்கையாற்குற்பிட்டு, விடுப்பர்-விட்டுவிடுவர்—எ-று. * (இ-ம்) வேசியர்கள், இந்திரனாகிலும் கைப்பொருளில்லாரை விட்டு விடுவர் என்பதாம். தளிரன்னார்-எ, விடுப்பர்-ப, இல்லாரை-செ, மன்-ஓழியிசை. (கூ)

ஆணமினைஞ்சுத்தணிநிலக்கண்ணாரக்குத்
காணமில்லாதார்க்கடிவினையார்-காணவே
செக்கூர்த்துவொண்டாருஞ்செய்தபொருளுடைய
ரக்காரமன்னரவர்க்கு.

இ-ள். ஆணம்-அன்பு, இல்-இல்லாத, தினைஞ்சுத்து-மனைதோறும், அணி-அழகிய, நிலம்-நீலமணிப்பலம்பாலும், கண்ணார்க்க-கண்க ளாயுமுடையவேலைசயர்க்கு, காணம்-பொருள், இல்லாதார்-இல்லா தவர்கள், கடிவினையார்-விலக்குத்தொழிலாளர், காணவே-யாருங் காண, செக்கு-செக்கை, ஊர்த்து-செலுத்தி, கொண்டாரும்-கொ ண்டவரும், செய்த-தேடிய, பொருளுடையார்-திரவியமுடையவர், அவர்க்கு-அவ்வேலைசயர்க்கு, அக்காரமன்னர்-சருக்கரைக்கொப் பாவார்—எ-று. * (இ-ம்) வேலைசயர்க்குப் பொருளில்லாதார் விலக் குத்தொப்பாரும் பொருளுள்ளவர் உசுத்தாகிலும் அவ்வேலை யர்க்குச் சருக்கரைத்தொப்பாவார் என்பதாம். இல்லாதார்-எ, அவ னர்-ப, கடி-செ, உடையார்-எ, அன்னர்-ப, அக்காரம்-செ. (ச)

பாம்பிற்கொருதலைகாட்டி யொருதலை
தேம்படுதெண்கயத்துமீன்காட்டு-மாங்கு
மலங்கண்ணசெய்கைமகளிர்தோள்சேர்வார்
விலங்கண்ணவெள்ளறிவிலார்.

இ-ள். விலங்கண்ண-திருகுங்கண்ணையுடைத்த, வெள்ளறிவிலர்-வெள்ளறிவுடையார், பாம்பிற்கு-பாம்பிற்கு, ஒருதன்-ஒருதலையை, காட்டி-காண்பித்து, ஒருதலை-மற்றொருதலையை, தேம்படு-தேனு ண்டாகுமலர்பொருந்திய, தெண்-தெளிந்த, கயத்து-தடாகத்தில், மீன்-மீனுக்கு, காட்டும்-காண்பிக்கும், மலங்கண்ண-விலாங்குமீனை யொத்த, செய்கை-செய்கையினையுடைய, மகளிர்-வேசையர், தோ ள்-தோள்களை, சேர்வார்-அணைவார்—எ-று. * (இ-ம்) அறிவில்லார் விலாங்குமீனைத்தொப்பாகிய செய்கையையுடைய வேசையரைச் சேர்வார்கள் என்பதாம். வெள்ளறிவிலர்-எ, சேர்வர்-ப, தோள்- செ, ஆங்கு-அசை. (ரு)

பொத்தநூழ்கல்லும்புணர்பிரியாவன்றிலும்போ
னித்தலுநம்மைப்பிரியலமென்-றுளாதந
பொற்றொடியும்போர்த்தகச்கோடாயினண்ணெஞ்சே
நிற்றியோபோதியோநீ.

இ-ள். நன்னெஞ்சே-நல்லமனமே, நூல் - நூலிற்சேர்க்கப்பட்ட, பொத்த-துளைத்த, கல்லும்-மணிகளும், புணர்பிரியா-இணைபிரியாத, அன்றிலும்போல்-அன்றிற்பறவையும்போல, நித்தலும்-எந்நாளும், நம்மை-நம்மை, பிரியலமென்று - பிரியோமென்று, உளாத்த-சொன்ன, பொற்றொடியும்- பொன்வளையலையுடையவளையும், போர்த்தகர் - போர்செய்யுமாட்டுக்கடாவின், கோடாயினள்-கொம்புபோலாயினள், நீ-நீ, நிற்றியோ-என்னிடத்துநிற்கிறையோ, போதியோ-அவளிடத்திற்போகிறையோ—எ-று. * (இ-ம்) மனமே மணியும் நூலும்போலும் ஆணன்றியும் பெண்ணன்றியும் போலும் எந்நாளு நம்மைப்பிரியோமென்று சொன்னவளையும் பகையானள் நீ என்னிடத்திருக்கிறையோ அவளிடத்திற்போகிறையோ—என்பதாம். நீ-எ, நிற்றியோ போதியோ-ப. (சு)

ஆமாபோனக்கியவர்கைப்பொருள்கொண்டு
சேமாபோற்றுப்புறாவுஞ்சில்லுக்கணின்றினை
யேமாந்தெடுதென்றிருந்தார்பெறுபவே
தாமாம்பலநானை.

இ-ள்: ஆமாபோல்-காட்டுப்பசுவைப்போல, நக்கி-இன்புறநக்கி, அவர்கை-அவர்கையிலிருந்தும், பொருள்கொண்டு-பொருளைக்கைக்கொண்டு, சேமாபோல்-இடபமாகியமிருகம்போல, குப்பறாவுள்-குறித்தேவுள், சில்லுக்கண்-காலியாசபவேலைசெய்யிடத்து, அன்றினை-அன்றைப, ஏமாந்து - மெய்ப்பென்றேமாந்து, எமதென்றிருந்தார்-எம்முடையவதென்றிருந்தவர், தாள்-தாங்கள், பலரால்-அனேகரால், நகை - இழிச்சிரிப்பு, பெறுபவே - பெறுவார்கள்—எ-று: * (இ-ம்) காட்டுப்பசுவைப்போல இன்புறநக்கிப்பொருளைக்கைக்கொள்ளும்வேலையாண்பை மெய்யென்றிருந்தவர் பலரா லிகழ்ச்சிபெறுவர்-எ-ம். இருந்தவர்-ச, பெறு-ப, நகை-செ, ஆம்-அசை. (எ)

ஏமாந்தபோழ்கினினிவர்போன்றின்னாய்த்
தாமார்ந்தபோதேதகச்கோடாமாலெக்கிற்
றந்நெறிப்பெண்டிர்தடமுலேசாரோ
செந்நெறிச்சேர்ந்தமென்பார்.

இ-ள் செந்நெறி-செவ்வையானவழியில், சேர்ந்தமென்பார்-அடைவோமென்றுசொல்லுவோர், ஏமாந்தபோழ்தின் - சாமுகர் பொருளேமாந்தகாலத்து, இனியார்போன்று - அவர்கின்பமுடையார்போலாகி, தாமார்ந்தபோதே-அவர்பொருளில்லாதிச்சித்தகாலத்து, இன்னாய்-சத்துருவாய், தகர்க்கோடாம் - ஆட்டுக்கடாவின்


கொம்புபோலாகும், மானேக்கின்-மான்போலும்பார்வையுடைய, தன்னெறி-தமதுகுலவழியிலிருக்கும், பெண்டிர் - வேசையர்களுடைய, தடமுலை-பருத்தமுலையினிடத்து, சேரார்-அணையார்-என்று. ※ (இ-ம்) நல்வழிச்சேர்வோமென்பவர்கள் காமுகர் பொருள் கொடுக்குங் காலத்துநேசமாகவும், கொடாக்காலத்தும்பகையாகவுமிருக்கும் வேசியரைச்சேராக்கள் என்பதாம். என்பார் - எ, சேரார்-ப, முலை-செ, எ-அசை. (அ)

ஊறுசெய்நெஞ்சந்தம்முள்ளடக்கிவொண்ணுதலார்
தேறமொழித்தமொழிகேட்டுத்-தேறி
யெமவொன்றுகொள்வாருங்கொள்பவேவலார்க்குந்
தமரல்லர்தம்முடம்பினர்.

இ-ள். வொண்ணுதலார் - ஒளிபொருந்தியநெற்றியையுடையவர், ஊறு-வருத்தம், செய்-செய்யும், நெஞ்சம்-மனதை, தம்முள்ளடக்கி - தங்களுக்குள்ளடக்கி, தேற - தெளிய, மொழித்த-சொன்ன, மொழி-சொல்லை, கேட்டு - கேட்டு, தேறி - அறிந்து, எமவொன்று-எம்முடையவவொன்று, கொள்வாரும்-கொள்பவரும், கொள்ப-கொள்ளுவர், வார்க்கும்-எவர்க்கும், தமரல்லர்-சுற்றத்தாரல்லர், தம்முடம்பினர்-தம்முடம்பைத்தமக்காகவுடையவர்—என்று. ※ (இ-ம்)வேசையர்சொன்ன சொல்லைக்கேட்டு அவர்சொன்னதம்முடையவவொன்றுகொள்பவர் யாவர்க்குஞ் சிறேதாரல்லர் தம்முடம்பைத் தமக்காகவுடையவர் என்பதாம். தம்முடம்பினர்-எ, தமரல்லர்-ப-அசை. (கு)

உள்ளமொருவனுழையதாவொண்ணுதலார்
கள்ளத்தாற்செய்யுங்கருத்தெல்லாந்-தெள்ளி
யறிந்தவிடத்தும்மறியாரம்பாவஞ்
செறிந்தவுடம்பினர்.

இ-ள். ஒள்-ஒள்ளிய, நுதலார் - நெற்றியையுடையவேசையர், உள்ளம்-தமதுள்ளத்து ஒருவன்-ஒருவன், உழையதா-இட்மாகுள்ளத்தால்-களவால், செய்யும்-செய்யும், கருத்தெல்லாம்-தினைவெல்லாம், தெள்ளி-ஆராய்ந்து, அறிந்தவிடத்தும்-அறிந்தவிடத்தும், பாவம்-தீவினை, செறிந்த-நெருங்கிய, உடம்பினர் - உடம்பினையுடையவர், அறியார்-அறிபாதவராவர்—என்று. ※ (இ-ம்) பாவிகள் வேசையர்மனதையறிந்து மறியாதவராம் என்பதாம். உடம்பினர் - ஏ, அறியார்-ப, ஆம்-அசை. பொதுமகளிர்-முற்றிற்று. (ங)



ரா.சு-ம்-அதிகாரம்.

கற்புடைமகளிர்.

அஃதாவது-சற்புள்ளமாதர்தன்மையைச்சொல்லுதலாம்.

அருந்தெறற்கற்பினணியாணியன்ன
பெருந்தெய்வப்பெண்டிரொனிஞாட்-விரும்பிப்

பெறுநசையுடாற்பிறிற்பாரின்மையேபேணு
நறுநுதலாரணங்கன்வைத்தகூலை.

இ-ள். அரும்பெறல்-பெறுதற்கரிய, கற்பின் - கற்பையுடைய, கயிராணியன்ன-இந்திராணிக்கொப்பான, பெருந்-பெரிய, பெயர்-பெயரையுடைய, பெண்டிரானிறும்-மனைவிபாகிலும், விருப்பிறஇச்சித்து, பெறற்(அநுபவிக்கப்)பெற்ற, நசையால்-இச்சையால், பிறன்பார்-தன்னழகைக்கண்டிறிற்பவர், இன்மையே-இல்லாமையையே, பேணும்-பாதுகாக்கும், நறுநுதலால்-பரிமளநெற்றியையுடையாள், நன்மை-(நாயகனைடைபு) நன்மைக்கு, துணைதுணையாவாள்—எ-று. * (இ-ம்) இந்திராணிக்கொப்பான செல்வமுள்ளவளாகிலும் தன்னைப் பிறரிச்சியாதிருக்க வலிய்காரத்தையுடையாதிருப்பவளே கற்புடையவள்-எ-ம். நறுநுதலாள்-எ, கூலை-ப(உ)

குடநீராட்டுண்ணுறு மிடிக்கட்பொழுதும்
கடனீறவுண்ணுறுங் கேளிர்-வரினும்.
கடனீர்மைகையாறுக் கொள்ளுமடமொழி
மாதர்மனையாட்சியாள்.

இ-ள். குடநீர்-ஒருகுட்நீரால், ஆட்டு-சமைத்து, உண்ணுர்-புசிக்கும், இடுக்கட்பொழுதும்-தரித்திரகாலத்தும், கடல் - கடலிலே, நீர்-நீரை, அற-முற்ற, உண்ணும்-உண்ணும், கேளிர்-இனத்தார், வரினும்-வந்தாலும், கடனீர்மை - செய்கடமை, குணங்களைகையாறு-ஒழுக்கவழியாக, கொள்ளும் - கொண்டிருக்கும், மடமொழி-மென்சொல்லையுடைய, மாதர்-மாதர்கள், மனை-மனைவாழ்க்கைக்குத்தக்க, மாட்சியாள்-பெருமையுடையவள்—எ-று. * (இ-ம்)ஒருகுடநீரிற் சமைத்துண்ணும் வறுமைக்காலத்தும் கடனீர்மை முற்றுகக் குடிக்குஞ் சுற்றத்தார்வந்தாலுஞ் செய்கடமையைக் கொண்டிருப்பவளே இல்வாழ்க்கைக்குரிய மனைவியளாம் என்பதாம். மாதர்-எ, மாட்சியாள்-ப. (உ)

நாலாறுமாறுய் நனிசிறிதாவெப்புறினு
மேலாறுமேலுறை சோரினுமேலாய
வல்லாளாய்வாழுமூர் தற்புகழுமாண்கற்பி
னில்லாண்மார்த்தசெயில்.

இ-ள். நாலாறும்-நாலுநிக்கும், ஆறுய்-வழியாய், நனி-மிகவும், சிறிதாய்-சிறியதாய், எப்புறனும்-எவ்விடத்தும், மேலாறு-மேல்வழியாய், மேல்-தம்மேல், உறை-மழைநீர், சோரினும்-சொரிந்தாலும், மேலாய-மேலாகிய தருமங்கள்செய்ய, வல்லாளாய் - வலிமையுடையவளாய், வாழும்-தான்வாழும், ஊர்-ஊரார், தற்புகழும்- தன்னைப்புகழும், மாண்-பெருன்மையொருந்திய, கற்பின் - கற்புடைய, இல்லாள்-மனையாள், அார்த்தசெ-டொருந்தியதே, இல்-பிணையாகும், எ-று. * (இ-ம்)வறுமையிலுந் தருமஞ்செய்யு மனமுடையவள் வா

ழ்ந்திருப்பதே வீடாகும் என்பதாம். இல்-எ, அமரீத்தது-ப. (க)

கட்கினியாள்காதலன் காதல்வகைபுனைவா
ளுட்குடையாளூர்தா னியல்பிறழ்-லுட்கி
யிடனறிந்தூட்டி யினிதிணைரு
மடமொழிமாதரா ளென்.

இ-ள். கட்கு-கண்ணுக்கு, இனியாள்-இனியவளாய், காதலன்-நாயகன், காதல்வகை-இச்சிக்கத்தக்கவைகளை, புனைவாள்-அலங்கரிப்பவளாய், உட்குடையாள்-அஞ்சத்தக்கவள்ளாய், ஊர்-ஊராரிக்கு, நான்-நாணத்தக்க, இயல்பிறழ்-குணமுடையவளாய், உட்கி-நாயகனுக்குப்பயந்து, இடனறிந்து-சமயமறிந்து, ஊடி-பிணங்கி, இனிதின்-இன்புறத்துடன், உணரும்(புணர்தலை) யறியும், மடமொழி-மெல்லியசொல்லுடைய, மாதராள்-மாதானவள், பெண் - கற்புடைப் பெண்ணென்பவள்—எ-று. * (இ-ற்) கண்ணுற்கினியளாய் நாயகனுக்குவந்தவளாய் ஊரார்மதிக்கத் தக்கவளாயிருப்பவளே கற்புடையவள் என்பதாம். மாதராள்-எ, பெண்-ப. (ச)

எஞ்ஞான்றுமெங்ணவொத்தோண்மேற்-சேர்ந்தெழிலு
மஞ்ஞான்றுகண்டேம்போ னுணுகும்-மெஞ்ஞான்று
மயனலகெழீஇனர்கொல்லோபொருணசையாற்
பன்மார்புசேர்ந்தொழுகுவார்.

இ-ள். எஞ்ஞான்றும்-எந்நாளும், எங்ணவர்-எம்முடையநாயகர், எந்தோள்மேல் - எம்முடையதோள்களின்மேல், சேர்ந்தெழிலும்-சேர்ந்தெழுந்தாலும், அஞ்ஞான்று-விவாகஞ்செய்தநாள், கண்டேம்போல-யாம்கண்டாற்போல, நாணுகும்-வெட்கத்தையுடையோம், எஞ்ஞான்றும் - எந்நாளும், பொருள் - பொருளின், நசையால்-இச்சையால், பன்மார்பு - பலருடையமார்புகளை, சேர்ந்தொழுகுவார்-சேர்ந்துநடப்பவர், என்னகொலீயினர்-சொல்லோ என்னவாகத்தழுவினரோ—எ-று. * (இ-ம்) எந்நாளுமெங்கணவனைத்தழுவினும் விவாகஞ்செய்தநாளிற் றழுவினதுபோல நாணமடைகிறன பொருளிச்சையால் எந்நாளும் புதுமையைச் சேர்பவர்க ளிளப்படித்தழுவினரோவென்றுள்ளென்பதாம். ஒழுகுவார்-எ, என்னகொல்லே-ப, ஆல்-அசை. (ஞ)

உள்ளத்துணர்வுடையா னெறிய நூலற்றல்
வள்ளன்மைபூண்டான்க ணொன்பொரு-டெளிய
வாண்மகன்கையி லயில்வாளனைத்தமோர்.
நாணுடையாள்பெற்ற நலம்.

இ-ள். உள்ளத்து-இதயத்து, உணர்வுடையான்-அறிவுடையவன், நெறிய நூலற்று-கற்றறுத்தபன்போலும், வள்ளன்மை - கொடுக்குந்தன்மை, பூண்டான்கண் - கொண்டவனிடத்து, ஒன்பொருள்-ஒள்ளியபொருளுரைப்பதன்படியே, தெள்ளிய - தெளிந்த, ஆண்மகன்

கையில்-ஆண்மகன்கையில், அயிர்வாள்-கூறியவாள், அனைத்து-ஒப்டாகுர்; நாணுடையாள்-நாண்முடையவள், பெற்றநலம்-பெற்றிருக்கின்றகற்பினலம்— எ-று. * (இ-ம்) அறிவுடைபோன் கற்றகல்வி பயன்டுதல்போலும் கொடுப்பவன்கையிற் பேரிருள் படர்ந்படும் நாணமுடையவள் பெற்றகற்புச் கத்தவீரன் கைவாள்போலுட்என் பதாம் நலம்-எ, அனைத்து-ப, ஆல்-அசோ-அசைகள். (கூ)

கருங்கொள்ளுஞ்செங்கொள்ளுந்தாணிப்பதக்கென்
றொருருங்கொப்பக்கொண்டார்குமூ-றொருங்கொவ்வா
நன்னுதலார்த்தோய்த்தவளைமார்பநீராடா
தென்னையுஞ்சேவருவான்.

(கருத்து) தலைவி தோழிக்குச்சொல்லியது.

இ-ள். ஊரன்-தலைவன், ஒருங்கொவ்வா - முற்றமொவ்வாத, நன்னுதலார்-நல்லநெற்றியையுடையாரை, தோய்த்த-சேர்த்தவளை, மார்பும்-மலைபோலுமார்பு, நீராடாது-நீரிலேழுமுகாது, என்னையும்-என்னையும், சேய-சேர, வரும்-வருவான், இஃதெது-(போலினில்) கருங்கொள்ளும்-கருத்தகொள்ளையும், செங்கொள்ளும்-சிவத்தகொள்ளையும், தாணிப்பதக்கென்று- பணத்துக்குத்தாணிப்பதக்கென்று, ஒருங்கொப்பசரியொக்க, கொண்டானும்-கொண்டான்போலுமாகுர் —எ-று. * (இ-ம்) என்னுயகன் பலமாதனைச்சேர்ந்துநீராடாது என்னைச்சேரவருவான் இஃதெதுபோலினில் ஒருவன் கருங்கொள்ளையுஞ் செங்கொள்ளையும் பணத்துக்குத் தாணிப்பதக்கென்று கொண்டான்போலும் என்பதாம். ஊரன்-எ, வரும்-ப. (எ)

கொடியவைகூறுநிபாணரீகூறி
னடிபைபவிட்டோடுதுங்கிச்சென்று-துடியி
னிடக்கண்ணனையம்மாமூரற்கதனுல்
வலக்கண்ணனையார்க்குரை.

இ-ள். பாண-பாணனே, கொடியவை-கொடியசொற்களை, கூறுநி-சொல்லாதே, கூறின்-நீசொல்லில், யாம்-நாம், ஊரற்கு-நாயகனுக்கு, துடியின்-உடுக்கையின், இடக்கண்-இடதுபக்கத்தை, அனையம்-ஒப்பானேம், அதனுல்-அதனுலே, அடி-அடியை, வைப்-மெள்ள, இட்டு-வைத்து, ஒதுங்கி-பதுங்கி, சென்று-போய், வலக்கண்-அடுக்கையின்வலதுபக்கத்தை, அனையார்க்கு-ஒப்பானவர்க்கு, உரை-சொல்வாயாக—எ-று. * (இ-ம்)பாணனே-கொடியசொற்களைச்சொல்லாதே நீசொல்லில் எமதுநாயகனுக்குடுக்கையினிடதுபக்கத்தையொப்பானேன் அதனுல் உடுக்கையின் வலதுபக்கத்தையொப்பானவருக்குச் செவ்வையாகவென்பதாம். நீ-எ, உரை-ப (அ)

சாய்ப்பறிக்கநீர்திகழுந்தண்வயலூரன்மீ
நிப்பறக்கநொந்தேனும்பானைமற்-றீப்பறக்கத்

தாக்கிமுலைபொருத்தண்சாந்தணிவகல
நோக்கியிருந்தேனும்யான்.

இ-ள். சாய்ப்பறிக்க-கோதைபைப்பிடுங்க, நீர்திகழும்-நீர்விளங்குஞ், தண்வயல்-குளிர்ந்தவயலையுடைய, ஊரன்மீறு-நாயகன்மேஸ், ஈப்பறக்க-ஈயானதுபறக்க, நொந்தேனும்- நொந்தவளும், யானேனானே திப்பெறி,பறக்க-பறக்க,முலை-வேசையர்முலையால் தாக்கி-மோதி,பொருத-போர்செய்ததண்சாந்து- குளிர்ந்தசந்தனத்தை அணிவகலம்-அணிந்தமார்பை, நோக்கி-பார்த்து,இருந்தேனும் இருந்தவளும், யான்-நானே,—எ-று.*(இ-ம்)எமதுநாயகன்மேலே ஈப்பறக்கநொந்தவளுநானே இப்போது வேசையர்கமுலைகளாலே திப்பறக்க மோதிப்போர்செய்தமார்பைப்பார்த்திருந்தவளுநானே எ-ம். யான்-எ,நொந்தேன்-ப,யான்-எ,இருந்தேன்-ப,மன்-அசை.()

அரும்பனிழ்தாரிறைவனெண்மருளுமென்று
பெரும்பொய்யுரையாதிபாண-கரும்பின்
கடைக்கண்ணேயுதாமுரற்கதலை
விடைக்கண்ணேயர்க்குரை.

இ-ள். பாண-பாணனே, அரும்பனிழ்- முகைவிரிந்த, தாரிறை-மாலையையுடையவன், எம்மருளுமென்று - எம்மைக்கருள்செய்வானென்று, பெரும்பொய் - பெரியபொய்யை, உரையாதி-சொல்லாதே, நாம்-யாம், ஊரற்கு-நாயகனுக்கு, கரும்பின்-கரும்பினது, கடைக்கண் -கடையிடத்தே, அனையும் - ஒப்பானேனும், அதனால்-அதனால், இடைக்கண்-கரும்பினிடவிடத்தை, அனையார்க்கு-ஒப்பானவர்க்கு, உரை-சொல்வாக —எ-று. *(இ-ம்) பாணனேநாயகனருள் செய்வானென்று பொய்சொல்லாதே நாயகனுக்குநாய கரும்பின்கடையிடைத்தைஒப்பானேனும் அதனாலேகரும்பினிடவிடத்தையொப்பானவரிக்குச் சொல்வாயாக என்பதாம்.நீ-எ, உரை-ப, (ஏ)

கற்புடைமகளிர்-முற்றிற்று

இரண்டாவது - பொருட்பால் - முற்றிற்று.

மூன்றாவது.

காமத்துப்பால்.

அஃதாவது-காமத்தின்பகுதியைச்சொல்லுதலாம்.

சுஎ-ம்- அதிகாரம்.

காமநுதலியல்

அஃதாவது-காமத்தன்மையைச்சொல்லுதலாம்.

முயங்காக்கற்பாயும்*பசலைமற்றாடி
யுயங்காக்காதற்பின்றுய்காமம்-வயங்கோத
நிலாத்திரைவையகத்து நீள்கழிக்கண்சேர்ப்ப
புலாப்புலப்பதோராறு.

இ-ள். வயங்கும்-பிரகாசிக்கும், ஓதம்-சடலோசை, நில்லா-நில்லாமல், திரை-அலைகள், அலைக்கும்-அலைக்கின்ற, நீள்-நீண்ட, கழி-கழிபொருந்திய, தண்-குளிர்ந்த, சேர்ப்ப-சாயையுடையபாண்டிவனே, முயங்காக்கால்-புணராவிடில், பசலை-தேமல், பாயும்-மெய்யிலுண்டாம், உழை-பிணங்கி, உயங்காக்கால்-வருந்தாவிடில், காமம்-காமமாகிய, உப்பு-இன்பம், இன்றாம்-இல்லையாம், புல்லா-கூடி, புலப்பது-பிணங்குவது, ஓராறு-ஒருவழியின்பமாம்—எ-று. ※ (இ-ம்) பாண்டியனே புணராவிட்டாற்றோளிலுண்டாகும் பிணங்கிச்சோராவிடலிற்பசலை சேர்ந்துபிணங்குதலொருவழியின்பம் என்பதாம், பசலை-காமம், எழுவாய் பாயும் உப்பின்றும் பயனிலை. (க)

தம்மமர்காதலர் தார்சூழணியகலம்
விம்மமுயங்குந் துணையில்லார்க்-கிம்மெனப்
பெய்யவெழிலி முழங்குந்திசையெல்லா
நெய்தலறைறத்தன்னீர்த்து.

(கருத்து) பருவங்கண்டற்றாளாகியதலைவிதோழிக்குச் சொல்லியது
இ-ள். தம்-தம்மால், அமர்-இச்சிக்கப்பட்ட, காதலர்-நாயகரது, தார்சூழ்-மாலைசூழ்ந்த, அணியகலம்-அழகியமார்பை, விம்ம-அழுந்த, முயங்கும்-தழுவும், துணையில்லார்க்கு-துணையில்லாதவர்க்கு, இம்மென-இம்மென்னும்மாசையாய், பெய்ய-பொழிய, எழிலி-மேகம், முழங்கும்-சத்திக்கும், திசையெல்லாம்-திக்கெல்லாம், நெய்தல்-நெய்தற்பறை, அறைறந்தன்ன-அறைந்தாற்போலும், நீர்த்து-குணமுடையது—எ-று. ※ (இ-ம்) தோழியே நாயகர் மார்பையணையுந்தோழியில்லாதவர்க்கு மேகஞ்சத்திக்குந் திசையெல்லாஞ்சாப்பறையடித்தாற்போலும் என்பதாம். முழக்கம் - எ, நீர்த்து-ப, இம்மென்னல் ஓசைக்குறிப்பு. (உ)

கம்மஞ்செய்மாக்கள் கருவியொடுக்கிய
மம்மர்கொண்மாலை மலராய்ந்து-பூக்கொடுப்பாள்
கைம்மாலையிட்டுக் கலுழ்ந்தாடுணையில்லார்க்
கிம்மாலையென்செய்வ தென்று.

இ-ள். கம்மம்-தொழில், செய்-செய்யும், மாக்கள்-மக்கள், கருவி-தம்முடைய கருவிகளை, ஒடுக்கிய-அடக்கிய, மம்மர்-மயக்கம், கொள்-கொண்டிருக்கிற, மாலை-மாலைக்காலத்து, மலர்-மலரை, ஆய்ந்து-தெரிந்து, பூ-பூவை, தொடுப்பாள்-தொடுக்குமவள், துணை-துணைவரை, இல்லார்க்கு-இல்லாதவர்க்கு; இம்மாலை-இம்மாலையான, என்-என்ன பயன், செய்வதென்று-செய்குவதென்று, கை-கையிலிருக்கின்று, மாலை-மாலையை, இட்டு-போட்டு, கலுழ்ந்தாள்-அழுதாள்-எ-று ※(இ-ம்) சிலவனே மாலைக்காலத்திலேபூத்தொடுத்ததலைவியானவள் நாயகனில்லாதவர்க்கு இம்மாலையென்னசெய்வதென்றுகைம்மாலையைப்போட்டழுதாள்என்பதாம். தொடுப்பாள்-எ, கலுழ்ந்தாள்-ப

செல்சுடர்நோக்கிச் சிநரிக்கண்கொண்டநீர்
மெல்விரலாழ்தெரியா விம்மித்தன்-மெல்விரலி
னுள்ளவத்துநங்குற்ற மெண்ணுங்கொலத்தோதன்
றோள்வைத்தகூனமேற் சிடந்து.

(கருத்து)விலைமுற்றிமீண்டதலைமகன்பாகன்கேட்பச்சொல்லியது

இ-ள். செல்-படுகின்ற, சுடர்-சூரியனை, நோக்கி-பார்த்து, சிநர்-சிந்திய, அரி-செவ்வரிபரந்த, கண்-கண்கள், கொண்ட-கொண்டிருக்கிற, நீர்-நீரை, மெல்-மெல்லிய, விரல்-விரலால், ஊர்-முறைமுறையாக, தெரியா-வாங்கித்தெரிந்து, விம்மி-அழுது, தன்-தன்னுடைய, மெல்-மெல்லிய, விரலின்-விரலால், நாள் (நாம்பிரிந்த) நாள்களை, ஊவத்து-வைத்தெண்ணி, அகனமேல்-அகலமேலே, தன்-தனது, தோள்-தோளை, வைத்து-வைத்து, கிடந்து-படுத்து, அந்தோ-ஐயோ, நம்-நம்முடைய, குற்றம்-குற்றங்களை, எண்ணுங்கொல்-நினைப்பாளோ-என்று. *(இ-ம்) பாகனே தலைவியானவள் நாம் பிரிந்துவந்த நாள்களை யெண்ணிக் கண்ணீர்விட்டு அழுவாளோ என்றால் என்னதாம். தலைவி-எ, எண்ணுங்கொல்-ப, குற்றம்-செ. (க)

கண்கயலெண்ணுங் கருத்திறற்காதலி
பின்சென்றநம்ம சிறுசிரல்-பின்சென்று
மூக்கிலெழுத்துமெறிகல்லாவெண்புருவம்
கோட்டியவில்வாக் கரித்து.

(கருத்து) தலைமகன்றூதுற்றதனைப் பாங்கற்குச்சொல்லியது.

இ-ள். கண்-நாயகிகண்களை, கயலென்னும்-செலென்றுசொல்லும், கருத்தினால்-கருத்தால், காதலி-அந்நாயகி, பின்சென்றது-பின்னேதொடர்ந்தது, சிறுசிரல்-சிச்சிலிக்குருவி, ஒண்புருவம்-ஒள்ளியபுருவம், கோட்டிய-வளைத்த, வில்வாக்கு-வில்வளைத்தாற்போலிருத்தலை, அறிந்து-தெரிந்து, பின்சென்றம்-பின்னேதொடர்ந்துபோய், ஊக்கி-உறுதிகொண்டு, எழுந்தும்-எழுந்தும், எறிகல்லா-எறியாட்டாது—எ-று. *(இ-ம்) பாங்கனே தலைவிகண்களைச் செலென்றுசொல்லுங் கருத்தால் சிச்சிலிக்குருவி அந்நாயகி பின்னேசென்றது சென்றும் புருவத்தை வில்லென்றறிந்து குத்தாமல்விட்டது—என்பதாம். சிரல்-எ, எறிகல்லா-ப, அம்மை-இடைச்சொல். (ங)

அரக்காம்பலறுமுவாயம்பருங்கிற்கண்ணே
பரற்பணைமாற்றின் கொல்லோ-வரக்காந்த
பஞ்சிகொண்டீட்டியதும் பைவனைப்பையெனவென்
றஞ்சிப்பின்வாங்கு மடி.

(கருத்து) மகட்போக்கியதாயர் செவிலிக்குச்சொல்லியது.

இ-ள். அரக்காம்பல்-செவ்வல்லிப்பூப்போலும், நாறும்-மணம்வீசும், வாய்-வாயையும், அர்-அழகிய, மருங்கிற்கு-இடையினையுமுடையாட்கு, அரக்கு-மெல்லியதன்மை, ஊர்ந்த-தோய்ந்த, பஞ்சிகொண்

டி-பஞ்சைக்கொவ்வி, ஊ-டறும்-ஊட்டியழுகுசெய்யிறுப், மை யெனப்பையவிரவென்று (அதற்குரொத்து) மெத்லெனமெல்லெ னவென்று, அஞ்சி-ஊடட்டுதற்கஞ்சி, பின்-பின்னே, வாங்கும்-வாங் கிப்போகும், அடிபாதங்கட்கு, பால்-பருக்கைக்கற்களையுடைய, சூ ளும்-காட்டுவழியிலே, அன்னை-ஐயோ, ஆற்றிற்கொல்லோ-பொ றுத்தனவோ—எ-று. * (இ-ட்) செவ்விபெய நமதுமகளுடையமெல் லிடைகளுக்குச் செம்பஞ்சுழல்மெல்லிதெனவெண்டாளோ அவர் ள்பாதங்கள் பருக்கன் கற்களையுடைய காட்டிற்செல்லச் சகித்தன வோ வென்பதாம். அடி-ஏ, ஆற்றிற்கொல்லோ-ப. (கூ)

ஓலக்கணைக்கொரவியடங்குபுன்செக்கர்
மாலைப்பொழுதில்மனைத்தார்பிரிவஞ்சி
மாலைபரித்திட்டழுதாள்வனமுலைமேற்
கோலஞ்செய்யாதுதற்றிர்த்து. [ரகு.

(க) தலைமகள் பிரிவுடன்படாமையைத்தோழி தலைமகற்குச்சொல்லி

இ-ள். ஓலை-ஓலையையழுதுட்ட, கணக்கர்-கணக்காகத், ஓலி-ஓசை, அடங்குமிட-ஒடுங்குமிடம், புன்-புல்லிய, செக்கர்-செழ்மையையுடைய மாலைப்பொழுதில்-மாலைக்காலத்திலே, மனைத்தார்-கூடினவர், பி வு. பிரிவை, உள்ளி-நினைத்து, மாலை-பூமாலையை, பரித்திட்டு-அறுத்தெ றிந்து, வனம்-முழையை, முலைமேல்-முலைமேல், கோலம்-அழகு, செ ய்-செய்திருக்கிற, சாந்தம்-சந்தனத்தை, நிரீர்த்து-அழித்து, அழு தாள்-புலம்பினாள்—எ-று. * (இ-ம்) தலைவனே தலைவி மாலைக்கால த்திலே உமதுபிரிவைநினைத்து மலர்மாலையுடையதைத்தெறித்து முகில் மீதணிந்த சந்தனக்கோலத்தையு மழித்தழுதாள் என்பதாற். தலைவ னே, அழுதாள்-ப. (உ)

கடக்கருங்கானைத்துக் காலைதிரிவுழி
நடக்கவும்வல்லியோ வென்றி-சுடர்த்தொடீஇ
பெற்றுவருவன் பெருங்குறினாடனைநிலையே
கற்றனம்தூரு மாறு. [லியது.

(க) உடன்போக்குக்குப்பொருந்தினதலைமகள் தோழிக்குச்சொல்

இ-ள். கடக்கரும்-கடத்தற்கரிய, கானத்து-காட்டிலே, காலை-நாளதகுதியதாகிய, பின்-பின்னாள், நாளை-நாளை, நடக்கவும்-நடந்து போகவும், வல்லியோ-வல்லமையையுடையோ, என்றி-என்றெண் ணுவிளங்கிய, சுடர்-விளக்கினை, தொடீஇ-வளைவல்களையுடையாய், ஒருவன்-ஒருவன், பெரும்-பெரிய, குறினை-குறிஞ்சியை, பெற்றன் அடைந்தான், அந்நிலையே-அப்பொழுதே, ஆம்நம-அத்தகுறிஞ்சியை, ஊருமாறு-செலுத்துமுறைமையினையும், கற்றன்-கற்றவல்லவ னென்று (அதுபோலக்காதலன்பின்சேறற்கருமையில்லை) —எ-று * (இ-ம்) தோழியே நாளை காட்டுமேல்நடக்க வல்லமையுடையவளோ வென்று கேட்டாய் ஒருவன் குறிஞ்சிகொண்டால் அதன்மேலேற

வடு க்தினிருப்பான் என்றாள் என்பதாம். அருமைதோன்ற எழு
வாய்-இல்லை-தோன்றுப்பயனிலை. (அ)

முலைக்கண்ணுறுமுத்து முழுநிமையுரிப்புல்லு
நிலக்கணம்பாது மறியேன்-கலக்கணைய்
வெங்கைவெளருவதறி செலியபோலுமென்
பூம்பாணைவளைத்த நுறி.

(அ)மகளைப்பேணிய தாயானவள் கவலையடைந்து சொல்லியது.

இ-ள். முலைக்கண்ணுறு-இளமுலைக்காம்புகளையுற், முத்தும்-முத்
துமாலையையும், நிழுநிமையு-சரீரமுழுமையுற், புல்லும்-தன்னு
டலிலழுந்தவெய்தணைத்தழுவிக்கொண்ட, நிலக்கணம்-அடையாளம்
யாதும்-எதுவுற், அறியேன்-நேற்றறிந்திலேன், கலக்கணைம்-மான்
கூட்டங்கள், வெங்கை-வெங்கையுக்கு, வெளருவம்-பயந்தோடும், நெ
நுறி-வழியை, செலியபோலும்-செல்வாள்போலுற், என்-எனது, பூம்
பாணை-அழகியபெண்ணானவள், செய்த-பண்ணின, நுறி-குறிகளை
என்ற * (இ-ம்) முலைகளும் முத்துமாலைகளும் தன் மெய்யிலழுந்த
என்மெய்யைத் தழுவிக்கொண்டகுறிகள் நேற்றறிந்திலேன் என்
றாள் காட்டுவழிச்சென்றுள்போலும் என்பதாம். யாழ் நோன்று
செலுவாய் அறிவேன்-ப. (ஆ)

கண்மூன்றுடையானுங் காக்கையும்பெயரவு
மென்னீர்மையவாயும் பிழைத்தறிதன்-பொன்னீர்மை
கோங்கரும்பன்ன முலையாய்பொருள்வயிற்
பாங்கனுர்சென்ற நெறி.

(ஆருந்தா)தலைமகள் பிரிவாற்றுமையைத் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். பொன்னீர்மை-பொன்போலுநிறமுடைய, கோங்கரும்பு
ன்ன-கோங்கரும்புக்கொப்பான, முலையாய்-தனதனங்களையுடைய
தோழியே, பொருள்வயின்-பொருள்வயிற்பிரிந்த, பாங்கனுர்சென்
நெறி-தலைவர்சென்றவழிக்கு, கண்மூன்றுடையானும்-மூன்றகண்
களையுடையபரமசிவனுர், காக்கையும்-காகமும், பையாவும்-படமு
டையசர்ப்பமும், என்னீர்மை-என்னைப்பெற்ற, ஆயும்-தாயும், பிழை
த்ததென்-எனக்குப்பிழைசெய்தது—எ-று. (இ-ம்)தோழியேதலை
வர் பொருள்மேற்பிரிந்தவழிக்கு எனக்குப்பிழைசெய்ததுமன்றத
லையுருவழிக்குப் பின்னும் உயிராக்கிவிட்டதினுமன்றி குயில்வளர்த்
துவிட்டதாகமும் சந்திரனை விழுங்கிவிட்ட பாம்பும் பெற்றதாயைத்
தன்னைக்கொல்லாதுவிட்டதாயுந்தான் என்றுள் என்பதாம். கண்
மூன்றுடையான்-காக்கை-தாய்-தூப்-எழுவாய்-பிழைத்தது-ப. (இ)

காமத்துப்பால்-முற்றிற்று.

பால்-நற்றிணைச்செய்-க்குறிஞ்சி,கூடியசெய்யுள்-சா
லாசிரியர்-மூலமும்உரையும்
முற்றுப்பெற்றது.